திருவில்லிபுத்தூர்

ஆண்டாள் பிள்ளைத்தமிழ்

தெளிவுரை தி.கோவேந்தன்

வேயர்குலத்துப் புலவர் வில்லி

பாடிய

திருவில்லிபுத்தூர்

ஆண்டாள் பிள்ளைத் தமிழ்

பொழிப்புரை :

புலவர் த. கோவேந்தன்

ஆழ்வார்கள் ஆய்வு மையம்

10, திலக் தெரு, தியாகராயநகர்,

சென்னை-600 017

முதற் பதிப்பு ஜூலை 1996

© பதிப்பகத்தாருக்கே

Andal Pillai Thamizh

by

Veyar Kulathu Pulaver Villi

with

Commentary

by

T. Kovendan, D.Litt



விலை : உரூபா 35.00

ஒளியச்சு லேசர் இம்ப்ரெஷன், சென்னை-30
அச்சு மல்டி மீடியா கிராபிக்ஸ், சென்னை-24

பதிப்புரை

செந்தமிழ்க்குச் சீர்மை செய்த செல்வி, சீவில்லிபுத்தூர் பிறந்த அந்தமிழ் ஆண்டாள், பெரியாழ்வாரின் பெண்ணாகவும் இராமனு சரின் தங்கையாகவும் வையம் போற்றும் வனிதையாக விளங்கும் சூடிக் கொடுத்த சுடர்க் கொடி, பாடிக் கொடுத்த பாவை.

உலகில் எந்த பெண்பாற் புலவரும் பாடாத உன்னதப் பாடல்களைப் பாடிய ஆண்டாள் பற்றிய நூல்கள் பல அவற்றுள் **ஆண்டாள் பிள்ளைத் தமிழ்** ஓர் அரிய நூல். இந் நூற்கு உரைகண்டார் எவரும் இல்லை.

தமிழில் ஆழங்கால் பட்டவரும், ஆழ் வார்கள் ஆய்வு மையத்தின் செயலாளருமான என் மதிப்புக்குரிய அண்ணன் த கோவேந்தன், டி.லிட் , என் வேண்டுகோட்கு இணங்கி - இந் நூற்குத் தெளிவுரையும் - ஓர் அரிய ஆராய்ச்சி முன்னுரையும் தந்தார்கள்.

அருந்தமிழ் ஆண்டாளின் வாழ்விலும், பாடலிலும் ஆழ்தாழ்ந்து ஒன்றிய அருமை பெருமையையெல்லாம் புலவர் உரையிலே காணலாம்

தமிழுலகம் பயன்கொள்க.

அன்பன்,

எஸ். ஜெகத்ரட்சகன

பாட்டு முதற் குறிப்பு

(பாட்டெண்)

அகரமுதல	52
அடித்தாமரை	118
அண்ட கோளத்து	4
அண்டர் திரு	7
அண்ணலார்	113
அத்த மதக்கரி	58
அமர் சொல்	43
அரியெனச் சுருதி	65
அளகையம்பதி	103
அளைசெறி	46
அன்னநந்தடந்தாமரை	96
ஆதாரமேரு	85
ஆலந்தளிருள்	64
ஆழ்கடல்	61
ஆறிழைத்து	94
உண்ணத் தெவிட்டாத	112
உரமேவிய என்பொடு	40
உரனுடைய புனிதன்	82
ஊடுவார் ஊடலை	62
ஊன் அறாச்சுடர்	90
எத் தேவரும்	99
எந்நன்றி	13
எற்றிய தரங்க	31
ஒண்தழல்	91
ஒரு கரும்பு	115
ஒரு நான் மறை	14
ஒரு முலை சுரந்த	22
கண்ணன் கருணாகரனொடு	44
கயலை வடுவொடு	74
கரந்தனில் சிரம்	97
கரபங்கயத்து	81
கரியமுகில்	75
கரு முகில் கணம்	30
கவடுபடு	55
கவளக்கரி	48
கன்னலங் கழனி	95
கன்னியும்	101
காமர் மரகத மணி	70
காரணப் பாமாலை	78
காலையில்	24
கானுலா முல்லை	32
குவளை ஒண்கண்	116
குளிறு வெண்திரை	111
கூற்றமும்	109
கெழுந்தகைப் பரமேட்டி	86
சந்தஞ்சதுமறை	102
சிங்கக் குருளை	8
சீர் கொண்ட வெண்திரை	10
சுடர் தூண்டு	18
சுழிக்கும் கரட	17
சூடிப்புரிகுழல்	28
செஞ்சூட்டு வைந்நுதி	77
செம் பொற்கலந்	3
செந்தாமரை ஓடை	39

சேமம் புரிந்து	98
சொற்றமிழ்	107
சோதிவான் ஆவரணம்	79
தகடுபடு தளிர்	16
தண்ணளிக் கடவுள்	117
தன்னிலை தனக்கு	106
தாதளவி	19
திருஞான முத்திரை	5
தினகரன் என	114
தின சரிகை	83
துடியிடை	108
துண்ட வெண்பிறை	71
தேவைப்புகழ்ந்த	60
நஞ்சாய்ப் பழுத்த	9
நதிவைத்த சடில	12
நாட்டமது	57
நிலைத்தாருவின் கழ்	73
நிறைகொண்ட	33
நேயத்தடன்	53
பங்கேருகனொடு	41
பட்டறா இளமுலை	69
பம்பு வெண்திரை	84
பருமாமணி	6
பறவை மா மீனம்	92
பற்றுளம் அற்றவன்	89
பாசந் தழைப்ப	35
பாடல் சுரும்பு	11
பாம நெட்டிலை	110
பாலாழியை	100
பிறங்கம் தவள	37
புதிய வண்தமிழ்	80
புற்பதம் ஒத்த	88
புற்றிடைப் பிறவாத	87
புழுகூற்றிருக்கும்	15
புழைபடு கவட்டு	68
பூமாதும் நிலமாதும்	1
பூரித்த குடவயிற்று	67
பெருமகள் என	36
பெருமாநிலத்தில்	76
பொருப்பூர்	63
பொறிக்கிங்கழகு	20
போராடு சமர்முனை	34
மங்கலப் புன்னை	66
மண்ணகத்தினில்	54
மண்திணி நிலப்பிலம்	105
மருமலர்த் தண்ணந்துழாய்	93
மல்லி மாமயில்	21
மறைமொழிவானவர்	59
மன்னு மார்கழி	25
முடக்க வச்சிரவைந்நுதி	72
முதலைக்கு	49
முப்பாணி	51
முழுமதி அதனுள்	23
வங்கக் கடல்	50
வயலிடை உழவர்	27
வரி உழுவையின்	26
வரிவளை	104
வளமை தழைத்து	45
வற்றாக் கரட	38
வாகடப் பனுவல்	2
வாதித்தெழு	56
வாழ்வார் இழிகுலம்	29
விதியைப் பெறுகாரணன்	42
விழுமிது என வழு	47

அந்தமிழ் காக்கும் அண்ணலுக்கு ....

என்னை ஒரு பொருட்டாய் ஏற்று, என் உயிர் காத்து
முன்னைத் தமிழுக்கு முற்றுமாய் - அன்னையாய்
அத்தனாய் அந்தமிழ் காக்கும் செகத்தண்ணல்
பித்தனாய் ஏற்றான் பெரிது !

விழுமிய பண்பாளன், வைணவம் வாழச்
செழுமிய செல்வத்தைச் செம்மை - கொழுமிய
பேரறிவைப் பெற்ற மரபுரிமைப் பேற்றையெலாம்
சீரறிவாய்ச் செய்தான் தெரிந்து!

ஆழ்வார்கள் மையம் அமைத்தான், இவ் வையத்து
வாழ்வார்கள் வைணவநூல் அத்தனையும் சூழ்ந்தாரப்
பெற்றுக் களித்திடவே பீடார் நயவுரைகள்
முற்றும் அளித்தான் முனைந்து!

அசைவிலா ஊக்கத்தால் ஆக்கத்தை நல்ல
வசையிலாக் கல்விக்கே வாரி - இசையெலாம்
கொடை மன்னர் கோடி கொளாததெலாம் கொண்டான்
அடை மழைபோல் யார்க்கும் அளித்து !

சங்கத்துச் சான்றோர்கள் இன்றிருந்தால் சாமிக்கண்
சங்கம் சகத்ரட்ச கன்இல்முன் - பொங்கித்
திருக்கோயில் இஃதென்று செந்தமிழ் பாடித்
தருக்கோடிருப்பர் தளிர்த்து !

சூடிக் கொடுத்த சுடர்க்கொடிப் பாட்டமுதில்
ஆடிக் களிக்கின்ற அண்ணலுக்குத் - தேடி நான்
ஆண்டாள் பிள்ளைத் தமிழ் ஆழ்க எனத்தந்தேன்
மாண்டானை மீட்டதவன் மாண்பு !

-த. கோவேந்தன்

நூற்பயன்

அடித்தாம ரைப்போதி னில்பெற்ற பாகீ
ரதிப்புனலை அண்டர்அண் டத்து
அப்புறத்து அயனைமுதல் இப்புறத்து அனைவர்க்கும்
அமுதென்ன அருளிஅர னார்

முடித்தாமம் ஆம்எனப் புனையஅன்று அருளும்முழு
முதல்அரங் கேசன்முத லாம்
முதல்வர்ஐ வரும்மகிழ வேதிருப் பாவைதிரு
மொழிமுப்ப தீரெழுப தாய்

வடித்துஆ ரணப்பொருள் நயம்பெற்ற பாமாலை
வாசமலர் மாலைஅரு ளும்
மல்லிநாட் டினுள்வில்லி புத்தூர் மடந்தையை
வழுத்துபின் ளைக்கவியை மேய

படிப்பார் அதன்பொருள் வடிப்பார்இவ் உலகினில்
பாலித்த செல்வம்எல் லாம்
பாரித்த படிஎய்தி எய்துவார் நித்தரொடு
பழகும்ஒரு பேரின்ப மே. (115)

தாமரை மலர்போன்ற திருவடியில் பிறந்த கங்கை நீரை அனைத்துலகினர்க்கும் அண்டத்துக்கு அப்புறத்து வாழும் அயன் முதலானவர்க்கும், இப்புறத்து வாழும் அனைவர்க்கும் அமுதுபோல் அருளியவன் திருமால். அந்தக் கங்கை நீரைச் சிவன் தன் முடிமாலையாகும் என்று புனையுமாறு அன்று அருளினான்.

அத்தகைய முழு முதலாகிய திரு அரங்கேசன் முதலாகிய முதல்வர் ஐவரும் மகிழும்படி, திருப்பாவையும் நாச்சியார் திருமொழி நூற்றி நாற்பதும் வடித்தளித்தமையால், எழுதாக்கிளவியி (ஆரணத்தி)ன் பொருள் நயம் பெற்றது. அந்தப் பாமாலையும் மணமலர் மாலையும் அருளியவள் ஆண்டாள்.

மல்லி நாட்டினுள் அமைந்த வில்லிபுத்தூர் மடந்தையாகிய அவளைத் துதிக்கும் பிள்ளைத் தமிழ்க் கவியைப் படிப்பவரும் அதன் பொருள் வடித்துத் தருபவரும் இவ் உலகில் இறைவன் அருளிய செல்வம் முழுவதும் விரும்பியபடியே அடைவர்.

முடிவில் நலமந்தம் இல்லதோர் நாட்டில் வானவர்களோடு பழகும் ஒப்பற்ற தொண்டாகிய பேரின்பம் அடைவர்.

ஆராய்ச்சி முன்னோட்டம்

தமிழ் இலக்கியங்கள் சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என இரு வகையாக வழங்கப்படுகின்றன.

"வண் புகழ்மூவர்" என்று தொல்காப்பியர் பாராட்டிய மூவேந்தர் காலத்துக் கம்பன், ஒட்டக்கூத்தன், சயங்கொண்டான் முதலான பாவேந்தர்கள் தோன்றித் தமிழுக்குப் பெருமை சேர்த்தனர்.

வந்தேறிகள் படையெடுப்பாலும், தம்முள் ஒற்றுமை இழந்தமையாலும் வழி வழி வந்த வண்புகழை மூவேந்தர் இழக்க நேர்ந்தது. சாளுக்கியர், பல்லவர், களப்பிரர், தெலுங்கர், மராட்டியர், துருக்கர் முதலியோர்களால் அரசிழந்து, ஆண்மையிழந்து மூலையில் முடங்கிப் போயினர். காலந்தோறும் அயல்நாட்டினர் வந்து நாட்டில் பெருகிக் கிடந்த செல்வம் முழுவதும் கொள்ளையடித்துக் கலை இலக்கியப் பண்பாட்டைச் சிதைத்து ஏழைமையைப் பண்டமாற்றாகத் தந்தனர்.

மீண்டும் வண்புகழ் மூவர் தலையெடுக்க இயலவில்லை. சிறுமைப் புகழ்ச் சிற்றரசரும் சிறு செல்வரும் ஆங்காங்கே தலையெடுத்தனர்.

நிலையான தலையான அரசு அமைந்தால் தான், அருமையான பெருங்காப்பியங்கள் தோன்ற முடியும். சிறு சிறு சிற்றரசர், இல்லை குற்றரசர்கள் தலையடுத்தமையால், தலையான புலவர்களைத் தாங்கும் நிலை, தலைதூக்காமல் போனது.

புலமைக்கும் வளமைக்கும் என்றுமே தீராப் பகை என்பது உலகறிந்த செய்தி. வளமை இருக்கவேண்டிய இடத்து வறுமை குடிகொண்டு, சிறுமைக்கும் கற்பனை வெறுமைக்கும் வித்திட்டது.

பசியெடுத்தபோது ஒன்றிரண்டு பாடல்களைத் தகுதியில்லாதார் மீது பாடி, அவர்கள் தரும் கஞ்சியும் கந்தையும் கொண்டு, களிப்படைய வேண்டிய நிலை பாவலர்க்கு நேர்ந்தது.

"வடுவில் காப்பிய மதுர வாய்பொருள் மரபு"

என ஒட்டக்கூத்தர் போற்றிய கவிமரபு கறைப்பட்டது.

இந்த இழிநிலை கண்ட அருளாளர்கள்,

வம்மின் புலவீர்! நும் மெய்வருத்திக்
கை செய்து உய்ம்மினோ
இம்மண் ணுலகினில் செல்வர் இப்
போது இல்லை நோக்கினோம்

என்னாவது எத்தனை நாளைக்குப்
போதும் புலவீர்காள்!
மன்னா மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும் பொருள்?

மாரி அனைய கைமால் வரை ஒக்கும் திண்தோள் என்று
பாரில் ஓர் பற்றையைப் பச்சைப் பசும்
பொய்கள் பேசவே யான்கிலேன்" என்று நம்மாழ்வாரும்

"தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதீர் புலவீர்"

என்று சைவச் சான்றோரும் அறிவுறுத்த நேர்ந்தது.

தனிப்பாடல் பாடப் புலவரைத் தூண்டிய வறுமை, அவர்களுக்கே நாணத்தையூட்டிச் சிற்றிலக்கியங்கள் பாடத் தூண்டியது.

சிற்றிலக்கியங்கள் (சிறு பிரபந்தங்கள்) ஆயிரக்கணக்கில் குவிந்தன. புலவர்களுக்கும் புலமைப் பசி அப்போதைக்கப்போது தணிந்தது.

அதுமட்டுமல்ல; படைப்புக் காலந் தொட்டே பண்பட்டு வந்த பைந்தமிழ்ச் சுவையறிவார் இல்லாது போகும் நிலையை, அச் சிற்றிலக்கியங்கள் மாற்றின.

பசி பொறுத்துக் கொண்டு பேரிலக்கியங்களை நீளப் படிக்க இயலாத உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டு பெரும்பான்மைத் தமிழ் ஆர்வலர்க்கு, அக் காப்பியங்களிலுள்ள சுவையை முழுமையாக இல்லாவிடினும் ஓரளவாவது சுவைக்கும் பயனைச் சிற்றிலக்கியங்கள் நல்கின. ஒருவேளைக் கஞ்சிக்கும் மறுவேளைக் கஞ்சிக்கும் இடைப்பட்ட காலத்திலேயே, ஒரு சிறு நூலைப் படித்து முடித்துச் சுவைத்து மகிழ முடிந்தது.

அடிமைப் பட்டிருந்த அவலக் காலத்தில் உரைநடை நூல் உருவாகவில்லை. உரைநடை நூல் செய்ய இயலும் என்று எண்ணிப் பார்ப்பாரும் இல்லை. அவ்வாறு இருப்பினும் அவற்றில் செய்யுளில்

கிடைக்கும் சிலேடை, யமகம், திரிபு, அணிகள், சொல்சிலம்பல்கள் சுவைக்கக் கிடைக்க மாட்டா என்பது உறுதி.

செய்யுள் நடையில் அமையும் இலக்கியங்களையே நம் முன்னோர் பெரிதும் கையாண்டனர். விரிந்த பொருள்களைச் சுருங்கிய சொற்களில் அடக்கி வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் புலப்படுமாறு, ஓசை நயமும் இனிமையும் பயத்தலாலும் கற்பார் நெஞ்சில் நிற்கும் இயல்பாலும் செய்யுள் வழக்குச் சிறப்புற்றது.

இத்தகு காரணங்களால் ஆயிரக் கணக்கில் புற்றீசல்கள் போலச் சிற்றிலக்கியங்கள் தோன்றின; தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்

என்று சிவந்தெழுந்த பல்லவன் உலா என்னும் சிற்றிலக்கியம் ஒரு வரையறை செய்தது.

"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்று
ஆறு எனும் தொகை"

என்று சதுரகராதி அறிமுகப்படுத்துகிறது.

தொண்ணூற்றாறு என்று வரையறுக்கபப்பட்டாலும், இப்போது அவை முழுமையாகக் கிடைப்பதில்லை. பல சிறு நூல்களின் பெயர்கள் மட்டும் பாட்டியல் நூல்களில் உள்ளன; இலக்கியங்கள் காணப்பெறவில்லை.

பாட்டியல் நூல்களில் இடம்பெறாத பல புதுவகை நூல்கள் நடைமுறையில் உள்ளன. செங்கோன் தரைச்செலவு, தகடூர் யாத்திரை, சிலேடை வெண்பா, காவடிச் சிந்து, வளையல் சிந்து, ஏசல் முதலியவற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். வசைப்பதம், சந்திர விலாசம், சமுத்திர விலாசம் முதலியனவும் புதுவதாகப் புனையப்பட்டன.

சிற்றிலக்கியங்கள் பெற்ற செல்வாக்கைச் சயங்கொண்டார் தம் கலிங்கத்துப் பரணியில்,

"கலையினொடும் கவிவாணர் கவியினொடும்
இசையினொடும் காதல் மாதர்
முலையினொடும் மனுநீதி முறையினொடும்
மறையினொடும் பொழுது போக்கி".

என விளக்கியுள்ளார். அரசர்கள் கலை, கவி, இசை, நீதி முறை மறைநூல்களோடும் பொழுதுபோக்கினர் என்கின்றார்.

சிற்றிலக்கிய இன்பம் சிற்றின்பத்துக்கு ஒப்பாகக் கருதப்பட்டது என்பது இப் பாடலால் அறிகின்றோம்.

இத்தகைய சிற்றிலக்கியங்களில் பிள்ளைத் தமிழ், உலா, கோவை, தூது, கலம்பகம், அந்தாதி முதலியனவே பேராதிக்கம் பெற்றன. தொன்னூல் முதலாவதாகக் குறிப்பிட்ட பிள்ளைத் தமிழ் நூல்கள் மட்டும் பல நூறு தமிழில் உள்ளன. அழிந்தன அளவில்லனவாக இருக்கலாம்.

பிள்ளைத் தமிழ்தான் சிற்றிலக்கியங்களில் முந்தையது என்றும் கூறலாம். அதனைப் பற்றிய குறிப்பு, "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்ற தொல்காப்பிய நூற்பாவும் அதன் உரையும் இதனை உறுதிப்படுத்தும்.

"தந்தையர் இடத்தன்றி ஒரு திங்களில் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலும் பாராட்டுமிடத்துச் செங்கீரையும் தாலும் சப்பாணியும் சிறுதேரும் சிறுபறையும் எனப் பெயரிட்டு வழங்குதலு என்பது"

என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தருதலும் நோக்கத்தக்கது.

முகில்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவன் பால் என
விளங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றும்

என்ற பகுதி அகநானூற்றில் வருகின்றது. இதுவும் பிள்ளைத் தமிழின் முன்னோடி எனலாம்.

ஆழ்வார்களில் நெடுவாசி பெற்றவராகிய பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக்கிப் பாடிய பாடல் வகைகள்,

1. கண்ணன் பிறப்பு
2. பாதாதி கேசம்
3. தாலாட்டு
4. அம்புலியழைத்தல்
5. செங்கீரை
6. சப்பாணி
7. தளர்நடை
8. அச்சோ
9. புறம் புல்கல்
10. பூச்சி காட்டுதல்
11. முலையுண்ணல்
12. காது குத்தல்
13. நீராட்டம்
14. குழல் வாரக் காக்கையை அழைத்தல்
15. கோல் கொணரக் கூறுதல்
16. பூச் சூட்டல்
17. காப்பிடல்

18. பாலக் கிரீடை
19. அயலகத்தார் முறைப்பாடு
20. அன்னை கண்ணனுக்கு இன்னமுதன்றி
அம்மம் தாரேன் எனல்
21. கண்ணனைப் பசு மேய்க்கப் போக்கியதெண்ணி
அன்னை வருந்தல்
22. கண்ணன் வரவு கண்டு அன்னை மகிழ்தல்.

என 22 பதிகங்கள் (பருவங்கள்) பாடியுள்ளார்.

ஆழ்வார்களில் பெருஞ் சிறப்புக்குரியவரான திருமங்கை மன்னனும் பிள்ளைத் தமிழை அடையாளங் காட்டியுள்ளார்.

1. அம்முண்ணக் கண்ணனை அழைத்தல்
2. சப்பாணி கொட்டல்
3. மாயோன் வெண்ணையுண்ட மாட்சிமை

என்பன அப் பகுதிகள்.

குலசேகர ஆழ்வாரும் பிள்ளைத் தமிழுக்கு அடிப்படை அமைக்கத் தாலாட்டுப் பாடித் தாலப் பருவத்துக்கு வழியமைத்துத் தருகின்றாா. மேலும்,

ஆலை நீள்கரும்பன்னவன் தாலோ
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ
வேலை நீர் நிறத்து அன்னவன் தாலோ
வேழப் போதகம் அன்னவன் தாலோ

என்ற பகுதியும் தாலப் பருவந்தானே!

நாச்சியார் பெருமாட்டியும் "தானும் புதுப்பாட்டை அமைக்கச் சளைத்தவள் அல்லள்" என்று காட்டச் "சிற்றில் சிதையேல்" என்ற பதிகம் பாடிச் சிற்றில் பருவத்துக்கு வழிகாட்டியுள்ளார்.

"இளமைந்தர் நலம் வேட்ட
வளமங்கையர் வகையுரைத்தன்று".

என்று புறப்பொருள் வெண்பாமாலை முதன் முதலாகப் பிள்ளைத்தமிழ் இலக்கணத்தை ஒருவாறு அறிமுகப்படுதததுகிறது.

பிள்ளைத் தமிழின் இலக்கியக் கூறுகள் அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை,கலித்தொகை முதலிய சங்க நூல்களில் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றன.

சிலப்பதிகாரம் ஊசல், அம்மானை என்றும், சீவக சிந்தாமணி பந்தாட்டம் என்றும் பிள்ளைத் தமிழ்க் கூறுகளைத் தம்முள் இடம் பெறச் செய்துள்ளன. சைவப் பெரியார்களும் பிள்ளைத் தமிழ் விதை நட்டுப் பாடல் நீர் ஊற்றி வளர்த்துள்ளனர்.

பதினோராம் திருமுறையில் அதிராவடிகள் சப்பாணி, செங்கீரை, ஊசல் என்ற பருவங்களைத் தம் பாடல்களில் ஒளிபெறச் செய்துள்ளார்.

இராமயணத் திருப்பகழ் பாடிய வால பாரதியார்,

எந்தை வருக, ரகுநாயக வருக!
மைந்த வருக, மகனே இனிவருக!
என் கண் வருக, எனதாருயிர் வருக! அபிராமி
இங்கு வருக, அரசே வருக! முலை
உண்க, வருக, மலர்சூடிட வருக!
என்று பரிவினொடுகோ சலபுகல வருமாயன்

என்று பாடி பிள்ளைத் தமிழுக்கு வழித்தடம் அமைத்துள்ளார்.

பெரியபுராணத்தும் பரவையார், மானக்கஞ்சாறர் மகள், புனிதவதியார், பூம்பாவை ஆகியோரின் இளமையைக் கூறும்போது, பிள்ளைப் பருவ நலங்கள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு படிப்படியாகத் தளர் நடையிட்டு வளர்ந்த பிள்ளைத் தமிழ், இலக்கண அரியணை ஏறிச் செங்கோல் கைக் கொண்டது.

பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடி அருளிய சிவஞான முனிவர் சரித்திரச் சிறு காப்பியத்தில், பருவத்துக்கு ஒன்றுவீதம் பிள்ளைத் தமிழ் ஒன்று இயற்றியுள்ளார்.

அண்மையில் தோன்றிப் பல பெரும் பரிசுகள் பெற்றுப் பல்கலைக் கழகப் பாடங்களாகவும் தமிழ்ப் பாடநூல் நிறுவனத்தின் பத்தாம் வகுப்பில் பாடமாகவும் இடம்பெற்றுவரும் காந்திகாதை என்ற பெருங்காப்பியத்திலும் காந்தியடிகளைப் பற்றிப் பருவத்துக்கொன்றாக அமைந்த பத்துப் பாடல்களால் ஆகிய பிள்ளைத்தமிழ் இடம் பெற்றுள்ளது.

புலவர் குழந்தை இயற்றிய இராவண காவியத்திலும் இராவணனின் மகன் சேயோன் மறைகையில் பிள்ளைப் பருவம் பாடப்படுகிறது.

பிள்ளைத்தமிழ் பெருகிக் கண்டபடி பரவுவது கண்ட அறிஞர், அதை ஒருவழிப் படுத்துப் பாய்ச்சித் தமிழுக்குப் பெருமை சேர்க்க முயன்றதன் பயனாகப் பல இலக்கண நூல்கள் எழுந்தன.

முதலில் இலக்கணம் வகுத்த நூல் பிங்கலந்தை. அது பருவங்கள் பத்துடன் நிறுத்தாமல் அதற்கு மேல் சில பருவங்களை இணைத்தது.

அது ஒவ்வொரு பருவத்துக்கும் அகவை இன்னதென்றும் குறிப்பிட்டது.

குழந்தையின் மூன்றாம் திங்கள் வரை காப்பு
குழந்தையின் ஐந்தாம் திங்கள் வரை செங்கீரை
குழந்தையின் ஏழாம் திங்கள் வரை தாலம்
குழந்தையின் ஒன்பதாம் திங்கள் வரை சப்பாணி
குழந்தையின் பதினொரு திங்கள் வரை முத்தம்
குழந்தையின் ஓராண்டு வரை வருகை
குழந்தையின் ஒன்றரையாண்டு வரை அம்புலி
குழந்தையின் இரண்டு ஆண்டு வரை சிறுபறை
குழந்தையின் மூன்றாம் ஆண்டு வரை சிற்றில்
குழந்தையின் நான்காம் ஆண்டு வரை சிறுதேர்

என்பவை பருவத்துக்குப் பிங்கலந்தை வகுக்கும் அகவைகள்.

பன்னிருபாட்டியலும், வெண்பாப்பாட்டியலும் குழந்தைக்கு மூன்று முதல் இருபத்தொரு திங்கள் வரையுள்ள ஒற்றித்த திங்கள்களைப் பத்துப் பருவங்களுக்கு முறையே உரியவாகக் கூறுகின்றன.

'நவநீதப் பாட்டியல்' மூன்று திங்கள் முதல் இருபத்தொரு திங்கள் வரை பத்துப் பருவமும் பாடுதலோடு ஐந்து, ஏழாம் ஆண்டு வரையிலும் பாடுதலும் உண்டு என்கின்றது.

சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பன மூன்றும் பாடல் அளவில் குறைந்தும் வரலாம். விருத்தம், வண்ணம் (சந்தம்) ஆகிய பாக்களால் பாடவேண்டும்.

பெண்பால் பிள்ளைத்தமிழுக்கு இறுதி மூன்று பருவங்களும் மாறும். பருவத்துக்கு ஒன்பதோ பத்தோ பாடல் வரலாம்.

'சிதம்பரப் பாட்டியல்' ஆண்பாலுக்கு உரிய சிறுபறை, சிற்றில் சிறுதேர்க்கு மாற்றாகக் கழங்கு, அம்மனை, ஊசல் ஆகிய மூன்றும் பெண்பாலுக்கு வரும் என்கின்றது.

பாட்டியல் நூல்கள் கூறுவதைத் தொகுத்துப் பார்த்தால் பிங்கலந்தை மட்டும் பருவ எண்ணிலும் அகவையிலும் மாறுபடுகின்றது. பிங்கலந்தை, கூறுதல் கூறல், பூண் அணிதல், கச்சினோடு உடைவாளை விரும்பத் தரித்தல் என்ற மூன்று பருவங்களை இணைக்கின்றது.

பிற நூல்கள் சில பருவங்களை மாற்றி அமைக்கின்றன. அவ்வளவே வேறுபாடு. பெண்பால் பிள்ளைத் தமிழ் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். குழமணம், காமன் நோன்பு, நீராடல், பாவையாடல், கழங்கு, பந்து, சிறுசோறு, சிற்றில், ஊசல் எனப் பிங்கலந்தை கூறுகின்றது.

பன்னிருபாட்டியல் சிற்றில், சிறுசோறு, குழமகன், ஊசல், காமன் நோன்பு என்பனவற்றைப் பெண்பாலுக்குச் சேர்க்கின்றது.

இலக்கண விளக்கமும் சிதம்பரப்பாட்டியலும் கழங்கு, அம்மானை, ஊசல் எனக் கூறுகின்றன.

பெண்பால் பிள்ளைத்தமிழுக்கு உரியன அம்மானை, நீராடல், ஊசல் என்பன மூன்றே என்று பெரும்பாலான பாட்டியல்கள் கூறுகின்றன.

பாடல் எண்ணிக்கையிலும் வகையிலும் அகவை அளவிலும் சில வேறுபாடுகள் உள்ளன. அவற்றை இங்கு ஆயவேண்டியதில்லை.

மேலே சொன்ன இலக்கண நூல்கள் பெரும்பாலானவற்றின் கருத்தை ஒட்டி முதன்முதலில் தோன்றிய நூல் 'குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழே' எனலாம். அது ஒட்டக்கூத்தர் இயற்றியது. இதில்,

1.	காப்புப் பருவம்	(11)	5.	அம்புலி	(12)
2.	செங்கீரை	(11)	6.	சிறுபறை	(7)
3.	முத்தம்	(11)	7.	சிற்றில்	(11)
4.	வாரானை	(11)	8.	சிறுதேர்	(8)

என இதில் எட்டுப் பருவங்களே உள்ளன. சப்பாணி, தாலப் பருவங்கள் சிதைந்து அழிந்து போயிருக்கலாம். அதுமட்டுமல்ல சிறுபறை,

சிறுதேர் முறையே 7,8 பாடல்களே உள்ளன. அப் பருவங்களிலும் சில பாடல்கள் அழிந்திருக்க வாய்ப்புண்டு.

கழிநெடிலடி (நீண்ட) ஆசிரிய மண்டலங்களும், பலவகைச் சந்தக் கவிகளும் அந் நூலில் இடம் பெற்றுள்ளன.

குலோத்துங்கன் பிள்ளைத் தமிழுக்குப் பின் தோன்றிய அனைத்து நூல்களுக்கும் இதுவே படிச்சந்தமாக அமைந்தது. பத்துப் பருவமும் சற்றொப்ப நூறு பாடல்களும் ஆசிரிய மண்டலம் (விருத்தம்) வண்ண மண்டல(சந்த விருத்த)ங்களால் ஆயினவாகவே அமைந்துள்ளன.

10,30,50 பாடல்களில் அமைந்த பிள்ளைத் தமிழ் நூல்களும் சில தோன்றியுள்ளன.

பெண்பாற் பிள்ளைத் தமிழில் மட்டும் இறுதிப் பகுதி சில நூல்களில் மாறுபடுவதைக் கவனிக்கின்றோம். சிற்றில், சிறுசோறு, பொன்னூசல் என்ற மூன்று பருவங்கள் மட்டுமே இறுதிப் பருவங்களாகப் பெரும்பாலானவற்றில் இடம்பெற்றுள்ளன.

ஆனால் இந்த 'ஆண்டாள் பிள்ளைத்தமிழ்' இறுதியில் பிங்கலந்தையும் பன்னிரு பாட்டியலும் மட்டும் குறிப்பிடுகின்ற காமன் நோன்புப் பருவத்தை இணைத்துக் கொண்டுள்ளது.

பெரும்பாலான பிள்ளைத் தமிழ் நூல்கள் காப்புப் பருவத்தையே முதலில் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஆண்டாள் பிள்ளைத்தமிழ் மட்டும் பழிச்சுநர்ப் பரவல் என்ற பகுதியை முதலில் கொண்டுள்ளது. இது அழகர் பிள்ளைத் தமிழை ஒட்டி எழுந்த வழக்காகும்.

ஆண்டாள் பிள்ளைத்தமிழில்,

1.	காப்பு	1;	2.	அவையடக்கம்	2;
3.	பழிச்சுநர்ப் பரவல்	11;	4.	காப்பு	11;
5.	செங்கீரை	11;	6.	தால்	11;
7.	சப்பாணி	10;	8.	முத்தம்	10;
9.	வாரானை	10;	10.	அம்புலி	7;
11.	சிற்றில்	5;	12.	சிறுசோறு	6;
13.	பொன்னூசல்	11;	14.	காம நோன்பு	11;
15.	நூற்பயன்	1			

இவற்றுள் அம்புலி, சிற்றில், சிறுசோறு ஆகிய மூன்று பருவப்பாடல்கள் முறையே 7,5,6 என மட்டுமே உள்ளன. அனைத்துப்

பருவங்களுக்கும் 11 பாடல்கள் அமைக்க வேண்டும் என்றே கவிஞர் கருதியிருக்கலாம். அவ்வாறே பாடியும் இருக்கலாம். ஆனால், ஏதோ காரணத்தால் ஏடுகள் சிதைந்தோ மறைந்தோ போயிருக்கலாம்.

ஆண்டாள் அருளிய திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் முழுமையாகக் கிடைத்தன. பிள்ளைத்தமிழ் நூல் இதுமட்டுமாவது கிடைத்ததே என்று அமைதியுறுவதைத் தவிர வேறு வழியில்லை.

பிள்ளைத் தமிழ் நூல்களில் காப்புப் பாடுகையில், முதலில் காப்புக் கடவுளாகிய திருமாலையே பாடவேண்டும் என்று பாட்டியல் இலக்கணங்கள் அனைத்தும் ஒருபடித்தாகக் கூறுகின்றன.

ஆனால் சில சமயத்தார் தாங்கள் பாடும் பிள்ளைத்தமிழ் நூல்களில் திருமாலைப் பாடாமல் வேறு சில தெய்வங்களைக் காப்பாகப் பாடியுள்ளனர்.

முதல் பிள்ளைத்தமிழ் என்று கருதப்படும் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழிலேயே ஒட்டக்கூத்தர் திருமாலைப் புறக்கணித்துள்ளார். பின்னர் வந்த பெரும் புலவர் பலரும் ஒட்டக்கூத்தரைப் பின்பற்றி இலக்கண நூல்களைப் புறக்கணித்துள்ளனர். இதற்குக் காரணம் சமயக் ~~காழ்ப்பைத்~~ தவிர வேறு இருத்தல் இயலாது.

ஆண்டாள் பிள்ளைத் தமிழ் வைணவ நூல் ஆகையால் திருமாலே காப்பில் இடம் பெற்றுள்ளார்.

நூலினுள் சில இடங்களில் வைணவத்தை ஏற்றிப் போற்ற வேண்டும் என்ற நினைவால் பிற தெய்வங்கள் ஓரளவு குறைவாகப் பேசப்பட்டுள்ளன. (பாடல் 41) இது இக் காலத்துக்கு ஒவ்வாததுதான். ஆனாலும் இவ்வாறு பிற தெய்வங்களைப் போற்றாமல் புறக்கணித்துத் தம் இட்ட தெய்வத்தை மட்டும் போற்றுவது உலகுக்கும், ஆன்மீக இயலுக்கும் பொருத்தமானதே என்று "மோட்ச சாதன விளக்கம்" என்ற ஒரு பழைய நூல் விரிவாக விளக்குகின்றது. அந்நூலை யாத்தவர் சைவரும் அல்லர்; வைணவரும் அல்லர்; வேதாந்தி-அதாவது ஏகான்மவாதி என்னும் அத்வைதி. அவர் சைவம் வைணவ பேதம் பாராட்டத் தேவையில்லாத தனிச் சமயத்தார். அவர் வாக்கும் நோக்கும் இங்கே காண்போம் :

'மகான் சாது நிச்சலதாசர்' என்னும் புண்ணியர், விசாக சாகரம் ஏழாம் தரங்கத்தில் விரிவாய் எழுதியிருக்கின்றார்.

"மக்களால் வணங்கப்படும் அனைவரும் ஈசுவரர்கள் தாம். எந்த இடத்தில் பிற தெய்வம் நிந்திக்கப்படுகின்றதோ அதன் நிந்தையால், அந்தத் தெய்வத்தின் உபாசனையை விடுவது கூடாது.

"வைணவ புராணத்தில் சிவாதி தேவதைகளின் நிந்தை, விஷ்ணுவின் துதியினால், விஷ்ணு உபாசனையில் தீவிரமாக ஈடுபடுவதற்குக் காரணமாகும். அவ்வாறே சிவபுராணத்தில் காணப்படும் விஷ்ணு நிந்தனைகளும் அந்த விஷ்ணுவை வழிபடுவதை விட்டு விடவேண்டும் என்னும் கருத்தன்று. அந் நிந்தை சிவ வழிபாட்டில் ஊற்றம் உண்டாகும் பொருட்டேயாகும்.

"புராணங்கள் முதலிய நூல்களில் காணப்படும் அன்னிய தேவதைகளின் நிந்தனை, ஒரு தேவதையின் வழிபாட்டில் ஊற்றம் பெரும் பொருட்டேயாம். மற்ற தெய்வங்களின் விட்டுவிட வேண்டும் என்பதற்காக அன்று.

"இதற்கு ஒரு சிறிய உதாரணம் சொல்வது பொருத்தமாக இருக்கும். வேதத்தில் அக்கினி கோத்திரத்துக்கு இரு காலங்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று சூரியோதயத்துக்கு முன்பு, மற்றொன்று சூரியோதயத்திற்குப் பின்பு. சூரியோதயத்துக்கு முன்பு செய்தல் வேண்டும் என்று கூறும்போது, பின்பு செய்வது தவறு என்றும், பின்பு செய்தல் வேண்டும் என்று கூறும்போது முன்பு செய்வது தவறு என்றும் வியாசபகவானே கூறியுள்ளார். அதனால் வியாசர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுபவர் என்று அவரை ஏசலாமா?

"அவர் சொல்லும்படி சூரியோதயத்துக்கு முன்பு செய்வதும் பின்பு செய்வதும் தவறு ஆகின்றது. அதனால் அக்கினிகோத்திரமே தவறு என்பது வியாசர் நோக்கமாயிருக்குமா? இருக்கவே இயலாது.

"சூரியோதயத்துக்கு முன்பு செய்வதை வற்புறுத்தும் பொருட்டுப் பின்பு செய்வது தவறு என்றும் சூரியோதயத்துக்குப் பின்பு செய்வதை வற்புறுத்தும் பொருட்டு, முன்பு செய்வது தவறு என்று கூறியதன்மூலம் இரு காலத்திலும் செய்யவேண்டும் என்று வற்புறுத்துவதே வியாசர் கருத்து. இவ்வாறு கொள்ளாவிடில் அக்கினி கோத்திரமே செய்யாமல் விட்டுவிட நேரும்.

"இந்த எடுத்துக்காட்டின்படி நோக்கினால், விஷ்ணு வழிபாட்டை வலியுறுத்தச் சிவ நிந்தனையும், சிவ வழிபாட்டை வலியுறுத்த விஷ்ணு நிந்தனையும் செய்யப்பட்டுள்ளது என்றே கொள்ளுதல் வேண்டும்.

"நன்றெழில் நாரணன், நான்முகன், அரன் என்றும் இவனை ஒன்றறும் மனத்து உள்ளுதல் வேண்டும் என்பதும்,

"புறம் ஒரு மூன்று எரித்து அமரர்க்கும் அறிவியந்து அரன் அயன் என உலகு அழித்து அமைத்து உளன் என்றும்,

"முனியே, நான்முகனே, முக்கண் அப்பா என்றும் ஞானச்சிகரமாகிய நம்மாழ்வார் கருத்தைப் பொருத்தமில்லை என்று மறுத்து அவர் கருத்தைத் திருத்திப் பிணக்கிட்டு வருத்தத்துக்கு ஆளாகின்றோம்.

"நாட்டினான் தெய்வம் எங்கும் என்றும் பிணக்கற அறுவகைச் சமயமும் நெறி உள்ளி உறைத்த கணக்கறு நலத்தினன்" என்றும் கூறப்பட்டுள்ள பொருளுரைகளை, அருளுரைகள் எனக் கொள்ளாது மருளுரைகள் என்று மறுத்து இருள் உறையுள் வாழ்பவர் ஆகின்றோம்.

"சுருக்கமாகச் சொல்லப்போனால் பிற தெய்வ நிந்தனை தவறு அன்று. பிற தெய்வத்தின் மேல் கொள்ளும் குரோதக் கிராதகச் செயல்களே விராதகுலச் செயல்களாகும்.

"இனிப்பு வகை உண்டவுடன் வேப்பம்பூ முதலிய கசப்பும் பரிமாறுவர். அது இனிப்பை இகழ்வதற்காக அன்று. இனிப்புச் சுவையை மிகுவித்துப் பயனைப் பெருக்குவதற்காகவே எனக் கோடல் வேண்டும்".

நம் நாட்டுச் சமயத்தை யாரும் நிறுவவில்லை. அதற்குப் பெயரும் இல்லை. இந்துமதம் என்பது பிறர் இட்ட பெயரே என்பது வரலாறு காட்டும் உண்மை. பெயர் குறிப்பிட வேண்டிய கட்டாயம் நேரும்போது 'சனாதன (மதம்) தர்மம்' என்றும் 'வைதிக(மதம்) தர்மம்' என்றும் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

இராமகிருட்டிணரின் தலைமாணாக்கர் விவேகானந்தர் முதலியோர் சனாதன தருமத்தை வளர்க்கப் பாடுபட்டனர். அதை வளர்க்க வேண்டும் என்பதற்காக அதன் பெருமையை உலகெங்கும் முரசறைந்து முழங்கினரே அன்றிப் பிற மதங்கள் ஆகிய இசுலாம், கிருத்துவ சமயங்களை மறுக்கவோ வெறுக்கவோ இல்லை. இதற்கு அவர் சொற்பொழிவுகளும் எழுத்துகளும் சான்றாக உள்ளன.

நற் செய்யப் புல் தேயும் என்பது பழமொழி.

நற் செய்யப் புல்தேய்ந்தார் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்.

என்று பழமொழி நானூறு என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

இந்தப் பழமொழியை வைணவ உரையாசிரியர்கள் அடிக்கடி எடுத்தாளுவதுண்டு.

இந்தப் பழமொழியின் கருத்து, நீ உன் அறத்தை (சமயத்தை) வளர்த்தால் போதும். பிற சமயத்தை அழிக்க முயலாதே! வயலில் நெல்

விளைய விதைத்தால், அதில் மண்டிய களைகள் தாமே அழியும். நீ அதை அழிக்க முயல்வது வீண்" என்பது ஆகும்.

நம் ஆன்றோர் இம் முறையை முழு மனத்துடன் உணர்ந்து செயல் பட்டமையால்தான் இந் நாட்டில் பல சமயங்களும் இடம் பெறலாயின. "காலையில் நறுமலர் அனைய காட்சிய" எனறு கம்பன் பல சமயங்கள் நம் நாட்டில் உள்ளமைக்கு உவமை காட்டுகின்றான்.

மலர்கள் காலையில் மலர்வன பல. மாலையில் மலர்வன சில. காலையில் மலரும் மலர்கள் பல வண்ணங்களாக இருக்கும். மாலையில் மலர்வன வெண்ணிற நிறமுடையன மட்டுமே! காலையில் பல வண்ண மலர்கள் மலர்வது போல, பல கொள்கைகளை முன் வைத்த பல சமயங்கள் நம் நாட்டில் உள்ளன என்பது கம்பன் கருத்து. ஆனால்,

இந்த நிறம் சிறிதென்றும்
இந்த நிறம் பெரிதென்றும்
தந்தமில் போரிடல் இல்லை
சமநிலை கோடுதல் இல்லை.

இந்நூல் காட்டும் புதுமைச் செய்தி.

இந்தப் பிள்ளைத்தமிழில் பல இடங்களில், ஆண்டாள் ஐவரை விரும்பியதாகவும் மணந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. அரங்கன் முதல் பாரில் ஐவரை எய்துவாள். ஐந்து வயதில் பிஞ்சாய்ப் பழுத்த பெண் அமுது(14) என விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

அரங்கேசன் முதல் ஐவரும் மகிழ(38) (90)
புதுவை நகர் மன்னர் வதுவைக் கமைந்துளாய் (96,97,98)
வடவேங்கடத்துக் கருமணி(76)
வடபெருங்கோயிலுட் கடவுள் வழகளிறணைய வருக
(68,69,70)
வடமலை தனிலுறை அப்பனும் மெய்ப்பாக(57)
இடபம தெனும்மலை யிற்குடிப்புக்கானும்(57)
ஆவேறு ஆய் வாரார் தாம் முதல்வர்(கண்ணன்) (47)
வடமலை முதல்வர்(47) அரவின் இடைதுயில் புனிதர்
குழமகர் அழகர்
அரங்கத்து அமுதம் விரும்பிய பெண் (37)
அரங்கத் தமுதின் அமுதே (30)
அழகனும் அப்பனும் இன்புற (28,29)

என்றும் பல இடங்களில் விடாமல் தொடர்ந்து கூறுவதில் பெருவகை கொள்கின்றார் விறுடைய பாவலர்.

ஆண்டாள் ஐவரை மணந்து கொண்டதாகக் குருபரம்பரையில் வரலாறு இல்லை.

அப்படியாயின், இச் செய்தி இப் புலவருக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது?

சீவல் மாறன் கதை

தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் ஏடு தேடித் திரட்டிய செய்தி அறிவோம். அவர் திரட்டிய ஏடுகள் இன்றும் பல அச்சாகாமல் உள்ளன. உ.வே.சா. நூலகத்தார் ஒன்றிரண்டு மட்டும் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர். அவற்றுள் ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. நூலின் பெயர் "சீவல மாறன் கதை". அது ஓர் இனிய காவியம். சிதம்பரநாத கவி என்பவர் அதனைப் பாடியுள்ளார். அவர் சைவப் பற்றாளராக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஆயினும் அவர் வைணவ வெறுப்பாளராக இருக்கவில்லை. இரு சமயத்தையும் இரு கண்களாகக் கருதியுள்ளார். சீவலமாறன் நெல்லையில் பிறந்தவன். திருத்தல யாத்திரை புறப்படுகின்றான். பல ஊர்த் தெய்வங்களைச் சைவ, வைணவ வேறுபாடின்றிக் கண்டு வருகையில், ஆண்டாள் பிறந்த திருவில்லிபுத்தூரை அடைகின்றான். இவ் இடத்தில் ஆண்டாள் வரலாற்றில் ஒரு புதுச் செய்தியை இணைக்கின்றார் சிதம்பரநாத கவிஞர்.

திருமால் கண்ணாகத் தோற்றம் செய்தபோது திருமாலின் முத் தேவியருள் ஒரு தேவியாகிய நில மகள், சத்தியபாமையாகப் பிறந்துள்ளாள். ஒருநாள்,

**பஞ்சவரும் இன்பமுறும் பாஞ்சாலி எனும் திருவை
அஞ்சொல்இளம் புலிமடந்தை அவமதித்து, நினைய, அவள்
இன்சொல் இளங் குயில் அனையாய் என்போல ஐவருக்கும்
தஞ்சமுறும் ஒருமனை(வி)யாய் வருதி எனச் சாபமிட்டாள்.**

**தையலாள் உடுசாபம் தப்பாமல் தரணிமான்
தூய்யமால் ஐந்துஉருவாய்த் தோன்றியே தோய்ந்தருள
வையமீ தில்துளப மலர்க்காவில் அவதரித்துப்
பையரா அணிஅல்குல் பட்டர்பிரான் இடத்திருந்தாள்.**

பட்டர்பிரான் மகளாகிப் பைந்தொடி மாயனுக்கு அவனும்
கட்டியபூ மாலையினைக் கருங்குழல்மேற் புனைந்தருளி
இட்டமுடன் கொடுத்தருள எம்பெருமான் அதற்கு இசைந்து
வட்டமுலை அணிந்துஉதவு மாலைஉவப் புடன்அணிந்தான்.

இந்நெறி செய்து ஒழுகும் இளங்கொடி சூடியமாலை
தன்னை உதவிய தாதை கண்டு தடுத்தே பயந்து
மின்அனையாள் வனையாமல் விரைமலர்த் தார்
தொடுத்திடலும்
கொல்நவில் சக்கரப்படையான் கோதைமணம் காணாமல்

ஈங்கு நீ புனையவரும் எழில்மருவு பூங்கோதைத்
தேங்கமழும் பூங்கோதை செறிவாசம் காணோம் என்று
ஆங்குஅருளிச் செய்ய, வந்தே அன்னம்
அனையார் திருப்பேர
ஓங்கியபூங் கோதை சூடிக்கொடுத்தாள் என உரைத்து.

அரிதாக வளர்ந்தருள அணிஅரங்கம் துயில்வானும்
விரிசோலை மலையானும் வேங்கடத்தில் உறைவானும்
வரிதாவும் பொழில்புடைசூழ் வடபெருங்கோயில்பரனும்
பிரியாத மன்னருடன் பெருமணம் செய்து இனிது உவந்தார்.

அந்நகரில் இனிதேகி அரசர்தொழும் அரசர் பிரான்
மன்னருடன் மாதினையும் வடநிழல்வாழ் பரமனையும்
பொன்னரங்கர் அழகருடன் பொற்புறுவேங் கடவரையும்
இன்னல்கெடப் பணிந்தேத்தி அந்நகரில் இனிதமர்ந்தான்.

என்ற கொச்சகப் பாக்களே அச் செய்தி கூறுவன. இப் பாடல்களின்படி ஆண்டாள் மணந்தவர்கள் ஐவர்.

1. அரங்கன்
2. அழகன்
3. அப்பன்
4. வடபெருங்கோயிற்பரன்
5. அழகிய மன்னர்.

இவர் ஐவரும் பேராயிரம் உடைய பெருமானின் ஐந்திடத் தமர்ந்த பெயர்களே.

இவர்களைச் சீவலமாறன் கதைஞர்

1. அணையரங்கம் துயில்வான் -பொன்னரங்கர்
2. சோலைமலையான் -அழகர்
3. வேங்கடத்தில் உறைவான் - வேங்கடவன்
4. வடபெருங் கோவிலான் -வடநிழல் வாழ்பரமன்
5. பிரியாத மன்னர் -மன்னர்

என இரண்டிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஐவருள் அழகிய மன்னர் என்பவர் அரங்கமன்னர் என்றும், இராசமன்னர் என்றும் செண்டலங்காரர் என்றும் பெயர் பெறுவர் என்று தோன்றுகிறது. மன்னர் என்பது மன்னார் என மருவி வழங்குகிறது.

இந்த ஐவரும் ஆண்டாளைப் பெருமணம் செய்து இனிது வந்தார் என்று ஐயமற விளக்குகின்றார். இந்தப் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் இந்த ஐவரையும் அரங்கேசன் முதல் ஐவர் என்று தொகைப்படுத்தியும்

1. அரங்கத்து அமுதம்,
2. சோலைமலைக் குழகர் அழகர்,
3. வடவேங்கடத்துக் கருமணி, வடமலை முதல்வன் வடமலை தனிலுறை அப்பன்,
4. வடபெருங் கோயிலுள் கடவுள் மழகளிறு,
5. புதுவைமா நகர் அழகிய மன்னர்.

என்று வகைப்படுத்தும் பல இடங்களில் குறித்துள்ளார். சீர்வில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலுள் ஆண்டாளுக்கு அருகில் இணையாக வீற்றிருப்பவரே ஐந்தாமவராகக் கூறப்படும் மன்னர். ஆண்டாளைப் பிரியாமல் அருகிலேயே எப்போதும் இருப்பதால், சீவலமாறன் கதை அவரைப் "பிரியாத மன்னர்" என்று பொருள் பொதிந்த அடைமொழியுடன் குறிப்பிடும்போது அழகிய மன்னருடன் மாதினையும் (ஆண்டாளையும்) பணிந்தேத்தினான் என்று மன்னரையும் ஆண்டாளையும் இணைத்தே பேசுகின்றது சீவலமாறன் கதை. அதுமட்டுமல்ல, பிற நால்வரையும் ஒருமையில் கூறிவரும் புலவர் அழகிய மன்னரை மட்டும் மரியாதை ஒருமையில் குறிப்பிடுகின்றார்.

இந்தப் பிள்ளைத்தமிழ் கவிஞரும் புதுவை நகர் மன்னர் (96,97,98) என மூன்றிடங்களில் குறிப்பிடுவதோடு, செண்டலங்காரர்(19) என ஒரிடத்தில் குறிப்பிடுகின்றார். செண்டலங்காரரும் மன்னரும் ஒருவரே என்று கருதலாம்.

புதுவை நகர் மன்னர் (96, 97, 98) என்று மன்னருக்கு அடைமொழி கொடுத்தது போலவே புதுமுக்குளப் புதுவை நகர்வாழ் வாழ்வுபயில் செண்டலங்காரன்(19) என்று அடைமொழி கொடுப்பதால் இது

உறுதியாகின்றது" செண்டு என்பது ஒருவகைப் படை என்று உ.வே.சா. அவர்கள் முயன்று பொருள் கண்டுள்ளார். அது முனை, வளைவாக இருக்குமாம். துச்சாதனன் திரௌபதையை அந்தப் படையின் வளைவால் தா்ன் பற்றி இழுத்து வந்தானாம்.

இதுவரை கூறியதிலிருந்து சீவலமாறன் கதையைப் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் நன்கு கற்றிருக்கலாம் என்று உறுதியாகின்றது.

மன்னர் வரலாறு

அழகிய மன்ன(ா)ர் என்பவர் யார்? ஆண்டாள் தோன்றுவதற்கு முன்பே வில்லிபுத்தூரில் கோவில் கொண்டிருந்தாரா? இருந்தால் அங்கே குடிகொண்ட வடபெருங்கோலுடையானைப் பாடிய ஆண்டாள், அழகிய மன்னரைப் பாடாமல் இருப்பாரா? என்ற ஐயங்கள் இயல்பாகவே எழத்தான் செய்யும்.!

மன்ன(ா)ர் குடி என்ற திருப்பதியில் கோவில் கொண்டிருப்பவர் இராசமன்னார் என அழைக்கப்படுகின்றர்.

அவரைப் பற்றி ஆண்டாள் அறிந்திருந்ததாகத் தோன்றவில்லை. ஆதலால் அந்த (இராச) மன்னா(ர்) புதுவை அழகிய மன்னராக இருத்தல் இயலாது.

இதற்குத் தக்க விடைக்கனி பெறுவதற்குச் சீவலமாறன் கதைச் சோலையிலே, நாம் மீண்டும் புக வேண்டியுள்ளது.

சீவலமாறன் திருவில்லிபுத்தூர் வருவதற்கு முன்பே, கங்கை ஆற்றுக்குப் புனலாடுதற்குப் போனான்.

அங்கே கங்கைக் கரையில் ஓர் அருஞ்செயல் நாடோறும் நிகழ்ந்து வந்தது. ஐவாய்ப்பாம்பு ஒன்று கங்கையிலிருந்து அழகிய மன்னர் சிலையை வாயில் கவ்விப் பிருகு முனிவரிடம் சேர்க்கும். முனிவர் அதற்குப் பூசனை செய்வார். பூசனை முடிந்ததும் அதே பாம்பு மன்னர் பெருமானை மீண்டும் கொண்டு கங்கையுள் மறையும்.

"அன்ன தன்மையைக் கங்கைநீர் ஆடச் சென்று அணையும்
மன்னர் மன்னவன் கண்ணுறக் கண்டுமா தவத்தோன்
தன்னை அன்பொடு தாழ்ந்துஉற வணங்கி, நீதக்கோய்?
இன்ன விம்பமேது? இயம்புதி என, முனி இயம்பும்.

"ஆதிப்பிரமன திருமாலைப் பூசிகக விரும்பி ஒரு விககிரததை அமைததுப் பூசித்து வந்தான். அதைக் கணட இநதிரன், பிரமதேவனிடம் அந்த விக்கிரகம தனககு வழங்குமபடி வேண்டினான். முதலில் மறுத்த பிரமன், இந்திரன் செய்த தவத்தால் இரக்கமுற்று அவனுக்கு மன்னர் பெருமானை வழஙகினான். இநதிரன் அந்த மனனரைத் தேவருலகில் நிறுவி, ஐநது கோடி ஐமபதாயிரம் ஆணடுகள பூசனை செய்தான.

"அக காலததில் திருமால் அருச்சுனனுடன் கண்ணனாக உலகில தோனறினான. கணணபிரான் அருச்சுனனிடம நீ இந்திரனிடம சென்று, அவன் வழிபடும சிலை வடிவத திருவடிவை (அர்சசா மூாததியை)ப் பெறறுவா! எனறு ஏவினான.

அருசசுனன விருப்பபபடி கண்ணனும் அருச்சுனனுடன விண்ணுலகம் சென்றான். "இநதச் சிலையை உன் மகன் அருசசுனனுக்குத தருக!" எனறு கணணன் இந்திரனிடம சொன்னானன்.

"இது எனககுப பிரமன் வழஙகியது. அதைப் பிறர்ககுத தநதால், தீமை விளையும" எனறு கூறித தர மறுத்தான இந்திரன.

மற்றவாககுத தந்தால தான தீமை விளையும, தந்தையுடையது மைநதனுககுத் தருவது மரபு. ஆதலால் தீமை விளையாது" எனறான கண்ணன்." அபபடியாயின், இந்தத் திருவுரு தானே அருசசுனனிடம அணையுமேல கொளக" எனறான இநதிரன. இநதிரன சொலவதற்கு முனனரே அந்த மனனா, விசயன கையில அமாந்து கொணடாா.

"அருச்சுனன உலகிற்கு அழகிய மன்னரைக் கொணாநது பூசிதது முத்தி பெறறான அவன முத்தி பெறுமுன்பு இநதச சிலையைக் கஙகைக் கரையில் வைத்து விட்டுச சென்றான்.

"அதனைக கணணன என்னிடம தநது வழிபடடு வருக எனறான. அப்போது வாசுகி "நான அனறாடம கங்கையிலிருநது பூசனைக்குக கொணாவேன" எனறு உறுதி கூறி எடுத்து நீருள மறைநதது. இதுமுதல இவவாறே நடநது வருகினறது" எனறார் புருகு.

இவ வரலாறு கேடட சீவலமாறன பிருகுவை வணஙகி, இந்தச சிலலையை அடியேனுககுத தருக! என இரந்தான. "நீ தவம செய் அநதத திருவுரு தானே உன்னிடம வநதால், கொணடு செலக" எனறாா பிருகுமுனி. முனிவா சொறபடி சீவலன ஏழு நாள கஙகைக் கரையில தவம செய்தான. இறைவன் எதிரில தோனறி, கஙகை நீராடி உன கையை விரிபபாயாக! நாம வநது உன்கையில அமாவோம வழிபடடு உயக!" எனறான.

இறைவன் சொன்னபடி சிலை சீவலன கையை அடைந்தது. பினபு சீவலன் பிருகுவை அடைநது அவன சொன்னபடி வழிபாடு செய்தான்.

புனலாட்டு (தீர்த்த யாத்திரை) முடிந்தபின்பு தன் தலைநகர் சேர்ந்த மாறன் கனவில் அழகிய மன்னர் அநதணராகக் காட்சி தந்தார். தமக்குச் சண்பகவனததில் கோவில் அமைக்க வேண்டும் எனறும் கோவில் கட்டும் இடத்தை எறுமபு வரிசை காட்டும் என்றும் சொல்லி மறைந்தார் மன்னர்.

மாறன அரணமனை வாசல் அடைந்து நோக்க அங்கே எறும்பின் ஒழுங்கைக் கணடு அதன்பின் சென்றான. அங்கு முனபே விநாயகன் ஆலயம் இருந்தது.

பரஞ்சோதியார் வடநாட்டில் படையெடுதது வெனறு வாதாபியிலிருந்து கணபதியைக கொணர்ந்து தமிழகத்தில நிறுவி வழிபடடதாக வரலாறு கூறுகின்றது. அதனபினபுதான கணபதி வழிபாடு தமிழகத்தில பரவலாயிற்று. இந்த விநாயகன் ஆலயமும அக காலத்தில் எழுநததாக இருக்கலாம.

மாறன் அதன அருகே, அற்புதமான கோவிலை அழகிய மன்னாருக்கு அமைததான். அகரம சமைத்து அந்தணரைக் குடியேற்றினான. தான அமைத்த கோயிலில. குடிகொண்ட அழகிய மனனரையே சீவலமாறன, ஆண்டாள கோயிலில, ஆண்டாளுடன் இணைத்து வைததிருக்கலாம எனறு கருதுவது பொருத்தமானதே! சீவலன அழகிய மன்னருக்குத கோவில் அமைத்த இடம செண்பக வனம எனகினறது சீவலமாறன் கதை. வில்லிபுத்தூருக்குச் செண்பகவனம என்ற பெயர் உண்டு. செண்பகத் தோப்பு பரநதுபடடு இன்றைக்கும் உளளமையால அது காரணப பெயர். ஆகையால் மனனா கோயில் கொண்ட இடம் வில்லிப்புத்தூரே என்பது உறுதியாகின்றது.

பின்பு சிவன, திருமால இருவரும் பூசித்த சிலைகளைக கண்டு அவற்றிற்கும் அஙகேயே மாறன கோயில் எடுத்தான். குடிமக்கள வாழ்வுபெற பல ஊர்களை நிறுவி கால்வாய் வெட்டி ஏரிகள் அமைத்து நீர்வளம் உண்டாகினான்.

பொருநை ஆற்றுநீரைத தேக்கி அமைத்த வாய்க்காலைப் பசசையாறு அழிக்க முற்படடது. மனனர் அழகிய மனன(ர)ர,பாதம வணங்கி முறையிடடான. மனனர், "நாளைக் காலையில எதிரபபட்ட மலையை உடைத்துக கொண்டு பச்சையாறு போகும். உன வாயககால அழியாது எனறார் அதன படியே நடநதது.

பின் சடகோபராகப பிறந்த திருககுறுஙகுடி நமபிககுத் திருப்பணி செயயுமாறு விசயன, நாரணன என்ற இரு தூதுவரை ஏவினான. அவாகள குறுஙகுடியில நிலஙகளை மேடுபளளஙகள திருததி, நீர்பெருகச

செய்தனா. அவர்கள செயத செயறகரிய பணியைக கருதி, அஙகு ஓா ஊர் நிறுவி, அதறகு விசயநாரணம எனப பெயரிடடான. விசயனும நாரணனும ஆகிய இருவா பெயரால அமைநத அவ்வூர் இனறும அந்தப பெயரிலேயே விளஙகி வருகினறது.

இங்கே மற்றொரு செய்தியும் கூறுவது பொருத்தமாக இருக்கும. திருமால அருடகடல், அனைத்து மாயுள்ளோன், அன்பர் ஆரவலன்.

அவன் அடியார் நலத்துக்காக எதையும செய்வான். அடியார் உரைதத சூளுரை நிறைவேற்றுவதற்காகத் தன் சூளுரையைக் கூட கைவிடும் இயல்புடையவன்.

வீடுமன், கண்ணனிடம "நீ பாரதப் போரில் படை தாங்கேன் எனறு சூள் உரைத்துள்ளாய்! நான உன் சூளைப பொய்க்கக செயவேன' எனறு சூள உரைத்தான.

திருமாலடியாருள சிறந்தவனான செம்மல வீடுமன் சூளை நிறைவேறறுவதற்காகக் கணண பெருமான தன சூளுரை மறநது, வீடுமனைக் கொல்லத் தயங்கி அருசசுனன் நினறபோது, தானே தேரினின்றும இறங்கிச் ஆழிப படையை எடுததது வீடுமன சூளை மெய்ப்பித்தான. தன சூளைப புறக்கணித்தான். இது கணணன அடியவர்பால் கொணட பேரனபை வெளிப்படுத்துகினறது.

அதே இறைவன தேவியருள ஒருததி தானே பாமை. அவள திரெளபதியை அவமதித்தாள. உடனே திரெளபதி, "நீயும ஒரு பிறப்பில ஐவரை மணபபாயாக! எனறு சாவிபபுத தநதாள. திருமால் தேவி சததிய பாமையும், நீர்மையின் நிமிரநத நெடுமாலை நினைநத திரெளபதியின் சாவிப்பை நிறைவேற்றும பொருட்டு, ஆணடாளாகத தோனறினாள்; ஐவரை மணந்து கொண்டாள என்பது பாமையின் வேடகபபடுவோன் விழுமிய சீரினை பண்பைக காட்டுகின்ற தன்றோ? பாமையும் ஆணடாளும ஒருவா தாமே! இநத அருட செயல ஆண்டாளின் புகழை புதுவைக் கலைகோயிலைப் போலவும புதுவைததேர் போலவும வானளாவ உயாத்தியுள்ளது.

திருவில்லிபுததூர் - புதுவைக் கோபுரம தமிழகத்திலேயே - இலலை, இந்தியாவிலேயே உயரமானது. பதினோரு நிலைகள கொணடது. அதனால் தான் அதனைத் தமிழக அரசு தன முத்திரையில இடம பெறச் செயதது.

இபபோது அரஙகக கோபுரம 13 நிலைகளுடன புதுவதாக அமைக்கப்பட்டதால, புதுவைக கோபுரம இரணடாம இடம பெறறுளளது. இரண்டாம இடம பெற்றாலும அதன புகழ முதலிடததில் தான உளளது. தேரின் உயரம அந்த முதலிடத்துககு அரண செயவதை இனறும காணலாம.

பாமையின் பெருமையை மலை விளக்காக்கித் தன் கற்பனை எண்ணெயால் வானளாவி எரியும்படி தூண்டிவிட்ட விசயமங்கலமம் மயிலேறும் பெருமாள் திருக்குமாரர் சிதம்பர நாதக் கவிமன்னரை, கவிதைக் கருணை முகிலை வாழ்த்திப் போற்றுவது வைணவர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

நூலின் சிறப்பு

நூலின் முன்பு இடம் பெறுவது பாயிரம எனப் பெயர் பெறும். பாயிரத்தின முதறபாடல் கோயில் அண்ணன் (இராமாநுசர்) காப்பாக அமைகின்றது.

அதற்கு அடுத்து இரு பாடல்கள அவையடக்கம். அவையடக்கம எனபது நூல அரஙகேறும் போது, குற்றம் கண்டு சிலர் குறை கூறாதிருக்கத் தம் பணிவுடைமையால் அவையை அடககுவது எனப் பொருளபடும.

முதலில் கூறும் பாயிரப பகுதியாக அவையடக்கச் செய்யுளிலேயயே கவிஞர் தம கற்பனை வளத்தைக கொட்டி, அவையோரைக குறைகூற இயலாமல் மெயமமறககச் செய்வது எனறும பொருள கொளளலாம.

இந் நூலின் அவையடக்கச் செய்யுள இரண்டாம வகையைச சேர்ந்த கறபனை வளம சுரப்பதாக அமைகினறது.

அதன் பினனா பாயிரப பகுதியிலேயே பழிசசுநர்ப் பரவல் எனற தலைபபில பதினொரு பாடல்கள உளளன. அவை திருமாலைப பரவுகினற சேனைமுதலியார், முதல திருவரங்கத்தரையர் திருமலை ஆண்டான முதலியோரை எடடுப பாடல்களில் ஆணடாள பேரில் பாடிய பிளளைத் தமிழைக காககுமாறு அமைந்துளளன. அதனபின உளள பாடலகள ஆண்டாளைத துதிப்பதாக அமைநதுளளவை.

இப் பகுதிக்குப 'பழிசசினாப் பரவல்' எனத தவறாக வேறு ஒரு பதிப்பில பெயர் அசசாகியுளளது. பழிச்சுதல், முழககுதல, விளக்குதல், துலக்குதல, உரசுதல், பரவுதல என வரும. உகர ஈற்றுப் பகுதிகள நர் எனற பெயர் விகுதி பெறுமபோது, பழிசசுநா, முழக்குநர், விளக்குநா, துலககுநர், உதவுநா, பரவுநர் எனததான் வரும. பழிச்சினா என வரும் மரபு இல்லை.

இகழநர், அறிநர், வருநர், செல்லுநர் என்று வினைப் பகுதியைப் பெயராகக வருகினற நர் என்ற இடைச் சொல் எலலாம் பகுதியைத் திரிக்காமலேயே வரக் காண்கிறோம.

அதன்படி பழிச்சு என்ற பகுதியும் நர் என்ற இடைச் சொல் பெறுகையில் பழிச்சுநர் என வருதலே பொருந்துவதாகும்.

பழிச்சுநர்ப் பரவல் இந்தப் பிள்ளைத் தமிழில் வந்துள்ள பாயிரப் பகுதி. இது பெரும்பாலான பிள்ளைத் தமிழ்களில் இல்லை. அழகர் பிள்ளைத் தமிழில் மட்டும் வந்துள்ளது. அதன் பின் இப் பிள்ளைத் தமிழில் வந்துள்ளது. அழகர் பிள்ளைத் தமிழ் சற்றொப்ப நூறு ஆண்டுக்குமுன் அச்சாகியுள்ளது. பழிச்சினர்ப்பரவல் அங்குப் பாயிரமாகவேயுள்ளது. 'பழிச்சினர்ப் பரவல்' என்பது அங்கும் மரபுப்படி தவறுதான். ஆதலால் இந் நூலில் பழிச்சுநர்ப் பரவல் என்றே தலைப்புத் தரப்பட்டுள்ளது.

பழிச்சினர் என்றால் முற்காலத்தில் (இறந்த காலத்தில்) வழிபட்டவர்கள் என்ற பொருள்படும். வைணவ மரபில் ஆசாரியர், ஆழ்வார்களின் உள்ளுயிர் (ஆன்மா) இன்றும் நம்மோடு இருந்து நமக்கு வழிகாட்டிக் கொண்டுள்ளது என்பது வைணவர் கொள்கை. இறைவனுக்குத் தொடக்கமிருந்தால்தான் அவர்களுக்கும் முடிவுண்டாகலாம்.

ஆதலால் ஆசாரியார் ஆழ்வார்களைக் குறிப்பிடும்போது, முக்காலத்தும் ஒத்தியல்பவராக வாழ்ந்திருப்பவராகக் கருதிச் செப்புதல் வேண்டும் என்பது வாய்மையின் வாய்மை. ஆதலால் அவர்களைப் பழிச்சிநர் என்று இறந்த காலத்தால் கூறுவது பெரும்பிழை. பழிச்சுநர் என்று முக்காலத்துக்கும் உரிய சொல்லால் கூறுவதே முறை.

இந் நூல் காப்பு, அவையடக்கம், பழிச்சுநர்ப் பரவல் முதலிய பாயிரத்திற்குப் பின்பு, காப்புப் பருவத்தில் தான் தொடங்குகின்றது. வைணவ நூல் ஆகையால், வையம் காப்பவனையே (சகத்ரட்சகன்) காப்புக் கடவுளாக வாழ்த்துகின்றார் நூலாசிரியர். இது பாட்டியல் மரபுப்படி சரியாக அமைகின்றது..

குமரகுருபர சுவாமிகள் இரு பிள்ளைத் தமிழ் நூல்கள் செய்துள்ளார். இரண்டையும் திருமால் காப்புடனேயே தொடங்குகின்றார். காப்புப் பாடல் இரண்டும் பச்சைப் பசுங் கொண்டலே என்ற ஈற்றுடனேயே முடிவது அழகுக்கு அழகு சேர்க்கின்றது.

ஆனால் சிவஞான முனிவர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலிய சைவச் சான்றோர் பாடிய பிள்ளைத் தமிழ் நூல்களில், காப்புப் பருவத்தில் திருமாலைப் பாடாமல் மரபை மீறியுள்ளனர். அதற்குக் காரணம் அவர்களின் கரைகடந்தெழுந்த சைவப் பற்றே எனலாம்.

வில்லிபுத்தூரில் ஒரு முக்குளம் உண்டு. முக்குளம் என்பது மூன்று குளங்கள் எனப் பொருள்படும் காரணப் பெயர் அன்று இடுகுறிப் பெயரேயாகும்.

கவிஞர் தம் கற்பனையால் தற்குறிப்பேற்றி அணியமைத்து வேறு ஒரு முக்குளம் படைத்து அதனை எண்ணடியில் பிறந்த பெயராக்கிக் காரணப் பெயராகக் காட்டுவது வியப்பும் நயப்பும் பயக்கின்றது.

இவ்வாறு பாடல்தோறும் ஏதாவது ஒரு வியப்புச் செய்து பாச் சுவை பெருக்கெடுத்து, நம் நெஞ்ச முக் குளங்களை நிரப்புவது நினைத்தற்கரிய செயலாகும். புலவரின் கற்பனைச் சிறப்பனைத்தும் எடுத்துக் காட்டுவதெனில் நூல் நயத்தில் சிறப்பது போல், வடிவிலும் பெருத்துவிடும். ஆதலால் நயங்களை ஆங்காங்கே காண்க!

இனி இந் நூலின் அரும்பொருள் அமிழ்தம், பொழிப்புரை பற்றிச் சில கூறி முடிப்போம். பொழிப்புரையானது பாடலின் சொல்லுக்குச் சொல் விரித்து ஒரோரு தொடராக அல்லாமல், சிறுசிறு சொற்றொடர்களாக அமைக்கப்பட்டுள்ளது. படிப்பவர்க்குச் சோர்வு தராமல் இருபப்பதற்கும் சீர்மை தெளிவதற்கும் இம் முறை கையாளப்பட்டுள்ளது.

வண்ண (சந்த)ப் பாடல்கள் பாடுவதில் பெருவன்மை படைத்தவர் இந் நூலாசிரியர். சில மிக அரிய வண்ண (சந்த)ங்களைச் செப்பமாக அமைத்துள்ளார். பெரும்பாலும் பாடல்கள் ஆற்றொழுக்குப் பொருளிலேயே அமைந்துள்ளன.

பாட வேறுபாடுகளால் பொருள் சில இடங்களில் குழப்பமாகவே இருந்தன. அவற்றைச் செம்மை செய்து செம்பொருள் காண்பது கடினமாகத்தான் இருந்தது. ஆயினும், அருட்கவி அரங்க சீனிவாசனார் அருள் வழிகாட்ட எடுத்த அளவில் அமைந்தது தொடுத்து நிறைவுற்றது.

பிள்ளைத் தமிழ் நூல்கள் செய்யப்புகும் புலவர்கள், தெரிந்தோ, தெரியாமலோ ஒரு தனி நடையைக் கையாளும் கட்டாயத்துக்குட்படு கின்றனர். இந் நூலாசிரியரும் அதற்கு விலக்கல்லர்.

சங்கத்தமிழ், மறைத்தமிழ், கோதை தமிழ், பெருந்தமிழ், இருந்தமிழ் என்று பல வகைத் தமிழ் வைணவத்தில் அறிமுகமாகியுள்ளதைக் காண்கிறோம்.

அவற்றைப் போல் பிள்ளைத் தமிழும் ஒரு தனித் தன்மை பெற்றதாக உள்ளதைக் கூர்ந்து நோக்குவோர், காணலாம். அது மிடுக்காகவும் பொருள் அடுக்காகவும் நீண்ட தொடுப்பாகவும் வண்ணஞ் சிதையாமலும் இருக்கின்றது.

பிள்ளைத் தமிழ்களில் பெரும்பாலான பாடல்கள் பதினான்கு சீர் கழிநெடியாசிரியமண்டல (விருத்த)ங்கள் என்ற பெயருடன் இடம் பெறும். ஆனால் அவற்றுள் எங்காவது ஓரிடத்தில் தான் பதினான்கு சீர் இருக்கும் மற்றைய இடங்களில் பெரும்பாலும் பன்னிரண்டு சீர்களாகவே தலைகாட்டும்.

தமிழ்ச் சீர்களில் ஓரசைச்சீர் என ஒருவகை உண்டு, அதைப் புலவர்கள் முழுவதும் மறந்து விட்டமையால், இந்தக் குழப்பம் நேர்ந்துவிட்டது. அந்த ஓரசைச் சீர்க்கு அடிதோறும் இடம் தந்து பதினான்கு சீர்களாக்கித் தந்துள்ளோம்.

இவ்வாறு ஓரசைச் சீரைத் தனியாகப் பிரிந்து, பதினான்கு சீராக்கியது புதுமை அன்று; பழைய மரபுதான். ஆனால் புலவர்கள் மறந்து விட்ட மரபு. அதனை மீண்டும் அறிந்து, சீர் குறையாமல் நிரப்பிக் கொள்வதற்குப் பழமை மரபை நினைவூட்டியதே யான் செய்த சிறு தொண்டு.

பதினான்கு சீர்ப் பாடல்களில் இறுதியில் கண்டிப்பாக ஓரசைச் சீர் இடம்பெறும். அந்த ஓரசைச் சீரைத் தனியாகப் பிரித்து இடம் வெளிவிட்டுப் பதிப்பித்துள்ளேன்.

நூலாசிரியரைப் பற்றி

இப் பிள்ளைத் தமிழை இன்சுவை பெருகிக் கற்பார் மனம் கனியப் பாடிய குன்றாப் பொருட்சுவை, கலை வல்லுநன் பெயர் கூட அறியக் கூடவில்லை. வில்லிபுத்தூரிலுள்ள கோவில், திருமுக்குளம் நேரில் கண்டு காட்டுவது போல் காட்டும் திறம், இவர் பாடல்களில் பளிச்சிடுகின்றது.

கற்பனைகள் காட்டாறாகப் பெருக்கெடுத்தாலும் களிப்பாறாக அடங்கி உள்ளத்தில் தேங்கி இன்பப் பயிர் வளர்க்கின்றன. இத்தன்மையை நோக்கும் போது முற்றுணர்ந்தாரையும் வெற்றி கொள்ளும் இப் புலவர் திருவில்லிபுத்தூர் ஊரினராக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆண்டாள் சந்திர கலாமாலை' என ஒரு நூல் உள்ளது. அதன் நடை பெரும்பாலும் இவர் நடையை ஒத்துள்ளது. ஆதலால் அந் நூலைப் பாடியவராகவே இவர் இருக்கலாம் என்ற கருத்து வலியுறுகின்றது.

சந்திரகலா மாலை ஆசிரியர் தம்மை வைணவரில் பூர்வசிகையில் வந்தவராகவும், திருமருவும் வேயர் குலத்து உதித்த அந்தணராகவும், வில்லி எனப் பெயர் பெற்றவராகவும் அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். 'சந்திரகலா மாலையைப் பாடியவரே, பிள்ளைத்தமிழ் பாடியவருமாக இருக்க வாய்ப்பு அதிகம் இருப்பதால், இவர் பெயர் "வில்லி" என்று கொள்ளத் தடையில்லை. வில்லிபுத்தூரில் பிறந்தவர்கள் வில்லி என்றும், வில்லிபுத்தூர் ஆழ்வார் என்றும் பெயர் பெறுவதை மாபாரதம் பாடிய வில்லிபுத்தாழ்வார் பெயரால் அறியலாம். வேயர் குலம் என்பது குலத்தின் பெயர் அன்று. அஃதோர் ஊரின் பெயராம் அது மூங்கிற் குடி என்றும் அழைக்கப்பெறும்.

இராமநுச நூற்றந்தாதி அருளிய அமுதனார் தோன்றிய ஊர் மூங்கிற்குடி என்று அந் நூலின் தனியன் கூறுகின்றது.

ஆண்டாள்பிள் ளைத்தமிழை அற்புதமாத் தந்தவனே!
ஈண்டுஆர்நின் பெற்றோர்கள் ? ஏது உன் ஊர் ? வேண்டாசீர்
என்றாய் பணிவாய்! இயற்பெயரும் சொல்லாமல்
நின்றாயே நன்றாமோ ? செப்பு ?"

ஆண்டாள் அருட்புகழ்

தனதான தத்த தந்த தனதான

பரிவால்உ யிர்க்கி ரங்கி
அவதாரம் உற்று நொந்து
பலகால்உ ழைத்தும் இந்த உலகோர் தாம்

பகவான்எ னைத்தெ ளிந்தென்
நெறியேபி டித்தெ ழுந்து
பதமேபெ றற்கு முந்தி முயலாரேல்

எரிவாய் அ ளற்ற ழுந்தி
ஒழிவார் எ ணக்க னன்றோர்
இகலால் வெ றுத்த அந்த இறையோன் முன்

இறைநீகை விட்ட அந்த
உயிராம் என் மக்கள் தங்கள்
இதம் நாடி இக்க ணம்தொல் புவிமீதே

திருஆத ரித்தி லங்கு
புதுவாபு ரிக்கண் அங்கொர்
திருவாய்உ திப்பென் என்று பெரியாழ்வார்

திருமாளி கைகக்கண் அன்பு
வடிவாகி உற்றெ ழுந்து
செகமேக ளிக்க இன்ப இசையாலே

தருபாகி னிற்க லந்த
அமுதாய்இ னித்தி லங்கு
தமிழ்மாலை யைச்சு ருண்ட குழல்சூடும்

தளிர்மாலை யைப்பு னைந்து
நெடுமாலி னுக்கு வந்து
தருகோதை பொற்ப தங்கள் பணிவோமே!

-அருட்கவி அரங்க சீனிவாசன்

சூடிக்கொடுத்த சுடர்கொடி

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கர்க்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் - இன்னிசையில்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

- உய்யக்கொண்டார்

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய் நாடிநீ
வேங்கடவற் கென்னை விதி யென்ற இம் மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

பாதங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன் துணைவி
மல்லி நாடாண்ட மடமயில் - மெல்லியலாள்
ஆயர்குல வேந்தன் ஆகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

- திருக்கண்ணமங்கையாண்டான்

கோலச் சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தினள் தென்திருமல்லி நாடிச் செங்குழல் மேல்
மாலைத்தொடை தென்னரங்கருக் கீயும் மதிப்புடைய
சோலைக்கிளி அவள் தூய நற்பாதந் துணைநமக்கே.

பாட்டுடைத் தலைவியின் வரலாறு

திருப்பாவையின் ஏற்றம் :-

உடையவரிடம் ஒருவர் வந்து, "ஒருமுறை திருப்பாவைக்கு விளக்கவுரை செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

"திருப்பல்லாண்டுக்குப் பொருள் சொல்ல ஆள் கிடைத்தாலும், திருப்பாவைக்கு ஆள் கிடையாது" என்று மறுத்து விட்டார் உடையவர்.

திருப்பல்லாண்டு நுட்பமான பொருள் உடையது. திருப்பாவை அதினும் மிகநுட்பமானது என்பது கருத்து.

ஆண்டாள் நாச்சியாரின் உயர்வு :

உடலையே உள்ளுயிரா(ஆன்மாவா)க, கருததாக நினைத்துள்ளவர் வினைத்தொடர்புடையவர் (சம்சாரி)கள் எனப்படுவர். அவர்களைவிட மெய்யுணர்வாணர்கள் பலகோடி மடங்கு உயர்ந்தவர். அவர்களினும் அனைத்தினும் ஆள்பவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பலமடங்கு உயர்ந்தவர். அவர்களினும் இறைவனுக்குப்பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் மிக மிக உயர்ந்தவர். அவரினும் ஆண்டாள் இறைவனையே ஆண்டதால் பற்பல மடங்கு உயர்ந்தவர் என்பது ஆசாரியர்களின் ஒரு மித்த கருத்து.

ஆழ்வார்கள் இறைவனால் மதிநலம் அருளப் பெற்றவர்கள். ஆண்டாள் இறைவனுக்கே மதிநலம் அருளினாள். உலகியலில் உறங்கிக் கிடந்த ஆழ்வார்களை இறைவன் எழுப்பினான். ஆண்டாள் இறைவனையே எழுப்பினாள்.

ஆழ்வார் பதின்மரும் பெற்ற மெய்யறிவு (ஞானம்) எல்லாம், பெறும் பேறாக (சீதனமாக) ஆண்டாள் பக்கலிலே குடியேறியது, பத்துப் பேர்க்கு ஒரு பெண் பிள்ளை இவள் என்பவர் சான்றோர்.

இவ்வளவு பெருமைக்குரிய ஆண்டாளின் வரலாறு மிகவும் சுருக்கமானது. வரலாறு போலவே, இவர் இவ்வுலகில் வாழ்ந்த காலமும் மிகச் சுருங்கியதே.

மூர்த்தி சிறியதுதான், ஆனால் சீர்த்தியோ மலையினும் மாணப் பெரிது.

அத்தகைய அருள் விளக்கு ஆண்டாளின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு ஆர்வம் எழுவது இயல்பு தானே!

திருவில்லிபுத்தூர் :-

தென்பாண்டி நாட்டுத் திருத்தலங்களுள் தனிச்சிறப்புப் பெற்றது சீர்வில்லிபுத்தூர்.

முத்தம் கொழிக்கும்திரு நெல்வேலி சில்லா
மும்மூர்த் தியும்வாழும் உயர்ந்த இந் நாட்டில்
வில்லிபுத் தூர்என விளங்கும்இத் தலத்தின்
வியந்திடும் சிறப்புகள் யாவையும் சொல்ல
ஆயிரம் நாவுள்ள சேடனும் பிந்தும்.
ஆயினும் யான்சிறுவன் அறிந்ததைச் சொல்வேன்.
செந்நெல் வளர்ந்திடும். நிலம்அனே கங்கள்.
சிறப்பாய் விளைந்து இதைச் செழித்திடச் செய்யும்
இந்திரன் பட்டணமும் இணையல்ல இதற்கு ;
எந்நகரும் இந்நகர்க்கு ஈடுசொல்ல முடியாது.
விசாலித்து இருக்கின்ற வீதிகளும் அவற்றுள்
வியாபித்து இருக்கின்ற வேதகோஷ் டிகளும்
ஞாய விசாரணை நடத்தும் கோர்ட் டுகளும்
நானா விதமான கடைகள்நிறை தெருவும்
இங்கிலீசு பாசை பயில்கலா சாலை
இரண்டுண்டு ; அவைகளும் இவ் வில்லிபுத்தூரை
வைகுந்தம் போலவே அலங்காரம் பண்ணி
வையம் புகழ்ந்திடச் செய்யுமாம் இவைகள்
இப்பெரும் புகழ்பெற்ற இங்கித நகர்க்கு
இனியதொரு திலகம்போல் இருக்கும் ஒரு கோயில்
பக்தியாய் இக்கோயி லுட்சென்று பார்க்கின்,

பலவிதமாய் நம் கண்கள் அமிர்தத்தை உண்ணும்.
வெள்ளப் பளிங்குபோல் மின்னுமே தூண்கள்.
விசித்திர நவ ரத்னம்போல் இலங்குமே படிகள்.
சித்திரத்தாலே சிறக்கும் சுவர்கள்.
செகசோதி போலத் துலங்குகோ புரங்கள்.
எங்கனும் பேர்பெற்ற இந்த ஆலயம்"

என்று "ஆண்டாள் ஆடி விழாச் சிந்து மாலை" இந் நகரின் சிறப்பை இசைத்துச் செல்கின்றது.

ஆண்டாள் தோற்றம்

'வேதக்கோன் ஊர்' என்று இவ்வூர் பெயர் பெறக் காரணமாகிய பெரியாழ்வார் (விஷ்டுசித்தர்), பெருமாளுக்குத் திருத்துளவத் தொண்டு செய்து கொண்டிருந்தார.

அவர் ஒரு நாள் திருப பூஞ்சோலையில், துளசிச் செடிப் பாத்தியில் மண்ணைக் கொத்தும்போது, திருத்துழாய் அடியிலே இரு நிலனூடு திருக்கிளரும் செம்பொன்னிறப் பேரொளிப் பிழம்பு ஒன்றைக் கண்டார். கூர்ந்து நோக்கியபோது, ஒரு தெய்வீகப் பெண்மகவு இருப்பதை அறிந்தார், அன்று ஆடிமாதம் பூர நட்சத்திரநாள்.

தோன்றுழியே அஞ்சு வயது ஒன்றிநின்றாள் என்று புதுவைச் சிலேடை வெண்பா கூறுவதுபோல், அந்த ஐந்து வயதுப் பெண்ணைத் தம் மகளாகவே நினைத்து வளர்த்து வரலானார் பெரியாழ்வார். கரும்பார் மொழிப் பேதையாகிய அவளுக்குச் "சுரும்பார் குழற்கோதை" என்று திருப்பெயர் சூட்டினார்.

ஆண்டாள் இயல்பு

இளமை முதலே இறைவனிடத்து இடையீடின்றி இளைப்பாறும் இன்னிழலான, எதிர்ப்படும் தெளிவுடை அருளொழுகு நெஞ்சினனான ஏந்தலிடத்தே பெருவேட்கை எழுந்தது கோதைக்கு. மணந்தால் அவனையே மணப்பேன் என்னும் அளவுக்கு அன்பு வெள்ளம் கரை புரண்டோடியது. எம்பெருமான் எல்லாக் காட்சியும் இயற்கையில் உடையவனா வரலாறுகளையே எப்போழுதும் எண்ணுவதும் பேசுவதும் இசைப்பதும் அவளுக்கு இயல்பாயின.

சூடிக்கொடுத்தாள்

பெரியாழ்வார் வடபெருங் கோவிலுடையானுக்குச் சாத்துவதற்காகத் திருத்துழாய் மாலை கட்டி வைத்திருப்பார். அற்றம் நோக்கி அதை எடுத்துத் தன் கூந்தலிலே சூடிக் கொள்வாள் கோதை.

"காறை பூணும், கண்ணாடி காணும், தன்
கையில் வளைகுலுக்கும்,
கூறை உடுக்கும், அயர்க்கும் தன்
கொவ்வைச் செவ்வாய் திருத்தும்."

என்றபடி சிறந்த அணிகலன்கள் அணிவாள். உயர்ந்த பட்டாடை உடுத்து அலங்கரித்துக் கொள்வாள்.

எம்பெருமானுக்கு ஏற்றமான மணமகளாய் இருக்கின்றேனா. பின்னர், மலர் மாலையைக் களைந்து முன்போலப் பூக் குடலையில் வைத்து விடுவார் மறைவாள் நடக்கின்ற இச் செய்தி பெரியாழ்வாருக்குத் தெரியவில்லை. அவர் அந்த மாலையை அப்படியே எம்பெருமானுக்குச் சாத்துவார். அவனும் அதைப் பேருவகையுடன் ஏற்றுக் கொள்வான்.

பெரியாழ்வர் கவலை

இங்ஙனம் பல நாள்கள் கடந்தன. ஒரு நாள வெளியே சென்றிருந்த பெரியாழ்வார், விரைவில் மீண்டு வந்தார். இறைவனுக்குரிய மாலையைச் சூடிக் கொண்டு பாடிக்கொண்டு கோதை நிற்பதைக் கண்டு திடுக்கிட்டார்.

"மகளே! நீ செய்வது பெரிய அடாத்தனம் அன்றோ! இனி இப்படிச் செய்ய நினையாதே!" என்று கடிந்து கொண்டார். தம் திருப்பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்தமைக்காக வருந்தி, அன்று இறைவனுக்கு மாலை சாத்தாமல் கண்வளர்ந் தருளினார்.

கனவிலே கண்ணன்

இறைவன், அவர் கனவிலே தோன்றினான். "ஆழ்வீர்! இன்று எமக்கு மாலை ஏன் சாத்தவில்லை!" என்று வினவினான்.

தம் திருமகளாரின் தகாத செயலை விண்ணப்பம் செய்தார் பெரியாழ்வார்.

"அவர் சூடிக்கொடுத்த மாலையே காண் நறுமணம் மிக்கு நம் உள்ளத்துக்கு நனி உகப்பாவது" என்றருளிச் செய்தான் இயல்பில் தூய இறைவன்

நீ என்னை ஆண்டாளோ

கண் விழித்த பெரியாழ்வார் கோதையை மலர்மேல் மங்கையோ என்று வியந்தார். அவள் திறத்து அளவிலா அன்பு பெருகியது. அவளைத் தழுவி "நீ என்னை ஆண்டாளோ!" என்று பாராட்டினார்.

அதுமுதல் கோதைக்கு ஆண்டாள், சூடிக்கொடுத்த சுடர்கொடி, நாச்சியார் என்ற திருப்பெயர்களும் நிலை பெற்றன.

பருவம் வளருந்தோறும் பண்பும் இறைப் பற்றும் உடன் வளர்ந்தன. கடல் வண்ணன் மேல் காதல் கரைபுரண்டது. இனி அவனைக் கணப்பொழுதும் பிரிந்திருக்க இயலாது என்ற அளவுக்கு ஆதுரம் பெருகியது. பண்ணொடு பாணி பாடும் பாடினிஆனாள்.

பருவப்பாவை

ஒரு கொள்கொம்பிலே சேர்க்க வேண்டிய பருவக் கொடியான ஆண்டாள், "மானிடவர்க் கென்று பேச்சுப் படில் வாழுகில்லேன்" என்னும் உறுதிப் பாடு உடையவர் ஆனார்.

ஆண்டாளின் ஆற்றாமை

கண்ணனை இதற்கு முன்பு அடைந்து கலந்துறவாடியவர் உண்டோ என்று ஆராய்ந்தாள். திருவாய்ப்பாடிப் பெண்கள் அவனை நுகர்ந்தார்கள். என்று அறிந்தாள். ஆனால் அது, முன் ஒரு காலத்தில் நடந்தது. "நாம் அக் காலத்தில் பிறக்கப் பெற்றிலோமே" என்று ஏங்கினாள்.

"இனி அவன் உலாவிப்போன அடிச்சுவடும் அவனும் ஆய்ச்சியரும் திளைத்த யமுனைப் பேராறும் அவன் எடுத்த கோவர்த்தனமும் கிடந்ததாகில், அவற்றைக் கண்டாகிலும் உயிர் வாழ்வோம்" என்று நினைந்து பார்த்தாள், அவ்விடங்களுக்குப் போகும் ஆற்றல் இல்லாமையாலே என் செய்வேன் என்று கலங்கினாள். "சனகன் திருமகளைப் போலே வில் என்று ஓர் அவதி பெற்றிலேன், நம்பின்னைப் பிராட்டியைப் போலே, ஏறுகள் என்று ஓர் அவதி பெற்றிலேன். என் செய்வேன்!" என்று நிலை தடுமாறினாள்.

ஆன்றோர் காட்டிய வழி

அப்போது சில பெரியோர்கள் "இராசக் கிரீடை செய்தபிறகு, கண்ணனைப் பிரிந்த ஆய்ச்சியர், தங்கள் ஆற்றாமையாலே கண்ணனாகத் தங்களை நினைந்து கொண்டு, உயிர் தரித்தார்கள். அப்படியே நீயும் செய்வாயாக" என்று ஆற்றுப்படுத்தினர்.

ஆய்ச்சியர் நினைப்பு

"கண்ணனாகக் கருதுவதைக் காட்டிலும் அவனாகவே நினைத்த ஆய்ச்சியராகக் கருதுவது நலம்" என்று தீர்மானித்தாள் ஆண்டாள்

வில்லிபுத்தூரே திருவாய்ப் பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடைப் பெண்களாகவும், தம்மை அவர்களிலே ஒருத்தியாகவும் வடபெருங்கோவிலைத் திரு நந்தகோபர் திருமாளிகையாகவும், வட பெருங்கோயிலுடையானைக் கண்ணனாகவும் கருத்துட் கொண்டாள். இடைப் பெண்கள் நோற்ற நோன்பைத் தான் நோற்கத் தொடங்கினாள் நினைவு முதிர்ச்சியால், ஆண்டாளுக்கு இடை நடையும் இடை முடியும் இடைப் பேச்சும் முடை நாற்றமும் உண்டாயின.

ஆய்ச்சியர் நோற்ற நோன்பு யாது?

ஆய்ச்சியர் நோற்ற நோன்பு யாது? அனைத்துலக அண்ணலான நாரணன், வையத்துயிர்களை உய்விப்பதற்காகக் கண்ணனாக அவதரித்தான். இடைச் சேரியில் வளர்ந்தான். அப்போது அவ்வூர்ப் பெரியோர்கள், "கண்ணன் விடலைப் பருவம் அடைந்தது விட்டான் அத்துடன் துடுக்காயும் உள்ளான். அவனுடன் அவ்வூர்ப் பெண்கள் இனிப் பழகலாகாது" என்று ஆய்ந்து பெண்களை வீட்டுக் காவலில் வைத்து விட்டனர்.

அப் பெண்கள் செய்த பேற்றினால், வருணன் மழைபொழியா தொழிந்தான்.

அப்போது இடையர் எல்லோரும் கூடி "மழை பொழிவதற்காகப் பெண்கள் நோன்பு நோற்க வேண்டும். அந்த பொருள்களைத் தேடித்தர வேண்டும்" என்று முடிவு செய்தனர்.

என்று கருதிய கண்ணன், "என்னாலே முடியாது" என்று மறுத்தான்.

பல நல் மொழிகள் சொல்லி வேண்டிக் கொண்டனர் ஆயர். ஒருவாறு இசைந்த கண்ணனிடம் பெண்களை ஒப்படைத்து விட்டு இடையர் அகன்றனர்.

தன்னை அணுகிய ஆய்ச்சியரிடம், "இப்போது எல்லாரும் போய்ப் பின்னிரவில் வந்து நோன்புக்கு நீராடுவதற்காக என்னை எழுப்புங்கள்" என்று அமர்த்தம் செய்துவிட்டு நப்பின்னைப் பிராட்டியின் திருமாளிகையில் புகுந்தான் கண்ணன்.

கண்ணனைப் பிரிந்து தரிக்காத பெண்கள் முற்படவிழித்துக், கண்ணனுடைய குணங்களையும் திருவிளையாடல்களையும் நினைத்துக் கிடக்கிறவர்களை உணர்த்திக் கொண்டு, நந்தகோபன் திருமாளிகைக்குச் சென்று, கண்ணனை எழுப்பித் தங்கள் விருப்பமான பணிவிடைகளைச் செய்து விரும்பியன பெற்று முடித்தார்கள் என்பது தான் ஆய்ச்சியர் நோன்பு நோற்ற வரலாறு.

பாவை பாடிய பாவை

ஆண்டாளும் தம்மை ஓர் இடைப் பெண்ணாகக் கருதிக் கொண்டு, நோன்பு என்ற காரணத்தினால் இறைத் தொண்டை வேண்டிக் கொள்வதாய் அமைந்த திருப்பாவை என்ற 'திவ்வியப்பிரபந்தம்' உலகுக்கு உவந்தளித்தார். அவர் கொண்ட காதலின் வெளிப்பாடாக நாச்சியார் திருமொழியும் வெளிவந்தது.

தென்னரங்கன்பால் ஈடுபாடு

பருவவயது வந்த ஆண்டாளுக்குத் திருமணம் செய்து வைக்கப் பெரியாழ்வார் விரும்பினார்.

"மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்ற ஆண்டாளின் உறுதி கண்டு உகந்தார் ஆயினும், அது நடைபெறுவது எப்படி என்று கலக்க முற்றார்.

எல்லாத் திவ்ய தேயத்துப் பெருமான்களின் பெருமைகளையும் ஆண்டாளுக்கு எடுத்துக் கூறி வந்தார் பெரியாழ்வார்.

அவர்களுள் தென்னரங்கத்து இன்னமுதருடைய குழலழகும். வாயழகும் கண்ணழகும கொப்பூழில் எழுதாமரைப் பூவழகும். ஆண்டாளின் நெஞ்சைக் கவர்ந்தன. "எனக்குத் தகுந்த மணவாளன்.

என்னரங்கத்து இன்னமுதனே!" என்று தீர்மானித்தார்.

கனவிலே அரங்கன்

ஆழ்வார் கனவில் திருவரங்கன் தோன்றினான் "ஆண்டாளை அழைத்துக் கொண்டு திருவரங்கப் பெருநகருக்கு வருக! நாம் அவளைத் திருமணம் செய்து கொள்கின்றோம்" என்று.

ஆண்டாளின் புறப்பாடு

பின்னர், குடை, சாமரம், விசிறி முதலிய மங்கலப் பொருள்களுடன் பல்லக்கையும் சீவில்லிபுத்தூருக்கு அனுப்பி வைத்தான் இறைவன்.

ஆண்டாள் பல்லக்கிலேறிச் செல்லப் பெரியாழ்வாரும் மற்றையோரும் திரண்டு பின் சென்றனர்.

அரங்கனோடு ஒன்றிணைதல்

திருவரங்கன் திருமுற்றம் குறுகினதும் ஆண்டாள் பல்லக்கினின்றும் இறங்கி உள்ளுழைந்து அரங்கனுடன் இரண்டறக் கலந்து மறைந்தருளினார்.

"திருமகளை நல்கிய கடலரசனைப் போல நீவிரும் எமக்கு மாமனார் ஆகிவிட்டார்? என்று பெரியாழ்வாரைப் பாராட்டி விடை தந்தான் அரங்கன்.

நிறைவுரை

ஆண்டாளின் வரலாறு போலவே, அவர் அருளிய அரும்பாடல்களும் மிகச் சிறியனவே. ஆயினும் ஆழ்பொருள் மிக உடையன.



திருவில்லிபுத்தூர் ஆண்டாள் பிள்ளைத் தமிழ்

காப்பு
கோயில் அண்ணன் எதிராசர்

பூமாதும் புவிமாதும் பொதுவர் மாதும்
பூதலத்தில் ஒருவடிவாய்ப் பொலிந்தார் என்று
நாமாது புகழ் பரப்ப வில்லி புத்தூர்
நயந்தவள் பிள்ளைக்கவிதை நாளும் காக்க:
பாமாறன் அருட்கு இலக்காய்ப் பூதூர் வந்து
பரசமயக் குறும்பரைவெல் பரம ஞானக்
கோமான் என்று உலகு புகழ் மும்மைச் செங்கோல்
கோயில் அண்ணன் எனத் தழைத்த கொற்ற வேந்தே! (1)

திருவாய்மொழிப் பாடல் அருளிய சடகோப முனிவரின் அருட்கு இலக்காகி, திருப்பெரும் புதூரில் தோன்றியவர் உடையவர்; வைணவ சமயம தவிர, வைதிக சமயம் அல்லாத பிற சமயக் குறும்பர்களை வாதில் வென்றனர்; "உயந்த ஞானக் கோமான்" என்று உலகு புகழ்ந்தவர்; முக்கோல் ஏந்திய பகவர்; "கோயில் அண்ணன்" எனப் புகழ் தழைத்த வெற்றிச் செல்வர் ஆகிய இராமாநுச யதிராசர்.

பூவில் வந்த பெரிய பிராட்டியும், நிலப்பிராட்டியும், ஆயர் குலத்து நப்பின்னைப் பிராட்டியும் ஆகிய முப் பிராட்டிகளும் ஒருங்கிணைந்து ஒரே வடிவமாய் விளங்கினர் என்று நாமகள் புகழ் பரவும்படி, திருவில்லிபுத்தூரில் பிறக்க விரும்பிய ஆண்டாளுக்குப் பாடிச் சூட்டும் பிள்ளைத் தமிழ்க் கவிதை நீடு வாழ எப்போதும் காத்தருளுக!

கொற்ற வேந்து காக்க என்று கூட்டுக. இது விற்பூட்டுப் பொருள்கோள்.

அவையடக்கம்-1

வாகடப் பனுவலைக் கற்றவர்க்கு இயல்பு, நோய்
வந்தகா ரணம் உணர்ந் தே
வன்பிணி தனைக்களைதல்; நவமணி தனக்குற்ற
வழுஅறக் கழுவுநெறி தான்,

வேகடம் செய்பவர்க்கு இயல்பு: மெய்நூல்கற்ற
விழுமியோர்க்கு இயல்பு, வாழ் நாள்
வீண்நாள் அடைந்தவரை 'வம்மின்!' என்று இறைநிலையை
மெய்பெற உணர்த்திவிட் டின்

போகமது அருந்தவே அருள்புரிதல் என்பவால்;
பூரணக் கல்வியுட னே
பொற்புறக் கவிதைசொற் பொருள்இன்ப அணியொடு
புணர்க்கும்முறை யால்புணர்க் கும்

பாகம்ஒன்று அறியாத புன்மையேன் சொல், திருப்
பாவையைப் பாடிஅரு ளும்
பாவையைப் புகழ்பாடல் வழுஅறப் பாலித்தல்
பண்டிதர்க்கு இயல்புஎன்ப வே. (2)

மருத்துவ நூலைப் பயின்றவர்கள் இயல்பாவது, நோய் உற்ற வரை ஆராய்ந்து, அந்த நோய் வந்த காரணம் உணர்ந்து வலிய நோய் தீர்ப்பதாகும்.

வைரம் முதலிய ஒன்பான்(நவ)மணிகளைப் பட்டை தீட்டு பவர்க்கு இயல்பாவது, அம மணிகளுக்கு உற்ற குற்றங்களை நீக்குவதாகும்.

அறிவு நூல்களைக் கற்ற சான்றோக்கு இயல்பாவது, தம் வாழ்நாளை வீண்நாளாகக் கழித்தவர்களை "வாருங்கள!" என்று அழைத்து, மெய் அறிவு பெறும்படி உணர்த்தி, நலத்திற்கு முடிவு இல்லதாகிய ஒப்பற்ற பொன்(வைகுந்த) நாட்டின் கைங்கரிய இன்பத்தை நுகர அருள் செய்வதாகும் என்பர் மேலோர்.

அருள் நூல்கள் கற்ற அறிஞர்க்கு இயல்பாவது, நிறைவான கல்வி அறிவுடையராகி, அழகு பொருந்தக் கவிதைகளுடன் சொல் அணி, பொருள் அணிகளைப் பொருத்தும் முறையால் பொருத்துகின்ற முதிர்வு சிறிதும் அறியாத புல்லியன் ஆகிய நான் சொல்லுகின்ற 'திருப்பாவை' பாடி அருளிய ஆண்டாள் நாச்சியாரைப் புகழ்கின்ற பாடலைக் குற்றம் அறும்படி அருள்புரிவதாகும்.

அவையடக்கம்-2

செம்பொற் கலந்தனில் முல்லைமென் முகையின்
சிறந்தமெல் லடிசில் இமை யோர்
தெள்ளமு தெனும்சுவை யுடைக்கருணை முக்கனித்
திரள்பெய்த பால்அளா விச்

சம்பத்து அடைந்துஅருந் தியபுனிதர் புல்இலைத்
தளிகையிற் பவளமலை போல்
தழைநிறைத்து உப்பிலிப் புற்கைமோர் பெய்து உண்ட
தன்மையை நிகர்க்கும்ஒண் பொன்

கும்பத்தி னிற்புடைத்து எழுமுலைக் கோமளக்
கோதைசூ டிக்கொடுத் தாள்,
கோதற்ற குரவர்முத லியபுனிதர் செஞ்சொல்உட்
கொண்டதன் செவிகள்அத னால்

இம்பர்க்கு அமைந்தஇரு செவியினும் சிறிதுசென்று
ஏறாத வெளிறுடைத் தாய்
ஏழையேன் அறிவற்று உரைத்தபுன் சொல்தனையும்
இனிது வந்து உட்கொண்ட தே!

(3)

ஒளிமிக்க பொற்குடத்தைப்போல் பருத்து எழுகின்ற கொங்கை களையுடைய அழகிய கோதை சூடிக்கொடுத்தாள் குற்றமில்லாத ஆசிரியர் முதலிய தூயோர்களின் செவ்வியசொற்களைக் கேட்ட தன் காதுகளால்,

இவ்வுலகிற்கு அமைந்த இரு செவிகளிலும் சற்றே சென்று ஏறாத வெளிறு (அறியாமை) உடையதாக அறிவிலியாகிய யான் அறிவின்றி உரைத்த புல்லிய சொல்லினையும் இனிதாக மகிழ்ந்து ஏற்றுக் கொண்டது எச்செயலை நிகர்க்கும் எனில்:

செம்பொன்னால் ஆகிய உண்கலத்தில் முல்லையின் மெல்லிய மொட்டைக்காட்டிலும் சிறந்த வெள்ளிய அன்னத்தை,

இமையவர் உண்ணும் தெள்ளிய அமுது போன்ற சுவையுடைய பொரிக்கறியும் முக் கனித் திரளும் கலந்த பாலை அளாவிச் செல்வம் மிக்கவர்களாய் இருந்து அருந்திய தூயோர்கள், புல்லிய இலையாலாகிய தொன்னை என்னும் உண்கலத்தில் பவளமலை போன்ற இலை நிறத்தையுடைய உப்பில்லாத கூழினை மோர் ஊற்றி உண்ட தன்மையை ஒக்கும்.

திரு வில்லிபுத்தூர் ஆண்டாள் பிள்ளைத் தமிழ்

1. பழிச்சுநர்ப் பரவல்
அடியார்களை வணங்குதல்

சேனை முதலியார்

அண்டகோ ளத்திளங் கதிர்கள்ஓர் ஆயிரத்து
அருமணிச் சூட்டுள் நாட் டும்
ஆயிரம் பல்தலைத் துத்திப் பணாடவி
அனந்தன்நெட் டுடலம்முழு தும்

மண்டலித் திட்டசிங் காதனத்து இலகுமா
மணிமண்ட பத்துள்இமை யோர்
மந்தரா சலம்மத்த தாய்அமுதி னைக்கொண்ட
மகராலய யத்துநடு வுள்

தொண்ட ராகியமுத்தர் நித்தர்அயன் முதலோர்
துதித்திட நெருங்கும்அள வில்
சுற்றிய பிரம்பினால் ஏற்றுசே னாபதித்
தோன்றல்அடி யிணைபரவு தும்

புண்டரீ கத்தடம் சூழ்மல்லி நாட்டினுள்
பூந்துழாய்க் காட்டில்எழில் கூர்
புத்தூர் மடந்தையைப் புகழ்பாடல் எழுகடற்
புவனம் எங்கும் தழைய வே!

(4)

தாமரைத் தடாகங்கள் சூழ்ந்துள்ள மல்லி நாட்டினுள் அழகிய துளவத் தோட்டத்தில் அழகு சிறக்கின்ற வில்லிபுத்தூரில் தோன்றி யருளிய மடந்தையாகிய ஆண்டாள் நாச்சியாரைப் போற்றுகின்ற பிள்ளைத்தமிழ் பாடலானது, எழுகடல் சூழ்ந்த நானிலம் எங்கும் தழைப்பதற்காக,

புடவி(அண்ட) வட்டத்தில் இளஞாயிறுகள் ஓர் ஆயிரத்தினை போன்ற அரிய நாகமணிகளையுடைய உச்சியில் வைத்துள்ள ஆயிரமாகிய பல தலைகளையும் பொறி(புள்ளி)களைக் கொண்ட காடுபோல் நெருங்கிய படங்களை உடைய ஆதிசேடனது நெடிய திருமேனி முழுவதும் வட்டமாகச் சுருட்டிய அரியணையில் விளங்குகின்ற திருமாமணி மண்டபத்துக்குள்ளே,

இமையவர்கள் முன்னொரு காலத்தில், மந்திர மலையை மத்தாகக் கொண்டு அமுதினைப் பெற்ற திருப்பாற் கடலுக்கு நடுவில், தொண்டர்களாகிய முத்தர்களும், நித்தர்களும் ஆகிய பிரம்மன் முதலியோரும் வணங்கி நெருங்கிக்கொண்டுவரும் போது, கையால் சுழற்றிய பிரம்பினால் அடித்து வரிசைப்படுத்தும் சேனாபதித் தலைவரின் அடியிணைகள் வணங்குவோம்.

நம்மாழ்வார்

திருஞான முத்திரை தரித்தகைத் தாமரைச்
 செண்பகச் சடகோப னைத்
திண்டிமக் கவிராச பண்டிதப் பாவலர்
 திருத்தம்பி ரானைஎனையும்

பெருமா நிலத்துஅடிமை கொண்டானை மதுரகவி
 பேரின்பம் உறவழுத் தும்
பெருமானை அனவரதம் மறவாது பரவுதும்
 பெருநீர் உவட்டெடுத் தே

அருமா மணிக்குலத் தொடுபசும் பொன்கொழித்து
 அரவம்செய் பொன்னிஆற் றுள்
அமுதத்தை உட்கொண்டு புனிதன்ஆ கியகோயில்
 அண்ணன் என் னும்தகைமை சால்

குருஞான முதல்வனைப் பரவும்என் நாவினில்
 குடிகொண்ட வில்லிபுத் தூர்க்
கோதையைப் பரவுபிள் ளைத்தமிழ்க் கவிதையான்
 கோதின்றி மொழிவதற் கே! (5)

காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று தடைகளையும் விட்டு உள்ளகம் (ஆன்மா) இறைவனைப் பற்ற வேண்டும் என்பதனை அறிவுறுத்துவதே சுண்டுவிரல் முதல் நடுவிரல் வரை விட்டுவிட்டுச் சுட்டுவிரலால் பெருவிரலைப் பற்றி நினைப்பதன் உட்பொருள். அது

மெய்யறிவுக் குறி (ஞான முத்திரை) எனப்படும். வாய் பேசாமல் அமைதியாலேயே இம் மெய்ப்பொருள் உணர்த்துபவனே ஆசாரியன்.

கையில் இந்தத் திருஅறிவுக்குறி தரித்துத் தவம் செய்தவர் சடகோபர்.

திரு அறிவுக்குறி தரித்த தாமரை மலர்போன்ற கைத்தலம் கொண்டவர் செண்பகச் சடகோபன். திண்டிமப் பறை முழக்கிப் புலவரை வாதுக்கு அழைப்பவர் பாவேந்தர் பண்டிதப் பாவலர் எனப்படுவர். அத்தகையப் பாவலர்க்குத் தலைவர் அவர்.

ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் இப் பேருலகில் தாமே வலிய எழுந்தருளி அடிமை கொண்டவர்.

மதுரகவியாழ்வார் பேரின்பம் பெறத் துதிக்கின்ற பெருமான். அந்த நம்மாழ்வாரை எப்போதும் மறவாது வணங்குவோம். எதற்காக எனில்:

வெள்ளம் பெருநீராகப் பெருக்கெடுத்துப் பெறற்கரிய முத்து முதலிய மணிக் குலத்தோடு பசும்பொன்னைக் கொழித்துக் கொண்டு ஒலியெழுப்பும் காவிரி நடுவுபாட்டும் பள்ளி கொள்ளும் அரங்கனாகிய அமுதினை அருந்தித் தூய்மை பெற்ற கோயில் அண்ணன் என்னும் தகைமை நிரம்பிய குருவாகிய அறிவு முதல்வனைத் துதிக்கும் என் நாவினிடம் குடிகொண்ட வில்லிபுத்தூர்க் கோதைப் பிராட்டியைப் போற்றும் பிள்ளைத்தமிழ்க் கவிதையை அடியேன் குற்றமின்றிக் கூறுவதற்காக.

உடையவரின் ஆசாரியர் ஐவர்

பருமா மணிக்கிரி டச்சோதி ஆதிப்
  பரப்பிரம வாழ்வு தழை வான்
பாரில் ஓர் ஐவராம் அவருள்நம் பிகள்மூவர்
  பாதார விந்த மல ரைக்

கருமா முகிற்குலம் தவழ்சோலை மலைநின்ற
  கண்ணனை வணங்கிவீ ழும்
கங்குலில் கைவிளக்கு ஏந்தியே முன்சென்று
  கருணையைக் காட்டு முதன் மைத்

திருமாலை ஆண்டான் எனும்பரம தேசிகன்
  திருவடிப் போதைவாழ்(வு) ஆர்

திருவரங் கத்துஅரையார் சரணாம்பு யத்தைஎன்
சென்னியில் சூடினேன்: தே
மருமாலை சூடிக்கொடுத்தபெண் அரசிதனை
வண்தமிழ்ப் புலவர் புகழும்
மல்லிநாட் டினுள்வில்லி புத்தூர் மடந்தையை
வழுத்தும் என் கவிதழைய வே.

(6)

தேனும் மணமும் கொண்ட மாலையைக் கூந்தலில் சூடி இறைவனுக்குக் கொடுத்த பெண் அரசியும், வளவிய தமிழ்ப் புலவர்கள் புகழும் மல்லிநாட்டினுள் அடங்கிய வில்லிபுத்தூர் மடந்தையும் ஆகிய ஆண்டாள் நாச்சியாரை வழுத்துகின்ற என் பிள்ளைத் தமிழ்க்கவி தழையும் பொருட்டு;

பருத்த சிறந்த மணிகள் பதித்த பொன்முடி ஒளியுடைய ஆதிப் பழம்பொருளை(பரப்பிரமத்தை) அடையும் வாழ்வு தழைவதற்காக உலகில் தோன்றியவர் ஐவராம். இவர்கள் ஐவரும் இராமாநுசர்க்கு ஆசாரியர்கள். அவர்களுள் நம்பி எனப் பெயர் பெற்றவர் மூவர். திருக்கோட்டியூர் நம்பி, பெரியநம்பி, பெரிய திருமலை நம்பி எனப்படுவர் இவர்கள் மூவரும். இவர்கள் அடி அமுத தாமரைகளையும்,

நான்காமவர் திருமலை ஆண்டான். அவர் கரிய பெரிய முகில் கூட்டம் தவழ்கின்ற மலர்க்காவினையுடைய சோலைமலையில் நின்ற கண்ணன் எம்பெருமானை வணங்கி, தவறி விழுவதற்கு ஏதுவான இருளிலே கைவிளக்கு ஏந்தி முன்சென்று வழிகாட்டித் தம் கருணையை விளக்கும் முதன்மை பெற்றவர். அவர் பரம தேசிகன் எனும் புகழ் பெற்றவர். அவர் திருவடி மலர்களையும், வைணவ வாழ்வு நிரம்பிய திருவரங்கத்து அரையர் ஐந்தாமவர். அவர்தம் அடித்தாமரையையும் சூடிக்கொண்டேன்.

பாட்டுடைத் தலைவி : 1

அண்டர்திரு ஆய்ப்பாடி ஆயர் தரு மங்கைமார்
அவனிபுகழ் வில்லிபுத் தூர்
அதனுள்வாழ் மங்கைமார் ஆக; நப் பின்னை, தான்
ஆம்என்பது உண்மையா கச்

கொண்டதோர் குறிப்பினொடு வடபெருங் கோயிலார்
  கோயிலது, நந்தகோ பன்
குலவிஉளம் மகிழ்கொள்ளும் மாளிகைய தாகக்
  குறித்து, அதில் புண்டரீ கக்

கண்துயிலும் ஆலிலைப் பள்ளியார் தனதுஅருள்
  காந்தன்ஆ கவும் மனத் துள்
கருதி இடை மொழியும்இடை நடையும்இடை
  உடையினொடு
  கைக்கொண்டு கருணைகூ ரத்

தெண்திரை வளாகத்து மல்லிநாட் டுள் ஒரு
  திருப்பாவை பாடினார் தம்
செம்பொன்ஒண் கிண்கிணிச் சரணார விந்தம் என்
  சென்னியில் சூடினே னே. (7)

தேவர்கள் திரு ஆய்ப்பாடி ஆயர்களாகவும், ஆயர்மங்கையர் வையம் புகழ் வில்லிபுத்தூர் வாழும் மங்கையர் ஆகவும் நப்பின்னைப் பிராட்டி, (ஆண்டாள் ஆகிய) தானே ஆம் என்பது உண்மை ஆகவும் (இப்படிக்கொண்ட குறிப்புடனே) வடபெருங் கோயிலார் கோயிலது நந்தகோபன் குலவி உள்ளம் மகிழ்வுகொள்ளும் திருமாளிகை அதனை மாளிகையாகப் பாவித்துக்கொண்டு, அம் மாளிகையில் தாமரைக் கண் துயில்கின்ற ஆலின் இலைப் பள்ளியான், தன் அருட்கணவனாகவும் மனத்தில் நினைத்து, இடைமொழி, இடைநடை, இடைஉடை ஆகியவற்றை மேற்கொண்டு, அருள்கூரத் தெள்ளியகடல் சூழ்ந்த நானிலத்து மல்லிநாட்டுள்ளே ஒப்பற்ற திருப்பாவை பாடிய கோதைநாச்சியாருடைய செம்பொன்னாலாகிய ஒள்ளிய கிண்கிணி (சிலம்பு) அணிந்த அடித் தாமரையை என் தலையில் சூடிக்கொண்டேன்.

பாட்டுடைத் தலைவி 2

சிங்கக் கருணை எனச் சிறுவர்
திருமுன் றிலின்கண் தவழ்போதில்
திருமுக் குளத்தெண் திரைக்கரையுள்
சிதறிப் புளினம் கடந்த சினைச்

சங்கத் திரள்வீ தியைக் கடந்து
சலதா ரையையும் கடந்து உயிர்த்த
தரளத் திரளில் தவழமுழந்
தாளில் உறைப்ப வருந்திடலும்

மங்கைப் பருவத் தினர் எடுத்து
மணிக்காந் தளின் மெல் லடி வருடி
மழைக்கண் கலுழ்நீ ரினைத் துடைத்து
மழலைக் கனிவா யினை மோந்து

கொங்கைத் துணைக்கே அணைத்து அமுதம்
கொடுத்துஇன் புறுசெந் தமிழ்ப் புதுவைக்
கோதைத் திருஇங்கு எனதுளத்தில்
குடிகொண் டதற்கு என் சொல்வேனோ! (8)

வில்லிபுத்தூரில் சின்னஞ்சிறார் அரிமாக்குட்டி போல் நிமிர்ந்து வீட்டின் முற்றத்தில் தவழ்ந்து விளையாடுவர்.

அவ்வூரில் உள்ளது திருமுக்குளம். சினை கொண்ட சங்குக் கூட்டம் அக் குளத்தின் தெள்ளிய அலைகள் மோதும் கரையில் சிதறி வீழும். அங்கிருந்து மணல்மேட்டைக் கடக்கும். பின்பு அங்கிருந்து கழிவு நீர் வடியும் வழியைக் கடக்கும். தெருவை அடைந்து முத்துகளை ஈனும். அந்த முத்துத் திரள், தெருவில் தவழும் சிறாரின் முழந்தாளில் அழுந்தும். அதனால் சிறார் வருந்துவர்.

உடனே மங்கைப் பருவப் பெண்டிர் அவர்களை வாரி எடுத்து, முத்து அழுந்திய அழகிய காந்தள் மலர்போன்ற மெல்லிய அடிகளை வருடுவர். குளிர்ந்த கண்களில் சுரக்கும் கண்ணீரைத் துடைப்பர். மழலை உதிர்க்கும் கனிவாயினை மோப்பர். தங்கள் இரு நகில்களிலும் அணைத்துப் பால் ஊட்டி இன்பமுறுவர். அத்தகைய ஊர் புதுவை. அங்கு எங்கும் செந்தமிழ் மணக்கும். அங்குத் தோன்றியவர் கோதைப் பிராட்டி. அவள் என் உள்ளத்தில் குடிகொண்டுள்ளாள். அந்தப் பேருதவிக்கு என்ன கைம்மாறு செய்வேன்! எவ்வகைக் கைம்மாறும் செய்ய இயலாது.

பாட்டுடைத்தலைவி 3

நஞ்சாய்ப் பழுத்தபடி வரும்இரா வணனைமுதல்
நாளில் வென்று, "இன்று போய் நீ
நாளைவா!" என்று முன்பு இரணியன் தனதா
நயந்தவச் சிரஉடலை யே

பஞ்சாய்ப் பழுத்ததோர் படலம்என உகிரினில்
பகிர்செய்து அவற்றினுட னே
பஞ்சவர் சகாயன்ஆ கியஅரங் கன்முதற்
பாரில்ஐ வரைஎய்து - வான்

மஞ்சாய்ப் பழுத்தமென் சுரிகுழல் பிறைநுதல்
வளைந்தவில் புருவம்ஒளி தோய்
வாளிஉண் கண் கமல மதிமுகத் தரள நகை
மழலைமொழி ஐந்துவய தில்

பிஞ்சாய்ப் பழுத்தபெண் அமுதநற் கனியினைப்
பிள்ளைக் கவிப்பாட லால்
பெருநிலத்து ஏத்தியே சந்ததம் சிந்தையுள்
பேரின்பம் எய்தினே னே! (9)

நஞ்சாகி முதிர்ந்ததுபோல் வருகின்ற இராவணனை முதல் நாளில் வென்று, "இன்றுபோய் நாளை வா!" என்று கூறியவன் அரங்கஇராமன்.

இறைவன் உடைமையாகிய தன் உயிரையும், வச்சிரம் போன்று வலிய உடலையும் தன்னுடையனவாக விரும்பினான் பொன்னன் (இரணியன்). அவனது உடலைப் பஞ்சினால் முற்றிய கூடுபோல கை நகங்களால் இரு கூறாகச் செய்தான் அரங்கன்(ஆளரி).

இச்செயல்கள் மட்டுமல்ல. அவற்றுடன் பாண்டவர்க்குத் துணை ஆகியவன் அவன். அந்த ஒருவனே ஐந்துருவாகிய அரங்கன் முதலாக வடமலைவாணன், சோலைமலை அழகன், வடபெருங்கோவில் ஆலின் இலைப் பள்ளியான், அழகிய மன்னர் ஆகிய ஐவரையும் மணவாளர்களாக அடைவதற்காக விரும்பினாள் ஆண்டாள்.

மேகம்போல் கருமை முதிர்ந்த மெல்லிய சுரிந்த குழலும், பிறைபோன்ற நெற்றியும், வில்போன்று வளைந்த ஒளிகொண்ட புருவமும், ஒளிபொருந்திய அம்புபோன்ற மையுண்ட கண்களும், தாமரை மலரும் வெண்மதியும் போன்ற முகமும், முத்துப்போன்ற பற்களும் உடையவள் அவள்.

மழலைச் சொல் மாறாத ஐந்து வயதிலேயே அறிவால் பிஞ்சாய்ப் பழுத்த பெண்.

அமுதமாகி நல்ல கனியாகிய அவளைப் பிள்ளைக் கவியாகிய பாடலால் பேருலகில் ஏத்தி, எப்போதும் பேரின்பம் அடைந்தேன்!

காப்புப்பருவம்
திருவரங்கன்

சீர்கொண்ட வெண்திரைப் பால்ஆழி யுள்நின்று
  சீதரன் பணிவிடையி னால்
திருமல்லி நாட்டினுள் பூந்துழாய்க் காட்டினுள்
  சீவில்லி புத்தூர் எனப்

பேர்கொண்ட பேரின்ப வீட்டில்மறை யவர்பிரான்
  பெற்றதெள் ளமுதுஎன வரும்
பெண்அரசி யைக்காக்க: மூதண்டம் முண்டகப்
  பிரமகற் பாந்தத்து முந்

நீர்கொண்ட வாறுஉணர்ந்து ஆல்இளந் தளிரின்மேல்
  நிலைபெறு பசுங்குழவி யாய்
நெடுநாள் அகத்துஇட்ட பல்உயிரை வினைவழி
  நிறுத்தப் பெயர்த்தும்வன சத்

தார் கொண்ட திருஉந்தி மடுவில்அய னைத்தந்த
  தாதை: வால் வளைமுத்தம் நீர்த்
தரங்கம்மொண்டு எறிதென் அரங்கத்து அரவணைச்
  சக்ரா யுதக்கடவு ளே. (10)

சீர்மை கொண்ட வெள்ளிய அலைகளையுடையது திருபாற் கடல். அதனுள் அறிதுயில் கொள்பவன் திருமால். அவன் பணித்த கட்டளைப்படி, தோன்றியவர் ஆண்டாள். திருவில்லி நாட்டினுள் அமைந்த அழகிய துழாய் வனத்தில் உள்ளது சீர்வில்லிபுத்தூர். அது வடபத்திரசாயி எம்பிரான் குடிகொண்ட திருத்தலம்; அடியவர்க்குப் பேரின்ப வீடு.

அத்தகைய புகழ் பெற்ற ஊரில், மறைமுதல்வன் (வேதப் பிரான்) எனப் பெயர் பெற்ற பெரியாழ்வார், துழாய் அடியில் பெற்ற தெள்ளமுது போலத் தோன்றியவள் ஆண்டாள். அந்தப் பெண் அரசியைக் காப்பாற்றட்டும்:

பழமையான மண்டல கோளத்தைத் தாமரை மலரில் வந்த ஊழி முடிவில் கடல் நீர் மூழ்கச் செய்தது. அதை உணர்ந்தான் திருமால். அதில் மூழ்கிய உயிர்கள்மேல் வைத்த கருணையால், ஓர் ஆலமரத்தின் தளிரின்மேல், நிலைபெற்ற பச்சிளங் குழந்தை வடிவாகி, அவற்றை நெடுங்காலம் தன் வயிற்றுள் நுண்ணிய வடிவாக்கி இட்டுக் காத்தான்.

மீண்டும் அவ் உயிர்களைத் தத்தம் வினையுருளையை வழியில் நிறுத்துவதற்கு நினைத்தான்.

நினைத்ததை நிறைவேற்றுவதற்காக, தாமரை மலர் பூத்த அழகிய திருஉந்தியாகிய பொய்கையில் நான்முகனைப் படைத்தான். அதனால் அவன் பிரமனுக்குத் தந்தை ஆனான்.

வெள்ளிய சங்குகளையும் முத்துகளையும் நீர் அலைகள்ால் முகந்து கரையில் வீசும் காவேரி ஆறு நடுவில் அமைந்த அழகிய திருவரங்கம் பெரிய கோயில், அராவணையில் திருக்கண்வளர்கின்ற ஆழிப்படைத்த தரித்த கடவுள் காக்க.

நம்மாழ்வார்

பாடற் சுரும்புதன் நறவுஉண்டு கிண்டும்
பசுந்துழா யானைமுந் நீர்ப்
படிசங்கு இடத்தானை முளரித் தடத்து ஆனை
பகரும் திடத்தானை மல்

லாடற் பதத்தானை விமலைக்கு இதத்தானை
அசக் கரத்தானை மூன்று
அஞ்சுஅக் கரத்தானை நால்ஐங் கரத்தானை
ஐயிரு சிரத்தானை எய்து

ஒடத் துரந்தானை உலகம் புரந்தானை
உபநிடத நுட்பத்தி னால்
ஓர்ஆ யிரம்பாடல் ஓதாது உணர்ந்தே
உரைத்தானை மதிஅகடு தோய்

மாடத் திருக்குருகை ஊரானை வஞ்சரிடம்
வாரானை அன்பர்தம் பால்
வந்தானை நற்காரி தந்தானை நெஞ்சமே!
மறவாது வாழ்த்தல்நன் றே! (11)

பண் இசைக்கும் வண்டுகள் குளிர்ந்த தேன்உண்டு கிளறும் பசிய துழாய் மாலையன்; கடலில் படிகின்ற வலம்புரி(பாஞ்சசன்ய)ச் சங்கை இடக்கையில் தரித்தவன்; தாமரை மலர்பூத்த பொய்கையிலிருந்து (முதலைவாய்ப்பட்ட) யானை அழைத்த வலிமையுடையவன்; (வாணாசுரனை வென்ற களிப்பால்) மல்லாடல் என்னும் ஆடலை ஆடிய அடிகளையுடையவன்; திருமகளுக்கு இனியவன்; அழகிய ஆழிப்படையுடையவன்; (3+5) எட்டுமந்திரத்தான்; (4-5) இருபது கைகளையும், (5+2) பத்துத் தலைகளையும் உடைய இராவணன்மேல் அம்பு ஏவி, அவன் ஓடும்படி வெட்டியவன்; உலகங்களைக் காத்தவன்;

இத்தகைய சிறப்பொருங்கே அமைந்த திருமாலைப் பற்றி, உபநிடதங்களின் உட்பொருள்களைக் கொண்டு, ஓர் ஆயிரம் தமிழ்ப்பாடல்களை ஓதாமலே உணர்ந்து உரைத்தவரும், நிலவினது நடு இடத்தைத் தழுவுகின்ற உயரமான மாடங்களையுடைய திருக்குருகூர் நகரினரும், வஞ்சகரிடம் வாராதவரும், அன்பர்களிடம் வந்தவரும், நல்ல காரியார் பெற்றவரும் ஆகிய நம்மாழ்வாரை வாழ்த்துதல்(இப்பிள்ளைத்தமிழ் இனிது நிறைவேறும் பொருட்டு) நன்றாகும் நெஞ்சமே!

மதுர கவி 1

நதிவைத்த சடிலத்தில் மதிவைத்தும் மாண்அரா
நடுவைத்தும் உடுவைத்த போல்
நறைவைத்த தும்பைஒரு சிறைவைத்து நோய்வைத்த
நஞ்சத்தை வாய்வைத்த தால்

விதிவைத்த சாபமொடு கறைவைத்த கண்டத்தன்
வேல்வைத்த கண்ணியைத் தன்
மெய்வைத்த வன்தடக் கைவைத்த வன்தலையை
விழவைத்த முதல்வவன் நா மத்

துதிவைத்த தமிழ்மறைப் பட்டோலை நாவீறர்
சொலஎழுதி வைத்து நம னார்
தொகவைத்த நெட்டோலை யைக்கிழிய வைத்துஅன்பர்
சோதிவீடு எய்தவிண் ணோர்

மதிவைத்த மாநிதியை வைத்தகோ ளூர்வந்த
மதுரகவி யைப்போற்று தும்:
மல்லிநாட் டினுள்வில்லி புத்தூர் மடந்தையை
வழுத்தும்என் கவிதழைய வே.

(12)

மல்லிநாட்டினுள் உள்ள வில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியாரை வழுத்துகின்ற என் (பிள்ளைக்)கவி தழையும் பொருட்டு, கங்கை ஆற்றை வைத்த சடையில் இளம்பிறை வைத்தும் பெருமை படைத்த பாம்பை நடுவிலே வைத்தவன் சிவன். விண்மீன்களைச் சடையில் வைத்ததுபோல் தேன்பொருந்திய (வெண்) தும்பை மலரை ஒருபக்கமாக வைத்துள்ளான். உண்டார்க்கு (இறப்பு) நோய் உண்டாக்கும் நஞ்சத்தைக் குடித்ததால், விடத்தின் கறையைக் கொண்ட கழுத்தினன் அவன்.

வேல் போன்ற கூரிய கண்களைக்கொண்ட உமையவளைத் தன் உடலில் பாதியாக வைத்த அந்த சிவனுக்குத் தன் தலையைக் கிள்ளியதால் பிரமன் தந்த சாபத்தையும், தன் அகன்ற கையிலே வைத்த வலிய மண்டையோடாகிய பிச்சைக் கலயத்தையும் ஒழியும்படி செய்த தமிழ் மறையாகிய திருவாய்மொழிப் பட்டோலையை, நாவீறர் ஆகிய சடகோபர் சொல்லிக்கொண்டே வர எழுதிவைத்தவர் மதுரகவி. அவர் எழுதிய பட்டோலையால், எமன் தொகுத்து எழுதி வைத்த உயிர்களின் (பாவப்பட்டியலாகிய) நெட்டோலையைக் கிழித்து எறிந்தார். அவ்வாறு கிழித்து எறிந்தமையால், அடியார் ஒளிமயமான வீடுபேறு (பரமபதம்) எய்தினார். மதுரகவி பிறந்த ஊர், தேவர்கள் மதியில் வைத்த பெரும்பொருளைத் தன்னிடம் வைத்த திருக்கோளூர். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருவிடத்தில் தோன்றிய மதுரகவியைப் போற்றுவோம்.

மதுரகவி 2

எந்நன்றி கொண்டாலும் அந்நன்றி கொண்டவர்
இயற்றுகைம் மாறும்உல கத்
தினில்உண்டு மலர்மங்கை கொழுநனே பரன்என்று
இருட்டுஅறுத்து இருபசை அறச்

செய்ந்நன்றி கொண்டதற்கு எதிர்இல்லை யால் வெண்ணை
திருடிஉண் டவன்என்ப தில்
சிந்தையுட் புக்ககுரு கூர்நம்பி என எனது
திருநாவில் அமுதம்ஊ றும்

மெய்ந்நின்று புளகித்து உரோமம் சிலிர்த்துஉபய
விழிகள்நீர் அருவிபொழி யும்
வெண்ணைபோல் உள்ளமும் குழையும் உயிர் ஆனந்த
வெள்ளத்துள் ளேஅழுந் தும்

அந்நன்றி கைம்மாறு எனப்பரவும் மதுரகவி
அடியிணைக ளேபரவு தும்:
அகிலமா தாஎனும் கோதையைப் புகழ்பாடல்
அகிலம்எங் கும்தழைய வே. (13)

உலகம் அனைத்துக்கும் அன்னை (பூமித்தாய்) எனப்படும் கோதை நாச்சியாரைப் புகழ்கின்ற பிள்ளைத்தமிழ் பாடல் உலகம் எங்கும் தழைக்கும் பொருட்டு: எந்நன்றியை ஏற்றாலும் அந்நன்றியை ஏற்றவர் செய்கின்ற கைம்மாறும் உலகத்தினில் உண்டு.

மலர்மங்கை நாயகனே பரம்பொருள் என்று வாதிட்டு, அறியாமையை ஒழித்து, நான், எனது என்ற அகங்கார மமகாரங்களாகிய இருவகைப் பாசங்கள் ஒழியும்படி செய்த நன்றியை அடைந்தமைக்குக் கைம்மாறு ஏதுமே இல்லை.

வெண்ணை திருடி உண்டவன் என்று கூறுவதை விட, என் சிந்தையிலே புகுந்துகொண்ட குருகூர் நம்பியாகிய சடகோபன் என்று கூறுகையில், என் அழகிய நாவிலே அமுதம் ஊற்றெடுக்கும்.

உடல் உரோமம் புளகரும்பி நின்று இருவிழிகளும் அருவிபோல் நீரைப் பொழியும். வெண்ணைபோல் என்மனமும் குழையும்.

உயிரானது மகிழ்ச்சி வெள்ளத்துள்ளே அழுந்தும் இந்த மெய்ப்பாடுகளே சடகோபர் செய்த செய்ந்நன்றிக்கு ஏற்ற கைம்மாறு என்று அவரையே போற்றுகின்ற மதுரகவியினுடைய அடியிணை களையே வணங்குவோம்.

நாதமுனிகள்

ஒருநான் மறைக்கற்ப கத்தின்ஒண் கனிஎன்னும்
உபநிடத மதுரநதி வாழ்வு
உற்றிடும் திருவாய் மொழிப்பயோ ததியிடத்து
ஓர்ஆயி ரம்பாடல்.ஆம்

பெருவாழ்வு பெற்றதிரை பொங்கஒரு பத்தில்நிறை
பெற்றுள குடந்தைஅமு தால்
பேரின்பம் எய்துதலும் வீரநா ராயணன்
பேர்அருளி னோன்அணவு றும்

குருகா புரிப்பரம குருகுலோத் தமனை வண்
கோளூரன் உரைசெய்நூல் உள்
கொண்டுஉரை தியானத்தில் எண்ஐந்து நாளின்அக்
குழகனால் எழுதிஅத னுள்

பொருள் வாய்மை அமுதினைப் புலவர்க்கு அளித்து உலகு
புகழ்உலவு நாதமுனி கள்
பொன்னடி வணங்குதும்: புத்தூர் மடந்தையைப்
புகழும்என் கவிதழைய வே. (14)

ஒப்பற்ற நான்கு வேதங்களாகிய கற்பகமரத்தின் ஒள்ளிய கனிகள் உபநிடதங்கள். அவை இனிய வாழ்வு உற்றிடும் இடம் திருவாய்மொழி என்னும் கடல்.

அந்தக் கடலிடத்து ஓர் ஆயிரம் பாடலாகிய பெருவாழ்வு பெற்ற அலைகள் பொங்கின. அந்த அலைகள் ஒரு பக்கத்தில் நிறைவு பெற்றது குடந்தை (ஆரா) அமுது.

அந்த அமுதால் பேரின்பம் எய்தினார் நாதமுனிகள். வீரநாராயணபுரத்து வீரநாராயணனுக்கு ஆராஅமுதன் என்ற பெயரை அருளிய நம்மாழ்வார் பொருந்தி வாழ்ந்த (வாழ்கின்ற) இடம் குருகாபுரி.

அந்தக் குருகாபுரியில் பரம குருகுலச் சான்றோராகிய நம்மாழ்வாரைக் கோளூரிற் பிறந்த மதுரவி பாடிய "கண்ணிநுண் சிறுதாம்பு" என்ற நூலை மனத்துட் கொண்டு, ஓதிக்கொண்டே இருக்கின்ற தியானத்தால் நாற்பது நாள்களில், அந்த இளஞாயிறு ஆகிய நம்மாழ்வாரால், திருவாய்மொழிமுதல் நாலாயிரம் பாடல்களும் பெற்றார் நாதமுனி. பெற்று அதனுட் பொருளாகிய வாய்மை அமுதினைப் புலமையுடையோர்க்கெல்லாம் அருளினார். அதனால் உலகெமெலாம் புகழ்உலவும் பெருமை பெற்றார். அவருடைய பொன்னடிகளை வணங்குவோம். ஏனெனில் வில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியாரைப் புகழும் என் கவி தழையும் பொருட்டு.

திருமங்கை மன்னன் முதலியோர்

புகழுஉற்று இருக்கும்முலை மலர்மங்கை கொழுநனைப்
புகழ் பொய்கை முதல்மூவர், தென்
புதுவை, திருவஞ்சி, மழிசையின் அதிபர், பாகவதர்
பொன்னடித் தூளி, பா ணன்,

எழுகூற் றிருக்கைதாண் டகம் மடல் திருமொழி
இசைத்த புகழ் ஆலிநா டன்
என்னும்ஒன் பதின்மர் பொன் னடிகளைப் போற்றுதும்
இளநிலா உழுதுஇறா லின்

மெழுகுஊற் றிருக்கும்மது மடைதிறந்து ஒழுகும் நதி
வேலைபோல் விரவிஉக ளும்
வெண்திரைப் பொன்னிரியுள் அரங்கனைப் போற்றாது
வீண்நாள் கழித்தசிறி யோர்

தொழுகூற்று வன்தனது சென்னிமேல் மிதிதொண்டர்
தொண்டனேன் வில்லிபுத் தூர்த்
தோகையைப் பரவுபிள் ளைக்கவிதை முத்தமிழ்கள்
தொல்புவியின் மேல்தழைய வே.

(15)

சோலை மரங்களில் தேன்கூடுகள் தொங்கும் மரங்கள் வான்வரை உயர்ந்து இருப்பதால், இளநிலாமுனை அந்தக் கூடுகளைக் குத்தி உடைக்கும். அதனால் அக்கூடுகளில் மெழுகினிடையே தேங்கிய ஊற்றாக இருக்கும் தேனானது, மடைபோல் திறந்து ஒழுகி ஆறாகப் பாயும். அவ் ஆறு தான் காவிரி. அது கடல்போல இடம் எங்கும் பரவிப் பாயும். அதன் அலைகள் வெண்ணுரை படர்ந்திருப்பதால் வெண்மையாகத் தோன்றும்.

அத்தகைய காவிரி ஆற்றின் நடுவில் அறிதுயில் கொண்ட அரங்கனைப் போற்றாமல், தம் வாழ்நாளை வீண் நாளாகக் கழித்த கீழ்மக்கள், இறுதிக் காலத்தில் கூற்றுவன் வரும்போது அவனை அஞ்சி அழுது தொழுவார்கள். ஆனால், அரங்கன் அடியார் நமன் வரும்போது, நமர் தமர் தலைகள் மீதே மிதித்துத் துவைப்பர் அத்தைகைய அடியார்க்கு அடியேன் ஆகிய நான், வில்லிபுத்தூர்த் தோகையாகிய ஆண்டாள் நாச்சியாரைப் போற்றுகின்ற பிள்ளைக் கவிதையாகிய முத்தமிழ்ப் பாடல்கள் பழமையான உலகத்தில் தழைக்கும் பொருட்டு:

திருவேங்கடவன்

தகடு படு தளிரே தளிர்த்தாற்றல் சார்
    தருணமலர் அவிழ்காழ் அகிற்கோட்டொடே
தரணிபுதை இருள்தீர் தரச்சீப்பதோர்
    தவளமுழு மதிமான் இளைப்பாற்றி வாழ்

அகடுகுவ டுழுகாலை இவற்றுற்ற தாய்
    அருவிநிரை சொரிதாரை உற்றோட்டமாய்
அமுதநதி நறைஆ ழியிற்றேக்கறா
    அரவவட மலைவா ணனைப் போற்றுவோம்:

மகரமொடு திமிபோர் பொரக்கோட்சுறா
    மறுகிஒழு குபயோ ததிக் கேற்றமாம்
வரிசைஅமு துதுழாய் மலர்காட்டுள்ளே
    மருவிஒரு திருமா தெனத்தேற்றமே

புகலும்மறை யவர்பூ பதிக் கேற்றதோர்
    புதல்வினை வருகா ரணத்தோற்றம் ஏழ்
புவனிமுழு வதும்மா சறப்போற்ற வாழ்
    புதுவைநகர் வருகோ தையைக்காக்கவே.

சந்தி பிரித்த வடிவம் :

தகடுபடு தளிரே தளிர்த்து ஆற்றல் சார்
தருணமலர் அவிழ்காழ் அகில் கோட்டொடே
தரணிபுதை இருள்தீர்தரச் சீப்பது ஓர்
தவளமுழு மதிமான் இளைப்பாற்றி வாழ்

அகடுகுவடு உழுகாலை இற்றுஊற்றதாய்
அருவிநிரை சொரிதாரை உற்று ஓட்டமாம்
அமுதநதி நறை, ஆழியில் தேக்குஅறா
அரவ வடமலை வாணனைப் போற்றுவோம்:

மகரமொடு திமிபோர்பொரக், கோட்சுறா
மறுகி ஒழுகு பயோததிக்கு ஏற்றமாம்
வரிசை அமுது துழாய்மலர்க் காட்ட உ(ள்)ளே
மருவி ஒரு திருமாது எனத்தேற்றமே.

**புகலும் மறையவர் பூபதிக்கு ஏற்றதுஓர்
புதல்வினை வருகாரணத் தோற்றம் ஏழ்
புவனி முழுவதும் மாசுஅறப் போற்றவாழ்
புதுவைநகர் வருகோதையைக் காக்கவே.** (16)

மதுரமீனுடன் திமி என்னும் திமிங்கலம் போர்புரியும். அதைக்கண்டு வலிமை வாய்ந்த சுறாமீன்கள் மறுக்கம் அடையும் (அஞ்சும்) அஞ்சி அப்பால் ஏகும்.

அத்தகைய கடலுக்கும் மேலான தகுதியுடைய அமுதப்பொய்கை வரிசைகொண்டது, துழாய் மலர்க்காடு "இவள் ஒப்பற்ற திருமகளே" என்றனர். சிலர் "பழம் பெரும் திருமாலே" என்று உறுதியாக நிலைநிறுத்திய அந்தண(வேதிய)ர்க்குத் தகுந்த தலைவராகிய பெரியாழ்வாருக்குத் தகுதிவாய்ந்த புதல்வி இவள்" என்றனர்.

(தொகைப்பிறப்பு ஏழு வகைப்படும். அவை தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன.)

இவற்றைக் காரணப் பிறப்பு என்றும் கூறுவர். இந்த உலக முழுவதிலும் பரவியுள்ள இந்த ஏழு வகையான உயிர்களும் வினைப்பயன் நீங்குவதற்காகத் தன்னைப் போற்றுமாறு வாழ்பவள் ஆண்டாள். அவள் சீர்வில்லிபுத்தூரில் பிறந்தவள். கோதை என்ற திருப்பெயரினள். அவளைக் காக்கும் பொருட்டு:

பொன்தகடு போன்ற தளிர்கள் தளிர்த்துப் பருவ மலராக மொட்டு விரிவது, வயிரம் பாய்ந்த வலிமை கொண்ட அகில் என்னும் ஒருவகை மண மரம். அதன் கிளைகளில் உலகை மூடிய இருள் போகும்படி துடைக்கின்ற வெண்ணிற முழுமதி மறுவாகிய மானுடன் இளைப்பாறித் தங்கும்.

மலைகளின் நடுவிடமும் உச்சியும், அந்த அகில் மரத்தில் ஓய்வெடுக்கும் முழுமதியைக் கிழிக்கும். அப்போது அந்த நிலவில் உள்ள அமுதமானது ஊற்றாகி, அந்த ஊற்று வரிசையான அருவிகளாகும். அவை சொரிகின்ற நீர்த்தாரைகள் திரண்டு விரைவாய் ஓடி அமுத ஆறாகும். அந்த ஆற்றில் தேன் நிரம்பும். அப்போது அமுத ஆற்றில் தேக்கு மரங்கள் நீங்காமல் மிதக்கும். அதனால் அந்த அமுத ஆறு கடலைப்போல் தேக்கெறியும். (அதாவது நிரம்ப உண்டவர் ஏப்பம் விடுவதுபோல் ஒலி எழுப்பும்.) அந்த ஒலி, கடலானது ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்று நீர் ஆகிய முந்நீரையும் நிரம்ப உண்டு ஏப்பம் விடுவது போல் தோன்றும்.

அத்தகைய அமுதத் தேன் ஆறுகள் அருவிகளாகப் பாயும் சேடகிரி என்னும் பெயர் பெற்ற வடவேங்கடமலையானைப் போற்றுவோம்.

சோலைமலை அழகர்

கழிக்கும் கரட மதக்கலுழிச்
  சுவட்டுக் கவட்டுப் பிறைக்கோட்டுத்
தூங்கும் முடக்கு விழுதுபுரை
  துளைக்கை வளைகார்க் கடல்கனலைக்

கொழிக்கும் தறுகண் குழிசிறுகண்
  குன்றுஒ தியமூ துரைக்கு உதவும்
குணமே ருஎனும் சோலைமலைக்
  குழகர் அழகர் அருள் காக்க:

கழிக்குண்டு அகழ்தெண் திரைத்திருப்பாற்
  கடலும் மடனுள் தளிநறவம்
களித்துக் குளித்துஉண் சுரும்பு இறைக்கும்
  கமலா லயமும் சதுர்வேத

மொழிக்கும் அடங்கா மிதிலையுமே
  முத்தூர் புத்தூர் ஆயதுஎன
மும்மைப் புவனம் புகழ்புத்தூர்
  முத்தூர் நகைப்பெண் அமுதினையே. (17)

உப்பங்கழிக் கிடங்குகளையுடையது தெள்ளிய திருப்பாற் கடல். பூக்களின் இதழ்களினுள் துளியாகிய மதுவை மகிழ்ந்து, மூழ்கி உண்ட வண்டுகள் பண்பாடுவது தாமரைக் கோவில்.

நால்மறைகளின் மொழிக்கும் அடங்காப் புகழ் உடையது மிதிலை. ஆகிய இவை மூன்றும் முத்துகள் ஊர்கின்ற ஒரே புதிய ஊராக ஆகியது என்று மூவுலகமும் புகழ்கின்ற சீர்வில்லிபுத்தூரில் தோன்றியவள் ஆண்டாள். அவள் வாய் இதழ்களின் மென்னகை அரும்பும்.

அத்தகைய பெண் அமுதினை சினக்கும் மும் மதத்தால் முத்துளைகளினின்றும் பெருகும் மதப்பெருக்கால் யானைக்குச் சுவடு(தழும்பு) உண்டாகும். இருகவையாகப் பிரிந்த பிறை போன்று வளைந்த தந்தங்களை உடையது அது. அதன் துதிக்கை தொங்குவது; முடங்குவது; ஆலமரத்தின் விழுதுபோல் தோன்றுவது; துளையுடைமையால் புழைக்கை எனப் பெயர் கொண்டது.

உலகை வளைந்த ஆழமான கருங்கடலில் மறைந்திருக்கும் வடவைத் தீயைக் கொழிக்கும் தறுகண்மையுடைய குழிந்த சிறு கண்களைக் கொண்டது. இத்தகைய யானை பார்ப்பதற்கு மலைபோலத் தோற்றம் அளிக்கும்.

அந்த யானை ஒருகால் பொய்கையில் முதலையால் கவ்வப்பட்டது. பற்பல ஆண்டுகள் முயன்று போராடியும் விடுபட இயலவில்லை. இறுதியில் தன் செயலால் ஆவது ஒன்றில்லை என உணர்ந்து இறைவனை ஆதிமூலமே என்று அழைத்தது. உடனே அந்தக் குரலுக்கு உதவினான் அழகன்.

இவ்வாறு எளியோர்க்கு உதவும் இயல்புடையவன் ஆதலால் அவனைக் "குணமேரு" (குன்று) என்று பெயரிட்டு அழைப்பர்.

அந்தச் சோலைமலைக் குழகர் ஆகிய அழகர் காப்பாற்றுக.

வடபெருங்கோயிலான்

சுடர் தூண்டு முத்தலைக் கவடுபடு நெட்டிலைச்
சூலிகா பாலிஆ கித்
தொல்லைநான் முகன்இட்ட சாபத்தில் நாணம்
தொடர்ந்தஆ பத்துஅடைந் தே

இடர்தூண்ட நின்றுஇரப் பினைஒழித் தருள்கென
இரந்திட இரப்பினைத் தீர்த்து
இனிதமர்ந் தான்என்னும் வடபெருங் கோயிலார்
என்றும் புரக்க: நீ லக்

கடல்சூழ்ந்த மண்திணி நிலத்தினுட் கூடல்நகர்
காவலன் பரனைஅறி வான்
கட்டுபொற் கிழிஅறுத்து ஓங்குமறை யவர்பிரான்
களிகூர ஆடகப் பொன்

மடல்சூழ்ந்த கமலமா ளிகையின் சிறந்ததுஎன
வண்தமிழ் தழைத்தபுத் தூர்
மல்லிநாட் டினுள்வந்த வல்லிநாட் டும்சிறு
மருங்குற் பெருந்திருவை யே.

நீலக்கடல் சூழ்ந்து மண்அணுக்கள் செறிந்து உள்ள உலகத்திலே மதுரைமன்னன் பாண்டியன், யார் முழுமுதற்பொருள் என்று அறிந்து கொள்வதற்காகக் கட்டிவைத்த பொற்கிழியை, மறைகள்ஓதி வென்று அறுத்துப் புகழில் ஓங்கினார் தலைவர் பெரியாழ்வார். அவர்களிடம் கூறும்படி, ஆடகப் பொன் இதழ் சூழ்ந்த தாமரைமலர் மாளிகையினும் சிறந்தது என்னும்படி வளவிய தமிழ் தழைத்த சீர்வில்லிபுத்தூரில், மல்லிநாட்டினுள் தோன்றியவள் ஆண்டாள். வஞ்சிக்கொடிபோலும் இடையையுடைய பெருந்திருப்பிராட்டியாகிய அவளை,

ஒளியை எழுப்பும் மூன்று பிளவு கொண்டதும் நெடிய இலை போன்ற நுனிகளுடையதுமான சூலம் ஏந்தியவன் சிவன். அவன் பிரமன் தலையைக் கிள்ளியதால் அத்தலை அவன் கையில் ஒட்டிக் கொண்டது. அதற்குக் காரணம் பிரமன் தந்த பண்டைய சாபம். அச் சாபத்தால் நாணம் சிவனைப் பற்றிக்கொண்டது. ஆதலால் பெருந்துன்பம் அடைந்தான்.

அந்தத் துன்பம் தூண்டியதால், திருமாலின் எதிர்வந்து நின்று "நான், கபாலம் நிறையும் பொருட்டு இரப்பதை ஒழித்தருள்!" என்று வேண்டினான். திருமால், அவன் இழிவினைத் தீர்த்தான். திருமால் இனிதாக வந்து எழுந்தருளிய இடம் வில்லிபுத்தூர் வடபெருங்கோயில். அந்த வடபெருங்கோயிலான் காப்பானாக.

செண்டலங்காரன்

தாதுஅளவி நறவுஅறாப் பரிமளத் தொடுசெவ்வி
சார்ந்து தண் இலையஆ கிச்
சஞ்சரீ கம்சஞ் சரிக்கும்முன்பு அருணோ
தயத்தினில் தளைஅவிழும் அப்

போதுஅளவி லாதநறு மலர்கொய்து தாதைகை
புனை புனித மாலைசூ டிப்
புரிகுழல் மணத்தொடும் அளித்ததிரு மகளைஎப்
பொழுதினும் காக்க: வள் ளைக்

காதுஅளவி னும்சென்ற உண்கண்ணார் தண்புனல்
கலந்துஆட அணுகும்அள வில்
கதிர்முலை முகட்டுஅருண மணிவெயிலும் நித்திலக்
காழ்குலாம்நிலவும்நிமி ரச்

சீதலக் கமலமுகை அவிழும் நண் பகலினும்
சேதாம்பல் முகுளம்மல ரும்
திருமுக் குளப்புதுவை நகர்வாழ வாழ்வுபயில்
செண்டலங் காரன்அரு ளே.

(19)

வள்ளைக்கொடி போன்ற காதின் அளவினும் நீண்டு சென்ற மையுண்ட கண்ணுடைய மகளிர், குளிர்ந்த நீரில் ஒன்றுகூடிக் குளிப்பதற்கு அணுகுவர். அவர்களின் ஒளிகொண்ட முலைகளின் உச்சியில் அணிந்த செம்மணிக் கலங்களின் செவ்விய மணிவெய்யிலும் முத்துமாலையின் ஒளி குலாவிய நிலாப்போன்ற ஒளியும் பரவும். அவ் ஒளிகளால், குளிர்ந்த தாமரை மொட்டு மலர்கின்ற நடுப்பகலிலும் செவ்வாம்பல் மொட்டு மலரும். அத் திருமுக்குளம் எனப் பெயர்பெற்ற நீர் நிலையுடைய வில்லிபுத்தூர் வாழ்வதற்காக அங்கேயே தங்கி வாழ்கின்ற செண்டலங்காரப் பெருமானின் அருள், மகரந்தம் கலந்து தேன் வற்றாத மணத்தோடு பருவச்செவ்வியும் சார்ந்திருக்கும் மலர்கள். அவை குளிர்ந்த இலைகளுடன் கூடி இருக்கும். அவற்றில் வண்டுகள தேன் உண்ணச் சுற்றிச் சுற்றி வரும். அதற்கு முன்பாகவே வைகறைச் செங்கதிரால் மொட்டுவிரியும் அந்த நறிய மலர்களைக் கொய்து வருவார் பெரியாழ்வார். பின்பு தம் கையால் புனித மாலையைத் தொடுத்து இறைவனுக்குச் சூட்டுவதற்காக வைப்பார்.

இறைவனுக்குரிய அம்மாலையை அவர் திருமகள ஆண்டாள் எடுத்துத் தன் சுருண்ட கூந்தலில் சூடிக் கண்ணாடியில், தான் இறைவனுக்கு மணாட்டி ஆவதற்குத் தகுதி வாய்ந்தவளா என்று அழகு பார்ப்பாள். மீண்டும் இருந்தபடி வைத்துவிடுவாள். அவளின் சுருண்ட கூந்தலின் இயற்கை மணத்தொடும் அண்ணலுக்குச் சூடத் தருவாள். அத் திருமகளை எப்போதும் காப்பாற்றுக.

ஆதிசேடன்

பொறிக்கிங் கழகு புரப்பதொரு
பொறியாற் புவனத் தவர் நாட்டம்
புதைக்கும் இருளின் பிழம்பினையே
புறம்காண் அருணோ தயம்எனவே

எறிக்கும் கிரண மவுலி கவிழ்த்து
இதம்செய் அணையாம் திருநெடுமாற்கு
ஏற்றும் எழிலார் மணிவிளக்காம்
ஏந்தல் புரக்க: அரிஅறல்போல்

நெரிக்கும் கருமென் குழல்பிறைபோல்
நிழல்வாணு தல்இந் திரசாப
நீலப் புருவம் கருங்குவளை
நெடுங்கண் கமலா னனம்முகுளம்

குறிக்கும் புளகக் களபமுலை
கொடிபோல் சுருங்கும் பிடிமருங்குல்
கோதைத் திருவைத் தமிழ்ப்புதுவைக்
கொழுங்கோ மளப்பொற் கொம்பினையே. *(20)*

திருமகளுக்கு அழகு காப்பதாகிய ஒப்பற்ற இயந்திரம் ஆம். புள்ளிகளால் உலகிலுள்ளாரின் கண்களை மறைக்கின்ற இருளின் திரட்சியைத் தோற்றோடச் செய்யும் செங்கதிர்த் தோற்றம் போல ஒளிவீசும் பொன்முடி புனைந்து திருமாலுக்கு நன்மை செய்கின்ற படுக்கையாம்;

திருநெடுமாலுக்கு ஏற்றிவைத்துள்ள அழகு நிரம்பிய விளக் காகும்; இவ்வாறு இறைவன் கைங்கரியமே குறிக்கோளாகக் கொண்ட வானவர் நித்திய சூரிகளின் தலைவராகிய ஆதிசேடன்,

அலை அரித்த நுண்ணிய கருமணல் போன்று சுருண்ட கரிய மெல்லிய கூந்தலும், பிறைபோன்ற குளிர்ந்த ஒளியுடைய நெற்றியும், வானவில் போன்ற நீல நிறப் புருவமும், கருங்குவளை மலர்போன்ற நெடிய கண்களும், கமல மலர் போன்ற முகமும், மலர்மொட்டைக் புலவர் உவமையாக கூறுகின்ற பூரித்த களபம் பூசிய முலையும், கொடிபோல் சிறுத்த பிடிமருங்குலும் உடைய கோதைத் திருவை; தமிழ்ப் புதுவைக் கொழுங்கோமளப் பொன் கொம்பினைக் காப்பானாக!

புள் அரையன்

மல்லிமா மயில்பெற்ற வில்லியும் கண்டனும்
மாவேட்டை யாடுகாட் டுள்
வன்துணைத் தம்பியைப் புலிகொல்ல நோய்உற்ற
மறவனின் துயில்முகத் தில்

குல்லைஅம் தாமத்தன் எய்தியே "நின்இளங்
குமரனுக்கு உயிர்அளிப்பன்
கோயில்இங் அருள்" என்று நிதி அருள, வடபெருங்
கோயில் முதலிய அமைத் தே

அல்லிஅம் கமலை நாயகனுடன் புத்தூர்ருள்
அந்தணர் தமைக்கொணர்ந் தே
அகரமது தாபித்த காரணம் தோற்றுவான்
அவரொடும் தனதுபெய ரால்

வில்லிபுத் தூர் எனப் புகழ்பெற்ற திருநகருள்
விமலையைக் காக்கஃஎழு தா
வேதம் ஒரு நான்கையும் சிறைகொண்டபொறைகொண்ட
வித்ததகப் புள்அரசனே.

(21)

மல்லி என்ற வேட்டுவப்பெண் மயிலின் சாயலினாள். அவள் பெற்ற மக்கள் இருவர். அவர்கள் பெயர் வில்லி, கண்டன் என்பன

அவர்கள் இருவரும் விலங்கு வேட்டையாடும் போது காட்டிலே கண்டன் என்ற வலிய துணைத் தம்பியைப் புலி கொன்றது. அதனால் துன்பம் உழந்த வில்லி தூங்கிவிட்டான்.அப்போது கனவில் துளபத்தின் அழகிய மாலையை அணிந்த திருமால் தோன்றினான்.

"நின் தம்பிக்கு நான் உயிர் அளிப்பேன் நீங்கள் இருவரும் எனக்கு ஒரு கோயிலை இவ்விடத்தில் அமையுங்கள்" என்று கூறிச் செல்வமும் உதவினான்.

அச்செல்வத்தைக் கொண்டு வடபெருங் கோயில் முதலிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. அக்கோயிலில் அகஇதழ் அழகிய பூமகள் தலைவன் எழுந்தருளினான்.

அங்கு அகரம் (அக்கிரகாரம்) ஏற்படுத்தி அந்தணர்களைக் குடியேற்றினர்.

அந்த அகரம் நிறுவிய காரணம் விளங்கும் பொருட்டு, வேடன் குலத்துப் புதல்வன் பெயரும் வில் அணிந்தமையால் வந்த வில்லி என்ற இறைவன் பெயரும் இணைந்து வில்லி என்பதுடன் புதுவதாக அமைந்த ஊர் என்பதால் புத்தூர் என்பதையும் சேர்த்து வில்லிபுத்தூர் என்று புகழ் பெற்றது அத் திருநகரம். அங்குத் தோன்றிய விமலையாகிய ஆண்டாள் நாயகியை, எழுதா மறை (வேதம்) ஒரு நான்காகிய சிறகுகளையும் பொறுமையையும் கொண்ட பேரறிஞன் ஆகிய புள் அரசன் (கருடன்) காப்பாற்றுக.

ஆழிப்படைக் கடவுள்

ஒருமுலை கறந்தபால் ஒருபுடை குழக்கன்றும்
உண்டுவாய் மாறமுத லே
ஒருகுடம் மறைத்துமற் றொருகுடம் அளிக்குமுன்பு
உறுபெறும் முலை உக்க பால்

அருமணித் திருமாட வீதியிற் பாலாழி
அளவினில் வளைப்பது ஏய்க் கும்
ஆயர்பா டிச்செல்வர் புத்தூர்ப் பிறந்தபெண்
அரசியைக் காக்க: கொற்றக்

குருகுலத் தினில்முந்து நூற்றுவர் எனக்கொடுங்
கூற்றுஉரு உடுத்தஅனை யார்
கூற்றுவன் தன்பதி புகப்பே ரறங்கள் குடி
கொண்டசெங் கோல்நடாத் தித்

தருமன் முத லவர்பழம் பதி ஆள, நண்பகல்
தன்னைநல் லிரவதா கத்,
தரணியை மறைத்துமூ தண்ட வெளி முகடுதொடு
சக்ராயு தக்கடவு ளே. (22)

பசுக்களின் மடிகளில் ஒரு காம்பிலே பால் கறப்பர். ஒரு புறம் இளங்கன்றும் உண்ணும். உண்டு மறு காம்பில் வாய் மாற்றி வைக்கும் அந்த இடைவெளியில் முன்பு நிறைந்துபோன பால் குடத்தை மறைத்து மற்றொரு குடம் வைப்பர். அப்படி வைக்குமுன் நிறைந்த பசுக்களின் மடிப் பால் நிலத்தில் ஒழுகும். அந்தப் பால், விலை மதித்தற்கு அரிய மணிகள் பரவிக் கிடக்கும் அழகிய மாட வீதியிலே பாற்கடல் வளைத்துக் கொள்வதைப் போலும்! அத்தகைய பசுச்செல்வம் மிக்கவர் ஆயர் பாடியினர். அவர்கள் வாழும் ஊர் சீர்வில்லிபுத்தூர் அந்த ஊரில் பிறந்த பெண் அரசியாகிய ஆண்டாள்.

வெற்றிதங்கிய குரு குலத்தினில் பிறந்தவர் நூற்றுவர். அவர்கள் கூற்றம் மானுட வடிவம் கொண்டதைப் போன்றவர்கள். அவர்கள் மடிந்து எமனுலகம் புகவும் பெரிய அறங்கள் குடிகொள்ளவும் செங்கோல் நடத்தி; தருமன் முதலியோர் அரசாளவும் நண்பகல் இரவு நேரம் போலாகவும் உலகை இருளால் மறைத்து மூதண்டவெளியில் உச்சியைத் தொட்ட சக்கரத்தாழ்வார் காப்பாற்றுக!

இரவி மதி

முழுமதி அதனுள் நிலவுடன் அமுதும்
முதிர்சிறு பிணையும் போற்பொலி
முகம்எனும் மலருள் முறுவலும் மழலை
மொழியுடன் விழியும் கோட்டிய

வழுவறு வடுவின் மிசைஇரு தனுவும்
வளமிகு பிறையும் கூட்டிய
மழையென இலகு புருவமும் நுதலும்
மலர்மலி குழலும் தீட்டிய

பழுதறு படிவ முடன்இமை யவர்கள்
பணிதிரு வுருவம் காட்டிய
பழமறை பரவும் புதுவையில் எமது
பழவினை ஒழிநண் பாட்டியை

எழுதிரை மறுகி அமுதெழு பரவை
யினுள்வரை அழுவம் தோற்றிய
இரவியும் மதியும் உடன்இரு புடையும்
இரவொடு பகலும் காக்கவே!

(23)

ஒரு முழுமதி அதனுள்ளே நிலவும் அமுதும், முதிர்சிறுமானும் இருப்பனபோல, முறுவல் நிலவும் மழலை அமுதும், கண் ஆகிய மானும் இருப்பதால் ஆண்டாள் அம்மை முகம் முழுமதிக்கு ஒப்பாகின்றது.

குற்றமற்ற மாவடுவின்மேல் வளைந்த இருவிற்களும், வளம் மிகுந்த பிறைமதியும் திரட்டிய மேகமும் போல, நம் கோதை நாச்சியாரிடமும் கண் ஆகிய மாவடுவின்மேலே புருவமாகிய வளைந்த இருவிற்களும், நெற்றியாகிய பிறை மதியும், மலர் அணிந்த கூந்தலாகிய மேகமும் உள்ளன.(மாவடு கண்ணுக்கும் விற்கள் புருவங்களுக்கும் நெற்றிபிறைமதிக்கும் கூந்தல் மேகத்துக்கும் ஒப்பாகின்றன என்பது சாரம்.)

அழகு மிகும்படி சித்தரித்த குற்றமற்ற வடிவமுடனே இமையவர்கள் பணிகின்ற திருவுருவத்தை நம்போல்பவர்க்கும் காட்டியவள்.

பண்டைத் மறைகள் தொழுகின்ற வில்லிபுத்தூரில் நமது பண்டைய தீவினைகளை ஒழித்த நண்பாட்டி(நட்பை ஆள்பவள்).

ஏழுகடல்களும் கலங்கி அமுது எழுகின்ற கடலுள் ஆழத்திலிருந்து மந்திர மலை தோற்றுவித்த செங்கதிரும் வெண் மதியும் ஆகிய இருவரும் ஆண்டாள் நாச்சியாருக்கு இரு பக்கமும் இருந்து இரவும் பகலும் காப்பாற்றுக.

கலை, மலை, சிலை, விண், பண்மகள்

காலையிற் சததளக் கிரணஒண் தாமரைக்
கலைமங்கை கட்டுச்சி யில்,
கயிலையங் கிரியுளான் வாமபா கத்தில்உமை.
கதிரவன் குடகடல் புகு

மாலையிற் குலிசபதி அயிராணி யாமத்தில்
வரிசிலை மடந்தையுட னே,
வைகறையில் இன்இசை மடந்தைஎன்று ஓர்ஐவர்
வைகலும் காக்க: இமை யோர்

சோலையிற் காமர்வண் டினம்முரலும் நறவுஅறாத்
துணர்மல்கு பரிமளப் பைந்
துளவநல் தாய்பெற்ற தேன்என்ன அமுதம்
துளித்துஎழு தரங்கநன் பால்

வேலையைப் புறமிட்டு மல்லிவள நாடுபயில்
வில்லிபுத் தூருள்உறை யும்
விண்டுசித் தன்பெற்ற பொற்றொடி எனப்புவி
விளம்பும்ஒரு திருமகளை யே. *(24)*

தேவர்களது கற்பகச் சோலையில் அழகிய வண்டுக்கூட்டம் இசை பாடும் தேன் அறாத துளிர் நிரம்பிய மணமுள்ள பசிய துளவமாகிய நல்ல பாற்கடலைத் துறந்து, மல்லிவள நாட்டிலுள்ள வில்லிபுத்தூரில் விரும்பி வாழ்கின்ற பெரியாழ்வார் பெற்ற பெண்பிள்ளை என்று மண் கூறும் ஒரு திருமகளாகியவள் ஆண்டாள்,

காலையில் நூற்றிதழ்த் தாமரையில் வீற்றுள்ள கலைமகள் காக்க! நடுப்பகலில் பனிமலைச் சிவன் இடப்புறத்தில் உள்ள உமை காக்க!

கதிரவன் மேலைக் கடலில் முழுகும் மாலையில் இந்திரன் மனைவி அயிராணி காக்க! யாமத்தில வரிந்த சிலைமகள் ஆகிய கொற்றவை (துர்க்கை) காக்க! வைகைறையில் இசைமடந்தையாகிய பண்மகள் காக்க!

இவ்வாறு ஐந்து வேளைகளிலும் இந்த ஐவரும் காக்க!

வேதம்

மன்னும்'மார் கழி'ஆதி ஐந்தினில் 'புள்' ஆதி
வாய்ந்த 'எல்' ஒருபத்தி னில்
மற்ற'நாயகன்' 'அம்பர'த்தினில் காலத்தை
வாளைமக ளிரைஏத்தி யே

'இன்ன செய்! செய்யற்க!' என்கை. வாழ்வு எய்தமேல்
எழிலிமழை பெய்துதடை தான்
யாதும்இன்று ஆம்என்கை. பெண்கள்ஈ ரைவரை
எழுப்புதல் அவற்றினோ டும்

பின்னையை எழுப்பு'உந்து' முதல்மூன்றின் முந்துறப்
பெலபத்ரன் நிறைதந்தை தாய்
பெருவாயில் கோயில்கா வலர்'ஏற்ற' 'அங்கணில்'
பெரும! எழு கென்றுமா ரி

சொன்னது 'அன்று' ஆதிஏழ் ஆதிசங்கு ஆதிபறை
தொண்டுஉரை திருப்பாவை யைச்
சொல்லுவார் முத்திஎய்து வார்என்ற கோதையைச்
சுருதிஎன் றும்காக்க வே.

(25)

இப் பாடல் திருப்பாவையின் பொருள் வைப்பு முறை கூறுகின்றது. நிலைபெற்ற 'மார்கழி' எனத் தொடங்கும் பாடல் ஐந்திலும் 'புள்' எனத் தொடங்கும் பாடல் முதல் பதினைந்தாம் பாடல் வரையும் 'நாயகன்' 'அம்பரம்' எனத் தொடங்கும் பாடல்கள் வரை ஏந்தியே நோன்புக் காலத்தில் இன்னது செய்க! இன்னது செய்யற்க! என்று கூறுவதாம்.

வாழ்வு பெற, 'மேல்' முகில் மழைபெய்து நோன்புக்குத் தடை ஏதும் இன்று என்பதாம். பத்துமகளிரை எழுப்புவது. அவற்றுடன் பின்னைப் பிராட்டியை எழுப்புதல். 'உந்து' முதல் மூன்று பாசுரங்களில், முதலில் பலராமனையும் நந்தகோபன் யசோதை ஆகிய பெற்றோரையும் வாயில், கோயில் காவலரையும் எழுப்பி 'ஏற்ற' 'அங்கண்' எனத் தொடங்கும் பாடல்களில் கண்ணனை எழுப்பி 'மாரி' எனத் தொடங்கும் பாடல் கூறப்பட்டது. 'அன்று' எனத் தொடங்கும் பாடல் முதல், ஏழுபாடல்கள், சங்கு முதலிய பறையாகிய தொண்டு முதலியவற்றைக் கேட்பதாம். கடை சிப்பாடல், திருப்பாவை சொல்லுவார் முத்தி எய்துவார் என்றாள் கோதை. அந்தக் கோதையை வேதங்கள் எப்போதும் காப்பாற்றுக.

2. செங்கீரைப் பருவம்

வரிஉழு வையின்அதன் உடையினன் விடையினன்
மாதுமை பங்காளன் மதிநதி இதழியொ
டறுகடை சடைமிசை வாழ்வுறு கங்காளன்
எரிவிழி நுதலினன் இரவினை ஒழிகென

ஈனம்அ டைந்தோதும் இரவினை ஒருநொடி
யினுள்ஒழி கருணையன்; யாவரும் அன்பாகக்
கரிசொல உதவிய தனிமுதல்; உலகுயிர்
காவலன் இன்பான கடவுளர் அதிபதி

எனமன தினில்உறு காதல்அ டங்காமல்
அரிஅரி எனும்உரையினர்மகிழ் தரஇனி
தாடுக செங்கீரை! அளிசெறி மதுமகிழ்
அணிபவர் திருமகள் ஆடுக செங்கீரை!

(26)

உடலில் வரிகளை உடைய புலித்தோல் ஆடையன், காளை வாகனன், உமையை இடப்புறம் வைத்தவன், இளம்பிறையும் கங்கையும் கொன்றையும் அறுகும் அடைந்த சடைமேல் வாழப்பெற்ற தலையினன். நெருப்புக் கண் கொண்ட நெற்றியினன். இத்தகைய சிவன் திருமாலிடம் வந்து, "என் பிச்சாண்டி நிலைபோக்கி, என் கையில் ஒட்டிக்கொண்ட பிரமன் தலையை நீக்கி அருள்க!" என்று இழிவு அடைந்து வேண்டினான். ஒரு நொடியில் அவன் வேண்டியபடியே அவன் இரக்கும் தொழிலையும் தலைஓட்டையும் ஒழித்த அருளினான். எல்லோரும் அன்பு கொள்ளும்படி யானை ஆதிமூலமே என்று சொல்லும்போது அதற்கு உதவிய தனி முதல்வன்; உலகுக்கும் உயிர்கட்கும் காவலன்; வழிபட்டு இன்பம் கொண்ட 'நித்தியசூரி'கட்குத் தலைவன் என்று பலவாறு நினைத்து, மிக்க காதல் மனத்துள் அடங்காமல், "அரி! அரி!" என்னும் சொல்லுபவர்கள் மகிழ்வடையும்படி இனிதாகத் திருமகளே இருகை ஊன்றி ஒருகால் மடக்கி ஒரு கால் நீட்டித் தலை நிமிர்ந்து செங்கீரை ஆடுக!

வயலிடை உழவர்கள் மழவிடை யொடுபடை
வாயின்உ ழும்சாலில்
வரிவளை இளையரின் அரவமொ டுடன் எழ
வாளைவெ ருண்டோடிப்

புயல்படி பொழிலிடை கயலுடன் உகளுபு
விரி தண்தேறல்
பொறிஅளி சினைதொறும் இழைநற வுடன்இழி
பூசலு டன்கூடி

இயல்இசை நடம்நவில் ஒலிசது மறைஒலி
ஏழுடன் ஒன்றாகும்
எழில்மலி புதுவையுள் உலகுயிர் தழைதர
வேவரு நங்காய்! இங்கு

அயன்முத லியஇமை யவர்மகிழ் தரஇனி
தாடுக செங்கீரை!
அளிசெறி மதுமகிழ் அணிபவர் திருமகள்
ஆடுக செங்கீரை!

(27)

வயலிலே உழவர் இளவேறு பூட்டிய கலப்பை நுனியால் உழுகின்ற சாலில், நீண்ட சங்குகள் கடைசியரின் ஒலியுடன் ஒலியெழுப்பிக் கலப்பையினுடன் தாமும் உழும்.

அப்போது அங்கே இருந்த வாளைமீன்கள் அஞ்சி வெருண்டு ஓடி, மேகம் படிந்த சோலையில் கயல்மீன்களுடன் கூடிக் குதிக்கும். பூக்கள் மலர்ந்து சொரிந்த தண்ணிய தேனானது, உடலில் புள்ளிகளையுடைய வண்டுகள் மரக்கிளை தோறும் கட்டிய கூட்டிலிருந்து வழிகின்ற தேனுடன் சேர்ந்து கீழே ஒழுகும்.

அப்போது ஒருவகை இன்னோசை எழும். அந்த ஓசையானது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் நவிற்றும் ஒலியும், நான்மறை ஓதும் ஒலியும் எழுப்பும் ஏழு சுரங்களுடன் ஒன்றாகக் கலந்து ஒலிக்கும்.

அத்தகைய அழகு மலிந்த புதுவையில் உலகும் உயிரும் தழைக்கும்படி வருகின்ற நங்கையே! இங்கே பிரமன் முதலிய இமையவர்கள் உன் அழகு காணத் திரண்டு வந்துள்ளனர். அவர்கள் கண்டு களிக்கும்படி நீ செங்கீரை ஆடியருள்!

வண்டுகள் செறிந்த தேன் பொருந்திய வகுளமாலை அணிந்த சடகோபன் திருமகளே! நீ மழலைச் சொல்லாடியருள்!

சூடிப் புரிகுழல் கோடித் திடுதொடை
சொல்தமிழ் மாலிகைநல்
சுடர்விடு பஃறலை அரவணை இணைவிழி
துயில்பயில் புகழ்ஆயர்

பாடிச் செல்வர் புனைந்திட அருள்மலி
பட்டர் பிரான்மகளாய்ப்
பஞ்சுரம் இந்தளம் பிலகரி பயிரவி
பந்துவ ராளிதினம்

கூடிக் கூடிப் பெடையொடும் ஆயிர
கோடி சுரும்புஉளரும்
குவளைத் தடமொரு செண்பக மணமலி
கொத்தார் புத்தூருள்

ஆடிப் பூரத் தினில்வரு திருவே!
ஆடுக செங்கீரை!
அழகனும் அப்பனும் அன்பற இன்புடன்
ஆடுக செங்கீரை! (28)

சுருண்ட கூந்தலில் சூடி ஒப்பனை செய்த மலர் மாலையும் சொல்லியருளிய தமிழ் மாலையும், சுடர் விரிகின்ற பலதலைகளைக் கொண்ட ஆதிசேடனாகிய அரவணையில், இருவிழிகளும் மூடி அறிதுயில் கொண்ட புகழையுடைய ஆயர்பாடிச் செல்வராகிய திருமால் அணிந்து கொள்வதற்காக -

அருள் நிரம்பிய பெரியாழ்வார் மகளாகப் பஞ்சுரம், இந்தளம் பிலகரி, பயிரவி, பந்துவராளி என்ற (பண்) இராகங்களை நாடோறும் கூடிக் கூடித் தம் பெடைகளுடன் பாடி அளவில்லாத வண்டுகள் சுழலுகின்ற குவளைமலர்த் தடாகங்களுடன் நறுமண மிக்க செண்பகக் கொத்துகள் நிரம்பிய வில்லிபுத்தூருள், ஆடிமாதம் பூர நாளிலே தோன்றிய திருமகளே! ஆடுக செங்கீரை!

சோலைமலை அழகனும் திருவேங்கடமலைத் தலைவனும் அன்புகூர இன்பத்துடன் ஆடுக செங்கீரை!

வாழ்வார் இழிகுலம் ஆயினும் அழகுறு
வடிவில ராம் எனினும்
மதிஒரு சற்றுஇலர் ஆயினும் வண்மையை
மனதில் உறார் எனினும்

பாழ்வாய் கொடு, "குல பதியே! மதனா!
பண்டிதர் பண்டிதகற்
பகதரு வே!" என அதிமது ரக்கவி
பாடிஅன் னவர்பின்போய்த்

தாழ்வா சகமுடன் உண்டிக்கு உழல்பவர்
தம்மொடு கூடாதே
தளிர்இரு தாழ்புகழ் செல்வம் எமக்குத்
தந்துஉல கத்துஎமை ஆள்

ஆழ்வார் திருமக ளாரே! அன்புடன்
ஆடுக செங்கீரை!
அழகனும் அப்பனும் அன்புற இன்புடன்
ஆடுக செங்கீரை!

(29)

செல்வத்துடன் வாழ்பவர்கள், இழிந்த குலத்தினர் ஆயினும் அழகுற்ற வடிவம் இல்லாதவர் என்றாலும், அறிவு சிறிதளவும் இல்லாதவர் ஆயினும், கொடைத்தன்மை மனத்தில் உறாதவர் ஆனாலும் அவர்களைப் பாழான வாயால், "குலத்துக்கெல்லாம் தலைவனே! அழகில் மன்மதன் போன்றவனே! பண்டிதர்க்கும் பண்டிதனே! வானுலகக் கற்பக மரம் போல் கேட்டதெல்லாம் தருபவனே!"

என்று மிக்க இனிய கவிகளைப் பாடிக் கொண்டு, அவர்கள் பின்னால் சென்று, தாழ்வான சொற்கள் கூறிக்கொண்டு அவர்கள் உண்டி தருபவர் என்று எண்ணி உழல்கின்ற அறிவீனருடன் கூடாமல், தளிர் போன்ற தன் இரு பாதங்களைப் புகழ்கின்ற அருட்செல்வம் எங்களுக்குத் தந்து, உலகத்து எங்களை ஆட்கொண்ட பெரியாழ்வார் திருமகளே! அன்புடன் ஆடுக செங்கீரை! அழகனும் அண்ணலும் அன்புற இன்புடன் ஆடுக செங்கீரை!

கருமுகிற் கணம்நுழைந்து இமிழ்பொழில் அரங்கதாக்
கதலிஇரு புடையும்நிற் பக்-
கதிர்விரித்து எழுதுகிர்க் கொடிபடர்ந்து எதிர்எதிர்
கலந்துபின் னியகற்றை தாழ்ந்து

இருமுகத் தினும்வெளி அடைப்பதைத் தள்ளிஈர்த்து
எழில்மஞ்ஞை பின்புஅகவ வந்து
இந்துஉத யம்செய்ய ஒருமஞ்ஞை வளைமுரல
எகினத்தின் முன்னர்ஆ டல்

பொருமுகத்து எழினிநீத்து ஆடல்ஆ சானுடன்
போந்ததோ ரியமக ளொடும்
பொன்விளக்கு எழமுழவு இரட்டநா டகவனிதை
பூபதிமுன் ஆடல்ஏய்க் கும்

திருமுகத் துறைஅரங் கத்து அமுதின் அமுதமே!
செங்கீரை ஆடியரு ளே!
செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவை!
செங்கீரை ஆடியரு ளே!

(30)

கரிய முகிற்கூட்டம் புகுந்து முழங்குகின்ற சோலைகள் நாட்டிய அரங்கம். நாட்டிய அரங்கின் இருபுறமும் வாழைமரம் காட்டுவர். அதைப்போல் இயல்பாகவே இருபுறமும் வாழைமரங்கள் வளர்ந்திருக்கும்.

அரங்கிற்குப் பின்புறமும் இருபுறமும் மறைப்பு வேண்டு மல்லவா? ஒளிவிரித்து எழுகின்ற பவளக் கொடிகள் படர்ந்து எதிர்எதிராகக் கலந்து பின்னிய கற்றைகள் மறைப்பாகத் தாழ்ந்து, இருபக்கமும் உள்ள இடைவெளியை அடைத்திருக்கும். அந்தப் பவளக்கொடிகளின் அடைப்பைத் தள்ளி ஈர்த்துக் கொண்டு ஓர் அழகிய மயில் பின்புறமாக இருந்து அகவும். அப்போது வெண்ணிலவு தோன்றும்.

மற்றொரு மயில் வந்து அரங்கின் முன் வந்து நடனமாடும். சங்குகள் ஒலியெழுப்பும். முன்னே இருந்து ஓர் அன்னம் கண்டு களிக்கும் இக் காட்சி. கரிய மேகக் கூட்டத்தின் ஒலி முரசொலி. சோலைகள் நடன அரங்கம் கட்டிய வாழைமரம், இயற்கையாகத் தோன்றிய வாழைமரங்கள், ஒளி விரித்து வளரும் பவளக் கொடி கள் அரங்கின் முப்புறமும் அமைத்த மறைப்புகள். பின்புறம் அகவும் மயில், தோரிய மடந்தையாகிய ஆடி முதிர்ந்த (துணை) நடனமங்கை. முரலும் சங்கு, ஆடல் கற்பித்த ஆசான், நிலவொளியானது மேடைக்கு ஏற்றிய விளக்கு முன் இருந்து காணும் அன்னம் அரசன். இத்தகைய காவிரித் துறைகளையுடைய அரங்கத்துக் குடிகொண்ட அமுதுக்கு அமுதே! செங்கீரை ஆடியருள்!

செவ்விய சொற்களால் அமைந்த திருப்பாவை பாடித் தந்த பாவையே! செங்கீரை ஆடியருள்!

ஏற்றிய தரங்கப் பயோததிக் குண திக்கில்
ஏமமால் வரையின்அணி கத்து
ஈண்டிய இருட்பிழம்பு எறிதர, வெயிற்பிழம்பு
எறிகதிர் வெதுப்பவேர் நீர்

வற்றலிற் பரிஅறை பிளந்துஉலவை முனம், மரா
மரம்நிரை தெளிர்ந்துமென் பூ
மல்கிநற வொழுகஒண் முகில்கமஞ் சூல்கொண்டு
வார்புனல் கவிழ்க்கஇகல் கூர்

கொற்றவன் கோட்புலிக் குருளைஆன் முலைஉணக்
கோக்குழக் கன்றும்உழு வைக்
குவிமுலைப் பால்உணக் கண்ணன்வாய் வைத்தவேய்ங்
குழலிசைக்கு இணைஇது எனச்

சிற்றிடைப் பெருமுலைப் பூவைமார் குழைதரச்
செங்கீரை ஆடியரு ளே
செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவை!
செங்கீரை ஆடியரு ளே! (31)

வீசுகின்ற அலைகளையுடைய கடலுக்குக் கீழைத்திக்கில் உள்ள பெரிய மலைகளின் வரிசையால் நெருங்கி இருட்பிழம்பு செறிந்திருக்கும். இது ஒருபுறம். அப் பிழம்பு நீங்கும்படியாக மறுபுறம் வெயிற்பிழம்பை வீசுகின்ற ஞாயிறு வெதுப்புவதால், வேர் உண்ட நீர் வற்றியதால், மரங்களின் அடிப்பகுதி பிளந்து உலர்ந்து பொந்து ஆகி அழியும். மறுபுறம் மராமர வரிசைகள் தளிர்த்து மெல்லிய பூக்கள் நிரம்பும். அப் பூக்களிலிருந்து தேன் ஒழுகும்.

ஒள்ளிய முகில்கள் நிறைந்த சூல்கொண்டு நீண்ட மழையைக் கவிழ்க்கும்.

மாறுபாடு மிக்க வெற்றியும் வலிமையும் கொல்லும் இயல்பும் கொண்ட புலிக்குட்டி, பசுவின் மடியில் பால்குடிக்கும். பசுவின் இளங்கன்று புலியின் குவிந்த மடியில் பால் உண்ணும்.

இந்த இனிய காட்சி கொண்ட சிற்றிடையும் பெரிய முலையும் கொண்ட மகளிர், இக் காட்சி கண்ணன் ஊதிய வேங்குழலிசையால் நேர்ந்தது போலும் என்று மனம் இளகுவர்.

அப்படி அவர்கள் மகிழும்படி செங்கீரை ஆடியருள்! செவ்விய சொல்லாலான திருப்பாவை பாடித் தரும்பாவையே! திருமொழி தந்தவளே! செங்கீரை ஆடியருள்!

"கான்உலாம் முல்லையில் குல்லையைத் துழனியயில்
கழனியில் கமலம், "எனை நீ
காட்டில்நாட் டினில்ஒப்பது அன்று; பொற்புடைய பொற்
கன்னியைப் பெற்றளித் தேன்,

ஞானபூ ரணமாயன் அவயவங் கட்குஉவமை
நாட்டமணி வடம்ஆயி னேன்,
நான்உவமை என்னநீ மணிமாலை ஆகியும்ஓர்
நளினியைப் பெற்றிலா யால்.

ஆனதால்" எனஅவ மதித்ததா யினைவெறுத்து
அந்தரம் வீறுஎய்த வே
ஆயர்பா டிச்செல்வர் வில்லிபுத் தூர்அதனுள்
அகிலமன் னுயிர்தழைப் பான்

தேன்அறாப் பரிமளத் துளபத்து உதித்தநீ
செங்கீரை ஆடியரு ளே!
செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவை
செங்கீரை ஆடியரு ளே! (32)

காடு சூழ்ந்த முல்லை நிலத்தில் கிளைத்திருந்த துழாயைப் பார்த்து, ஓசைமிக்க மருதநிலத்து வயலில் பூத்த தாமரை மலர் இழித்துக் கூறியது:

"ஓ! துளசியே! நீ என்னைக் காட்டிலும் நாட்டிலும் ஒப்பாக மாட்டாய்! எப்படியெனில் அழகிய திருமகளைப் பெற்றுத் திருமாலுக்கு அளித்தேன். அதுமட்டுமா? வாலறிவன் (ஞானபூரணன்) ஆகிய அந்த மாயவன் கண், கை, கால், முகம் முதலிய பல உறுப்புகளுக்கும் உவமை ஆவதை நிலை நாட்டுவதற்காக மதாணி (கவுத்துவ) மணி மாலையும் ஆயினேன்.

"நீ எனக்கு உவமையாக முயன்று மணிமாலை ஆனாய்! அவ்வளவுதான். என்னைப்போல் ஒரு திருமகளை நீ பெற இயலவில்லையே! ஆதலால் நீ எனக்கு எவ் வகையிலும் உவமை ஆகமாட்டாய்!" என்று அவமதித்துப் பேசியது. அதனைத் துளசியால் பொறுக்க இயலவில்லை.

அந்தத் (அவமதித்த) திருமகளின் தாயினை வெறுத்தது துளசி. தாமரை கூறிய வேறுபாடு நீங்கித் தான் பெருஞ்சிறப்புப் பெறுவதற் காக ஆயர்பாடிச் செல்வராகிய ஆலிலைப் பள்ளியான் குடி கொண்ட வில்லிபுத்தூரிலே உலகத்தில் நிலைபெற்ற உயிர்கள் மணம் மிக்க துளசித்தாய் உன்னைப் பெற்றாள்.

துளவத் தாயின் மகளே செங்கீரை ஆடியருள்! செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும் பாவையே, செங்கீரை ஆடியருள்!

நிறைகொண்ட மனதில்உறு பொறைகொண்ட பூதங்கள்
நிலைகொண்ட புலன்ஐந்தின் வாழ்
நெறிகொண்ட புலன்ஐந்து குறிகொண்டு அடக்குவதை
நியமம் அது கொண்டு அடக்கும்

முறைகொண்ட தொண்டர்தம் திறைகொண்ட
கொண்டல், குறு
முயல்கொண்ட மதியினைத் தன்
முடிகொண்ட சோலைமலை குடிகொண்ட இடம்கொண்ட
முதல்வன், திடம்கொண்ட நான்

மறைகொண்ட சிறைகொண்டு உரம்கொண்ட புள்அரசன்
மதிகொண்டு துதிகொண்ட தால்
வாகனம் கொண்டமால் மோகனம் கொண்டருள்
வளம்கொண்டு குழையும்மதி யைத்

திறைகொண்ட வாள்நுதல் பிறைகொண்ட
பெண்ணரசி! செங்கீரை ஆடியரு ளே!
செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவை!
செங்கீரை ஆடியரு ளே!

(33)

அறிவுடைமை மனத்தில் மிக்க வலிமை கொண்ட ஐம்பூதங்களும் நிலையாகக் கொண்ட ஐம்பொறிகளில் வாழ்வன ஐம்புலன்கள். நன்னெறியில் செல்லும் ஐம்புலன்களையும் ஒழுக்கத்தால் (தீய வழியில் செல்லாமல்) அடக்குவதை முறைமையாகக் கொண்டு அடக்குகின்ற இயல்பு கொண்டவர்கள் பாகவதர்கள். அவர்களின் காணிக்கை ஏற்றுக்கொள்ளும் நீலமுகில் மேனியன் திருமால்.

குறிய முயல்கறை கொண்ட நிலவினைத் தன் தலையில் ஏந்தியுள்ளது சோலைமலை. அம் மலையில் குடிகொண்டு அதனைத் தனக்குரிய இருப்பிடமாகக் கொண்ட முதல்வன் அவன்.

வலிமை கொண்ட நான்மறைகளாகிய சிறகுகள் கொண்டு அதனால் திடம் கொண்டவன் கருடன். அக் கருடன் அறிவுகொண்டு போற்றுவதை மேற்கொண்டமையால், அவனை ஊர்தியாகக் கொண்ட

அத் திருமாலிடம் காதல்மயக்கம் கொண்டும் அருளின் வளத்தைக் கொண்டும் வளைந்த இளம்பிறையை வென்று கப்பம் பெற்ற ஒளிநுதலாகிய பிறையைக் கொண்ட பெண் அரசியே! செங்கீரை ஆடியருள்!

செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவையே! இருகை ஊன்றி, ஒருகால் மடக்கி ஒருகால் நீட்டித் தலை நிமிர்ந்து செங்கீரை ஆடியருள்!

போர்ஆடு சமர்முனையின் நேர்ஆடு வார், நிறப்
புண்நீருள் ஆட, முனை யின்
புறம்ஆடு வார்உள்ளம் ஊசல்ஆ டவும், உடல்
புள்ஆடல் காணாத வெம்
சூர்ஆடல் வென்றஅப் பேராடல் வேலினைத்
துறைஆடு கெண்டைஇணை யைத்
துணைஆடும் அஞ்சனச் சேறுஆடு கண்ணினார்
துணைவரொடும் விளையாடும் மெய்
வேர்ஆடல் ஒழிய, நல் நீராடி ஏக, அவர்
மென்னடையும் நின்னடையு மே
வேறுஅல்ல வாம்என்று சேவல்ஊ டியபெடையின்
மெல்அடியின் வீழ்ந்துஉணர்த் திச்
சீராடு திருமுக்கு ளப்புதுவை அபிராமை!
செங்கீரை ஆடியரு ளே!
செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவை
செங்கீரை ஆடியரு ளே! (34)

போர்க் களத்தில், பகைவரொடு நேருக்கு நேர் பொருபவர் தங்கள் மார்பில் ஒழுகும் குருதியில் குளிப்பர். புறத்தில் நிற்போர் போரிடும் வீரர்களின் வலிமை கண்டு கூத்தாடுவர். இவர்களே வெல்வார். இல்லை; இல்லை. அவர்களே வெல்வார் என்று போர்க்காட்சி காண்பவர் உள்ளம் ஊசலாடும்.

மாண்டவர் உடலில் காகம், கழுகுகள் ஊன்உண்டு ஆடாதது கண்ட பேய்கள், அந்த உடலினின்று உயிர்போகவில்லையோ? என்று ஆடிக்கொண்டு சுற்றிவரும். வீழ்ந்து கிடப்பவர் மேல் அப் பேய்கள் தாக்காதபடி வெற்றி வேலினைச் சுழற்றுவர் வீரர். சுழலும் வேல்களையும், நீர்த்துறைகளில் விளையாடும் கெண்டை களையும் ஒக்கின்ற அஞ்சனம் (மையில்)ஆடிய கண்ணையுடைய மகளிர், தம் காதலரொடு கலவி விளையாடியதால் அவர்கள் உடலில் வேர்வை ஒழுகும். அக் காட்சி வேர்வையில் குளிப்பது போல் தோன்றும்.

அந்த வேர்வை போக, நீர்த் துறையில் நீராடி ஏகுவர். மகளிர் நீர் ஆடி விட்டுச் செல்வதை ஓர் ஆண் அன்னம் கண்டது. அருகில் இருந்த பேடையிடம் "இம் மகளிரின் மென்னடையும் உன்னடையும் 'வேறு அல்ல ஒத்துள்ளன" என்றது.

உடனே பேடை, "நீ அம் மகளிர் நடைக்கு என் நடையை ஒப்பிடுவதால், உன் மனம் எனக்கு மட்டும் உரிமையாகாமல், அயலிடத்தும் தாவுகின்றதன்றோ! அதனால் நீ என்னைத் தொடாதே! என்று ஊடியது.

அன்னம் பேடை ஊடியது கண்டு, நெஞ்சு பொறுக்காமல் அதன் ஊடலைத் தீர்ப்பதற்காக அதன் மெல்லிய அடியில் விழுந்து வணங்கி ஊடலை நீக்கிப் பின் அதனுடன் கலவிச் சீராடியது. அத்தகைய திருமுக்குளம் என்னும் பொய்கையைக் கொண்ட புதுவை அழகியே! செங்கீரை ஆடியருள்!

செஞ்சொல் திருப்பாவை பாடித்தரும் பாவையே! திருமொழி தந்தவளே செங்கீரை ஆடியருள்!

பாசம் தழைப்பஇரு வினைதழைத் தேசனன
  பந்தம் தழைத்தசிறி யோர்
பழயபே ரின்பம் தழைத்தவீடு எய்தப்
  பராங்குசன் எனத்தழைத் தே

வாசம் தழைத்துமக ரந்தம் தழைத்துநறை
  வழிய முகை அவிழ்செவ்வி யில்
வாடவா டப்பரிம ளம் தழைத்து ஒளிதழையும்
  மகிழ்மாலை புனைமார்பி னான்

நேசம் தழைத்ததிரு மகளாகி யேகற்பு
  நிலைதழைத்து அருள் தழைத்தே
நிறைதழைத்து உத்தமப் பொறைதழைத் துப் பரம
  நேமம் தழைத்துமுந் நீர்த்

தேசம் தழைத்திடத் தழைதமிழ்ப் புதுவையாய்!
  செங்கீரை ஆடியரு ளே!
செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும்பாவை!
  செங்கீரை ஆடியரு ளே! (35)

உலகப் பற்றுத் தழைப்பதால் நல்வினை தீவினைகள் பெருகி அவற்றால் பிறவித் தளையில் கட்டுண்டனர் அறிவிலிகள். அவர்களுக்குப் பண்டே உரிமையாகிய பேரின்பம் தழைத்த வீடு பெறுவதற்காக, நம்மாழ்வார் தோற்றம் செய்தார்.

மணம் பெருகி மகரந்தம் நிரம்பித் தேன் ஒழுகுகின்ற மொட்டு மலர்கின்ற பருவம் அடைந்து, வாட்டமுறுந்தோறும் நறுமணமும் ஒளியும் பொங்குகின்ற வகுள மலர் மாலையைப் புனைகின்ற மார்பினர் அவர். அவருக்கு அன்பு நிரம்பிய திருமகள் ஆயினாய்! கற்பு நிலையில் உயர்ந்தாய்! அருள் செழித்தாய்! பெருமைக்குரிய பண்பின் நிறையிலும் சிறந்தாய்! மிகச் சிறந்த அடக்கமும் நிரம்பினாய்! தலைமை சான்ற ஒழுக்கமும் கொண்டாய்!

கடல் சூழ்ந்த உலகம் வாழத் தழைக்கின்ற தமிழ்ப் புதுவை ஆண்டாளே! செங்கீரை ஆடியருள்! செஞ்சொல் திருப்பாவை பாடித்தரும் பாவையே! செங்கீரை ஆடியருள்!

பெருமகள் எனத்தவள மலர் மாளி கைக்குஉரிமை
பெற்றகலை மகள், இமய மாம்
பேர்கொண்ட கோதண்ட வேதண்டம் இன்புறப்
பெற்றமலை மகள், துடக் கிப்

பொருமகள் எனத்தகும் சிலைமகள் இசைத்திறம்
புகலும்நிலை மகள்நால் வரும்
புகழ்வரு தலைமகள் எனத்தழைத் தேபுனிதர்
போற்றுதிரு வாழ்மார்ப ருக்கு

ஒருமகள் எனத்தவம் பெரிதுஉடைய நங்கைதிரு
உதரத்தி னுள்குடி புகுந்து
உலகில் வந்து உபநிடதம் ஓதாது உணர்ந்துதமிழ்
உரைசெய்த குருகைமாறன்

திருமகள் எனத்தமிழ் புதுவைவரு பெண் அரசி!
செங்கீரை ஆடியரு ளே!
செஞ்சொல் திருப்பாவை பாடித் தரும் பாவை!
செங்கீரை ஆடியரு ளே! (36)

பெருமைக்கு உரியவள் என்னும்படி மலராகிய மாளிகைக்கு உரிமை பெற்றவள் கலைமகள். இமயமாம் பேர்கொண்டு சிவனுக்கு

வில்லியாகிய மலையரசன் இன்புறும்படி அவனுக்கு மகளாகிய மலைமகள். போர்த் தெய்வம் எனத் தகுதி பெற்ற சிலைமகள் (துர்க்கை) இசைத்திறம் கூறுகின்ற இசை மகளாகிய நிலைமகள் ஆகிய இந்த நால்வரும் புகழும்படி திருவிறக்கம் (அவதாரம்) செய்த தலைமகள் எனத் தழைத்தாய்!

திருவண் பரிசாரத் திருப்பதியில் வாழ்ந்த தூயோர் போற்றும் திருவாழ் மார்பர் என்பவருக்கு ஒரே மகள் என்னும்படி தவம் பெரிதும் உடைய நங்கை நாச்சியாரின் வயிற்றினுட் புகுந்து தாயைத் குடல் விளக்கம் செய்ய உலகில் வந்தவர் நம்மாழ்வார்.

அவர் ஓதாது எல்லாம் உணர்ந்த அறிவின் கொடுமுடி! தமிழ் மறை சொன்ன குருகை மாறர். அவருக்குத் திருமகள் எனத் தமிழ்ப்புதுவை வரும் பெண் அரசியே! இருகை ஊன்றி, ஒருகால் மடக்கி, ஒருகால் நீட்டித் தலை நிமிர்த்து ஆடுக செங்கீரை! செஞ்சொலால் திருப்பாவை பாடித் தரும் பாவையே! திருமொழி தந்தவளே! செங்கீரை ஆடியருளே!

3. தாலப் பருவம்

பிறங்கும் தவளக் கறைக்கவட்டுப்
பிறைக்கோடு உழக்கக் குளிறு திரைப்
பெருநீ ரினைமொண்டு எழுபருவப்
பேழ்வாய்க் கருவி முகில் பிளிற்றி

உறங்கும் அகக்காழ் அகிற் பொதும்பர்
உலவைப் பிறைக்கோட் டையும் உழக்க,
உலப்பில் களிவண்டு இழைத்த இறால்
உக்க நறவ முடன் அமுதும்

கறங்கு புனலுள் கலந்தபல
கவின் சேர் திருமுக் குளத்தினொடும்
காமர் திருமுக் குளம் உளதால்
காதல் துணைஇல் லற்த்தினர் நல்

அறம்கண் டவர்வாழ் புதுவையின் பெண்
அமுதே! தாலோ! தாலேலோ!
அரங்கத்து அமுதம் விரும்பியபெண்
அமுதே! தாலோ! தாலேலோ!

(37)

விளங்கிய வெண்ணிறத்தின யானைத் தந்தங்கள். அவை பகைவரைக் குத்தியதால் குருதிக் கறை படிந்திருக்கும். இரண்டாகப் பிளவுபட்ட பிறைபோன்ற அந்தத் தந்தங்கள், குத்தி உழக்கியதால் ஒலிக் கின்ற கடற்பெரு நீரினை மொண்டு எழுவன பருவ காலத்து முகில்கள். பிளந்த வாயால் கூட்டமான அம் முகில்கள் ஆரவாரம் செய்து உறங்கும் இடம் உள்ளூறுதிவாய்ந்த அகில் மரச் சோலை. அச் சோலையின் மரக் கொம்புகள், பிறையின் நுனியை உழக்கும்.

அதனால் பிறையிலிருந்து அமிழ்தம் ஒருபுறம் ஒழுகிப் பாயும் அம் மதம் கொம்புகளில் அளவில்லாத களிவண்டுகள் கட்டிய தேன் கூடுகள் உடைந்து தேனருவியாகும். மறுபுறம் அகில் மரச் சோலையில் தங்கிய முகில்கள் வானில் ஏறி அமிழ்தம் எனப் பாற்றதாகிய நீரினைக் கொட்டும். அந்த நீர் திரண்டு இன்னொருபுறம் சிற்றாறாகப் பாயும்.

ஆக, நிலா அமுதமும், தேனும், மழைநீரும் தனித்தனியாக ஓடி மூன்று குளங்களாக உருவாகும்.

காதல் துணையோடு நடத்தும் இல்லறத்தினரும் துறவறத்தினரும் வாழ்கின்ற புதுவையின் பெண் அமுதே தாலோ தாலேலோ! அரங்கத்து அமுதம் விரும்பிய பெண் அமுதே! தாலோ! தாலேலோ!

வற்றாக் கரட மதக்கலுழி
வழியக் கடைக்கண் ணினில் வடவை
வழிந்து பொழிந்து புறம்காட்ட
மறம்காட் டுநர்மார் பினை உழுத

முற்றாப் பிறைக் கிம் புரிக்கோட்டு
முடக்கும் தடக்கை வயக்களிற்றை
முழவத் துணைத்தோள் புடைத்து உடக்கி
முழக்கி உழக்கி உயிர்பருகிப்

புற்றாடு அரவிற் பிணைந்து இடித்துப்
பொருமல் லரைக் கொன்று உலப்பில் இகல்
புரிமா துலன் பொன் முடி உதைத்த
பொன்தாள் கற்றுஆ நிரைமேய்த்த

சிற்றா யனைக் கா தலித்தருள் சிற்றா
றிடைப்பெண் அமுதே! தாலேலோ!
சிறைவண்டு இமிர்பூந் துளவு அளித்த
தேனே! தாலோ! தாலேலோ!

(38)

வற்றாத மதப் பெருக்குச் சுவடு பட்டு வழிவது; கடைக் கண்ணிலே வடவைத் தீ வழிந்து நிலத்தில் பொழிவது தம் வலிமை காட்டி எதிர்த்த வர் முதுகு காட்டி ஓடும்படி அவர்கள் மார்பினைக் குத்துவது அது. முதி ராத பருவமுடைய தந்தங்கள் பிறைபோன்று வளைந்து வெண்மையனது; பூண் கட்டியது. அந்தத் தந்தங்களையும் முடக்கும் துதிக் கையையும் உடையது. அத்தகைய வயக்களிறு ஆகிய குவலயாபீடம் என்னும் யானையை முழவம் போன்ற இரு தோள்களால் தாக்கி வருத்தி முழக்க மிட்டுக் கலங்கச் செய்து அதன் உயிர் பருகினான் கண்ணன்.

புற்றிலே ஆடுகின்ற பாம்பைப் போல் உடலில் பிணித்து முழங்கிப் பொருதுகின்ற சாணூரன், முட்டிகள் ஆகிய இரு மல்லர்களைக் கொன்றான். அழியாத பகை புரிந்த மாமன் ஆகிய கஞ்சன் பொன் மகுடத்தை உதைத்த பொன்னடிகளை உடையவன்.

கன்றுகளோடு கூடிய பசுக்கூட்டம் மேய்த்த சிற்றாயன், அவனைக் காதலித்தருளும் சிற்றிடைப் பெண் அமுதே! தாலோ தாலேலோ! சிறகுகளையுடைய வண்டு ஒலிக்கின்ற பூந்துளவு பெற்ற தேனே!தாலோ தாலேலோ!

செந்தா மரைஓ டையுள் நின்று அயலே
திடர்கூர் புளினத்தாய்த்
திவள்பைங் கமுகில் படரும் பவளச்
செக்கர்க் கொடிதான் அக்

கொந்துஆர் கமுகுஉம் பரின் நின்று இம்பர்க்
கொழுகொம் பெனவீழக்
கொடியில் பிறைக்கோடு உழநெக்கு அமுதம்
குதிகொண்டு எழுசால்பால்

மந்தா கினிவீழ் சடையான் இமவான்
மகளோடு உடல் ஒன்றாம்
வகைபெற்று உறையும் கயிலைக் கிரியான்
மண்ணோர் விண்ணோர் எண்

சந்தா டவிசூழ் புதுவைப் பதியாய்!
தாலோ தாலேலோ!
சரதத் திருவே! பரதத் துவமே!
தாலோ தாலேலோ!

(39)

ஒரு செந்தாமரைக் குளம். அதனருகே மேடுபட்ட மணற்குன்று, அக் குன்றினிடத்து நெருங்கி வளர்ந்துள்ளது ஒரு கமுகு மரம்; அம் மரத்தின் மேல் படர்ந்துள்ளது சிவந்த பவளக்கொடி, கொத்தாக்க் காய்த்த அந்த கமுகின் உச்சியினின்றும் கீழே அம் மரத்துக்குக் கொழுகொம்பு போல வீழ்ந்து நிலத்தை, தொட்டுக் கொண்டுள்ளது.

அந்தக் கொடியின் வானத்துப் பிறையின் நுனி குத்துகின்றது. அப்போது அந்தப் பிறை நெகிழ்ந்து அதிலிருந்து அமுதம் குதித்துக் கொண்டு ஒழுகுகின்றது. அவ்வாறு அமுதம் ஒழுகுகின்றமையால், கங்கை விரும்பும் சடையுடைய சிவன் கமுகமரமாகவும், இமவான் மகளாகிய உமை பவளக் கொடியாகவும், இருவரும் ஒருடலாய் உள்ள காட்சிதோன்றும். இக் கயிலை மலைச் சிவனும் மண்ணுல கத்தவரும் விண்ணுலகத்துவரும் எண்ணி வணங்குகின்ற சந்தனக்காடு சூழ்ந்தது புதுவை. அப் பகுதியில் பிறந்தவளே! தாலோ! தாலேலோ!

உரமே வியஎண் பொடுதோல் போர் ஊன்
உடலைத் திடம் என்றே
உண்டி படைத்திப் பண்டிக்கு இரைஇட்டு
உறுதி உறா மாயா

புரமா னதனுள் குடிபுக் கவரைப்
புறம்விட்டு உறுதி உறும்
பூதல மாதவர் தமைவழி பட்டுப்
பொருள்உரை கற்றவராய்த்

திரம்ஆ கியபே ரின்பமது எய்தச்
செந்தமிழ் தேர்புதுவைத்
திருமா நகருள் குடிகொண்டு உறைநின்
திருவடி களில் என்றும்

சரணா கதியென்று அடைவார் அமுதே!
தாலோ தாலேலோ
சரதத் திருவே! பரதத் தவமே!
தாலோ தாலேலோ! (40)

வலிமை வாய்ந்த எலும்பொடு தோல் போர்த்த ஊன் உடலை உறுதிவாய்ந்தது என்று கருதி உண்டிசமைத்து வயிற்றுக்கு இரையிடுவர். இவ்வாறு உறுதி உறாத மாயாபுரம் என்னும் பொய்யுலகினுள் குடிபுகுந் தவரை உறவு கொள்ளாமல் அப்புறம் தள்ளிவிட்டு, மனஉறுதி உற்ற நானிலத்திலுள்ள பெருந் தவத்தவரை வழிபட்டு, அவர் வாய்மொழியும் மந்திரத்திரயம் என்னும் பொருள் பொதிந்த மந்திரத்தின் உட்பொருளையும் கற்று, அதற்குத் தக நின்று, உறுதி ஆகிய பேரின்ப வீடு அடைவதற்காகச் செந்தமிழ் தேர் புதுவைத் திருமா நகருள்ளே குடிகொண்டு வாழும்

தாயே! உன் திருவடிகளிலே நிலையாக முழு அடைக்கலம் என்று அடையும் தொண்டர்க்கு அமுதே! தாலோ தாலேலோ! உண்மையான திருவே! மேலான தெய்வமே! தாலோ தாலேலோ!

பங்கே ருகனொடு கொந்தார் குழல்உமை
பங்கான் எனும் அவரைப்
பற்றிச் சுழல்வீர் நுமது இரு பசையில்
பசை இலை எம்பெருமான்

எம்கே சவனைத் திருவுடை அடிகளை
ஏத்துமின்;இதுவேபே
ரின்பம் தரும், என ஓர் ஒன் பதுபூ
மியினும் திகழ் மும்மைச்

செங்கோல் அதனை நடாத்திய யோகீந்
திரன்என வளர்பெம்மான்
திரைதவழ் பொன்னிக் கோயிலில் அண்ணன்
திருவுளம் மகிழவரும்

தங்காய்! மங்காய்! தண்ணந் துளவு அருள்
நங்காய்! தாலேலோ!
சரதத் திருவே! பரதத் துவமே!
தாலே தாலேலோ! (41)

நான்முகனொடு, கொத்தாக நிறைந்த கூந்தலையுடைய உமாதேவியைப் பங்கில் கொண்ட சிவன் ஆகிய இருவரைத் தெய்வம் என்று பற்றிச் சுழல்கின்ற மாக்களே! நீங்கள் அவர்கள் மேல் கொண்ட இருவகைப் பற்றில் பயன் இல்லை.

எம் பெருமான் ஆகிய எங்கள் ஈடற்றவனை திருவுடை அடிகளை ஏத்துங்கள்! இவ்வாறு ஏத்துவதே, வீடுபேறு (பரமபதம்) தரும் என்று ஓர் ஒன்பது உலகு என்னும் நவ கண்டத்திலும் விளங்குகின்ற மும்மைச் செங்கோல் அதனை (முக்கோலை) நடத்திய யோகிகள் தலைவன் ஆகிய பெருமான்; அலை தவழும் காவிரி சூழ்ந்த பெரிய கோவிலில் அண்ணன் ஆகிய உடையவர் திருவுள்ளம் மகிழவந்த தங்கையே! மங்கைப் பருவத்தினளே! தாலோ தாலேலோ! தண்ணிய துன்பம் அருளிய நங்கையே! உண்மையான திருவே! உயர்வான தெய்வமே! காலோ தாலோ!

"விதியைப் பெருகா ரணனுக்கு இணையார்?
விமலைக்கு இணையார் யார்?
விழலில் சுழல்வீர், நதிகட்கு இறையாம்
விரசைத் துறைமேல்வாழ்

பதியிற்கு இணையாய் ஒருபொற் பதிநீர்
பகர்தற்கு உளதாமோ?
பதியைப் பசுபா சமொடு உற் றிடுவீர்!
பதியுள் புகுவீராய்

மதிகெட்டு உழல்வீர்! மதியைத் தருநான்
மறைகற்று அறியீரால்!
வழுவத் தைவிடீர் " எனும்உத் தமர்மா
மதிபெற் றவராய்வாழ்

ததியர்க்கு உயிரே! புதுவைப் பதியாய்!
தாலோ தாலேலோ!
சரதத் திருவே! பரதத் துவமே!
தாலோ தாலேலோ!

(42)

நான்முகனைப் படைத்து தொகைப் படைப்புக்குக் காரணமான நாரா்யணனுக்கு இணை யார்? அடியாரை ஆட்கொள்ளும்படி புருடகாரம் செய்யும் பெரிய பிராட்டிக்கு இணையானவர் யார்? யார்?

வீணாக ஏதேதோ தெய்வத்தை வழிபட்டுக் கொண்டு சுழற்கின்றவர்களே ஆறுகட்கெல்லாம் தலையாறாகிய விரசை ஆற்றுத் துறைக்கு அப்பால் வாழ்கின்ற திருமாலுக்கு இணையாக ஓர் அழகிய தெய்வம் நீவிர் சொல்வதற்கு உளர் ஆவரோ? பதியைப் பசு பாசமோடு இணைத்துப் பேசுவீர்! இறுதியில் பதியுட் கலப்போம் என்று பேசி மதிகெட்டு உழல்வீர்காள்! அறிவைத் தருகின்ற நான் மறைக் கற்று அறியீர்! இத்தகைய மனக் குற்றத்தை விடமாட்டீர்! என்று உலகினருக்கு வாய்மொழிகின்ற சால்பினராய் மாமதி பெற்றவராய் வாழ்கின்ற தொண்டருக்கு உயிரே! புதுவைப் பதியாய்! தாலோ தாலேலோ! உண்மைத் திருவே! இறைவியே! தாலோ தாலேலோ!

அமர்சொற் பொருளாய் அணிபெற் றுளதாய்
அடைவில் பலபலவாய்
அவையிற் பலபா வினம் உற் றனவாம்
அகலக் கவிதான்ஓர்

கமரிற் கவிழாது உலகத்து எமைஆள்
கருணைக் கடலாய்வாழ்
கலுழக் கொடிவா கனனைத் துறவோர்
கனியைப் புகழ்கோமான்

எமர்கட்கு இறையாம் வகுளப் பெருமான்
இயல்பைப் புகழ்நாவார்
இயலைத் தெளிவார் இசையைத் தெளிவார்
இறையைத் தெளிவாராம்

தமரைப் பெறவாழ் புதுவைப் பதியாய்!
தாலோ தாலேலோ!
சரதத் திருவே! பரதத் துவமே!
தாலோ தாலேலோ! (43)

விரும்புகின்ற சொல் அனைத்தும் உயர்பொருள் பெற்றனவாக இருத்தல் வேண்டும். பலவகை அணிகள் பெற்றிருத்தல் வேண்டும். வகைப்படுத்துவதில் (இலக்கிய வகையில்) பலபலவாய் இருத்தல் வேண்டும். அந்த வகையிலும் தரவு, தாழிசை, விருத்தம் ஆகிய பல பாவினம் உள்ளனவாதல் வேண்டும். எடுத்த பொருளை விளக்கமாகப் பிரித்துக் கூறுவதால் (வித்தார) அகலக் கவியாதல் வேண்டும். இவ்வளவு அழகுகளும் பொருந்தப் பாடும் கவிகளை நிலப்பிளப்பில் அமுதம் ஊற்றி வீண் ஆக்குவதுபோல் புல்லர்கள் காதில் கொட்டக் கூடாது.

உலகத்தில் எம்மை ஆள்கின்ற கருணைக் கடலாய் வாழ்கின்ற கலுழக் கொடியும் கலுழவாகனமும் உடைய பெருமானைத் துறவிகள் உண்ணும் கனியைப் புகழ்ந்த கவிக் கோமான் எங்களுக்குத் தலைவன் ஆகிய வகுளமாலை அணிந்த பெருமான் ஆகிய சடகோபன் திருக் குணங்களைப் புகழ்கின்ற நாவுடையார்களும் இயல் தமிழைத் தெளிந்தவரும் இசைப் பண்களைத் தெளிந்தவரும் இறைவன் இவனே என்று தெளிந்த

வரும் ஆகிய உறவினரைப் பெறும்படி வாழ்கின்ற புதுவைப் பதியாய்! தாலோ தாலேலோ! வாய்மைத் திருவே! எங்கும் நிறைசெல்வியே! தாலோ, தாலேலோ!

'கண்ணன் கருணா கரனொடு மால்செங்
கமலத்து அவர்போலும்
கண்கை கால்செங் கனிவா யினன் அக்
கமலத்து இலைபோலும்

வண்ணம் செறிமே னியன்'என வேதிரு
வாய்மலர் பாடலினால்
வாழ்த்தலின் அக்கம லம்பா டும்பெரு
மான்என் வாழ்குருகூர்

அண்ணலின் ஒருதிரு மகளே! கோயிலில்
அண்ணற்கு ஒருதங்காய்!
அடியவர் வாழ்வுற வருநங் காய்! கற்
றவர்புகழ் தென்புதுவைத்

தண்ணந் துளவு எனும் நற்றாய்! பெற்றாய்!
தாலோ! தாலேலோ!
சரதத் திருவே! பரதத் துவமே!
தாலோ! தாலேலோ!

(44)

கண்ணன் அருளன்பன் (கருணாகரன்) திருமால், செங்கமலத்து மலர் போன்ற கண்ணும் கையும் காலும் செங்கனிவாயும் உடையவன்; அந்தக் கமலத்து இலைபோன்ற வண்ணம் செறிந்த திருமேனியன் எனவே திருவாய் மலர்ந்தருளும் திருவாய்மொழி (வேத)ப் பாடலினால் வாழ்த்துவதால், அக் கமலம் பாடும் பெருமான் என வாழ் குருகூர்த் தலைவரின் ஒரு திருமகளே! கோயிலின் அண்ணற்கு (இராமானுசர்க்கு) ஒரு தங்கையே!

அடியவர் வாழ்வுற வருகின்ற நங்கையே! கற்றவர் புகழ்கின்ற தென் புதுவையில், குளிர்ந்த அழகிய துளவு எனும் நற்றாய் பெற்றவளே! தாலோ தாலேலோ! மெய்மைத் திருவே! அங்கிங்கெனாதபடி எங்கும் உள்ளவளே! தாலோ தாலேலோ!

வளமைத ழைத்தவள் இளமைத னக்கு இசை
வடிவு ஒரு வர்க்கு இலையாம்
வதனம்அ தற்குஇணை மறுஅறு சித்திர
மதியம்எ னத் தகைசால்

அளகம்அ தற்குஇணை புயலது எனத்தவம்
அவைபெற வைத்ததுபோல்
அழகுபெ றப்பொலி திலகநு தற்கு இணை
அவிர்பிறை; கச்சுஅணிவார்

களபமு லைக்கு இணை கமலமு கைத்துணை
கயல்கள்வி ழிக்கு இணையாம்
கடலின்உ தித்துஎழும் அமுதம்பொ ழிக்குஇணை,
கதிர்நகை ஒப்பதுவே

தளவம்எ னத்தவம் அவைபெற வைத்தனை!
தாலோ தாலேலோ!
சதுமறை யைத்தெரி புதுவையுள் உத்தமி!
தாலோ தாலேலோ! (45)

வளமை மிகத் தழைத்தவள், இளமை தனக்கு இசைந்த வடிவு வேறு ஒருவருக்கும் இல்லையாம்.

முகத்துக்கு இணை மறு அற்ற அழகிய மதியம் ஆகும் எனத் தகை சான்றவள். குழலுக்கு நிகர் முகில் ஆகும் எனத் தவம்பெற மேலே சொன்ன பொருள்களை வைத்ததுபோல், அழகுபெறும்படி பொலிகின்ற திலகம் அணிந்த நெற்றிக்கு இணை, பிறை ஆகும். மார்பாடை (இரவிக்கை) அழகியவார் அணிந்த கலவைச் சந்தனம் பூசிய முலைக்கு இணை, தாமரை மொட்டு இரண்டாகும். கயல்மீன்கள் கண்களுக்கு இணையாகும்.

கடலில் உதித்து எழுந்த அமுதம் மொழிக்கு இணையாகும். ஒளி பொருந்திய பல்லுக்கு நிகராவது முல்லை மொட்டு என்று கூறும்படி மேலே சொல்லியவற்றைத் தவம் பெற வைத்தவளே! தாலோ தாலேலோ!

நான்மறைகள் தெரிந்த புதுவையுள் மேன்மையளே! தாலோ! தாலேலோ!

அளைசெறி வளைதவழ் கடல்கெழு திடல்விளை
அமுது எழும் அமுதுடன்வாழ்
அரவணை விழிதுயல் அமுது இரு நதியுள்
அரங்கத்து அமுது எனவே

முளைமதி நதிபதி சடிலியும் முளரியுள்
முதல்வனும் அடிதொழவாழ்
முதல் இரு புயவரை யினும் இரு செவியினும்
முழுகிய தொடைஎனலாய்க்

கிளையொடு கிளைகளி அளிநறை தெரிகில
கிளைஏழ் பிலகரிகைக்
கிளைஇந் தளம்நை வளமுழை தேசாக்
கிரிகுச் சரிபாடத்

தளைஅவிழ் நறுமலர் மாலிகை தருவாய்!
தாலோ! தாலேலோ!
சங்கத் தமிழ்மா லிகையது சூடித்
தருவாய்! தாலேலோ!

(46)

சேறு செறிந்த சங்குகள் தவழ்கின்ற கடலில் மல்கிய மேட்டில் விளைந்த அமுதில் எழுகின்ற அமுதுடனே வாழ்கின்றவன், அரவணையில் விழிதுயில் அமுது (திருமால்). இரு ஆறுகளிடையேயுள்ள அரங்கத்து அமுது அவன் என்றே, முளைத்த இளமதியும் கங்கை ஆறு பதித்த சடையுடைய சிவனும் தாமரை மலரில் வாழ் நான்முகனும் அடிதொழ வாழ்கின்ற முதல்வன். தோளாகிய மலைகள் இரண்டிலும் இரு காதுகளிலும் பதித்த பூமாலைபோலத் தம் கூட்டத்துடன் களி கொண்ட வண்டுகள் தோன்றக் கண்டு, தேன் இருக்கும் இடம் தெரிகிலவாகி இசை கிளைகின்ற ஏழு பண்கள் ஆகிய பிலகரி, கைக்கிளை, இந்தளம், நைவளம், உழை, தேசாக்கிரி, குச்சரியைப் பாடுகையில் மொட்டு விரிந்த நறுமலரால் கட்டியமாலிகை சூடித் தருபவளே! தாலோ! தாலேலோ!

விழுமி தெனஎழு தரிய மறைமொழி
விதியை மதிபுணர் நிறையின் இறைநிலை
விரத முடன்உணர் சரதன் எனும் அயன்
வானா டாள்வான் வானோரால்

விழுது புரைஇரு பதுகை மதுகையின்
விடையர் புலிஅதள் உடையர் நதிமதி
விரவ அரவுஅணி சடிலர் வடிசுடர்
வேலோ சேலோ வாளோகூர்

விழிகள் எனும் உமை அமையொடு அமைதழை
வெளிய மலைகளை களியன் இடர்செய
வெருவி இடர்களை களைகண் எவர்என
ஆராய் வான்ஓர் சார்வாராய்

விசைய எழுபரி இரதம் நடவிய
வெயிலும் இருள்கடி அமுத கிரணனும்
வெளியில் வலம்வரு சிகர வடவரை
மீதே போய்ஆ ராய்வாராய்

இழுகும் இணர்நிணம் உதிரம் ஒழுகிய
இரவு பகல்மிளிர் பருதி வளைவலம்
இடம துறஅரி அமளி யதன்மிசை
ஏறா வேறோ ராதேதான்

எமையும் வழிஅடி மைகொளும் ஒருதிரு
இருகை ஒருபதம் இளகு நிலமகள்
இருகை ஒருபதம் வருட விழிதுயில்
மாயா மாயா! தாதாவே!

இறைவ! நினதடி இணைகள் சரண்என
இமிழும் எறிதிரை அமுத உததியின்
எளிதின் முறையிட அபயம் அருளிய
தேவா! ஈரேழ் பாரோர்தாழ்

இனிய தசரதன் மதலை எனஇரு
மகளும் இறைவனும் இதயம் மகிழ்தர
இளையர் வளைஅகி சுதரி சனம்அவை
தாமே யானார் நீர்சூழ்பார்

உழுத அலம்அருள் சனகன் மகளுடன்
உசித மனையறம் அதனில் வளர்வுழி
உரைசெய் வினைமர வுரியொ டகலிய
காடே நாடாய் வாழ்வாராய்

உறையும் அளவினில் இறைவி பிரிதலும்
அனுமன் உறவொடு கவிகள் அரசன
துறவும் உதவலின் நரலை அணைசெய்து
காலா ளோடே மேலானாய்

உலகம் நலம்பெற நிருதர் குலம்அற
உயிரின் ஒருகணை உதவி வினைஅற
உணர்வொ டுடல்உயிர் ஒருவர் எனநிகழ்
பூமா தோடே தேர்மீதாய்

உரிய திருநகர் மருவி நவமணி
மவுலி பரதன்அ துவகை யொடுபுனை
ஒருவர் அருகமை இருவர் எனும்அவ
ரோடே ஆறா டாவீழ்வார்

புழுகின் முழுகிய களப ம்ருகமத
　　புளக முலைமுகில் அளக வனிதையர்
புளின மிசையிடு கலைக ளவுகொடு
　　போனார் ஆனா நோயோகூர்

புயல்கள் துளிபர விடியின் முடிவிழு
　　பொழுதின் அலம்வரு நிரைகள் நிலைகளர்
பொதுவர் களிதர மலைய திடுகூட
　　யாஆ வேறாய் வாரார்தும்

புதல்வர் வடமலை முதல்வர் நதியிடை
　　பொறிகொள் கணபண அரவின் இடைதுயில்
புனிதர் குழகுஅமர் அழகர் எனஅழை
　　கோதாய்! தாலோ! தாலேலோ!

புணரி தனில்எழும் அமுதம் உதவிய
　　புதல்வி! மணம்மலி துளவம் அருளிய
புதுவை நகர்வரு முதல்வி எனவளர்
　　தாயே! தாலோ! தாலேலோ! (47)

எழுதற்கு இயலாத எழுதாக்கிளவி மொழிகின்ற ஒழுக்கத்தை மேலான தென்று மனத்தில் பொருத்திய நிறையினால் இறைவன் மெய்ப் பொருளை (தத்துவத்தை) நோன்பு (விரதத்து)டன் உணர்ந்த சரதன் எனும் அயனும் வான் நாடு ஆறும் இந்திரனும் தேவர்களோடு கூடினர்.

ஆலமரத்தின் விழுதுகள் போன்ற இருபது கைகளின் வலிமையன் இராவணன்.

எருது வாகனமும் புலித்தோல் ஆடையும் உடையவன் சிவன்; கங்கை ஆறும் மதியும் கலக்கும்படி பாம்புகள் அணிந்த சடையுடையவன்; வடித்துச் செய்த ஒளிகொண்ட வேற்படையோ? சேல்மீனோ? வாளோ? கூரியகண்கள் எனும் உமை அம்மையுடன், மூங்கில்கள் தழைத்த வெள் ளிய மலையை இடந்து இடர் செய்தலால், அச்சமுற்ற இந்தத் துயரத்தைக் களைகின்ற பற்றுக்கோடு யார் என்று ஆராய்வதற்குச் சிவனையும் ஒரு சார்பாக அழைத்துக் கொண்டனர்.

விரைவுடைய ஏழு குதிரைகள் பூட்டிய தேர் செலுத்திய கதிரவனும், இருளைக் கடிந்தோட்டுகின்ற அமுதக் கதிர்களையுடைய வெண்ணிலவும், வானில் வலமாக வருகின்ற கொடுமுடியுடைய வட மலையின் மேலே போய், இராவணன் செய்யும் துன்பத்தை எவ்வாறு தீர்ப்பது என்று ஆராய்வார் ஆயினர்.

தடவுகின்ற தீத்தழல் போல் சுடுகின்ற கொழுப்பும் குருதியும் ஒழுக, இரவும் பகலும் ஒளிர்கின்ற ஆழி (சக்கரம்) சங்குகளை வலப்புறமும் இடப்புறமும் பொருந்த அணிந்த பாம்புப் பள்ளியின்மேல், ஏறி வேறு நினைவு நினையாமல், துயில் கொள்ளும் திருமாலிடம் சென்றனர்.

"சிறியோம் ஆகிய எம்மையும் வழிவழி அடிமைகளாகக் கொள்ளும் ஒப்பற்ற பெரியபிராட்டி தன் இரு கைகளால் ஒரு திருவடியையும் மனம் இளகுகின்ற நிலப் பிராட்டி தன் இருகைகளால் மறு திருவடியையும் வருடக் கண் துயில்கின்ற அழியாத மாயச் செயல்களை உடையவனே! கேட்பன எல்லாம் தரும் வள்ளலே!

இறைவனே! நின் திருவடிகளுக்கு யாம் அடைக்கலம்" என்று ஒலிக்கின்ற அலை வீசுகின்ற திருப்பாற் கடலில் கண்டு எளிதாக முறையிட்டனர்.

அவ்வாறு முறையிட்ட தேவர்க்கு அடைக்கலம் அருளிய தேவனே, பதினான்கு உலகத்தாரும் வணங்குகின்ற இனிய தசரதன் மகன் எனத் தோன்றி, சீதையாகிய திருமகள், பூமியாகிய நிலமகள் ஆகிய இருமகளிரும் தசரதனும் மனம் மகிழும்படி, சங்கும் ஆதிசேடனும் சகடமும் தம்பியர் மூவராக உதித்தனர்.

கடல் சூழ்ந்த உலகில் உழுத கலப்பை அருளிய சனகன் மகளுடன் இல்லறம் நடத்துகின்ற காலத்துத் தாயாகிய கைகேயி சொல்லின்படி பிறவிப் பணிக்காக மரவுரி தரித்து பரந்த காடே நாடாக வாழ்பவராக வாழும் நாளில், சீதையைப் பிரிந்தாய்!

பின் அனுமன் நட்பொடு குரங்குகளின் அரசனாகிய சுக்கிரீவன் உறவும் உதவியாகக் கொண்டு கடலை அணை கட்டி, குரங்குகளாகிய காலாட் படையொடு அப் படைக்குத் தலைவனாக இலங்கை சென்றாய்!

உலகம் நலம்பெறும் பொருட்டும், அரக்கர் குலம் அழியும் பொருட்டும் அரக்கர் உயிர்மேல் ஓர் அம்பை ஏவினாய்! போர் முடித்து, உணர்வோடு கலந்த உடலும் உயிரும் வேறல்லர். ஒருவரே என்னும்படி காதல் கூர்ந்த பெரிய பிராட்டியாகிய சீதையோடு பூத்தேர் மேல் உரிய திருநகர் அயோத்தியை அடைந்தாய்! ஒன்பான்(நவ)மணி பதித்த

திரு முடியும் பரதனது மகிழ்ச்சிக்காகப் புனைந்து கொண்டாய் ஒப்பற்ற வனே!

துணைவியராக அருகே இருந்த உருக்குமணி சத்தியபாமை ஆகிய இருவரோடு கூடி, புனுகில் முழுகிய கலவையாகிய மான்மதம் பூசிய பூரித்த முலைகளும் முகில் போன்ற கூந்தலும் உடைய ஆய்மகளிர், ஆற்றில் நீராடிக் குதித்தார்கள்.

அப்போது அவர்கள் மணற்குவியலின் மீது வைத்த உடைகளைத் திருடிப் போனாய்!

அதனால் நீங்காத துன்பமே மிகுந்த வருந்தினர் அப்போது முகில் களின் துளி, பரவுகின்ற இடிபோல உச்சியில விழுந்தது. அப்போது துய ருள்ள ஆ (பசு)நிரைகளும் என் செய்வதென்று அறியாது நிலைதளர்ந்த இடையரும் மகிழ்வு கொள்ள, கோவர்த்தன மலையை மழையைத் தடுக்க இடுகின்ற குடையாகப் பிடித்துக் கொண்டு, ஆ(பசு)க் களைப் பிரிந்து வேறாக வாராதவர்களாகிய இடையர் குலப் புதல்வனே! வடமலை முதல் வனே! காவேரி நடுவிலே கூட்டமாகிய படங்களையுடைய அரவின் மேல் துயின்ற புனிதனே!

இளமை அமைந்த அழகனே! என அழைக்கின்ற கோதையே! தாலோ தாலேலோ!

கடலில் எழும் அமுதம் பெற்ற புதல்வியே!

மணம்மிக்க துளபம் அருளிய புதுவை நகரில் பிறந்த முதல்வி என வளர்கின்ற தாயே! தாலோ தாலேலோ!

4. சப்பாணிப் பருவம்

கவளக் கரிஉரி உடலைப் பொதிநதி
கட்டுச டைக்காடன்
கமலத்து அயனொடு கருதிச் சுருதிகள்
கட்டளை யிற்பாடத்

தவளத் தனிநிற அரவில் பதிபர
தத்துவ நற்சோதி
சரணத் துணைநடி கதிபற் றியசதி
தப்புஅற மெய்ப்புஆகப்

பவளக் கொடிமடு வினைவிட்டு அகழ்செறி
பச்சிலை யுள்சோலைப்
பணைபுக்கு ஒளிரும் மின் முகிலுள் துழவிய
பத்தியை ஒப்பாகும்

குவளைத் தடம்மலி புதுவைத் திருமகள்!
கொட்டுக சப்பாணி!
குயிலைப் பழிமொழி அமுதத் திருமகள்!
கொட்டுக சப்பாணி!

(48)

கவள உணவுண்ணும் யானைத் தோலால் உடலை மறைத்தவன், கங்கையைப் பிணித்த சடைக்காட்டினன் ஆகிய சிவனும், தாமரை மலரில் வீற்றுள்ள அயனும், மனத்தால் எண்ணி மறைகளை முறையாகப் பாடி வணங்க, ஒப்பற்ற வெள்ளை நிற ஆதிசேடன் மேல் மணிபதித்தாற் போன்று விளங்கி செம்பொருள்-எங்கும் நிறை இறைமை (பரதத்துவம்) நானே என்று காட்டுகின்ற மெய்ம்மைத் தத்துவத்தின் நற் பேரொளி.

இரு திருவடிகள் நடிக்கின்ற விரைவு கொண்ட தாள ஒத்துத் தப் பாமல் மெய்ப்புடையதாக (ஒத்ததாக) அமையும்படி, கண்ணன் காளியன் என்ற பாம்பின்மேல் கூத்தாடிய நீர் நிலை போன்ற பொய்கையிலுள்ள பவளக்கொடி. அந்த மடுவாகிய நீர் நிலையைவிட்டு நீங்கி, குளங்கள் செறி ந்த சோலையின் பசிய இலைகளினுள்ளே மூங்கிற் புதரில் புகுந்து அதன்

உச்சியில் முகிலினூடே ஒளிரும் காட்சி, மின்னல் ஒன்று கொண்டலி டையே எதையோ வரிசையாகத் தேடுவது போன்றிருக்கும்.

அத்தகைய குவளை மலர்கள் மலிந்த புதுவைத் திருமகளே! ஆண்டாளே! கை கொட்டுக!

குயிலைப் பழிக்கின்ற (வென்ற) மொழியையுடைய அமுதத் திருமகளே ஆண்டாளே! கை கொட்டுக!

முதலைக்கு இடர்உற மதவெற்பு இடர்அற
முற்றவி சைத்துஓடி
முடுகிச் சுடர்விடு திகிரிப் படைதொடும்
முத்தன்ம தித்துஓதும்

மதலைக்கு இடர்இழை வயிரத்து இரணியன்
எற்றும லைத்தூணின்
வரும்உத் தமமுழு முதலைத் தமதுஉளம்
வைத்ததி றத்தோடும்

திதலைப் பணைமுலை புளகித் திடநடி
சிற்றிடை பெற்றார்மெய்த்
திரம்உற் றிடமொழி மறையிற் பொருள்உரை
திக்கில்உ றச்சோலைக்

குதலைக் கிளிமொழி புதுவைத் திருமகள்!
கொட்டுக சப்பாணி!
குயிலைப் பழிமொழி புதுவைத் திருமகள்
கொட்டுக சப்பாணி! (49)

யானையின் காலைக் கவ்விய முதலைக்குத் துன்பம் நேரவும், மதமலை போன்ற யானைக்குத் துன்பம் தீரவும் முழு விரைவுடன் ஓடி சுடர் விடு, ஆழி (சக்கர)ப்படையை விரைவாகக் கையாண்ட வீடு பேறளிப்பவன்.

இறைவனைப் புகழ்ந்து பேசிய மகனுக்குத் தீங்கு இழைத்த மிக்க சினம் கொண்ட இரணியன் எற்றிய மலைபோன்ற தூணிலிருந்து ஆளரியா (நரசிம்மமா)கத் தோன்றிய மேன்மையான முழுமுதல்வனைத்

தம் உள்ளத்தில் வைத்த இயல்பினர் ஆய்ச்சியர்கள். அவர்கள் இறைவனது செயற்கரிய செயல்களை எண்ணி எண்ணி ஆடுவார்கள். அப்போது கண்ணன் மேல் வைத்த காதலால் பசலை பாய்ந்த பணைத்த முலைகள் புள் கமுறும் முலை பருப்பதால் அச்சுமை தாங்காமல் இடைமெலிந்து சிறுகும்.

அத்தகைய சிற்றிடையைப் பெற்ற ஆய்ச்சியர், உண்மை நிலை பெற்றிட மொழிகின்ற மறைகளின் பொருளை ஓதிக் கொண்டே ஆடுவர். அவர்கள் ஓதுகின்ற மறையோசை திசை எங்கும் பரவும்.

அங்குச் சோலைகள் பல இருக்கும். அச் சோலைகளிலே கிளிகள் பல மழலை மொழி பேசுவன.

ஆய்ச்சியர் பாடல்களைக் கற்றுக் கொண்டு அந்தக் கிளிகள் தங்கள் மழலை கலந்து அப் பாடல்களைப் பாடும்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த புதுவைத் திருமகளே! சூடிக் கொடுத்த சுடரே! கைகளைக் கொட்டுக!

இனிமையால் குயிலைப்பழிக்கின்ற மொழியை உடைய அமுதத் திருமகளே! ஆண்டாளே! கைகளைக் கொட்டுக!

வங்கக் கடல்பாணி தனைஅடக் கியபாணி
மலயப் பொருப்புஆணி நூல்
மரபில் தரும்பாணி யைப்பெற்ற முற்பாணி
வாழ்வுபயில் கீதநடை சார்

அங்கத் ததாய்ஒருவர் இருபாணி யால்எழுத
அரியதாய் ஒருபாணி யால்
அவிநயம் பெறமொழிந் தருள்சுருதி உட்கொண்ட
அருண்மாறர் பாமாலை பெற்று

எங்கட்கு அமைந்தஇரு பாணிஅஞ் சலிசெய்ய
இரிகா விரிப்பாணி யால்
இணைமாலை பெற்றுளார் இன்புறப் பூமாலை
ஈந்ததொடு பாமாலை யாய்ச்

சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும்பாவை!
சப்பாணி கொட்டிஅரு ளே;
சததளக் குமுதத்தின் மழலைமென் பாணியாய்!
சப்பாணி கொட்டிஅரு ளே!

(50)

வங்கக் கடல் நீரை அடக்கிய உள்ளங்கையையுடைய மலய மலையில் அகத்திய முனிவன் அருளிய இலக்கணங்கட்கு எல்லாம் அடிப்படையாகத் தோற்றிய அகத்தியம் என்னும் நூலின் மரபில் தருகின்ற தன்மையைப் பெற்றது திருவாய்மொழி. அது முதன்மையான பழச்சாறு போன்றது. முற்பாணி (முதல்வேதம்). என்றைக்கும் அழியாது வழங்கி வருவது. சாம வேதத்தின் நடையைச் சார்ந்த உறுப்புகளை உடையது. ஒருவர், இரு பொருள்படும் சொல்லாய் மாற்றி எழுத இயலாதது. ஒரு தன்மையாக அணி பெறும்படி மொழிந் தருளியது. மறை பொருளை நுட்பமாக ஆராய்ந்து முடிவு கண்ட அருளுடைய சடகோபர் பாமாலை அது.

அப் பாமாலையைப் பெற்று, எங்களுக்கு அமைந்த இரு கைகளால் வணக்கம் செய்யும்படி, இருபிரிவாக விலகிய காவிரி நீரால், இணைந்த மாலை பெற்றுள்ள அரங்கர் இன்புறும்படி பூமாலை சூடிக் கொடுத்தாய்! அதுமட்டுமா! பாமாலை எனச் சங்கத் தமிழ்ப் பாடலும் பாடித் தந்த பாவையே! ஆண்டாளே! கைகளைக் கொட்டி விளையாடு!

நூற்றிதழ்க் குமுதத்தினின்று ஒழுகும் தேன்போன்ற மழலை மென் சொல்லினாய்! கோதையே! கைகளைக் கொட்டி விளையாடு!

முப்பாணி முற்றிய வளாகத்து மாவலி
முனம்சென்று வாமனம தாய்
மூவடி நிலம்தரு கெனப்புகர் தடுப்பவும்
முயற்சியில் பெய்தவண் மைக்

கைப்பாணி யைக்கொண்டு மூதண்டம் அளவிடு
கழல்பாணி தன்னைஈ சன்
கட்டழகு உடைத்தலைப் பாணிஎன வைப்பித்த
கண்ணன்வின் மிசைவிரசை யாம்

அப்பாணி யைக்கடந்து உம்பராய் நிலைபெற்ற
அந்தாம முதல்வன்மேல் நாள்
ஆடகன் உரம்கிழித் திட்டஅல் லியம்நடத்து
அப்பாணி எய்தஅடி யேம்

சப்பாணி கொட்டும்அப் படிதொடி தழங்கநீ
சப்பாணி கொட்டிஅரு ளே;
சங்கத் தமிழ்ப் பாடல் பாடித் தரும்கோதை!
சப்பாணி கொட்டிஅரு ளே!

(51)

முக்கடல் முற்றுகையிட்டதுபோல் சூழ்ந்த நிலப் பரப்பிலே மாவலியின்முன்பு சென்று, வாமன வடிவாகி மூவடி நிலம் தருக என்றான் திருமால். அப்போது தாராதே! என்று மாவலியை அவன் அமைச்சன் வெள்ளி தடுத்தான்.

அதை மாவலி பொருட்படுத்தவில்லை. தன் விருப்பப்படி நீர் வார்த்துப் பெய்த வள்ளன்மைக்கு அடையாளமான மாவலியின் கையிலிருந்து ஒழுகிய நீரினால் மகிழ்ந்தான். அந்த மகிழ்வு உள்ளடங் காமல் அவன் உருவம் வானளாவ உயர்ந்தது. அந்த உருவம் கொண்டு பேருலகை அளவிட்டான். அளவிட்ட திருவடிகளை நான்முகன் விளக் கினான். விளக்கிய திருமாலின் அடி நீரைச் சிவன் கட்டழகுடைய தலைப்பாணி (தலைநீர்) என்னும்படி வைப்பித்தான் கண்ணன்.

விண் மீது விரசை ஆறாகிய அந்த நீரினைக் கடந்து இவ் உலகத்து முத்தர்கள் தேவர்களாய் நிலை பெறுவது பொன்னுலகம் (பரமபதம்) அதற்குத் தலைவன் கண்ணன். அவன் முற்காலத்தில் இரணியன் மார்பு பிளந்து ஆடிய அல்லியக் கூத்தை ஆடுவதற்காக அடியேம் ஆகிய நாங்கள் இருகை இணைத்துக் கொட்டியது போல, முன்கை வளையல் ஓசையெழுப்பும்படி ஆண்டாளே! நீ கைகளைக் கொட்டி அருள்!

சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும் கோதையே! சூடிக் கொடுத்த சுடர் கொடியே! கைகளைக் கொட்டி அருள்!

அகரமுதல் னகரஇறு வாய்உயிர்மெய் குற்றுஆய்தம்
ஆதிஈறு எனவும்முதல் சார்பு
அக்கரம் அவைக்குஇலக் கணமும்ஓர் ஆறிரண்டு
ஆம்எனவும் ஒலிஎழுத் தால்

புகலுநற் சொற்கள்இரு திணையின்ஐம் பாலொடு
புணர்ந்துபெயர் வினைகளா கிப்
பொற்புறும் வெளிப்படை குறிப்புஎனவும் ஒன்றுதொடர்
பொதுஎனவும் முற்றுஎச்ச மாப்

பகர்தரும் தொகைதொகா நிலையின்அடி
தொடையொடும்
பா,ப்பா, இனம்பெற்ற தாப்
பண்புடைப் பொருள்இரு வகைத்ததாய் நூலொடு
பயின்றுஉத்தி வண்ணம்அணி சால்

சகலகலை தெரிநிபுணர் புகழ்தமிழ்ப் புதுவையாய்!
சப்பாணி கொட்டிஅரு ளே!
சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும்கோதை!
சப்பாணி கொட்டிஅரு ளே! (52)

அகரம் முதலாக னகரம் இறுதியானவை உயிரும் மெய்யும் ஆகியன.ய உயிர்மெய், ஆய்தக் குறுக்கம், முதலில் வரும் எழுத்து, ஈற்றில் வரும் எழுத்து, முதலியன முதல் எழுத்து சார்பெழுத்து எனவும் படும். இங்கே காட்டிய அவற்றுக்கு இலக்கணம் பன்னிரண்டு ஆகும்.

எண்பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரைர முதல் ஈறு இடைநிலை போலி என்றா பதம் புணர்பு எனப் பன்னிருபாற் றதுவே என்பது பன்னிரு வகையின் பெயர் சுட்டும் நூற்பா.

வரி எழுத்து ஒலியெழுத்து ஆகிய இரண்டுவகை எழுத்து உண்டு. அவற்றால் சொல்லும் சொற்கள், உயர்திணை அஃறிணை என இரு திணையில் வரும். ஆண், பெண், பலர், அது, அவை என ஐம்பாலாகும். பெயர்ச்சொல், வினைச்சொல் எனச் சொற்கள் இருவகைப்படும். அச் சொற்கள் சுட்டும் பொருள் வெளிப்படை, குறிப்பு என இருவகையாம். அவை தொடர்மொழி, பொதுமொழி எனவும் முற்று, எச்சம் எனவும் படும். தொகைநிலை, தொகா நிலை எனவும் இரு வகையாகப் பிரியும்.

செய்யுளில் எழுத்து அசை சீர் தளை அடி தொடை என உறுப்புகளும், வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா என

நால்வகைப் பாக்களும், தரவு, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்களும் ஆகிவரும். அகம், புறம் எனப் பொருள் இலக்கணம் இரு வகைப்படும். நூலுடன் பயின்று உத்தி, வண்ணம் அணிசான்ற பல கலைகளும் தெரிந்த நுண்ணியர் புகழும் தமிழ் வழங்கும் புதுவையாய்! கைகளைக் கொட்டி அருள்! சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும் கோதையே! ஆண்டாளே! சப்பாணி கொட்டி அருள்!

நேயத் துடன்பொன் கொழித்துஎறி திரைப்பொன்னி
நிலைபெறும் அரங்கத்து வாழ்
நிமலன்முதல் ஐவருக்கு ஒருதரம், மகிழ்த்தொடையால்
நீள் மார்பினர்க்குஒரு தரம்,

காயத் திரிக்குஒரு தரம்,முண் டகத்தில்எண்
கண்ணன் தனக்குஒரு தரம்,
கற்றவர் புகழ்ந்தருள் பராசரர் வியாதர்உள்
களிகொள்வ தற்குஒரு தரம்,

ஆயத் துடன்பரவு கோபால மங்கையர்கள்
அனைவருக் கும்ஒரு தரம்,
அன்பினொடு பல்லாண்டு உரைத்தநின் தாதையுடன்
அழகுறப் பெற்றதுள பத்

தாயருக்கு ஒருதரம், எமக்குஒரு தரம்நினறு
சப்பாணி கொட்டிஅரு ளே!
சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும்கோதை!
சப்பாணி கொட்டிஅரு ளே!

(53)

திருமால் தன்னிடைப் பள்ளி கொண்டமையால் மிக்க அன்புடன் பொன்னைக் கொழித்து வீசும் அலைகளையுடைய காவிரி ஆறு நிலை பெறுகின்ற அரங்கத்து வாழ்கின்ற அரங்கன் முதலிய ஐவருக்கு ஒரு முறையும், மகிழம் பூ மாலை அணிந்த நீள் மார்பினருக்கு ஒரு முறையும், காயத்திரி மந்திரத்தின் அதிதேவதைக்கு ஒரு முறையும், தாமரை மலரில் வீற்றுள்ள எண் கண்ணன் ஆகிய நான்முகனுக்கு ஒரு முறையும், கற்றவர் புகழ்ந்தருள்கின்ற பராசரர், வியாசர் ஆகியோர் மனம் மகிழ்வதற்கு ஒரு முறையும்,

தோழியர்களுடன் துதிக்கும் கோபால மங்கையர்கள் அனைவருக்கும் ஒரு முறையும்,

அன்புடன் பல்லாண்டு பாடியநின் தாதையுடன் அழகுற உன்னைப் பெற்ற துளபத் தாயருக்கு ஒரு முறையும்,

எங்களுக்கு ஒரு முறையும் நின்று கைகளைக் கொட்டி அருள்! சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும் கோதாய்! கைக்ளைக் கொட்டி அருள்!

மண்ணகத் தினில்எய்து மானிடப் பிறவியை
மதித்துமறை முதலாய நூல்
வழுவுஅறக் கற்றுமதி நுட்பம்எய் தினராகி
மாதாபி தாநித்தர் வாழ்

விண்ணகத் தினர்என்று அறிந்துவாழ் நாளில்ஓர்
வீழ்நாள்உ றாதுஇயற் றும்
மெய்த்தொண்டர் தொண்டர்தம் தொண்டன்
என்று உள்ளாது
வீணிலே உன்னநா ளைக்

கண்ணழித் துப்புறக் கோலம்அது காட்டியே
கள்ளமுடன் முத்திரைஉண வும்
காமமும் பொருளுமே பொருள்எனத் திரிபவர்
கணத்தில்ஒன் றாகும்எனை யும்

தண்அளி புரந்துஅடிமை கொண்டபெண் அரசியே!
சப்பாணி கொட்டிஅரு ளே!
சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும்கோதை!
சப்பாணி கொட்டிஅரு ளே!

(54)

மண்ணகத்தில் பெற்ற மானிடப் பிறவியை அரிதென்று மதித்து மறை முதலிய நூல்களைக் கசடறக் கற்று மதி நுட்பம் எய்துதல் வேண்டும். அடியேன் அவ்வாறு செய்திலேன்.

என் அன்னையும் தந்தையும் நல்வினைப் பயனால் வானவர் வாழ்கின்ற பொன்னுலகத்தில் வாழ்கின்றனர். அவர்கள்போல் நானும்

நல்வினை செய்து வாழவேண்டும் என்று நினைக்க மாட்டேன்.

அவ்வாறு நினைத்து வாழ்நாளில் ஒரு நாளேனும் வீழ்நாள்(வீண் நாள்) ஆகாமல் நல்வினை செய்கின்ற உண்மைத் தொண்டர்க்குத் தொண் டர்க்குத் தொண்டன் என்று எண்ணாமல் எனக்கென இறைவன் வகுத்த காலத்தை அவலமாக அழித்துப் புறம்பசுவர் கோலம் செய்து பிறர்க்கு என்னை நல்லவன்போலக் காட்டுவேன்.

கள்ளமும் கயவரின் உணர்வும் காமமும் பொருளுமே உறுதிப் பொருள் எனக் கருதித் திரிபவர் கூட்டத்தில் ஒருவனாகிப் போனேன். அத்தகைய இழிஞனாகிய அடியேனையும் கருணையால் காத்து அடிமை கொண்ட பெண் அரசியே! கைகளைக் கொட்டி அருள்க!

சங்கத் தமிழ்ப் பாடல் பாடித் தரும் கோதையே! ஆண்டாளே! கைகளைக் கொட்டி அருள்க!

கவடுபடு நெட்டிலைச் சூலமும் பாசமும்
கைக்கொண்ட காலன்வா யில்
கணக்கர்உண்டு அவன்ஏவ லில்பிணக் கரும்உண்டு
கடிதின்அவர் கைப்பற்று நாள்

சிவனும்நான் முகனும்உப சாரஉரை செப்பினும்
சிறுவரையும் ஒருவ்ரை விடார்
திண்ணம்என்று உட்கொள்வது அன்றியே நரகுசெய்து
தீமைசெய் பவர்கள்என் றே

அவமதிப் பவைஒன்றும் இன்றியே தீவினைக்கு
அஞ்சியே அருள்புரிவ தும்
அவன்அருளில் ஆயதுஎன்று ஊதியம் எனும் செம்மை
அந்தாமம் எய்துதற் காம்

தவமதித் தவர்துதித் தருள்புதுவை அபிராமை!
சப்பாணி கொட்டிஅரு ளே!
சங்கத் தமிழ்ப்பாடல் பாடித் தரும்கோதை!
சப்பாணி கொட்டிஅரு ளே! (55)

பிளவுபட்ட நெடிய இலைவடிவமான நுனிகளையுடைய சூலமும் உயிர்களைப் பிணிக்கும் சா(பாச)க்கயிறும் கையில் கொண்ட காலனது வாயிலில் கணக்கர் உண்டு. அவன் ஏவியபடி செய்யும் பிணக்கரும் உண்டு.

விரைந்த அந்தக் கால தூதர்கள் உயிரைக் கைப்பற்றுங் காலத்து சிவனும் நான்முகனும் வந்து காலனுக்கு முகமன் உரை சொன்னாலும் சிறுபொழுது(ஒருநொடி) கூட யாரையும் விடமாட்டார்கள். இது உறுதி என்று ஏற்றுக் கொள்வது அன்றியே, அளறி(நரகி)ல் எய்துவிக்கும் தீமை செய்பவர்கள் என்று மானக்கேடு ஏதும் இன்றி தீவினை செய்வதற்கு அஞ்ச வேண்டும்.

தீவினை செய்யாமல் இருக்க அருள்புரிவதுவும் இறைவன் அருளால் தான் ஆவது என்று எண்ணுதல் வேண்டும்.

உயிர்கள் அடைய வேண்டிய ஊதியமாகிய பெருமை(செல்வம்) வீடுபேறு(பரமபதம்) ஆகும். அதனை அடைவதற்கான நல்வழி தவமே. அத் தவத்தை மதித்துச் செய்தவர்கள் போற்றி அருளும் புதுவை அழகி(அபிராமை)யே! ஆண்டாளே! கைகளைக் கொட்டி அருள்!

சங்கத் தமிழ்ப் பாடல் பாடித் தரும்கோதையே! கைகளைக் கொட்டி அருள்!

வாதித் தெழுபர வாதிகள் எனும்மத
யானைகள் மதம்எல்லாம்
வற்றிப் புறம்இட இடிஏறு எனும்உரை
வளர்கே சரிஎன்ன

ஆதிப் பிரமம் திருமறு மார்பனது
அந்தா மத்துஉளதாய்
அகில உயிர்க்குஉயிர் ஆகியது அரிஎன
ஆதியும் அந்தமும்நூல்

ஓதித் தருபொருள் உரையது முற்குணம்
உற்றது கற்றதுஎலாம்
உத்தம முத்தி அளிப்பது கருணையின்
ஓங்கியது எனும்உரையே

சாதித் தவர்தொழு புத்தூர் நங்காய்!
　　கொட்டுக சப்பாணி!
தளவம்அது எனவள மிகுமுகிழ் நகையாய்!
　　கொட்டுக சப்பாணி! (56)

தருக்கம்(வாதம்) செய்து மேம்படுகின்ற புறச் (பர) சமய வாதிகள் என்னும் மதயானைகளின் மதம் (செருக்கு) அனைத்தும் வற்றித் தோல்வி யுறும்படி இடியேறு முழங்குவதுபோல் பொருள்உரை வழங்கும் அரி யேறு போன்று, பெரியாழ்வார் பாண்டியன் கொண்டாட வாதிட்டு வென்றார். அவர் கூறிய வாதத்தின் சாறமாவது:-

திரு மறுமார்பனது பொன்னுலகத்தில் உள்ளது பழம்பொருள் (ஆதிப் பிரமம்). அந்தச் செம்பொருள் (பிரமம்) அனைத்து உயிர்க்கும் உயிர் ஆகியது. வேதம் ஓதுபவர் முதலிலும் முடிவிலும் அரி என ஓதித் தருகின்ற பொருளின் விளக்கமானது. முதற் குணமாகிய ஒளிர் (சத்துவ) குணம் பொருந்தியது. கற்றது அனைத்தும் மேன்மையாக்குவது. வீடுபேறு (பரமபதம்) அளிப்பது. கருணையிலே ஓங்கியது

என்னும் அசைக்க முடியாத வாதத்தைச் சாதித்த பட்டர்பிரான் ஆகிய தாதை தொழுகின்ற புத்தூர் நங்கையே! கைகளைக் கொட்டுக!

முல்லைமலர் போல வளம் மிகும் முகிழ் நகையாய்! ஆண்டாளே! கைகளைத் கொட்டுக!

நாட்டமது எட்டுத் திசையினும் உலகுசெய்
　　நகைபுரி திசைமுகன் முக்கண்உ டைத்தேவன்
நாட்கம லத்துள் கலைமகள் மலைமகள்
　　எனும்உமை யவளுடன் முத்திபெ றப்பாரில்

ஈட்டமதுஉ ற்றுத் தருநறு மலருடன்
　　இருபொழு தினும்அடி பற்றிவி ருப்போடே
ஏத்திம திக்கப் பரிபுர நதிபயில்
　　இடபம தெனும்மலை யில்குடி புக்கானும்

வாட்டம றப்பற் றுறுதவ முனிவரும்
　　மதிநலம் உறமிக முற்குணம் உற்றாரும்
வாழ்க்கைஒ ழுக்கத் டுமரரொத அடிதொழ
　　வடமலை தனில்உறை அப்பனும் மெய்ப்பாகப்

போட்டதி ருக்கைத் தலமுடன் வலதுகை
புணர்தர முறைமுறை கொட்டுக சப்பாணி!
பூட்டிய சித்ரப் புரிவளை ஒலியொடு
புதுவையுள் மலர்மகள் கொட்டுக சப்பாணி!

(57)

கண்கள் எட்டு. எட்டுத் திசைகளிலும் உலகுகளைச் செய்ய விரும் புகின்ற திசைமுகன் (பிரமன்), மூன்றுகண்களையுடைய தேவன் ஆகிய சிவன், அன்றலர்ந்த கமலத்துள் வீற்றுள்ள கலைமகள், மலைமகள் எனும் உமையவளுடன் எல்லோரும் வீடுபேறு பெறுவதற்காக உலகில் கூட்ட மாக வந்து பூசித்துத் தருகின்ற நறிய மலருடன் காலை மாலை ஆகிய இரு பொழுதினும் அடியைப் பிடித்து விருப்பத்துடன் ஏத்தி மதிக்கும்படி நூபுர கங்கை பயில்கின்ற இடபமலை என்னும் சோலை மலையில் குடி புக்க வனப்புறும் தோள் அழகனும், வாட்டம் தீரத் தஞ்சமாகப் பற்றுகி ன்ற முனிவரும், மதி நலம் உறும்படி மிக மேலான குணம் உற்றவர்களும் ஒழுக்கமான வாழ்வு கொண்ட அமரருடன் வந்து திருவடி தொழும்படி திருவேங்கட மலையில் உறைகின்ற அப்பனும், உண்மையாக உன்மேல் போட்ட திருக்கைத் தலமுடன் உன் வலதுகை பொருந்தும்படி வைத்துக் கைகளைக் கொட்டுக!

கையில் அணிந்த அழகிய சங்கு வளையலின் ஒலியொடு- புதுவை யில் வாழும் மலர்மகளே! - கைகளைக் கொட்டுக!

5. முத்தப் பருவம்

அத்தம தக்கரி கத்திஉ ரைக்குமுன்
அத்தடம் உற்றுஇடர்தீர்
அத்தர்பொ ருப்புஅழ கர்க்குஒரு முத்தம்அ
ணுக்குஅக லத்தகலா

உத்தமி யைப்பணி வெற்பில்உ தித்தஒ
ளிக்குஒரு முத்தமொடே
ஒத்துஇரு பக்கம்இ ருப்பவர் மெச்சிட
உற்றிரு முத்தமும்நீர்

தத்து திரைத்திரள் முத்தம்அ லைத்தெறி
தட்பந திக்கிடையே
சர்ப்பந டுச்சர தத்துடன் நித்திரை
தத்துவ நித்திரையாய்

முத்திஅ ளித்தருள் முக்தர்த மக்கொரு
முத்தம்அ ளித்தருளே!
முத்தமிழ் கற்றபு கழ்ப்புது வைக்கிளி!
முத்தம்அ ளித்தருளே! (58)

துதிக்கையும் மதமும் கொண்ட வாரணன் (கசேந்திரன்) ஆதிமூலமே! என்று ஓலமிடுமுன், அந்த யானையினை முதலை கவ்விய அந்த நீர்நிலையை அடைந்து அதன் துயர் தீர்த்த தலைவர் சோலை மலை அழகர்க்கு ஒரு முத்தமும்,

மார்பின் அருகிலிருந்து அகவாத மாண்புடையவளாகிய படமுடைய சேட மலையில் உதித்த பதுமாசனியாகிய ஒளிக்கு ஒரு முத்தமும்,

பொருத்தமுடன் இறைவனுக்கு இருபுறமும் வீற்றிருக்கும் மலர்மகளும் மண் மகளும் மெச்சுமாறு உற்று இரு முத்தங்களும் தாவுகின்ற அலைக் கூட்டம் முத்தங்களை அலைத்து வீசுகின்ற தண்ணிய காவிரி ஆற்றின் நடுவிலே ஆதிசேடனாகிய பள்ளியின் நடுவே நிலையாகக் கொண்ட அறிதுயில் (நித்திரை தத்துவம்) காட்டி வீடுபேறு அளித்தருள்கின்ற முத்தராகிய தென்னரங்கர்க்கு ஒரு முத்தமும் அளித்தருள்!

முத்தமிழ் கற்ற புகழையுடைய புதுவை வாழ் கிளியே! ஆண்டாளே! முத்தம் அளித்தருள்!

மறைமொழி வானவர் பொன்உலகு ஆள்பவர்
வாழ்வு தழைத்திட மால்
வாமன ரூபம தாய்நிமிர் தாளினில்
வரநதி என்பது உறீஇக்

கறைகெழு பரசு தரித்தவர் சடைபுனை
கங்கைக்கு ஒருமுத்தம்
காரித ரும்குரு பரன்நதி ஆகயு
கன்னிக்கு ஒரு முத்தம்

பொறைபயில் சங்குஅணி துறைவளம் மல்கிய
பொருநைக்கு ஒருமுத்தம்
பொறிஅரவு அணையினர் தாமம் எனப்புனை
பொன்னிக்கு ஒருமுத்தம்

முறைமுறை இலவுஇதழ் புரைகுறு நகைபயில்
முத்தம்அ ளித்தருளே!
முத்தமிழ் கற்றபு கழ்ப்புது வைக்கிளி!
முத்தம்அ ளித்தருளே! (59)

மறை மொழிகின்ற வானவரும் பொன்னுலகாள்பவரும் தங்கள் வாழ்வு தழைப்பதற்காக, திருமால் குறள் (வாமன) வடிவாக வந்து உலக ளப்பதற்காக திரிவிக்கிரமனாக நிமிர்ந்த போது திருவடிகளில் கங்கை ஆறு என்பதாகத் தழுவி, ஊன்கறை மிக்க சூலம் தரித்த சிவன் சடையில் புனைந்த கங்கைக்கு ஒரு முத்தமும்,

காரியார் பெற்ற மகனும் ஆசாரியர்களின் தலைவருமாகிய நம்மாழ் வார்க்கு உரிமையான குமரி(ஆற்று)க்கு ஒரு முத்தமும், பாரம் பொருந் திய சங்கணி துறைவளம் மல்கிய பொருநை(ஆற்று)க்கு ஒரு முத்தமும்,

புள்ளியுடைய நாகணையினர் மாலைபோலப் புனைந்த பொன்னி (ஆற்று)க்கு ஒரு முத்தமும் என வரிசையாக செம்முருக்கம் பூப்போன்று சிவந்த இதழ்களில் குறுநகை பயிலும் முத்தம் அளித்தருள்!

தேவைப் புகழ்ந்தபழ மறைபராய் அட்டமா
சித்திபயில் முனிவர்பழ கும்
சிகரபூ தரவேரல் உகுமுத்தம் விண்டுவிரி
தீமுத்தம் எனவிரும் பேம்

பாவைத்த தண்தமிழ்க் கும்பமுனி நாவைத்த
பரவைபெறும் இப்பிமுத் தம்
பரியமணல் எறிதரும் பரவர்களின் மிச்சிலாம்
பழுதுடைத்து எனவிரும் பேம்

பூவைத்து ணர்க்குஒத்த மேனிமா தவன்மகன்
பொருகழையின் முத்தம்அது வும்
புதைபட்ட முத்தம்என்று உட்கொளேம் வெண்ணிலவு
பொழிவதொடு புதைபடா மல்

கோவைப்ப டும்தவள மூத்தநிரை உட்கொண்ட
கோவையாய்! முத்தம்அரு ளே!
கோதையே! மெய்த்திருப் பாவைபா டித்தரும்
கோவையாய் முத்தம் அரு ளே!

(60)

திருமாலைப் புகழ்ந்து கூறும் பழைய மறைகளால் போற்றி எண் வகைப்பேறு (சித்தி)கள் பயின்ற முனிவர் வாழும் மலைமேல் உள்ள மூங் கிலிலிருந்து சிதறிய முத்தம் வெடித்து விரிந்த தீய முத்தம் என்று அதனை விரும்போம்.

பாடல்களைத் தன்பால் வைத்துள்ள தண்ணிய தமிழ் தேர்ந்த அகத்தியர் அங்கையால் அள்ளி நாவில் வைத்த நீர் கொண்ட கடலில் பிறந்த இப்பிதரும் முத்தம் பருத்த மணலில் வீசுகின்ற மீன் பரவர்களின் எச்சிலாகிய குற்றம் உடையது என்று கருதி அதனை விரும்பமாட்டோம்.

காயாமலரின் தளிர்க்கு ஒப்பான நிறமுடைய திருமேனி கொண்ட மாயோன் மகன் மன்மதன் போரிடுகின்ற கரும்பின் முத்தமும் காதல் விஞ்சியவர்களின் உடல்களில் புதைபட்ட முத்தம் என்று அதனை ஏற்க மாட்டோம்.

வெண்ணிலவு பொழிவதுடன் (புதைபடா) மறையாமல் கோவையாகத் தொடுக்கப்படும் வெண்முத்து வரிசையை உள்ளே கொண்ட கொவ்வைப் பழம்போல் சிவந்த வாயின் முத்தம் அருள்!

கோதையே! மெய்ம்மையான திருப்பாவை பாடித்தரும் கோவை வாய் முத்தம் அருள்!

ஆழ்கடல் பல்கோடி அருணோத யப்புருட
ராகம் தழைத்தகோ மே
தகஇனம் தர,மரக தத்துஅச் சுடர்ப்புற்ப
ராகம் தயங்குகோ லத்

தாழ்குழல் பொற்கும்ப விம்பவள முலைமலர்த்
தையல்அக லாதமார் பன்
தாமரைத் தவிசுளான் உச்சிவச் ராயுதத்
தலைவன்தன் உச்சிகொலை சார்

ஊழ்வினை தொடர்ந்தவரை அடுகின்ற ஆழ்நரக
ஊர்இயம புரமன்என் பான்
உச்சிதனில் மிதிதொண்டர் உச்சிவட மலைஎன்ன
உறைநீல மணியின்அருள் சேர்

கோழரைச் சண்பகச் சோலைசூழ் புதுவையாய்!
கோவைவாய் முத்தம்அரு ளே!
கோதையே! மெய்த்திருப் பாவையா டித்தரும்
கோவைவாய் முத்தம்அரு ளே!

(61)

ஆழ்கடலில் பிறந்த பலகோடி செங்கதிர் போன்ற ஒளியுடைய புருடராக மணியும் ஒளி தழைத்த கோமேதக இன மணியும் தரமான மரகத மணியும் அழகிய சுடரையுடைய புற்பராக மணியும் விளங்குகின்ற கோலம் செய்த பொற் கும்பம் போன்ற ஒளிப்பிழம்பின் வளமுடைய முலைமலர்களையுடைய பெரிய பிராட்டியார் அகலாத மார்பினன்.

தாமரையில் உள்ளவன் உச்சியிலும் வச்சிராயுதத் தலைவனாகிய இந்திரன் தலையின் உச்சியிலும் கொலைத் தீவினை சார்ந்த ஊழ்வினை தொடர்ந்தவரைத் தண்டிக்கும் ஆழ் நரக ஊர் ஆகிய இயமபுரத்தின் அரசன் என்பவனது உச்சியிலும் (நாபலிட்டு உழிதருகின்ற) அறை கூவல்விட்டு மிதித்து நடனமிடும் தொண்டர்கள் உச்சியில், இதுவே

திருவேங்கடம் என்று கூறும்படி வாழ்கின்ற நீல மணி போன்ற திருமாலின் அருள் சேர்ந்த வழுவழுப்பான (கோழரை)அடிமரத்தை யுடைய சண்பகச் சோலை சூழ்ந்த புதுவையாய்! கோவைவாய் முத்தம் அருள்! கோதையே! மெய்த்திருப் பாவை பாடித்தரும் கோவைவாய் முத்தம் அருள்!

ஊடுவார் ஊடலை உணர்த்துவா ரைக்குறித்து
உள்ளியது உணர்த்துமுதல் வர்க்கு
உறையுளாய் நித்திலத் தைப்பரப் பிச்சுழித்துயே
ஒன்றுதொட்டு ஐந்துஎண்ணி

நாடுகா வற்குஎனச் சோதிஅம் தாமநல்
நகர் நின்று பாலாழி வாய்
நண்ணியே நாகபோ கத்துயில் நயந்தவன்
நடித்தவெகு ரூபத்துள் ஆம்

வீடுகா மித்துளார் காமிக்கும் வடமலையுள்
விமலனும் பொன்னிநடு வே
விழிதுயிலும் அமலனும் சோலைமலை நிமலனும்
விரைந்து எனது புளகமுலை மேல்

கூடுவார் ஆம்எனில் கூடலே! கூடு எனும்
கோவைவாய் முத்தம் அரு ளே!
கோதையே! மெய்த்திருப் பாவைபா டித்தரும்
கோவைவாய் முத்தம் அரு ளே! (62)

ஊடுகின்ற காதலியரின் ஊடலை உணர்த்தி நீக்கும் திருமாலை நினைத்துக், காதலியர் நினைத்ததை முத்துக்களைப் பரப்பினாள் கோதை.

அம் முத்துக்களைத் தன் மெல்விரல்களால் அழித்து ஒன்று முதல் ஐந்து எண்ணும் வரை கூடல் இழைக்கத் தொடங்கினாள்.

நாடு காப்பதற்காகச் ஒளி மயமான பொன்னுலக நல்லகர் நின்று புறப்பட்டுப் பாற்கடலிடத்து அடைந்து, பாம்பணையில் இன்பமாகிய அரிதுயில் விரும்பியவன். பற்பல திருமேனி வடிவம் எடுத்து நடித்தான் அவன் கொண்ட பல வடிவங்களில் விடுதலை முத்திரையை விரும்பியவர் விரும்பும் வடமலையுள் விமலன் வடிவம் ஒன்று.

காவிரி நடுவிலே விழிதுயிலும் அமலன் வடிவம் ஒன்று சோலை மலையில் நின்ற நிமலன் வடிவம் ஒன்று.

இங்கே காட்டிய மூவரும் என் பகை முலைமேல் வந்து கூடுவார் எனில் கூடலே கூடு என்று கூட்டல் இழைத்தவளே!

கோவைவாய் முத்தம் அருள! மெய்த்திருப்பாவை பாடித்தரும் கோவைவாய் ஆண்டாளே! முத்தம் அருள்!

பொருப்பு ஊர் எனக்குடி புகுந்து விடை ஊர்திமுப்
புரம் நெருப்பு ஊரவென் றோன்
புண்டர் கம்பொகுட்கு ஊரதாம் ஓதிமப்
புள் ஊர்தி பொருநர்மார் பின்

மருப்பு ஊர் தொறும் குருதி நதி ஊர வேதவள
வாரணம் கடவு புத் தேள்
வானவ ரொடும் பரவ வண்துழாய் பெற்றதிரு
மகள்எனத் திகழும் ஆ டித்

திருப்பூர நாள் வில்லி புத்தூர் விளங்கவரு
செல்வி வெண் சங்கமே! என்
சங்கைவிட்டு அகலாத மாதவண் பவளவாய்
தித்தித்து இருப்பதுட னே

கருப்பூர நாறுமோ என்று உரைத் தருளும்நின்
கனிவாயின் முத்தம் அரு ளே!
களப ம்ருக மதபுளக முகிழ்மலைக் கோதையே!
கனிவாயின் முத்தம் அரு ளே! (63)

இவன், மலையே இருக்கும் ஊர்தியன் முப்புரம் நெருப்பு ஊரும் படி எரித்து வென்றவன் அந்தச் சிவனும் தாமரைப் பொகுட்ட வாழும் ஊராகக் கொண்ட அன்ன ஊர்தி அயனும்.

பகைவர் மார்பில் கொம்பு குத்தூர் தோறும் குருதி ஆறு ஊறும் படி வெள்ளையானையைக் கடவுகின்ற இந்திரனும் தேவர்களோடும் துதி செய்ய, வளவிய துழாய் பெற்ற திருமகள் எனத் திகழும் ஆடிப் பூர நாளில் வில்லிபுத்தூர் விளங்குமாறு பிறந்த் செல்வியே!

நீ திருமால் இடக்கையிலுள்ள பாஞ்ச சண்யச் சங்கை அழைத்து,

என் மனம் விட்டு நீங்காத மாதவன் பவளவாய் தித்தித்து இருப்ப துடன் கருப்பூர மணம் வீசுமோ? என்று உரைத்தருளினாய்! அவ்வாறு உரைத்த உன் கனிவாயின் முத்தம் அருள்! கலவையான மான்மதம் (கத்தூரி) புனைந்த மொட்டுப் போன்ற முலையில் அணிந்த கோதையே! கனவாயின் முத்தம் அருள்!

ஆலந் தளிருள் கிடந்துஅகிலம்
அகத்துஇட்டு உதரக் கனல் கனற்றாது
ஆழித் தடக்கை கிழக்குறவைத்
தவற்கும் செரியாது என ஆடை

மேலில் தரித்தே ஒரு செவிடு
வெண்சங் கினில் பெய்து இலவு இதழ்மெல்
விரலால் அமைத்து வளைநுதியால்
மிழற்று மணிநா வினை அடக்கிப்

பால் அன்று அருத்துக் கவுள் புடைவைப்
பதைத்தாய் கவுளில் நெரித்து ஊட்டிப்
பனிநீர் ஆட்டித் தாலாட்டிப்
பைம்பொன் திருத்தொட் டிலில் ஆட்டும்

கோலக் கழவி! இதழ்ப்பவளம்
குவிப்பாய்! முத்தம் தருகவே!
கோவைத் திருவே! புதுவையின் பொற்
கொடியே! முத்தம் தருகவே! (64)

ஆலந்தளிரிலையில் சிறு குழவியாக்கிடந்து அனைத்து உலகையும் வயிற்றுல் இட்டு வயிற்று (உதர)க் கனல் வையத்து உயிர்களை எரிக்கா மல், ஆழியை அணிந்த அகன்ற கையைக் கிழக்குப் புறமாக வைத்த திரு மால் யசோதை மைந்தனான. அன்று பாலூட்டினாள் அசோதை!

அப்போது உண்ட பால் செரியாது என்று, மேலாக்குக்குள் கண் ணன் ஆகிய சிறு விம்பத்தை மேலாடையால் மறைத்துக் கொண்டாய்! ஆழாக்கில் ஐந்தில் ஒரு பங்குப் பாலை வெண்சங்கில் ஊற்றி. செம்முருக்க மலர் போன்ற செவ்விதழை மெல்லிய விரலால் அமைத்தாய்! சங்கின் நுனியால் மழலை மிழற்றும் மணி நாவினை அடக்கிப் பால் அன்று

ஊட்டினாய்! ஊட்டுவதற்காகக் கன்னத்தின் பக்கத்தில் வைப்பதை மாயக் குழவி குடிக்காமலிருப்பது கண்டு, தாயாக எண்ணிக் கொண்ட நீ, அந்தக் குழவியின் கன்னத்தை அழுத்தி ஊட்டினாய்! பின்னர் பனி நீரில் குளிப் பாட்டினாய்! தொட்டிலில் இட்டுத் தாலாட்டினாய்! இவ்வாறு விளையா டும் அழகிய குழந்தையே! இதழ் ஆகிய பவளத்தைக் குவித்து முத்தம் தருக! கோவைத் திருவே! புதுவையின் பொற்கொடியே ஆண்டாளே! முத்தம் தருக!

அரி எனச் சுருதிகற் றிடும் அமுத உரைநிற்க
ஆடகன் தனது பெயரே
அறை என்னும் நச்சுரை புகாமல் இரு செவிபுதைத்து
அரி என்ன அரி என்ற பேர்க்கு

உரியன் எங்கு உளன்? என்ன எங்கும் உளன் என்னுமுன்
உருத்து அடித் திட்டதூ ணத்து
உடன் உதித்து எற்றிய கரம்பற்றி உதரத்தை
உகிரின்வகிர் செய்து குடரே

தெரியலா கப்புனை நராரியன் அடங்காச்
சினத்தழல் அடக்குதற் காத்
திசைமுகனும் இந்திரனும் அடிபணிந்து ஏவவே
சென்று எதிர்ந்து அருளின்நோக்கிப்

பரிமளத்து இனிமைதோய் மழலைவாய் அமுத் மொழி
பவளவாய் முத்தம் அருளே!
பைந்துழாய் பெற்ற பெண் பிள்ளைமா ணிக்கமே!
பவளவாய் முத்தம் அருளே!

(65)

அரி என்று பரம் பொருள் பெயராகிய மறைகள் கற்கின்ற அமுதம் போன்ற சொல் இருக்கையில், இரணியன் ஆணவத்தால் என் பெயரை மட்டுமே சொல்! சொல்! என்று அதட்டிக் கூறிய நஞ்சு போன்ற சொல் தன் காதில் புகாதபடி காதைப் பொத்திக் கொண்டான் ஏகலாதன். தன் தந்தை இரணியன் சொல்லுக்கு மாறாக (அரி,அரி,அரி) என்று பலகால் சொன்னான். அதனால் இரணியனுக்குச் சினம் பொங்கியது; அரி என்ற பெயர்க்கு உரியவன் எங்கே உள்ளான்? என்று வினவினான்.

அவன், இடம், பொருள், காலம் என்ற மூன்றாலும் அளவிட இயலாதவன். அவன் எங்குமே நிறைந்துள்ளான் என்றான் பிரகலாதன்.

என்றவுடன் சினந்து அவன் முன் இருந்த தூணை உருத்து அடித்து இத்தூணில் உள்ளானோ என்றான் உடனே அத் தூணில் உதித்து உருத்து எற்றிய கையைப் பிடித்து, அவன் வயிற்றைத் தன் நகங்களால் வகிர்ந்து குடலை மாலையாகப் புனைந்தான். அந்த ஆளரி உருவான இறைவனின் அடங்காத சின நெருப்பை அவிப்பதற்காகத் திசைமுகனும் இந்திரனும் வந்து உன் அடிபணிந்து உன்னை ஏவினர். நீயும் சென்று நேரில் அருளால் நோக்கி, இன்மண கனிமை தோய்ந்த மழலை வாய்ந்தஅமுது பொழிந்தாய்! அத்தகைய உன் பவளவாய் முத்தம் அருள்! பைந் துழாய் பெற்ற பெண் பிள்ளை மாணிக்கமே! பவள வாய் முத்தம் அருள்!

மங்கலப் புன்னைநாள் பொங்கரில் கொங்குதோய்
வான்நிலா, மலர்வாவியுள்
வரிவண்டு இழைத்ததண் நறவு இறால் விம்பம் என
மகரமொடு திமில்கறங் கச்

சங்கவெண் திரைநீரை மொண்டு கொண்டு எழுகொண்டல்
சமுகத்தி னுடன்மறைத் த
சஞ்சரீ கங்கள்ஏக் கற்று இரைத்து எழநீத்த
தன்மைதா ரகைவளைக் கும்

திங்களைக் கரியவாள் அரவுபகு வாய்கொண்டு
செகமது பராவமீ ளத்
தேசுற உமிழ்ந்து நீள் இடைஇரிந்து எழுவபோல்
திகழ்செண்ப கச்சோலை சூழ்

பங்கயத் தடமேவு செந்தமிழ்ப் புதுவையாய்!
பவளவாய் முத்தம்அரு ளே!
பைந்துழாய் பெற்றபெண் பிள்ளைமா ணிக்கமே!
பவளவாய் முத்தம் அரு ளே!

(66)

மங்கலப் புன்னை மரங்கள் செறிந்த சோலை. அன்றலர்ந்த மலர்கள் நிரம்பியது. அதன் நடுவே ஒரு மலர்ப் பொய்கை.

வானத்து நிலாவின் வடிவம் அந்தப் பொய்கையில் தோன்றியது. அந்த வடிவம் கண்டு, அது வரிவண்டுகள் இழைத்த குளிர் மணத் தேன் கூடு என்று தேனைச் சுவவைப்பதற்காக மகரம், திமில் ஆகிய மீன்கள் அதனைச் சுற்றி வந்தன.

வண்டுகளும் நீரில் தெரியும் அந்த நிலாவின் வடிவம், தாங்கள் கட்டிய தேன் கூடு என்று கருதிச் சூழ்ந்து சுற்றிக் கொண்டிருந்தன.

சங்குகள் வாழும் கடல் நீரை மொண்டு கொண்டு வானில் முகில் எழுந்தது. அந்த முகிற் கூட்டம் மறைத்ததால், அந்த நிலாவடிவம் மறைந்தது. நிலவு தோற்றுவித்த தேன் கூட்டைச் காணாமல், வண்டுகள் ஏங்கி இரைச்சலிட்டுக் கொண்டு சென்றன.

உலகத்தார், நிலவை இராகு விழுங்கிவிட்டதோ என்று எண்ணினர். 'இராகுவே! திங்கள் இல்லாமையால் உலகம் இருண்டது. உடனே திங்களைத் தா!' என்று வேண்டினர் போலும்! அவர்கள் வேண்டியமையால், இரங்கிய இராகு, நிலவினை உமிழ்ந்து விட்டது போலிருந்தது, வானத்தில் மீண்டும் நிலவு தோண்றிய காட்சி.

மலர்ப்பொய்கையிலும் நிலாவடிவம் மீண்டும் தோன்றியது. இத்த கைய அற்புதக் காட்சி விளைவிக்கும் செண்பகச் சோலை சூழ்ந்த மலர்ப் பொய்கை பொருந்திய புதுவை நாச்சியே செம்பவளவாய் முத்தம் அருள்!

பைந்துழாய் பெற்ற பெண் பிள்ளை மாணிக்கமே! ஆண்டாளே! பவளவாய் முத்தம் அருள்!

பூரித்த குடவயிற் றுச்சூல் உளைந்து இடம்
புரி, வலம் புரியனுட னே
பூசல் இட்டு ஈன்றகோ வாநித்தி லத்தின்மேல்
புணரிவாய் கொண்டவே னில்

மாரித் தலைப்பெயல் உறீஇப்பகடு உரப்பிமற
மள்ளர் உழு படைஉழக் கா
மண்திணிந்து எழுதொடிப் புழுதிஒரு கஃசா
வளம் தரச் செந்நெல் வெண் ணெல்

கோரித் தெளித்தது அங் குரமாய் முளைத்துக்
குழைந்து சூல் கொண்டு ஈன்று பால்
கோதித் திரண்டுதலை குப்புறக் குலைசாய்ந்து
கோத்தமுழு மணியுமுத் தும்

பாரித்த தாம் எனத் திகழ்வாய் புதுவையாய்!
பவளவாய் முத்தம் அரு ளே!
பைந்துழாய் பெற்ற பெண் பிள்ளைமா ணிக்கமே!
பவளவாய் முத்தம் அரு ளே! (67)

குடம் போன்று வயிறு நிரம்பிய சூலினால் வருந்தி இடம்புரிச் சங்கு வலம் புரியினுடன் பூசல் இட்டு ஈன்ற முத்து அவை கோக்கப்படாத முத்துக்கள். கடலிலே நீர் மொண்டு கொண்ட வேனிற் கால முகிலின் முதல் மழை, அந்த முத்துக்களின் மேல் பெய்தது. அப்போது உழவர்கள் எருதுகளை அதட்டி ஓட்டி கலப்பையால் நிலத்தை உழக்குவர்; மண் இறுகி எழுகின்ற ஒரு பலம் எடையுள்ள புழுதியானது, கால் பலமாக உணங்கி வளம் தருவதால் செந்நெல்லும் வெண்ணெல்லும் விளைய வேண்டும் என்று விரும்பி விதைத்தனர்.

அந்த விதைதான் மலையாகக் கிளைத்துக் குழைந்து சூல் கொண்டு கதிர் ஈன்றன. பின்பு பால் பிடித்துத் திரண்டு தலை குப்புறும் படி குலைகள் சாய்ந்து கோவையாக விளைந்தன. அந்த நெல்மணியும் முன்பே சிதறிக் கிடந்த முத்தும் பரவிக் கிடப்பது போல் திகழும் வயல் புதுவையாய்! சூடிக்கொடுத்த சுடர் கொடியே! பவளவாய் முத்தம் அருள்!

பைந்துழாய் பெற்ற பெண் பிள்ளை மாணிக்கமே, ஆண்டாளே! பவள வாய் முத்தம் அருள்!

6. வாரானைப் பருவம்

புழைபடு சுவட்டுக் கவுள்கள்வழி பொழிபுற்
புதக்கடாக் கலுழி நால் வாய்ப்
புயல் கிழித்து எழுபிறைக் கிம்புரிக் கோட்டுவன்
புகர்முகம் அழைப்ப உரு கிக்

குழைமுகத் திருமகள் அனைத்து அழுத் தியமென்
கொடுங்கையை நெகிழ்த்ததுஅல் லால்
குங்கும படீரத்தின் முழுகும் இள முலையுடன்
குழையுமார் பையும் நெகிழ்த் தே

தழைதரு திருக்குழற் கற்றைகற் பகநறுந்
தாமமொடு பிடர்முயங் கத்
தமனியத் துகில் அவிழ்ந் திடவிரைந்து உதவிய
தயாபரன் தொண்டர்மகிழ் வான்

மழைபடிந் திடுசண் பகச்சோலை வளமல்கு
மல்லிநாட் டவள்! வருக வே!
வடபெருங் கோயிலுள் கடவுள்மழ களிறு அனைய
வளர் இளம் பிடி! வருகவே! (68)

துளைபட்ட அடையாளமுள்ள கன்னங்களில் ஒழுகிக் குமிழியிடுகின்ற மதப்பெருக்கையுடைய தொங்கும் வாயையுடையது யானை.

அதன் பூண் கட்டிய கொம்புகள் வானத்துப் பிறையைப் போன்றவை. யானை, மேல் நிமிர்ந்தால், வான் முகிலையே அதன் கொம் புகள் கிழித்துவிடும். அவ்வளவு உயரம். வலிய யானையின் முகம் பற்பல புள்ளிகளைக் கொண்டது.

அவ் யானை திருமாலை வழிபட ஒரு பொய்கையில் இறங்கித் தாமரை மலரைப் பறித்தது. அப்போது ஒரு முதலை அதன் காலைக் கவ் விக் கொண்டது. முதலையிடமிருந்து மீள்வதற்காக யானை போராடியது. இறுதியில் 'ஆதிமூலமே' என்று கூறியது . அதன் குரலைக் கேட்டதும் திருமாலின் மனத்தில் கருணை சுரந்தது.

குண்டலம் அணிந்த திருமுகத் திருமகள் அணைத்து இறுக்கிய மெல்லிய கையை நழுவ விட்டான் திருமால். குங்குமச் செந்நிறத்தில் மூழ்கிய இள முலைகளையும் குழைகின்ற மார்பினையும் நெகிழவிட்டு யானையைக் காக்க விரைந்தான்.

அப்போது அழகிய குழற்கற்றையில் அணிந்திருந்த கற்பகத்தின் மணமாலை பிடரில் அவிழ்ந்து தழுவியது. பொன்னாடை அவிழ்ந்தது. அவ்வாறே சென்று அந்த யானைக்கு உதவிய கருணையன் அவன்.

அவன் அடியார்கள் மகிழும் பொருட்டு, முகில்கள் தங்குகின்ற சண்பகச் சோலையின் வளம் மிக்க மல்லி நாட்டவளே! நீ வந்தருள்க!

வில்லிபுத்தூர் வடபெருங் கோயிலுள் கண்வளரும் ஆலிலைப் பண்ணியான் ஆகிய இளமையுடைய களிற்றினை அணைவதற்காகவே வளரும் இளம்பிடியே! ஆண்டாளே! வந்தருளுக!

பட்டுஅறா இளமுலைப் பாவைமார் காலையில்
பரிமளப் புனல்படிய வெண்
பட்டினை அகற்றஇள முலைகண்டு நாணியே
பங்கேரு கங்கல்முகு ளக்

கட்டுஅறா உக்கதெண் ணறவுதண் புனல்உறக்
கயல்உண்டு பாயஅய லே
கண்டுவா ளைப்பகடும் உண்டுகா வினில்மண்டு
காலையில் காமர்பல வின்

தெட்டவா சக்கனியின் இனியசுளை புனல்உறச்
சினைவரால் உண்டுபா யச்
சினைவரால் என்பதால் அந்தவண் சினைஇறால்
சிந்தவே திசைகள்தோ றும்

மட்டுஅறாது ஒழுகுசெண் பகமலர்ச் சோலைசூழ்
மல்லிநாட் டவள்!வருக வே!
வடபெருங் கோயிலுள் கடவுள்மழ களிறுஅனைய
வளர்இளம் பிடிவருக வே!

(69)

பட்டுடை நீங்காத இளமுலைகளையுடைய மகளிர், காலையில் மணமூட்டிய நீராடிடத், தங்கள் முலை மறைத்த வெண்பட்டினை அவிழ்ப்பர். அப்போது அவர்களின் முலைகளின் திரட்சி கண்டு, நாம்

இம் முலைகளுக்கு ஒப்பாக வில்லையே என்று நாணமடைந்து, தாமரை மொட்டுகள் கட்டவிழ்ந்து தேன் கொட்டும். அந்தத் தேன், குளிர் நீரில் கலக்கும். அத் தேனைக் கயல்மீன் உண்டு (வெறி கொண்டு) பாயும்.

பக்கத்தில் கயல்மீன் பாய்வதைக் கண்டு வாளைப்பகடு (ஆணும்) அத் தேனை உண்டு, சோலையில் திரளும். அப்போது அழகிய பலாமரத்தின் மணமுள்ள பழத்தின் இனிய சுளைகள் நீரில் விழும். பலாச் சுவை கலந்த தேனைச் சினை கொண்ட வரால் மீன் கண்டு (வெறி கொண்டு) பாயும்

அந்தச் சினை வராலர்னது, சினவரால் ஆதலால் மேலே மோதும், பலாமரத்தின் வளவிய கிளையில் தொங்கிய தேன்கூடு தேன் சிந்தும். அதனால் திசைகள் தோறும் தேன் குறையாமல் வெள்ளம் பெருகும். அத் தகைய பெருமையுடைய செண்பகமலர்ச் சோலைகள் சூழ்ந்த மல்லி நாட்டவளே! வருகவே! வடபெருங் கோயிலுட் கடவுள் மழகளிறு அனைய வளர் இளம் பிடியே வருகவே! வண்டமிழ்ச் செல்வியே வருகவே!

காமர்மர கதமணிச் சுடர்படர் முருந்துடைக்
கலபமா மஞ்ஞைஞுதன தாம்
கழுத்தினும் விழுத்தகவு அடைந்தநின் சாயலைக்
கண்டுபிணி முகம்எய்த லால்

நாமமும் பிணிமுகம் எனப்பெற்று முருகனை
நயந்துநின் சாயல்பெறு வான்
நாளும் சுமக்கின்றது; அஞ்சுகமும் மழலைக்கு
நாணிநின் மழலைபெறு வான்

ஏம்அறச் சுகம்இழந்து இரதிபதி யைச்சுமக்
கின்றது;உன் நடையின்ஓவ் வாது
எகினம்நான் முகனைச்சு மக்கின்றது; அந்தநடை
எமதுகண் கண்டுஉவப் பான்

வாமமே கலைமருங் குல்களப முகுளமுலை
மல்லிநாட் டவள்!வருக வே!
வடபெருங் கோயிலுள் கடவுள்மழ களிறுஅணைய
வளர்இளம் பிடி! வருகவே! (70)

அழகிய மரகதமணி ஒளி பரவும். வெண்மை நிறமுடைய அடிப்பகுதி கொண்டன மயிலின் இறகுகள். அவை நெருங்கியிருப்பது தோகை. அதன் கழுத்து மிக அழகியது. அந்தக் கழுத்தைக் காட்டிலும் மிக்க அழகு வாய்ந்தது-ஆண்டாளே!-உன் சாயல். அந்தச் சாயல் கண்டு, அச்சாயலுக்குத் தன்சாயல் இணையாகாதே என்று எண்ணி நாணி மயிலின் முகம் சோர்ந்தது. அதனால் பிணிமுகம் எனப் பெயர் கொண்டது. நின் சாயலை எவ்வாறாவது பெறவேண்டும் என்று முருகனை எப்போதும் சுமக்கின்றது.

அஞ்சுகம் எனப் பெயர் பெற்ற கிளி, நின் மழலை மொழிக்குத் தன் குரல் ஒப்பாக வில்லையே என்று நாணியது. நின் மழலை போன்ற இனிய குரலைப் பெறும் பொருட்டும் தன் கவலையாகிய மயக்கம் தீரும் பொருட்டும் இரதியின் கணவன் மன்மதனைச் சுமக்கின்றது.

அன்னமானது, உன் நடைக்குத் தன் நடை ஒப்பு ஆகாமையால், ஒப்புப் பெறும் பொருட்டுப் பிரமனுக்கு வாகனமாகிச் சுமக்கின்றது.

அன்னமே தோற்றுப்போன அந்த நடையை எங்கள் கண்களால் கண்டு இன்புறும் பொருட்டு மல்லி நாட்டவள் வருக!

ஒளியுடைய மேகலை அணி அணிந்த இடையும் களபம் பூசிய மொட்டுப் போலும் முலைகளும் கொண்டவளே வருக!

வடபெருங் கோயிலுட் கடவுள்மழ களிறு அணைய வளர் இளம் பிடியே வருகவே!

துண்டவெண் பிறைநுதல் கோபால மகளிர்மனை
தோறும்வெண் ணெய்யினுடனே
தொடுஉணக் கண்டுகடை கயிறுஎடா வாயிலொடு
சுற்றுமுற் றுபுதிரு டியே

உண்டகள் வா!வருக! வருக!என மாயமொடு
ஒளித்துஅன்னை பொன்தொட்டில் மேல்
யோகநித் திரைசெயா அயல்வந்து அசோதைக்கு
உணர்த்தமணி முன்றில்அத னில்

பண்டிதளர் பசியொடு தவழ்ந்து வந்து அம்மம்உண்
பாலனைப் போலவே பொற்
பரிபுரம் அலம்பம் படைமணி வடத்துடன்
பாடுவாய் மறுகஅறு தாள்

வண்டு இரைத்து எழுதுழாய் மணமல்கு புதுவைமலர்
மகல்!அம்மம் உணவருக வே!
வாடவா டப்பரிம ளிக்குமகிழ் மாறர்திரு
மகள்!அம்மம் உணவருக வே! (71)

இளம்பிறை போன்ற நெற்றியுடைய ஆயர் மகளிரின் வீடுதோறும் வெண்ணெய், பால்முதலியன திருடி உண்டான் கண்ணன். அதைக் கண்ட ஆய்ச்சியர் அவனைப் பிடித்துக் கட்டிட தயிர்கடையும் கயிறு கொண்டு பின் தொடர்வர்.

வாயிலிலும் சுற்றுப் புறங்களிலும் பின் தொடர்ந்து, திருடி உண்ட கள்வனே வருக! வருக! என்பர்.

அவர்கள் கண்ணில் படாமல் கண்ணன் ஒளித்துக் கொள்வான். யசோதை கட்டிய பொன் தொட்டிலில் அறிதுயில் செய்து கொண்டிருப்பான் கண்ணன். அது கண்ட ஆய்ச்சியர் யசோதையிடம் வந்து அவன் திருடியதை உணர்த்துவர்.

அப்போது அழகிய வாசலில் கண்ணன் வயிறு தளர்கின்ற பசி பெறாதவனாய்த் தவழ்ந்து வருவான். வந்து · தாயிடம் முலைப்பால் அருந்துபவன் போல், பொற்கிண்கிணி ஒலிக்கவும் சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு வடிவாகிய இடையணி மணிவடம் ஒலிக்கவும், தாலாட்டுப் பாடுகின்ற தாயின் வாய் ஒலிக்கவும் கண்டு, ஆய்ச்சியர் நம் வீட்டில் திருடியவன் இங்குத் தன் தாயிடம் பால் உண்டு தொட்டிலில் இருக்கின்றானே! என்று வியப்புடன் மீளுவர்.

இத்தகைய திருவிளையாடல் புரியும், கண்ணன் குடி கொண்ட ஊர் புத்தூர். வண்டுகள் இரைச்சலிட்டு எழுகின்ற துழாயின் மணம் நிரம்பிய புதுவை மலர்மகளாகிய ஆண்டாளே! அம்மம் உண்ண வருக! வருக! வாட்டமடையுந்தோறும் நறுமணம் மிகுகின்ற மகிழமலர் மாலை அணிந்த நம்மாழ்வார் திருமகளே! அம்மம் உண்ண வருக!

முடக்குவச் சிரவைந் நுதித்தோட்டி உழுசுவடு
முதிர்மத்த கத்துஓடை மா
மூதண்ட மழைமுகிற் படலத்து இடிக்குல
முழக்குஎன உழக்கிஎதிர் வந்து

உடக்கிய தடக்கையை இடக்கையின் நுடக்கிமற்
றொருகையால் கிம்புரிக் கோடு
ஒன்றைப் பிடுங்கிஅது கதையாக எதிர்தண்டும்
ஒருமருப் பையும்ஒடித் தே

சடக்கெனா ஒடித்திடா அதன்உயிர் குடித்துவஞ்
சனைநீடு கஞ்சன்முடி யைத்
தாளால்உ தைத்துவன் தலைஉருட் டிப்பந்
தடித்திட்டு வாளரா வின்

படத்திடை நடித்துவட மலைவாணர் களிதரப்
பந்தடித் திடவருகவே!
பழமறைப் புதுவைஅந் தணர்பிரான் அருள்புதல்வி!
பந்தடித் திடவருகவே! (72)

வளைந்த வலிய கூரிய நுனியுடையது அங்குசம். அது குத்திய தழும்பையுடைய மத்தகமும் முகபடாமும் கொண்டது குவலயா பீடம் என்னும் யானை. முதுபெரும் வானத்து மழை பெய்யும் முகிற் கூட்டத்தின் இடிக் குலத்தின் முழக்கமெனக் கண்டவரை அழித்துக் கொண்டு எதிரே வந்தது. அவ்வாறு வந்த யானை, கொல்வதற்காக நீட்டிய துதிக் கையை கண்ணன் இடக் கையால் துவளச் செய்தான். மற்றைக் கையால் கஞ்சன் ஏவிய அந்த யானையின் பூண் இட்ட கொம்பு ஒன்றைப் பறித்தான். அதையே தண்டுப் படையா(கதாயுதமா)கக் கொண்டு, மேலும் எதிர்த்த அந்த யானையின் மற்றொரு தந்தத்தையும் ஒடித்தான். இப்படி அதன் உயிர் குடித் தான். கொன்ற பின்பு வஞ்சனை மிக்க கம்சன் முடியை அடியால் உதைத்தான். அவனது வலியதலையை உருட்டிப் பந்தாடினான். பின்பு கொடுமையுடைய காளிய நாகத்தின் படத்திலே நடித்தான்.

அந்த வடமலை வாணன் மகிழுமாறு பந்தடித்து விளையாட வருக!

பண்டைய மறைகள் அனைத்தும் உணர்ந்த புதுவை அந்தணர் ஆகிய பெரியாழ்வார் அருளிய புதல்வியே பந்தடித்து விளையாட வருக!

நிலைத்தா ருவின்கீழ் இருந்து அரசு
நிகழ்த்தும் அயிரா வதக்கட வுள்
ஞானா கரராம் அமரரொரு
நெடியோய்! அடியோம் நிழல்மகுடத்

தலைக்கா வலதாய் உலகளந்த
தாள்தா மரையாய்! அபயம்! எனச்
சரணா கதியில் தாசரதி
தான்என்று அளக்கர் தடுத்து அமரில்

சிலைக்கால் வளைத்த துடன்புருவச்
சிலைக்கால் வளைத்துச் சரமாரி
சிதறிச் சிரம்பத் தினன்உயிரைச்
செகுத்துச் சிறைமீட்டு அயோத்திபுகுந்து

அலைக்கா விரியுள் துயில்அரங்கர்க்கு
அமுதே! வருக! வருகவே!
அழகர்க்கு அமுதே! வடமலைவாழ
அனகர்க்கு அமுதே! வருகவே! (73)

என்றும் அழியாமல் நிலைபெற்ற கற்பகத் தருவின் கீழே இருந்து அரசு செய்யும் வெள்ளை (ஐராவத) யானையுடையவன் இந்திரன். அவன் குடைக் கீழ் வாழ்பவர் அறிவே வடிவான தேவர்கள். அவர்களோடு வந்து அடியோங்களாகிய எங்களுக்கு ஒளி கொண்ட பொன்முடி அணிந்த தலையையுடைய காவலனே! தாவி உலகளந்த அடித் தாமரை உடையவனே! நெடியோனே! யாம் உனக்கு அடைக்கலம் என்று தேவர் வேண்டியபோது, மண்ணில் தசரதன் மகனாகத் திருமால் பிறந்தான்.

அடைக்கலம் தருவதில் சிறந்தவன் தசரத இராமன் தான் என்று நிலை நாட்டுவதற்காகக் கடலை அணை கட்டித் தடுத்து, போரிலே கோதண்ட வில்லின் நுனியையும் வளைத்தான். அம்பு மழை சிதறி, தலை பத்துள்ள இராவணன் உடலைக் கொன்று சீதையைச் சிறை மீட்டான். பின்னர் அயோத்தியில் வந்து முடி சூடி, காவிரி நதியுள் அறிதுயில் கொண்டு அலைகளையுடைய அரங்கன் எனப் பெயர் பெற்றான். அவனுக்கு அமுதே! வருக வருக!

சோலைமலை அழகர்க்கும் அமுதே! வடமலை வாழ் அனகர்க்கும் அமுதே! ஆண்டாளே! வருக வருக!

கயலை வடுவொடு கடுவை மதன்அடு
கணையை மருள்புரி பிணையையே
கருது மதர்விழி விபுதர் அரிவையர்
களியின் அடிதொழ வருகவே!

அயனும் அயன்வழி முனிவர் அனைவரும்
அமரர் குடிபுகு பதவிஆள்
பவனும் நிலமிசை பொழியும் நறுமலர்
அணையின் அழகுடன் வருகவே!

இயலும் இயலுடன் இசையும் எழுவகை
இசையும் இசைபயில் நடமுமாம்
இனிய தமிழ்பயில் குருகை வருமகிழ்
இறைவர் திருமகள்! வருகவே!

புயலின் மிசைஎழு மதியின் அகடுஉழு
புதிய மலர்விரி பொழில்கள்சூழ்
புதுவை மறையவர் அதிபன் அருள்மலி
புதிய திருமகள்! வருகவே! (74)

கயல்மீனையும் மாவின் வடுவையும் நஞ்சையும் மன்மதனது கொல்லுகின்ற அம்பாகிய மலரையும் மருளுகின்ற பெண்மானையும் போன்ற செருக்கிய கண்களையுடைய தேவ மகளிர் மகிழ்ச்சியால் உன் அடி தொழுவதற்கு வருக!

நான்முகனும் அவன் வழி வந்த முனிவர் அனைவரும் தேவர் குடி புகுகின்ற வானுலகத்தை ஆள்பவன் ஆகிய இந்திரனும் தூவுகின்ற நறிய மலரால் ஆகிய அணைமேல் அழகுடன் வருக!

இயல்தமிழும் அதனுடன் இசைந்தமிழும் ஏழுவகையாகிய சரிகமபதநி எனும் இசை (சுரங்)களும் இசை பயில்கின்ற நாடகத் தமிழும் ஆகிய இனிய முத்தமிழ் வழங்குகின்ற திருக்குருகூரில் தோன்றிய மகிழமலர் மாலை அணிந்த இறைவருக்குத் திருமகளே! வருக!

முகிலின் மேல் எழுகின்ற நிலவு நடு இடத்தைக் குத்துகின்ற (புதிய மலர்கள் விரிகின்ற) சோலைகள் சூழ்ந்த புதுவையில் அந்தணர் தலைவனாகிய பெரியாழ்வாரின் திருவருள் மலிந்த புதிய திருமகளே! வருகவே!

கரிய முகில்புரை அளக வனிதையர்
கரையில் இடுகலை அதனையே
களவி னொடுகவர் பொழுதில் எமதுஅணி
கலைகள் அருள்கென இருகையால்

அரிய அடியிணை இருவர் பணியவும்
அடையை உடைஎன அருளுவார்
அமலர் பரிபுர நதியர் குழகுஅமர்
அழகர் மழவிடை வரைஉளார்

தெரியல் நதிஎன நதியுள் அரவணை
திகழ ஒருதுயில் பழகுவார்
சிகர வடமலை முதல்வர் எனும்இவர்
தினமும் மகிழ்த்ர வருகவே!

புரிசை வடவரை எனவும் இருசுடர்
புவன மிசைவலம் வருவதோர்
புதுவை மறையவர் அதிபன் அருள்மலி
புதிய திருமகள்! வருகவே! (75)

கருமுகில் போன்ற கூந்தலையுடைய மகளிர், நீராடுகையில் பொய்கைக் கரையில் வைத்த ஆடைகளைக் களவால் கவர்ந்தவன் கண்ணன். அம் மகளிர், தங்களின் ஆடைகளை அருள்வாயாக என்றனர். அவர்கள் ஒருகையால் இரந்தனர்.

இருகையாலும் தொழுதால்தான் தருவேன் என்று பிடிவாதம் செய்தான் கண்ணன். அவனை ஏய்த்து ஆடை பெறுவதற்காக இரு மகளிர் கூடி தத்தம் ஒற்றைக்கையால் அரையை மறைத்துக் கொண்டு, மற்றைய ஒவ்வொருகையையும் இணைத்து இருகையால் தொழுவதுபோல் தொழுதனர்.

கண்ணனுக்கு அவர்கள் சூழ்ச்சி தெரியும். ஆதலால், போலியாகத் தொழுததற்காகத் தாமரை இலையாகிய ஆடையை அருளினான்.

அந்தக் கண்ணன் இவ்வாறு மகளிரோடு விளையாடினாலும் மனக் களங்கம் சிறிதும் இல்லாதவன் (அமலன்) அதற்குச் சான்றாகச் சோலை மலையில் நூபுர கங்கை (சிலம்பாறு) உடையவன்.

இளமை குடி கொண்ட (மாறாத) அழகன். இடப மலையாகிய சோலைமலையில் உள்ளவன்.

காவிரியையே மாலையாக, இருபுறமும் சூழும்படி அதன் நடுவே அரவணை விளங்கும்படி அறிதுயில் பழகுபவன். முடிகளையுடைய வேங்கடமலை முதல்வன். இவன் நாடோறும் மகிழும்படி வருக!.

(புதுவை நகரத்தின்) மதில்களை வடமேரு மலை எனக் கருதி இரு சுடர்கள் உலகை வலம் வருகின்ற ஒப்பற்ற புதுவை அந்தணர் தலைவர் பெரியாழ்வார்க்குப் புதிய திருமகளே ஆண்டாளே! வருக!.

பெருமா நிலத்தில் உதயகிரிப்
பேராற் றினுள்சேற் றிடைஅணுவாய்ப்
பிறந்து சிவப்புஎண் இரண்டு ஊழி
பெருகப் பெருகும் தனப்புறமாம்

பருமா மணியை வேகடம்செய்
பவர்வே கடம்செய்து அமைவடிவில்
பணிக்கே வணத்துள் பொன்தகட்டில்
பருதி எனலாம் முழுத்தகுணத்து

அருமா மணியும் இணைதோற்பது
ஆகத் தெவிட்டா மருந்துஅ ருந்தும்
அமரா பதிகா வலன்பணிநா-
யகம்ஒன் றிதெனத் தமிழ்ப்புதுவை

வருமா மணியே! பட்டர்பிரான்
மகளே! வருக! வருகவே!
வடவேங் கடத்துள் கருமணிக்கண்
மணியே! வருக வருகவே! (76)

பெரிய உலகத்திலே உதயகிரியில் தோன்றும் பேராற்றினுள்ளே சேற்றிடத்து அணு அளவினதாய்த் தோன்றி, சிவப்பு நிறமுற்று பதினாறு ஊழிக்காலம் கழிந்தபோது, முழுமை பெற்றது ஒருமணி. அது பிற செல்வங்களால் விலை மதிப்பிட, இயலாதது. அது மிகப் பருத்தது. அதனை மணிகளைச் சாணை தீட்டுவோர் சாணை தீட்டித் தக்க அளவு செய்து அணிகலனிற் குழி செய்து பதித்தனராயின், பொன்தகட்டில் பதித்த செங்கதிர் போன்ற முழுமையான தகுதி பெற்ற அரிய மாமணியும் அம்மணிக்கு ஒப்பிட்டால் தோற்றுப் போகும். தெவிட்டாத அமுதம் அருந்தும் இந்திரன் அம்மணியைக் கண்டால், இது, அணிகலன்களில் இதுகாறும் பதிக்கப் பட்ட எம்மணிக்கும் தலையாய மணியாகும் என்று பாராட்டுவான்.

அந்த அருமாமணி போன்றவளே! தமிழ்ப்புதுவையில் தோன்றிய செம் மணியே! பட்டர்பிரான் மகளே! வருக! வருக!

வடவேங்கடத்துள் நின்றிருக்கும் கருமணிக்கும் கண்மணியே! கோதை நாச்சியே ஆண்டாளே! வருக! வருக!

செஞ்சூட்டு வைந்நுதிக் கொடுமுள் துணைத்தாள்
சிறைச்சேவல் அம்பதா கைச்
செவ்வேளை யும்கரி முகத்தானை யும்பெற்ற
சிவனைப் பயந்தது உடனே

அஞ்சூட்டு வெள்ஓதி மப்பாகன் என உலகு
　　அனைத்தையும் பெற்றதோற் றத்து
ஆரணப் பனுவல்பயில் காரணத் திசைமுகத்து
　　அயன்மவுலி மேல்வைத்த செம்

பஞ்சுஊட்டு சீறடிப் பிடிநடைத் துடி .இடைப்
　　பவளவாய்க் குவளைஉண் கண்
பத்திநித் திலநகைப் பழுதுஇலா மதிமுகப்
　　பரிமளத் தளவமுகை தோய்

மஞ்சு ஊட்டு மென்குழல் பொற்கொம்பர் எனவாச
　　வண்துழாய் பெற்றதுஒன் றாம்
மல்லிநாட்டு அனம் வருக! புத்தூர் விளங்கவரு
　　மழலைமென் குயில் வருக வே

(77)

சிவந்த உச்சிக் கொண்டையும் கூரிய நுனியும் இரு கால்களையும், சிறகுகளையும் உடைய சேவற் கொடி கொண்ட முருகன், யானை முகத் தவன் ஆகிய இரு மைந்தரைப் பெற்றவன் சிவன். இந்த மூவரையும் உல கனைத்தையும் படைத்தவன் 'மறை நூல் பயின்ற மூலப் பொருளாகிய நான்முகன் அவன் அழகிய உச்சிக் கொண்டையுடைய வெள்ளை அன் னத்தை ஊர்தியாக உடையவன்

அந்த நான்முகன் தன் தலை மேல் வைத்தது உன் திருவடி. அத் திரு வடி செம்பஞ்சுக் குழம்பு பூசிச் சிவந்தது. அது சிற்றடி; அந்த அடியின் நடை பிடி நடை.

இடை, உடுக்கை போன்று நடுவு சுருங்கியது; வாய் பவளம் போன்று சிவந்தது; மையுண்ட கண்கள் குவளை மலர் போன்றன. வரிசை யாக வைத்த முத்துப் போன்றன பற்கள்; மறுவில்லாத குளிர்மதி போன்ற முகம்.

மணமுடைய முல்லை மொட்டுப் பொருந்திய கூந்தல். அந்தக் கூந் தல் கருமுகிலைக் குழைத்துப் பூசியது போன்று மெல்லியது பொன்னா லான கொடி என்று கூறும்படி, வாசம் பொருந்திய வளவியதுழாய் பெற்ற ஒப்பற்ற மல்லிநாட்டு அன்னமே! புத்தூர் விளங்க வந்தவளே! மழலை மொழி பேசும் மெல்லிய குயிலே! வருக!. வருக!.

7. அம்புலிப் பருவம்

காரணப் பாமாலை பாடியும் பூமாலை
 கைபுனைந் தேசூடி யும்
காதலன் திருவுளம் உவப்பிக்க வந்தநம்
 கைபிடித் திடும் அளவும் நீ

பூரணம் பயிலுமுழு மதியென்ன அமுதினைப்
 பொழிகநற் கிரணங்க ளால்
பொங்குவெந் தழலினைப் பொழியாய்கொல் என்றுஉனைப்
 போற்றுகா ரியம் நினைந் தோ,

சீர் அணங்கா யநின் தேவிமா ரோடுநீர்
 திங்களைப் பிரியும் அள வில்
சிதையாது இருந்ததிறம் உரையும் என உணரவோ,
 தேவியரின் வருக என் றாள்

ஆரணம் தொழுதமிழ்ப் புதுவை ஆண்டாளுடன்
 அம்புலீ! ஆடவா வே!
அரனும் இந் திரனும் நின்று அடிதொழும் கோதையுடன்
 அம்புலீ! ஆடவா வே! (78)

இறைவனை அடைவதற்குக் காரணமான பாமாலை பாடினேன்.

பூமாலையைக் கையால் புனைந்து சூட்டினேன். என் காதலனாகிய திருமால் திருவுள்ளத்தை உவப்பிக்க வந்த எனது கைப்பிடித்திடும் வரைக்கும் - அம்புலியே! நீ - நிறைவாகி விளங்கும் முழுமதியென அமுதினைப் பொழிவாயாக!

உன் கதிர்கள் நல்லவை. அவற்றால் பொங்குகின்ற வெவ்விய நெருப்பினைப் பொழியாதே! என்று உன்னைப் போற்றுகின்ற செயலை நினைந்தோ?

"சீரிய தெய்வப் பெண்களாகிய உன் தேவிமாராகிய இருப்பதேழு விண் மீன்களிடம் நீவிர்! நும் கணவனாகிய திங்களைப் பிரிந் திருக்கும் போது மனம் வருந்தாமல் இருந்தவகை எப்படி? அதைக் கூறு வீர் என்று வினவித் எதிரிந்து கொள்ளவோ? தேவியாகிய ஆண்டாள் உன்னை உன் தேவியரோடு வருக! என்றாள்.

மறைகள் தொழுகின்ற தமிழ்ப் புதுவை ஆண்டாளுடன் அம்புலியே! விளையாட வா!

அரனும் இந்திரனும் எதிரில் வந்து வாய்புதைத்துக் கைகுவித்து நின்று திருவடி வணங்குகின்ற கோதையுடன் - அம்புலியே! நீ விளையாட வா!

சோதிவான் ஆவரணம் ஏழும் தொழப்பவனி
சுற்றிவரு சோதிஇவள். நீ
சுடரவன் பதிவிமேல் ஆவரணம் ஒன்றுமே
சுற்றிவரு சோதியா கும்

பாதியா கியமதிச் சோதியாம் மறுவுடன்
பகல்மட்கு சோதியினை நீ
பரனைஉணர் மறுவற்ற முழுமதச் சோதிஇவள்
பகல் இரவு தழைசுடரி னாள்

நீதியால் எண்ணிரண் டாயகலை உடையை நீ
நிகழ்திருப் பாவையுட னே
நீடு திரு மொழிஎனப் பதின்மடங்கு அதன்மெல்
நிறைந்தபன் மூன்றுகலை யாள்,

ஆதி ஆ ரணமறையின் விளையாடும் இவளுடன்
அம்புலீ ஆடவா வே!
அரனும்இந் திரனும் நின்று அடிதொழும் கோதையும்
அம்புலீ ஆடவா வே! (79)

ஒளியுடைய வானத்து மறைப்பு ஆகிய கோட்டைகள் ஏழும் தொழுமாறு பவனியாக உலாவி வரும் பெரொளி இந்த ஆண்டாள்.

நீயோ செம்பருதி பதவிக்கு மேலுள்ள கோட்டையாகிய மறைப்பு (ஆவரணம்) ஒன்றை மட்டும் சுற்றி வரும் ஒளிப்பிழம்பு ஆவாய்!

பாதியாகத் தேய்ந்து போகும் அம்புலி! முயற் களங்கத்துடன் பகலில் ஒளிமழுங்கும் ஒளியையுடையாய் நீ!

பரம் பொருளை உணர்கின்ற களங்கமற்ற முற்றறிவுகொண்ட இவள். பகலும் இரவும் வளக்கின்ற சுடர் உடையவள் நீ! திகழ்கின்ற திருப்பாவை என்னும் முப்பது கலைகளுடன் நெடிய நாச்சியார் திரு மொழி எனப் பதின்மடங்காக அவற்றின் மேல் நிறைந்த பதின் மூன்று கலையுடையவள் இவள்.

பழைமையாகிய ஆரண மறையில் விளையாடும் இவளுடன் அம் புலீ! விளையாட வா! அரனும் இந்திரனும் நின்று அடி தொழும் கோதையுடன் அம்புலீ ! விளையாட வா!

புதியவண் தமிழ்மறைப் பொருளொடும் பழமறைப்
பொருளொடும் பழகும் உர வோர்.
புலமையைக் குறுகும்அக இருளொடும் புறமிடப்
புற இருள் அகற்றுமுக மா

மதியம் உண்டு இவளிடத்து உன்னையும் புவனம்முழு
மதிஎனும் புறஇருள் அலால்
மனஇருள் அகற்றியிடு மெய்த்தவமும் எய்தலாம்
வைகுந்த வாழ்வுபெற லாம்.

கதியுடைத் ததியர்தம் மதியதா மரையையும்
கைத்துணைக் கமலத்தை யும்
கண்நெகிழ்த் தும்குவித் தும்சுடரும் இந்தமதி
கண்நெகிழ்ப் பதும் எய்த லாம்

அதிமதுர வண்தமிழ்ப் புதுவை ஆண் டாளுடன்
அம்புலீ! ஆடவா வே!
அரனும் இந் திரனும்நின்று அடிதொழும் கோதையுடன்
அம்புலீ! ஆடவா வே! (80)

பின்னைப் புதுமைக்குப் புதுமையாகிய நாலாயிரத் தமிழ் மறைப் பொருளோடும், பண்டைய வடமறைப் பொருளோடும் பழகுகின்ற அறிஞர்களின் புலமையைக் குலைக்கக் குறுகுகின்ற அக இருளையும் புற இருளையும் புறமிடும்படி நீக்குகின்ற முகமாகிய பெரிய மதியம் இந்த ஆண்டாள் இடத்தில் உண்டு.

உன்னையும் உலகம் முழுமதி என்னும். அந்தப் பெயருக்கு ஏற்ப நீயும் புற இருளைமட்டும் நீக்குவது அல்லாமல், உலகினரது மன இருளையும் நீக்குகின்ற மெய்த்தவமும் இவளிடம் வந்தால் அடையலாம். அது மட்டுமே! பொன் (வைகுந்த) நாட்டு வாழ்வும் நீ பெறலாம்.

புகலிடம் பெற்ற அடியார்களின் மதிய (இதய) மாகிய தாமரையை விரியச் செய்தும் இருகைகளாகிய தாமரையைக் குவியச்செயதும் ஒளிர் கின்ற இவள் முகமாகிய மதி மலர்வது போல் நீயும் மலர்ச்சி யுறலாம்.

மிக்க இனிய தமிழ் வழங்கும் புதுவை ஆண்டாளுடன் அம்புலீ! விளையாட வா! அரனும் இந்திரனும் நின்று அடி தொழும் கோதையுடன் அம்புலீ விளையாட வா!

கரபங்க யத்து அன்று எடுத்துமா தவன் மிக்க
காகோத ரத்து அணைத் தே
கடல் கடைந்து அமுது எழுவ தற்கு உம்பர் தம்பமாம்
களைகண்ணது ஆகும் உனை யே

வரபங்க முறநிலத் திட்டு அரைத் தனன் என்னும்
வழுவினை மனத்துள்வைத் தே
மழுவாளி சந்த்ரசே கரனாக அரவினுடன்
வன்சடையில் வைப்பித்த தாய்

இரவின்கண் ஒளியெனப் பகல்விளங் கவுமறு
இலாது இயற் றவுநினைத் தோ
எண்ணிலா முனிவர்முழு மதியுடன் பழகியும்
இம்பர்உனை வருகஎன் றாள்.

அரவிந்த லோசனப் புதுவை ஆண் டாளுடன்
அம்புலீ! ஆடவா வே!
அரனும்இந்திரனும் நின்று அடிதொழும் கோதையுடன்
அம்புலீ! ஆடவா வே! (81)

தாமரை மலர் போன்ற கையால் திருமால், அன்று மதியே! உன்னை எடுத்தான். வாசுகி என்ற பாம்புடன் பிணைந்ததால் தேவர்க்கு அமுதெழு வதற்காகக் கடல் கடைந்தான். கடல் கடைவதற்குத் தூணாகிய பற்றுக் கோடு ஆகிய உன்னை அந்தச் செய்நன்றியை மறந்து உன் மேன்மை யானது பழுதுபடும் படியாக, உன்னை நிலத்தில் இட்டுத் தேய்த்தான் என் னும் குற்றத்தை மனத்துள் வைத்து மழுவாளியாகிய சிவனைப் பிறைசூடி (சந்திர சேகரன்) என்ற பெயரைப் பெறும் படி செய்து பாம்புடனே உன்னையும் வலிய சடையில் சுமக்கச் செய்த அன்னை இவள்.

இரவிலே ஒளியாவது போல் பகலிலும் ஒளியாக வேண்டும் என்றும் உன்னிடம் களங்கம் இல்லாது செய்ய வேண்டும் என்றும் நினைத்தோ இங்குவா என உன்னை அழைத்தாள்! எண்ணில்லாத முனிவர்களின் முற்றறிவுடன் (முழுமதியுடன்)பழகுபவள் இவள். அப்படி இருந்தும் குறைமதியனாகிய உன்னை அழைப்பது நீ செய்த தவமே ஆகும்.

தாமரை மலர் போன்ற கண்களையுடைய புதுவை ஆண்டாளுடன் நிலாவே நீ விளையாட வா!

உரனுடைப் புனிதன் முன்பு இட்டசா பத்தினால்
உறுகலை இழந்து உலவும் நாள்
ஒன்றாய அமைஎனும் கலையுடன் வெய்யவன்
உழைப்புக்கு ஒளிப்பதென் நீ

இரவுபகல் ஒளிதூண்டும் இவள்வதன மதியம் எண்
எண்கலையின் ஒருபூர்த்தி யாய்
இருள்துரந்து எழுநிலா முன்றில் உண்டு, அடியாரின்
இருக்கலாம் இஃது அன்றி யே

பரவைவெண் திரைஉவட் டெழுதிருப் பாற்கடல்
பரமன்மெல் லணையதா கும்
பருமணிச் சூட்டுடைப் பல்தலைத் துத்திப்
பணாடவி கவித்தசெல் வத்து

அரவினுக்கு அரசன் இவள் அடிமைகாண்! அரவுறாது.
அம்புலீ! ஆடவா வே!
ஆடல்மா மயில்இயல் கோதைகாண்! அரவுஉறாது.
அம்புலீ! ஆடவா வே! (82)

வலிமையுடைய தட்சன் முற்காலத்தில் இட்ட சாவிப்பினால், உற்ற கலைகள் ஒவ்வொன்றாக இழந்து உலைவுற்ற காலத்தில், மிஞ்சிய ஒரே கலையாகிய அமை (அமாவாசை) என்னும் கலையுடன் வெய்யவனிடம் புகுந்து காருவா (அமாவாசை) என்று ஒளிந்து கொள்கின்றாயே!

வெண்மதியமே! நீ இரவும்பகலும் ஒளியைப் பெருக்குகின்ற இவளது முகமாகிய மதியம் அறுபத்து நான்கு கலையிலும் முழுமை பெற்றது. அதினின்று வீசும் ஒளி நிலாவானது. இவள் கோவிலின் முன்றிலில் உண்டு. அங்கு நீ வந்து அடியருடன் கூடி இருக்கலாம். அது மட்டும் அன்று!. வெள்ளலை பெருக்கெடுத்து உயரும் திருப்பாற்கடலில் திரு மாலுக்கு மெல்லிய படுக்கையாகியவன் ஆதிசேடன். அவன் தலையுச்சி யில் பருத்த நாக மணி (ரத்தினம்) உண்டு. அவன் பலதலைகள் படைத்த வன். புள்ளிகளையுடைய காடு போன்ற படங்கள் உடையவன். அந்தப் ப டங்களைக் கவித்த செல்வத்தையுடையவன். அவன் பாம்புகளுக்கு அரசன் அவன் யார் தெரியமா? ஆண்டாளாகிய இவளுக்கு அடிமை. இவளுக்கு அஞ்சி அந்த அரவரசன் உன்னைப் பற்ற மாட்டான்.

இவ்வளவு நன்மைகள் பெற வேண்டுமாயின், நிலவே இவளுடன் விளையாட வா! ஆடுகின்ற மயில் போலும் சாயலுடைய கோதை இவள்! ஆத லால் பாம்பு உன்னைத் தீண்டாது. நிலவே! விளையாட வா!

தினசரிதை சிறுபிறை நுதல்திரு மண் எழுதத்
திருந்துகண் ணாடிஎன வே
செங்கையில் கொண்டமதி ஒன்றுண்டு முகமதி
சிறந்தது ஒன் றுண்டுஉலகு ளோர்

மனதுற மதித்தநித் திலநிழல் குடைஎன்னும்
மதிகள் உண்டு இவைஅலா தே
மதியிலா தவள் அல்ல எண்ணின் ஆ யிரம்என்ற
வதனமதி கொண்டுஉலா வும்

கனகரத் னத்தொடிக் கைத்துணைக் கோபால
கன்னியர்கள் இரவுபக லாய்க்
கைகலந்து ஒருகணமும் அகலாத உத்தமக்
கற்புடைய நங்கைஎன் றால்,

அனவரத கலியாண புதுவைஆண் டாளுடன்
அம்புலீ ! ஆடவா வே!
அரனும்இந் திரனும் நின்று அடிதொழும் கோதையுடன்
அம்புலீ! ஆடவா வே! (83)

நாள் தோறும் சிறிய பிறை நெற்றியில் திருமண் இட்டுக் கொள் வதற்காகத் திருத்தமான கண்ணாடி எனச் செங்கையில் ஏந்திய மதி ஒன்று இவள் பால் உண்டு முகமாகிய மதி என்று சிறந்ததாகிய ஒளி ஒன்றும் உண்டு. உலகத்தார் மனதாரப் புகழ்கின்ற முத்தின் ஒளிபரப்பும் குடை என்னும் மதிகளும் இவள்பால் உண்டு. இவைமட்டுமா?

இவள் மதியே இல்லாதவள் அல்லள். எண்ணினாள் ஆயின் ஆயிரம் முகமதி கொண்டு உலாவுகின்ற தோழிகள் இவளுக்கு உண்டு. தங்கத்தில் மணி இரத்தினங்கள் பதித்த வளையல் அணிந்த கைகளை யுடைய ஆயர் கன்னியர்கள் இரவும் பகலும் பக்கத்தில் கூடி ஒரு கணமும் அகலாமல் இருப்பர். அந்த ஆய்ச்சியர் முகமதிகளும் பல்லாயிரம் இவளுக்கு உண்டு. இவள் மிகச் சிறந்த கற்புடைய நங்கை ஆதலால் எப்போதும் நீங்காத மங்கள முடைய புதுவை ஆண்டாளுடன் நிலவே விளையாட நீ வா! அரனும் இந்திரனும் நின்று அடிதொழும் கோதையுடன் விளையாட நீ வா!

பாம்புவெண் திரைசுழித்து எழுகடல் தானைசூழ்
பாரினில் காடுபதி யாம்
பனைமருப்பு இரலையொடுமான்வெருண்டு ஓடவே
படிறு இழைப் பதுவும்அல் லால்,

கிம்புரிக் கோட்டுப் பனைக்கைக் கடாநதி
கிளைத்து எழும் கரடநால் வாய்க்
கெசேந்திரன் வெருவியே பிடியை இடைஇடமீண்ட
கீற்றுவெண் பிறைஎயிறு கூர்

வெம்புலித் திரள்புறம் காட்டுநர சிங்கத்தை
மெய்புக்கு வென்றமா னாம்
மெல்லியல் மடந்தை ஒரு மான் உன்னை வெறுவாது
மெய்யுற விளக்குதற் கோ

அம்புலிக் கடவுள் எனும் நின்னைவரு கென்றுளாள்.
அம்புலீ! ஆடவா வே !
அபிராம வண்தமிழ்ப் புதுவைப் பிராட்டியுடன்
அம்புலீ! ஆடவா வே! (84)

துள்ளும் வெள்ளலைகள் சுருண்டு எழுகின்ற கடலை ஆடையாகக் கட்டிய உலகிலே, காட்டை இருப்பிடமாகக் கொண்ட திரண்ட கொம்புகளையுடைய ஆண்மானொடு பெண்மானும் அஞ்சி ஓடுமாறு கொடுமை செய்யும் அரிமா (சிங்கம்).

பூண் அணிந்த தந்தங்களும் திரண்ட துதிக்கையும் மதமாகிய ஆறு கிளைத்து எழுகின்ற சுவடும், தொங்குகின்ற வாயும் உடைய யானை, அரசன் அஞ்சி தன் பிடியை இடைவழியில் கைவிட்டு மீளவும் பிளவு பட்ட வெள்ளிய பிறை போன்ற பற்கள் கொண்ட வெவ்விய புலிக் கூட்டம் தோற்றுப் புறம் காட்டவும் வைக்கும் ஆளரி (நரசிங்க) தோற்றச் செம்மலை உடலினுள் புகுந்து வென்ற மான் ஆகிய மெல்லியல் மடந்தை ஆண்டாள்.

அம்புலிக் கடவுள் எனும் உன்னை வருக! என்றுள்ளாள். அதற்குக் காரணம், களங்கமாகிய மான் அரிமாவைக் கண்டு அஞ்சாமலிருக்கும் படி அதற்கு அறிவுரை கூறுவதற்காக் ஒருகால் இருக்கலாம்.! ஆதலால் நிலவே விளையாட நீ வா! அழகிய வளவிய தமிழ்வழங்கும் புதுவைப் பிராட்டியுடன் நிலவே நீ விளையாட வா!.

8. சிற்றில் பருவம்

ஆதார மேருபூ தரம்நள்ளி டைத்தூணம்.
அருவரைகள் எண்திசைக் கால்
அகமனைஇ ளாவிரத கண்டம் மணி மண்டபம்,
அதுநினது கொலுமண்ட பம்

சூதானம் உற்றபுற மனைகள் ஏழ் அலையழி
சுற்றும் எழு தீவுநா ளும்
சுகமேவும் ஏமபூ தலநிலா முற்றம்எயில்
சுடர் தூண்டு நேமிவரை யாப்

பூதாதி வழிவந்த அண்டபித் தியுமாப்
பெரும்புறக் கடல் அகழி யாப்
பொன்னுலக முதலைந்தும் உப்பரிக் கையதாப்
புரந்தபெண் அரசியே, மென்

சீதார விந்தமலர் வளவயற் புதுவையுள்
சிற்றிலை இழைத்தருள்க வே!
தென்அரங் கேசன்முதல் ஐவரும் குடிபுகச்
சிற்றிலை இழைத்தருள்க வே! (85)

உலகத்துக்குப் பிடிப்பு ஆகிய மேருமலை நடுவில் நாட்டிய தூண் (அட்ட வரைகள்) எட்டுமலைகள், எட்டுத் திசைகளின் கால்கள் உன்வீடு ஒன்பது கண்டங்களுள் ஒன்றாகிய இளாவிரத கண்டம் ஆகிய மணி மண்டபம் உன் கொலுமண்டபம்.

பாதுகாப்புப் பொருந்திய நின் புறவீடுகள் அலைகடல் ஏழும் சுற்றிய ஏழு தீவுகள். என்றும் இன்பம் தரும் பொன்னுலகம் நின் நிலாமுற்றம். மதில்கள் இருசுடர் தோன்றும் வளைய (சக்கர)வாளமலை யாகவும், பூதம் முதலியவற்றின் வழியிலே வந்த அண்டம் சுவர்களாகவும் பெரும்புறக் கடலானது அகழியாகவும், பொன்னுலகம் முதலான ஐந்து உலகங்களும் உப்பரிகையாகவும் கொண்டு அரசு செய்த பெண் அரசியே! குளிர்ந்த தாமரை மலர் பூத்த வளவிய வயல் சூழ்ந்த புதுவையுள் சிற்றிலைக் கட்டி யருள்க! தென்னரங்கேசன் முதலிய ஐவரும் குடி புகுவதற்காகச் சிறு வீடு கட்டி ஆடுக.

கெழுதகைப் பரமேட்டி முதலாய அப்பிராக்
கிருதபூ தங்கள்ஐந் தால்
கிளைவாசு தேவன்முதல் நால்வர்பின் பன்னிருவர்
கேசவா தியர்கள்ஆ னோன்

முழுதும் இன் புற்றுஉம்பர் எய்துதிரு வோலக்க
முத்தர்நித் தரின்முற்று வான்
முற்றும்ஏழ் ஆவரண பேர்இல்லம் நினதாக
முன்பு இழைத் ததுவும்அல் லால்,

உழுவல்அன் புடைநினது லீலைக்கு உறுப்பதாய்
ஒருசிற்றில் உலகம்ஈ ரேழ்
உடையபல கோடிபகி ரண்டர் அண் டங்களை
உருப்பெற இழைத்த முதன் மைச்

செழுமலர்த் தடமருவு புதுவைப் பிராட்டிநீ,
சிற்றிலை இழைத்தருள்க வே!
தென்னரங் கேசன்முதல் ஐவரும் குடிபுகச்
சிற்றிலை இழைத்தருள்க வே! (86)

மிக்க பெருமையுடைய பரமேட்டி முதலிய இயற்கைத் தொடர்பில்லாத பூதங்கள் ஐந்து வீட்டுலகில் உண்டு. அப் பூதங்களிலிருந்து கிளைத்தவர் வாசுதேவன், பிரத்தியும்னன், அநிருத்தன், சங்கர்ணன் ஆகிய நால்வர். இவர்கள் வியூக மூர்த்திகள் எனப்படுவர். அவர்கள் ஒவ்வொருவரிலிருந்து மும் மூவராகப் பன்னிருவர் தோன்றினர், அவர்கள் கேசவன், நாரயணன், மாதவன், கோவிந்தன், விட்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சீதரன், இருடிகேசன், பதுமநாபன், தாமோதரன் எனப்பெயர் பெறுவர்.

பரவாசுதேவன் ஒருவன், மூர்த்திகள் நால்வராகவும் அவர்களிலிருந்து தோன்றிய பன்னிருவராகவும் பிரிந்து நின்று படைப்புத் தொழில் மேற்கொண்டான்.

அவன் மகிழ்ச்சியின் வடிவானவன் பொன்னுலக மாநகரில் உள்ள திருமாமணி மண்டபக் கொலுவில் ஏழ் மதில்களாகிய ஏழ் சுவர்கள் சூழ்ந்த பெறுவீடு நினக்குரியதாக முன்பு கட்டினாய்! அது மட்டுமா?

மிக்க அன்புடைய நின் திருவிளையாடலுக்கு அங்கமாக ஒரு சிறு வீடு ஆக, பதினான்கு உலகங்களையுடைய பலகோடிப் புற அண்டங்க

ளையும் பிற அண்டங்களையும் உருவாகுமாறு கட்டினாய் முதன்மை உடையவனே!

செழிய மலர்த் தடாகங்கள் பொருந்திய புதுவைப் பெருமாட்டி நீ, சிற்றிலைக் கட்டி விளையாடுக! தென்ஆரங்கேசன்முதல் ஐவரும் குடிபுகச் சின்ன வீட்டினைக் கட்டி விளையாடுக.

புற்றுஇடைப் பிறவாத பல்தலைக் கணபணப்
பொறி அரா வைத்தகற் றைப்
புரிசடைச் சிவன் அயன் பாகசா தனன் அமரர்
பொன்மேரு வலமதா கச்

சுற்றிடைப் புவலோக மிசைஉதித்து எழுசந்த்ர
சூரியர் குழாத்தினோ டும்
தும்பையில் கொண்டிஎன்று இவ்வுலகில் ஆசைத்
தொடக்கு அறத்துஅவ் வுலகை யே

பற்று இடைக் குலமகட்கு ஓலையை அளித்து அரிய
பரமபதம் எளிதுஅளிக் கும்
பரமஞா னக்கோயில் அண்ணன்முத லியமுதல்வர்
பரவு திரு முன்றிலுட னே

சிற்றிடைக்கு இடர்இழைத்து எழுமுலைப் பெண்ணரசி
சிற்றிலை இழைத்தருள்க வே!
தென்னரங் கேசன்முதல் ஐவரும் குடிபுகச்
சிற்றிலை இழைத்தருள்க வே! (87)

பொதுவாக பாம்புகள் புற்றில்தான் பிறக்கும். ஆனால் சில பாம்புகள் மட்டும் புற்றிடைப்பிறவாதன; பலதலைகளையுடைய படக் கூட்டத்தில் புள்ளிகளையுடையன. அந்தப் பாம்புகளைக் கற்றையாகிய சடையிலே வைத்த சிவனும், இந்திரனும் அமரரும் சுழலுகின்ற இடத்தையுடைய வானுலகில் உதித்து எழுகின்ற கதிர்மதிகளின் கூட்டத்தினோடும் கறவைப்பசுசெல்வம் மிக்கவள் என்று கூறும் படி பசுச் செல்வம் மிகப் பெற்றிருந்தும், இவ்வுலகில் ஆசையின் பற்று அறுத்து, அவ்வுலகாகிய பொன்னுலக நாட்டையே விரும்பிய ஓர் ஆய்ச்சிக்கு ஓர் ஒலை எழுதிக் கொடுத்துப் பெறுதற்கரிய துறக்கம் (பரமபதம்) எளிதாக அளித்த முழுநிறை அறிவனா (பூரண ஞானியாகிய) கோயில் அண்ணன்(எம்பெருமானார்) முதலிய முதல்வர்கள் வந்து புகழ்கின்ற வாசலுடன் சிறிய வீடு கட்டி விளையாடு!

மின்னல் இடைக்குச் சுமையாகித் துன்பம் செய்வதற்கா வளர்கின்ற நகில்களையுடைய பெண் அரசியே! தென்னரங்கன் முதல் ஐவரும் குடிபுகச் சிற்றிலைக் கட்டி விளையாடு!

புற்புதம் ஒத்தநி லைப்பிசி தக்குடில்
பொற்பன செய்திடும் இப்
பூத விகாரப் புறநிலை உள்நிலை
புகலுகில் நீ அலைகாண்!

அற்புத வாயில் இழைத்திடு நுண்ணூல்
அதனிடை நின்று வியாத்தியின்
அதுசென்று உற்ற சிலம்பி வியாத்தியின்
அணுமய மாய் இதயத்து

உற்று உணர் வொடுசுடர் மயமாய் இரவியொடு
உறுசுடர் எனஇறையோன்
உணர்வுடன் இறைநிலை உயிர்நிலை உடல்நிலை
உணர்வது நீஎனவே

தெற்றென முற்ற உணர்த்துநர் வாழ்வே!
சிற்றில் இழைத்தருளே!
செய்ப்புது வைப்பதி யுள்பயில் உத்தமி
சிற்றில் இழைத் தருளே! (88)

நீர்க்குமிழியைப் போன்ற நிலையினதாகிய ஊனுடலாகிய குடிலை அழகுடையனவாகப் படைக்கின்ற பூதங்களின் கலப்புகளாகியன. புறநிலை அகநிலைகள். அதாவது பரு உடல்களும் நுண் உடல்களும் சொல்லப் போனால், ஆண்டாளே, நீ அவை அல்லாதவள்: பஞ்ச பூதத் தொடர்பில்லாத இயற்கையைவிஞ்சிய திருமேணியுடையவள்.

வியப்பூட்டும்படித் தன் வாயால் இழைத்திடும் நுண்ணிய நூலினின்று விலகி, அயலே நின்று மீண்டும் அந் நூலைத் தன்னுள் அடக்கும் சிலம்பியைப் போல இறைவன் (வியாத்தியில்) எங்கும் பரவிய நிலையில் அணுமயமாகி நெஞ்சு தோறும் பொருந்துவான். உணர்வுமய மாயும் ஒலிமயமாயும் இரவியொடு சுடர்கள் எனவும் இருப்பான் அவன்.

அறிவுமயமாகிய அந்த இறைவன் நிலையையும் உயிரின் நிலையையும் அசித்தாகிய உடலின் நிலையையும் நன்கு உணர்ந்து

சொன்னவள் நீதான் என்று தெளிவாக முற்ற உணர்த்தும் ஆழ்வார், ஆச் சாரியர்களின் பெருவாழ்வே! சின்னஞ்சிறு வீடு கட்டி விளையாடு! வயல்கள் சூழ்ந்த புதுவைப் பதியில் வாழும் உயர்ந்தவளே! சிறிய வீடு கட்டி விளையாடு!

பற்றுஉளம் அற்றவர் மற்றுஇரு வற்றுள
பற்றரை அற்பமுமே
பற்றிலன், அற்றவர் உத்தமர் அற்றுஒரு
பற்றுளம் உற்றவனாம்

முற்குணம் உற்றவன் முற்குண நித்தரும்
முத்தரும் விட்டுஅகலா
முத்திஅ ளிப்பவன் முத்திற முக்கணன்
முக்கண னைப்பெறுவான்

அற்புதன் நல்தவ ரில்பெறு தற்குஅரி
தப்பதி நற்குருவால்
அற்பின்உ றந்தவம் அற்றிடும் அற்பருள்
அற்பன்என் உச்சியின் மேல்

சிற்றடி வைத்துஅடி மைக்கொளும் வித்தகி!
சிற்றில் இழைத்தருளே!
செயப்புது வைப்பதி யுள்பயில் உத்தமி
சிற்றில் இழைத்தருளே! (89)

வீடு பேறு தரும் இறைவனிடம் உள்ளத்தில் பற்றினை இல்லாத வரையும் வீடு பேறு அல்லாத கைவல்யம், ஐசுவரியம் ஆகிய இரண்டிலும் உண்டான பற்றுடையவரையும் சிறிதும் பற்ற மாட்டான். புறம்பேயுள்ள ஆசை அற்றவரிடமும் தன் அடியாராகியஅன்பர்களிடமும் அவர்களுக்கென்றே அறுதி செய்த அன்பினை உள்ளத்தில் கொண்டவன். முக்குணங்களில் முதற்குணமாகிய ஒளிர்(சத்துவ) குணம் பொருந்தியவன். ஒளிர் குணத்தினர் ஆகிய நித்தர் முத்தர்விட்டு நீங்காத வீடு அளிப்பவன்.

மூன்று இயல்புகளையுடைய மாற்பேறு (நித்யவிபூதி) ஆடற்பேறு (லீலாவிபூதி) பொன்னுலகம் (சொர்க்கம்) என்ற மூன்று இடங்களையுடையவன். முக்கண்ணன் ஆகிய சிவபெருமானைத் தன்னில் ஒரு பாதியாகப் பெற்றவன். அருஞ் செயலினன்.

நல்ல தவத்தினர்களாலும் பெறுதற்கு அரிதாகிய அவனது வீட்டு லகத்தை நல்ல குருவின் அருளாலும் அன்பாலும் அடைவதற்கு நல்லூழ் இல்லாதஅற்பருள் அற்பன் ஆகிய என் உச்சியின் மேல் தன் சிறிய பாதங்களை வைத்து அடிமையாகக் கொண்ட வியக்கத்தக்க ஆண்டாளே! சிற்றில் கட்டி விளையாடு! வெற்றி விளங்கும் புதுவைப்பதியுள் வாழ் கின்ற உயர்ந்தவளே! சிற்றில் கட்டி விளையாடு!

9. சிறுசோற்றுப் பருவம்

ஊன் அறாச் சுடர்முத் தலைச்சூல பாணிதொட்டு
உண்டதுஈங்கு ஒருவர்உண் ணார்
உகம்உண்டு போம்என்பது அகமுறக் கண்டுவீடு
உதவுவான் அன்றுநிற் கும்

தானமும் சுடுகாடு தாமம்என்பு ஊன்உடைத்
தலையில்இடு பலியைஉண் பான்
தள்ளையெப் பிள்ளையை அறுத்திடு; சமைத்திடச்
சலியாய்கொல் என்றுதுய்ப் பான்

ஆனதால் அவனைவிட்டு இங்குவந்து அன்னைநீ
அமலனுக்கு ஊட்டிஉண் ணும்
அச்சேடம் உண்பதே உசிதம்என்று அயனைமுதல்
அவர்கள்எதிர் கொண்டுநின் றார்

தேனறாச் சோலைசூழ் புதுவைப்பி ராட்டியே!
சிறுசோறு இழைத்துஅருள்க வே!
தென்னரங் கேசன்முதல் ஐவரும் விருந்துணச்
சிறுசோறு இழைத்துஅருள்க வே! (90)

பகைவர் உடலைக் குத்தியதால் ஊன்ஒட்டி நீங்காது இருக்கும் ஒளியுடைய மூன்று நுனிகளையுடைய முத்தலை (சூலாயுதம்) ஏந்தியதால் சூலபாணி எனப்பெயர். சிவன் உண்டது நஞ்சு. அதை வேறு யாரும் உண்ண மாட்டார்கள்.

ஊழிநீர் உண்டு உலகம் அழிந்து போகும் என்பது மனதாரத் தெரிந்தும் உயிர்களுக்கு வீட்டின்பம் தர இயலாதவன் அவன். அவன் வாழும் இடம் சுடுகாடு. மாலையோ எலும்பு. ஊன் உடைய மண்டையில் இடும் பிச்சையை உண்பான். தாயினிடம் சென்று உன் பிள்ளையை அறுத்துத் தா! பொரித்துத் தா! என்று கூசாமல் கேட்டு உண்பான். ஆதலால், நான்முகன் முதலான தேவர்கள் அவனிடம் விருந்துண்ணச் செல்வதை விட்டார்கள்.

அன்னையே! நீ திருமாலுக்குப் படையலிட்டு ஊட்டி உண்கின்ற மிஞ்சிய உணவு (சேடம்) உண்பதே தகுதி என்று உன்னை எதிர் கொண்டு நிற்கின்றார்கள். தேன் வற்றாத சோலைகள் சூழ்ந்த புதுவைப் பிராட்டியே!

சிறுசோறு சமைத்து அருளே! தென்அரங்கேசன் முதல் ஐவரும் விருந்து உண்ணச் சிறுசோறு சமைத்து அருளே!

ஒண்தழல் குண்டத்துள் ஆகுதிக்கு உரியராம்
உத்தமர் தமக்குமறை யோர்
உபநிடதம் உட்கொண்ட மந்திரம் தந்திரம்
உலோபாமல் உய்ப்பதனை யே

மண்டுஅழல் கடவுள்கைக் கொண்டடைவில் மாதவன்
மலர்க்கரத்து உய்ப்பமா யோன்
வாய்வைத்த ஆகுதிகள் நால்வகைத் தோற்றத்தின்
வாழ்வுறு சராசரம் எலாம்

அண்டர்அண் டங்களுக்கு அப்புறத்து அப்புறத்
தாம்அனைத் தையும்ஊட்டு மால்,
அவனைநீ ஊட்டும்இச் சேடம்உண் பான்மகிழ்ந்து
அயனைமுத லவர்கள்நின் றார்,

திண்டிமப் புலமைமறை யவர்பிரான் அருள்புதல்வி!
சிறுசோறு இழைத்தருள்கவே!
தென்னரங் கேசன்முதல் ஐவரும் விருந்துணச்
சிறுசோறு இழைத் தருள்கவே! (91)

ஒள்ளிய தழல்எரியும் வேள்விக் குண்டத்துள் அவிசு(ஆகுதி)க்கு உரியர் ஆகிய தேவர்க்கு அந்தணர்கள், உபநிடதம் நுட்பமாகக் கூறும் மந்திர, தந்திரங்கள் சற்றும் வழுவாதபடி ஆகுதி சொரிவர். அந்த ஆகுதியை மண்டுகின்ற தீக் கடவுள் கைக் கொண்டு முறைப்படி திருமாலின் மலர்க்கையில் சேர்ப்பான்.

அந்த ஆகுதியைத் திருமால் ஏற்று உண்பான். அதனைக் கருப்பை, முட்டை, நிலம், வியர்வை ஆகிய நால்வகையாகப் பிறந்து வாழ்கின்ற அசையும் பொருள் அசையாப் பொருள்கள் அனைத்தினுடன் தேவர்களுக்கும் அண்டர் வாழும், அண்டங்களுக்கு அப்புறத்துக்கும் அப்புறத்து வாழும் அனைத்துக்கும் ஊட்டுவான்.

அத்தகைய மாயோனுக்கு நீ ஊட்டிய பின், எஞ்சியதை உண்பதற்காக மகிழ்ச்சியுடன், நான்முகன் முதலியவர்கள், காத்துள்ளனர்; தமக்குநிகர் யாரும் இலர் என்று காட்டுவதற்காக மிக்க புலமையாளர்கள்; திண்டிமம் என்னும் பறையை முழக்குவித்துக் கொண்டு பல்லக்கில் செல்வர்.

அத்தகைய தன் நிகரில்லாத புலமையுடைய பெரியாழ்வார் அருளிய பெரு மகளே, ஆண்டாளே! சிறுசோறு சமைத்து விளையாடு!

தென்னரங்கன் முதல் ஐவரும் விருந்து உண்பதற்காகச் சிறு சோறு சமைத்து விளையாடு!

பறவைமா மீனம்ஊர் வனதாவ ரங்கன்முப்
பானுடன் பன்னொன்றின் மேல்
பத்திரட் டியமக்கள் தேவர்ஒன் பானொடும்
பதினான்குள னதக்க தாம்

உறவுகொண்டு எண்பத்து நான்குநூ றாயிரம்
யோனியில் குடிபுக்க வாம்
உயிர்கட்கு வேறுவேறு உணர்வொடு பெருஞ்சோறும்
உற்றிழைத்து அருள்புரியும் நீ

நறவுதயிர் நெய்கன்னல் பாலாழி கறிசோறு
நரலையுள் தரளம்உலை நீர்
நன்புனற் கடல்நேமி, வரைமிடா, உலைமுகம்
நயந்ததுஅழல் ஞாயிறா கச்

சிறகர்வண்டு இமிழ்பொழில் புதுவைப் பிராட்டியே!
சிறுசோறு இழைத் தருள்கவே!
தென்னரங் கேசன்முதல் ஐவரும் விருந்துணச்
சிறுசோறு இழைத் தருள்கவே! (92)

பறவைகள், விலங்குகள், மீன் முதலிய நீர்வாழ்வன, ஊர்வன, செடி கொடி மரம் இவற்றுள் பறவை, விலங்கு, நீர் வாழ்வன ஒவ்வொன்றும் பத்துப் பத்து நூறாயிரம் வகையாம். ஊர்வன பதினொரு நூறாயிரம் வகை. செடி கொடி மரங்கள் இருபது நூறாயிரம் வகை. மக்கள் வகை ஒன் பது நூறாயிரம், தேவர் வகை பதினான்கு நூறாயிரம். இவ்வாறு பல்வகை கருவா (யோனி)யில் பிறந்த உயிர்கள் மொத்தம் 84 நூறாயிரம் ஆகும்.

இந்த உயிர்கட்கெல்லாம் அவ்வவற்றுக் கேற்றபடி வேறு வேறு உணர்வுகளும் உணவுகளும் பொருத்தமாகச் சமைத்து அருள்புரியும் அன்னை நீ, தேன், தயிர், நெய், கரும்பு, பால் முதலிய கடல்கள் நீ சமைக்கும் கறியாகும். சோறு, கடலில் பிறந்த முத்துகளாம். உலையாக ஊற்றும் நீர் நல்ல நீரையுடைய கடல்வட்டம். மலைகளே பானைகள். உலையிடத்து விரும்பிய நெருப்பு செங்கதிர்.

சிறகையுடைய வண்டுகள் ஒலிக்கின்ற சோலைகளையுடைய புது வைப்பிராட்டியே! மேலே காட்டிய பொருள்களைக் கொண்டு சிறு சோறு சமைத்து விளையாடுக! தென் அரங்கேசன் முதல் ஐவரும் விருந்து உண்பதற்குச் சிறுசோறு சமைத்து ஆண்டாளே! அருள்க!

மருமலர்த் தண்ணந் துழாய்பெற்ற தாயாக
மறையவர் பிரான்தந்தை யாய்
மதில்அரங் கத்துள் துயின்றபுரு டோத்தமன்
வாய்ந்தநற் காந்தனா கிக்

குருபரம் பரைமுறையின் உபயவே தாந்தக்
கொழுந்துபடர் கொழுகொம்ப தாய்க்
கோலா கலப்புலமை பெருகுசீ பாடியக்
கொண்டல்ஒரு தம்முனா கச்

சுருதிமிரு தியைமுற்ற உணர்பத்தர் மைந்தராய்ச்
சொற்றவாய் அமுதம்ஊ றச்
சொல்லும் திருப்பாவை முப்பதுஈர் எழுபதாய்ச்
சொன்னதிரு மொழிஇரண் டும்

திருமுலைப் பால்என இழைத்தசொல் புதுவையாய்!
சிறுசோறு இழைத்தருள்க வே!
தேவர்ஆ ரமுதுஉண்ண உளமகிழ்ந்து அருள்கோதை!
சிறுசோறு இழைத்தருள்க வே! (93)

மணமலராகிய குளிர்ந்த துழாய் பெற்ற தாயானாள். பட்டர். பிரான் பெரியாழ்வார் பெற்ற தந்தையானார். மதில் வளைந்த அரங்கத் துள் துயின்ற பெருமாள்-ஆண்டகை (புருடோத்தமன்) பொருத்தமான நல்ல கணவன் ஆனான்.

குரு பரம்பரை வரிசையிலே வடமொழி, தமிழ் உபநிடதங்களின் கொழுந்து (அறிவு) படர்கின்ற கொழுகொம்பாகி முழுமையான புலமை பெருகுகின்ற சீபாடியம் என்னும் அறிவுமழை, பெய்த மேகமாகிய இரா மாநுசர் ஒப்பற்ற தமையன் ஆனான். வேதங்களையும் அற நூல்களையும் முழுமையாக உணர்ந்த அடியார்கள் உனக்கு மைந்தர் ஆயினர்.

சொன்னவாய் அமுதம் ஊறும்படி நீ சொல்லியருளிய திருப்பாவை முப்பது பாசுரங்களும், ஒரு நூற்று நாற்பத்து (மூன்று)ம் என்று நீ சொன்ன திருமொழியும் ஆகிய இரு நூல் (பிரபந்தங்)களும் அந்த மைந்தர் உண்ணும் பால் என்னும்படி செய்த புதுவை மணாட்டியே!

சிறுசோறு சமைத்து விளையாடு! தேவர்கள் அரிய அமுதம் உண்ணும் படி மணம் மகிழ்ந்து அருள் ஆண்டாளே! சிறுசோறு சமைத்து விளையாடு!

ஆறு இழைத்து அறல்புக்க கடல் இழைப் பதன்முன்னம்
அங்கங்கு இழைத்தபுவ னத்
தார் இழைத் தனர் என்னும் உயிர்களுக்கு உறையுளாம்
அவைநின்று இறங்குவன வாய்

வேறு இழைத்து அறிவுஒன்று முதல் ஆறு இழைத்து உபய
வினைஇழைத் துளமுதன்மை யால்
மேதக இழைத்த உகம் எழுகோடி யின் வயது
மிக்க இரு பஃது இலக்க

நூறு இழைத்து அவைஇறத் தலும் உயிர்கள் உடல் இன்றி
நோக இழைத்ததனை யே
நோக்கி உத ரத்துள்வைத்து இன்பமது இழைத்துளான்
நோக்கமது இழைத்தகள பச்

சேறு இழைத்து ஒழுகுமுகிழ் முலைமலர்க் கோதையே!
சிறு சோறு இழைத்தருள்க வே!
தேவர் ஆரமுது உண்ண உளமகிழ்ந் தருள்கோதை
சிறுசோறு இழைத் தரள்க வே! (94)

ஆறு உண்டாகிக் கருமணல் புகுந்த கடல் உண்டானது. அதற்கு முன்பே ஆங்காங்கே உண்டாகிய உலகத்தார் செயல் படத் தொடங்கினர். உயிர்களுக்குப் புகலிடமாகிய (அலை) உடல்களில் நிலை பெற்றும் இறப்பனவாயயும் இருக்க வேறாகச் செய்தான்; ஓர் அறிவு முதலாக ஆறறிவு வர பெற்ற உயிர்களைப் படைத்தான்; நல்வினை தீ வினை களாகிய (உபய) இருவினைகள் ஆற்றும் உரிமை தந்தான். ஏழு கோடி (யுகங்க) களில் அகவை மிக்க இருபது ஆயிரம் நூறாயிரம் என அழைத்தான். அக்காலம் கழிந்ததும் உயிர்கள் உடல் இழந்து தவிக்க கண்ட, அவற்றை நோக்கி இரக்கப்பட்டுத் தன் வயிற்றினுள் அதனை வைத்து இன்பம் கொடுத் தான் திருமால். அவன் கடைக்கண் நோக்கம்பட்ட சந்தனக் குழம்பு பூசி ஒழுகு கின்ற மலர் மொட்டுப் போன்ற நகில் மலர்களையுடைய கோதையே! சிறுசோறு சமைத்து விளையாடு!

தேவர்கள் ஆரமுது உள்ள உளமகிழ்ந்து அருள் கோதையே! சிறுசோறு சமைத்து விளையாடு!

கன்னலங் கழனியுள் கருமேதி கவடுபடு
கதிர்மருப் பால்உழக் கக்
கணுஉக்க நித்திலப் பருமணி தெரித்திடக்
காமர்விரி வளைகறங் கும்

பொன்னியுள் புனல்மண்டு திருமுகத் துறையில்ஓர்
புடையுள் குடம்பைஅத னுள்
புள்உயிர்த் தனசினைகள் நெக்கதைக் கண்டுஏகு
பொன்இதழ்க் கமலமே வும்

அன்னமென் பேடைதன் சினைகளைச் சிறகரால்
அருகுஅணைத் திடவிரைவில் வந்து
அளியநன் சேவலும் தனதுநன் சிறகரால்
அதனையும் அணைத்துவா ழும்

தென்னரங் கத்துஅமுதம் இன்பம்உறும் அமுதமே!
சிறுசோறு இழைத்தருள்க வே!
தேவர்ஆ ரமுதுஉண்ண உளகமகிழ்ந் தருள்கோதை!
சிறுசோறு இழைத்தருள்க வே! (95)

கரும்பு வயலுள் கரிய எருமை தன் பிளவுபட்ட ஒளியுடைய கொம்பால் கலக்கும்போது, கரும்பின் கணுவிலிருந்து உதிர்ந்த பருத்த முத்து மணி அப்பால் தெறிக்கும். அதனால் அங்குள்ள அழகிய வரிசங்கு முழங்கும். அதனால் காவேரியில் நீர் மண்டிய திருமுகத் துறையிலே ஒரு பக்கத்தில் பறவைகள் கட்டிய கூட்டினுள் அப் பறவைகள் ஈன்ற முட்டைகள் உடையும்.

ஓர் அன்னப்பேடை பொன் நிறத்து இதழ்களையுடைய தாமரை மலரில் தங்கியிருந்தது. அது தன் முட்டைகளும் உடைந்திருக்கலாம் என்று விரைந்து தன் கூட்டுக்கு ஏகியது. அங்குத் தன் முட்டைகள் சிதையாமல் இருப்பது கண்டு, அவற்றைத் தன் சிறகுகளால் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டது. அதைக் கண்டு அதன்பால் அன்பு கொண்ட அன்னச் சேவலும் தன் நல்ல சிறகுகளால் அப் பேடையை முட்டையுடன் அணைத்து மகிழ்ந்தது. அத்தகைய வளமுடையது தென்னரங்கம்.

அந்தத் தென்னரங்கத்து அமுதம் இன்பமுறும் அமுதமே! ஆண்டாளே! சிறுசோறு சமைத்து விளையாடு! தேவர்கள் அரிய அமுது உண்பதற்காக, மன மகிழ்ந்து அருள்கின்ற கோதையே! சிறுசோறு சமைத்து விளையாடு!

10. பொன்னூசல் பருவம்

அன்னம் தடந்தாம ரைப்போதி னைக்கொணர்ந்து
அளியமென் பேடையோ டும்
ஆடகப் பூஞ்சோலை யுள்குடம் பையைஅமைத்து
அகலாத சோலைமலை வாழ்

மன்னன் தனக்குநீ வாய்நேர்த்தி டப்பொன்னி
வளைகோயில் அண்ணன்அன் பால்
வாழ்விக்கு மாறர்திரு மகளாய உரிமைக்கும்
வரிசைஇது எனமதித் தே

இன்அன் புறப்புதிய வெண்ணெயொடு தேன்நிறைத்து
இருநூறொடு ஒருநூற தாய்
இனியதெள் அமுதென்ன அக்கார அடிசிலும்
இயற்றவே தைத்திங்கள் வாய்

பொன்னின் தடாநிறைத் தருளும்இன் அமுதமே!
பொன்ஊசல் ஆடியரு ளே!
புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்!
பொன்ஊசல் ஆடியரு ளே! (96)

அன்னச் சேவல் ஒன்று அகலமான தாமரை மலரைக் கொணர்ந் தது. அன்புள்ள தன் பேடையோடு கூடி, பொன் போன்ற பூக்கள் நிரம்பிய சோலையினுள் ஒரு மரக்கிளையில் கூடு அமைத்துக் கொண்டு அங்கு நீங்காமல் வாழத்தொடங்கியது. அவ்வாறு வந்தவரைப் பிரிந்து போகவிடாத கவர்ச்சியுடைய சோலை மலையில் வாழ்கின்ற மன்னன் ஆகிய அழகனுக்கு.

'நாறு நறும்பொழில் மாலிருஞ் சோலைநம் பிக்குநான்
நூறு தடாவில்வெண் ணெய்வாய் நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடாநிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்றுவந்து இவை கொள்ளுங்கொலோ'

என்ற பாடலில் நூறு தடாவில் வெண்ணெயும் நூறு தடா நிறைந்த சருக்கரைப் பொங்க(அக்கார அடிசி)லும் படைப்பதாக வாய்நேர்ந்து பராவி வைத்திருந்தாய்!

ஆண்டாளே! நீ வாய்நேர்ந்தருளியதைக் கருதியும், காவேரி வளைந்த திருவரங்கம் பெரிய கோயிலில் வாழ்ந்த அண்ணன் (உண்டயவர்) அன்பினால் உலகை வாழ்விக்கும் நம்மாழ்வார்க்குத் திருமகள் ஆகிய உரிமைக்குச் சீர்வரிசை செய்ய வேண்டியது கடமை எனக் கருதியும், இனிய அன்பு பெறும்படி வெண்ணெயொடு தேன் நிறைத்து அக்கார அடிசிலும் தைத் திங்களிலே இரு நூறொடு ஒரு நூறு பொன்னாலான தடாக்களிலே நிறைத்துப் படைத்தாய். அந்த உடையவர் தங்கையாகிய இன் அமுதமே! ஆண்டாளே! பொன்னூசல் ஆடி அருளாய்!

புதுவை மா மன்னராகிய வடபெருங்கோயிலுடையான் திருமணம் செய்து கொள்ளத் தகுதி பெற்றவளே! பொன்னூசல் ஆடி அருளாய்!

கரம்தனில் சிரம்வைத்து இரந்தவன் இரப்பினைக்
களைகண்ண நின்னை அல்லால்
களைகண் இங்கு ஆர்என்ன, அயனொடும் தேவர் பால்
கடல்புக்கு முறைஇட்ட நாள்

சிரங்கள்ஒரு பத்தொடு கரங்கள்இரு பத்துடைத்
தெசமுகன் திசைமுகனை யே
சிந்தித்து அடைந்தவரம் முழுதும்அமர் முனையினில்
சிந்தவரி வில்குனித் தே

நிரந்தரம் அரந்தைஅற் றவர்உலகு தனிஆளும்
நெடுவாழ்வு தன்னிடத் தாய்
நிலைபெறுத் தினன்நேய முறுதேவி என்றுனை
நினைந்துமய னால்அமைத் தே

புரந்தரன் வரம்தழைத் திடஅருளு நவமணிப்
பொன்ஊசல் ஆடியரு ளே!
புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்!
பொன்ஊசல் ஆடியரு ளே! (97)

கையிலே மண்டையை (கபாலம்) ஏந்தி இரந்த சிவபிரானது பிச்சை ஏற்பைக் களைந்த கண்ணனே! உன்னை அல்லால், பற்றுக்கோடு இங்கு வேறு யார் உளர்?' என்று நான்முகனொடும் தேவர்கள் பாற்கடலில் வந்து முறையிட்டபோது, தலைகள் பத்தும் கைகள் இருபதும் உடைய இராவணன் நான்முகனை நோக்கித் தவம் செய்து பெற்ற வரம் முழுவதும் போர்க்களத்தில் அழியும்படி வில்வளைத்தவன் திருமால்.

துன்பமானது நிலையாகத் தீர்ந்து, தேவர் உலகம் முழுவதும் தானே தனியாக ஆள்கின்ற நீண்ட வாழ்வினைத் தன்னிடத்தே நிலை பெறச் செய்த திருமாலின் அன்புக்கு உரிய திருத்தேவி என்று உன்னை நினைந்து, இந்திரன் வரம் பெறுவதற்காக அருளிய ஒளிர் ஒன்பது (நவமணிகள்) பதித்த பொன்னூசலை ஆண்டாளே ஆடி அருள்வாய்!

புதுவைமா நகர் மன்னர் திருமணத்துக்குத் தகுந்தவளே கோதையே! பொன்னூசல் ஆடியருள்வாய்!

சேமம் புரிந்துள இலங்கையில் புன்தொழில்
தெசமுகன் தன்னைநீங் கிச்
சென்றுஅடைக் கலம்எனப் பாகனொடு கூடிய
திருத்தம்பி என்றுஎனக் கு

நாமம் தரிப்பித்த கருணேசன் இன்பம்உறு
நன்குலத் தேவிஎன் றே
நாடிவீ டணன்இங்கு வரவிட்ட செம்பொன்செய்
நவமணிப் பொன்னூசல் காண்

பாமங்கை யாழ்மங்கை போர்மங்கை புகழ்மங்கை
பாங்கர்நின்று அடிபணிந் தே
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு எனத்தேவர்
பாலித்து நின்றுஇறைஞ் சப்

பூமங்கை புவிமங்கை என்னவான் வறுநங்கை!
பொன்னூசல் ஆடியரு ளே!
புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்
பொன்னூசல் ஆடியரு ளே! (98)

பாதுகாப்பு அமைந்தது இலங்கை. அந் நகரை ஆண்டவன் இராவணன். அவன் பிறன்மனை நயத்தல் என்ற பெருங்குற்றம் இழைத் தான். அதனால் அவன் தம்பி வீடணன் தன் பாகனொடு கூடி இலங் கையை விட்டு நீங்கி, அடைக்கலம் என்று இராமனை அடைந்தான். இராமன் அவனைத் தம்பியாக ஏற்றுக்கொண்டான்.

அதனால் மகிழ்ந்த வீடணன் திருத்தம்பி என்று பெயர் கொடுத்த அருளாளன் இன்பமுறும் நற்குலத் திருத்தேவி என்று விரும்பி உனக்கு அனுப்பிய செம்பொன்னால் செய்த பொன்னூசல் இது பார்! பாமகள், யாழ்மகள், போர்மகள், புகழ்மகள் ஆகியோர் அருகில் நின்று அடிபணிந்து, பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு என்கின்றனர்.

தேவர்கள் பாதுகாவலாக நின்று வணங்குகின்றனர். மலர்மகள், நிலமகள் என்ன வாழ்வு பெற்ற நங்கையே! ஆண்டாளே! பொன்னூசல் ஆடியருள் வாய்! புதுவைமா நகர் மன்னன் வதுவைக்கு அமைந்துள்ளாய்! கோதையே! பொன்னூசல் ஆடி அருளாய்!.

எத்தேவ ரும்பரவும் அரவிந்த லோசனத்து
எம்பிரான் உந்திஅந் தண்
இண்டையா சனமீது உதித்தஒரு நான்முக
னிடத்தினி லுதித்தசூ லக்

கைத்தேவன் நிலைபெற்ற பத்தின்மேல் ஒருகோடி
கடவுளர்கள் ஓராயி ரக்
கதிர்விரித் தவர்கள்பன் னிருகோடி இருகோடி
கடிமருத் துவர்வசுக் கள்

மொய்த்தே வழுந்துநால் இருகோடி எனநின்று
முப்பத்து முக்கோடி யோர்
முறைமுறை வணங்கும்அயி ராவதக் கடவுள்பொன்
முடிமீது வைத்தபடி யே

புத்தேளிர் பொன்முடியில் வைத்தபொன் முடிமுதல்வி!
பொன்ஊசல் ஆடியரு ளே!
புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்!
பொன்ஊசல் ஆடியரு ளே! (99)

தேவர் அனைவரும் வணங்கும் தாமரைக் கண்ணன் எம் பெருமான். அவன் உந்தியில் அழகிய குளிர்ந்த தாமரையில் உதித்தவன் நான்முகன். அவனிடத்து உதித்தவன் சூலத்தை ஏந்திய கையையுடைய சிவன். பத்தின்மேல் ஒரு கோடி அதாவது பதினொரு கோடி தேவர்கள். ஓராயிரக் கதிர்விரித்த வானவ(சூரிய)ர்கள் பன்னிரு கோடியர்.

சிறப்புற்ற மருத்துவர்கள் இருகோடியர் என நிலைபெற்ற முப்பத்து முக்கோடியர் முறைப்படி வணங்கும் அயிராவதக் கடவுளாகிய இந்திரன் தன் பொன் முடி மீது உன் அடியை வைத்தது போலவே, மேலே கண்ட தேவர் அனைவரும் தங்கள் பொன்முடியில் வைத்த பொன்முடி களையுடைய முதல்வியே! ஆண்டாளே! பொன்னூசல் ஆடி அருள்வாய்! புதுவைமா நகர் மன்னர் வதுவைக்கு அமைந்துள்ளாய் பொன்னூசல் ஆடி அருளாய்!

பாலாழி யைக்கடைந்து அமுதம் புரந்தருள்
பராபரை எனத்தெளிந் தே
பழையவா னவர்இந்த்ர நீலத்தின் அருமணிப்
பைம்பொன் தகட்டுஅழுத் திக்

கோலாக லம்பெறக் கற்பகா டவியைக்
கொழும்பொலங் கொடிதுடக் கிக்
குவலயத் தினில்அளித் தனர்என்னும் வாய்மையைக்
கொள்கையால் அன்புற்று நீ

சாலோக சாமீப சாரூபம் எய்திஇறை
தன்னொடுஒன்று என்னும்நட் பில்
சகலகலை தெரிநிபுணர் பரவிய அரங்கரொடு
தலைவர்ஐ வரும்கிழ வே

பூலோக புவலோக தவலோகம் இன்புறப்
பொன்னூசல் ஆடியரு ளே!
புதுவைஅந் தணர்பிரான் அருளும்அழ கியபுதல்வி!
பொன்னூசல் ஆடியரு ளே! (100)

திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் அளித்தருளும் ஆரணங்கு (பராபரை) ஆண்டாளாகிய நீயே எனத் தெளிந்து, பழைய வானவர்கள், இந்திர நீலத்தின் அருமணியைப் பசும்பொன்னின் தகட்டிலே பதித்துச் சிறப்புப் பெறும்படி கற்பக வனத்தில் கொழுவிய பொற்கொடியாகிய காமவல்லிக் கொடியைக் கட்டி, இந்த ஊசலை நிலத்துக்குக் கொண்டு வந்து அளித்தனர் என்னும் கொள்கையால் அன்புற்றுப் பொன்னூசல் ஆடி அருளாய்!

திருமாலின் பொன்னுலக(பரமபத)த்தில் அவனுக்கு அங்கிருந்து அவன் வடிவமே பெற்றமையால் இறைவன் ஆகிய அவனொடு சமம் என்னும் நட்பால் ஆய கலைகளையும் தெரிந்த அறிஞ(வித்தக)ர் வழிபட்ட அரங்கனுடன் தலைவர் ஐவரும் மகிழுமாறு பொன்னூசல் ஆடி அருளாய்! இந் நிலவுலகமும் தவ உலகமும் முதலிய உலகங்கள் அனைத்தும் இன்புறுமாறு பொன்னூசல் ஆடி அருளாய்! புதுவை அந்தணர் பெரியாழ்வார் பெற்ற பெண் கொடியே அழகிய புதல்வியே! ஆண்டாளே! பொன்னூசல் ஆடி அருளாய்!

கன்னியும் பொருநையும் கங்கையும் யமுனையும்
காவேரி நதியும்என வாழ்
கடவுள்மா நதிகளின் அமுதம்உண்டு உறைபெறும்
கடவுளர் துறக்கத்து ளாய்

மன்னிய அவைக்களத்து என்னையார் நிகர்என்ன
வரநதி உரைத்தமாற் றம்
மறிபுனல் காவேரி உற்று இறை வனைத் தனது
மடியில்வைத் திடுவன்என வே

முன்உரைத்து உறுதவம் முயன்றவொரு சோழசன்
முன்தவம் புரியுநினை வால்
முத்தமிழ்ச் சோணாட்டு வாள்அரா அணைமீது
முளரிஅங் கண்முகிழ்த் துப்

பொன்னியுள் துயில்குழகர் அழகர்மகிழ் வெய்தநீ
பொன்னூசல் ஆடியருளே!
புதுவைஅந் தணர்பிரான் அருளும்அழ கியபுதல்வி!
பொன்னூசல் ஆடியருளே! (101)

குமரி ஆறு தண்பொருநை (தாமிரவருணி)யும், கங்கையும், யமுனையும், காவேரியும் என வாழ்கின்ற தெய்வ ஆறுகளின் அமுதமாகிய நீரை உண்டு, பெருமை பெருகின்ற கடவுளாரின் துறக்கத்தில் இருந்து நிலைபெற்ற தேவர் ஓலக்கத்தில், கங்கையானது, என்னை நிகப்பவர் யார்? என்று இறுமாந்து பேசியதால், மறிபடும் புனலையுடைய காவேரி கங்கையை நோக்க, நீ இறைவன் காலில் தானே பிறந்தாய்? நான் தவம் செய்து அந்த இறைவனை என் மடியில் வைத்து உறங்க வைப்பேன், பார் என்று முன் சூள் உரைத்தது. அப்போது சோழ மன்னன் தன் நாட்டில் இறைவனை நிலையாக வாழ வைப்ப தற்காகத் தவம் செய்து கொண்டிருந்தான்.

காவேரியும் தன் சூளுரை (சபதம்) நிறைவேறும் பொருட்டுத் தவம் புரிந்தது. இவர்கள் இருவரின் தவத்தையும் நினைத்து முத்தமிழ் வழங்கும் சோழ நாட்டில் ஒளி பொருந்திய பாம்பணையில் தாமரைக் கண்கள் மூடி, காவேரி நடுவில் அறிதுயில் கொண்ட இளமையுடைய அழகர் மகிழும்படி பொன்னூசல் ஆடி அருளாய்!

புதுவை அந்தணர் பெருமான் அருளும் அழகிய புதல்வியே! ஆண்டாளே! பொன்னூசல் ஆடி அருள்வாய்!

சந்ததம் சதுமறைப் பனுவலை உரைக்கும்நல்
தாதைதலை கொய்தபழி யால்
தலையினில் கைவைத்து இரந்தவன் இரப்பைத்
தவிர்த்தவன் சாபம்நீக் கும்

சுந்தரத் தோள்அழகர் அமுதம்நீ என்பது
துணிந்துஅந்த மழுவாளி யார்
தோழனாம் வடதிசைத் தலைவன்வர விட்டது ஒரு
சுடர்மணித் திருஊசல் காண்!

மந்தரா சலம்உழல மதிதழல அரவுஅழல
மகரால யம்கடைந் தே
வந்ததெள் அமுதுஅமரர் தமதுஉயிர்க்கு உறுதிஇது
மன்னுயிர்க்கு உறுதிஎன் றே

புந்தியில் கொண்டுஇங்கு உதித்ததெள் அமுதமே!
பொன்னூசல் ஆடியரு ளே!
புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்!
பொன்னூசல் ஆடியரு ளே! (102)

எப்போதும் நான்மறைத் தொடர்(சுலோகங்)களை ஓதிக் கொண்டேயிருக்கும் தன் தந்தையாகிய நான்முகன் தலையைச் சிவன் அறுத்து விட்டான். அந்தக் கொடிய பழிச் செயலால், அந்த நான்முகனது மண்டையோட்டைக் கையில் கொண்டு இரந்த சிவனது பிச்சை ஏற்பைத் தீர்த்து அந்தத் தலையை அறுத்தமையால் வந்த சாவிப்பையும் நீக்கினான் மல்லாண்ட மணித் தோள் அழகன்.

அந்த அழகன் விரும்பும் அமுதம் நீ என்பது உறுதியாக அறிந்தான், அந்த மழுவாளியாகிய சிவனுக்குத் தோழன் அளகேசன் (குபேரன்). அவன் எட்டுத் திசைக் காவலர்களில் வடதிசைக் காவலன். தன் நண்பன் பழியைத் தீர்த்த நன்றியை நினைத்து அந்த அளகேசன் அனுப்பிய ஒப்பற்ற ஒளிமணிகள் பதித்த அழகிய ஊசல் இதுதான்!

மந்தரமலை உழலவும் நிலவோன் வெம்பவும் வாசுகிப் பாம்பானது வெப்பம் கொள்ளவும் மகராலயம் ஆகிய பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வந்த தெள் அமுது தேவர்கள் தம் உயிர்க்கு மட்டுமே உறுதியானது. உயிர்க்குலம் அனைத்துக்கும் உறுதி தருவதாகிய அமுதம் தரவேண்டும் என்று மனத்திலே எண்ணித் திருப்பாவை அமுதம் தருவதற்காகப் புதுவையில் வந்த தெள்ளிய அமுதமே! பொன்னூசல் ஆடி அருளாய்!

புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துள்ளவளே! கோதையே! பொன்னூசல் ஆடி அருளாய்!

அளகைஅம் பதிஆளி ஆடகத் திருஊசல்
ஆட்செய்து அளித்ததுட னே
அமிராவ தப்பாகர் இந்த்ரநீ லத்தினில்
அமைத்துவர விட்டதல் லால்

வளமலிந்து எழுதிரைக் கடல்அகழ் இலங்கைக்கு
மன்னன்வீ டணன்மகிழ்ந் தே
வால்நித்தி லத்தால் அமைத்துவர விட்டது
மதித்தபின் நாகரா சன்

உளமகிழ்ந்து ஈர்ஏழு புவனம் பரித்தபொறை
உரகேச னைச்சுற்ற மாய்
உற்றவன் தேவிஎன்று அருமணி குயிற்றியே
உள்உவந்து அருள்ஊசல் காண்!

புளமரு மதகளப முகிழ்முலைக் கோதையே!
பொன்னூசல் ஆடியருளே!
புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்!
பொன்னூசல் ஆடியருளே! (103)

அளகை நகர்க்கு வேந்தன் அளகேசன் (குபேரன்), பொன்னாலான அழகிய ஊசலை உனக்குத் தொண்டும் செய்து அளித்துள்ளான்.

அதனுடன் இந்திரன் இந்திர நீலத்தினில் செய்து அனுப்பிய ஊசல் இது.

இதுவும் அல்லாமல், வளம்மிக்கு எழுகின்ற அலைகளையுடைய கடலை அகழியாகக் கொண்ட இலங்கை மன்னன் ஆகிய வீடணன் மகிழ்ந்து, ஒளி கொண்ட முத்துகளால் செய்து அனுப்பியது இந்தப் பொன்னூசல்.

உன் அருள்பெற உன்னை நினைந்து பாம்புகட்கு அரசன், பதினான்கு உலகங்களையும் சுமந்த சுமையாகக் கொண்ட ஆதி சேடனைச் சுற்றமாய்க் கொண்ட திருமாலின் தேவிநீ என்று அரிய ஒளி மணிகள் பதித்து மனம் உவந்து அருளிய ஊசல் இது அன்றோ! இன்பம் தரும் மான்மத(கத்தூரி)க் கலவை பூசிய மலர் மொட்டுப் போன்ற நகில்களையுடைய ஆண்டாளே! பொன்னூசல் ஆடியருளாய்! புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துள்ளாய் கோதையே! பொன்னூசல் ஆடி யருள்வாய்!

வரிவளைக் குலம்இடம் புரிவளை வளைத்திடும்
 வலம்புரித் திரள்வளைக் கும்
வாள்நிலா எழுசலஞ் சலம்உறவு திருமல்லி
 வளநாட்டுள் உனைமதித் தே

கரியமென் சுரிகுழல் படலத்து அரம்பைமார்
 கைபுனை அரும்புஅவிழ வே
கட்டுண்ட மட்டுஉண் சுரும்பினொடு பெடைஅளிக்
 கணம் மருங்கு ஊசலா டச்

சொரிகதிர்த் தரளமணி முழுமணி வடத்தொடு
 துடக்கமென் புழுகின்முழு கும்
சுவணபூ தரமுலை சுமந்துமின் கொடிஎனத்
 துவள்மருங்கு ஊசலா டப்

புரிமணிக் குழைஇரு மருங்குஊச லாடநீ
 பொன்னூசல் ஆடியரு ளே!
புதுவைமா நகர்மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்!
 பொன்னூசல் ஆடியரு ளே! (104)

வரிகளையுடைய சங்குக் கூட்டம் மூன்று வகைப்படும். முதலாவது இடம்புரிச்சங்கு. இடம் புரிச்சங்கு ஆயிரம் சூழ நடுவில் இருப்பது வலம் புரிச் சங்கு. வலம்புரி ஆயிரத்தில் ஒன்றாக இருப்பது சலஞ்சலச் சங்கு. சலஞ்சலம் ஒளிகொண்ட நிலாவைப்போல் ஒளிர்வது. அத்தகைய சலஞ் சலங்கள் மிகுதியாக உலவுகின்ற இடம், திருமல்லி வளநாடு. அத் திருநாட்டில் உன்னை மதித்துப் போற்றி வானுலகத்து அரம்பையர் உன் கரிய மெல்லிய சுருண்ட இருண்ட கூந்தல் கற்றையைக் கையால் சீவி முடித்து ஒப்பனை செய்யும்போது, கூந்தலில் சூடிய மலர் அரும்புகள் விரியும்.

தேன் உண்ணும் ஆசையால் அந்த நறுமண அரும்புகளில் கட்டுண்டு தேன் உண்ணும் வண்டுகளும் வண்டின் பெடைக் கூட்டமும் பக்கத்திலே ஊசல் ஆடும்.

ஒளி சொரிகின்ற முத்துமணிகள், முழுமணிகளால் ஆகிய மாலையுடன் கலந்தன. மெல்லிய மணம் தரும் புனுகினுடன் கலக்கின்ற பொன் மலை போன்ற நகில்களைச் சுமந்து கொண்டு வருவதால், மின்னற்கொடி போலத் துவள்கின்ற இடையும் ஊசல் ஆடும்.

சங்குமணித் தோடுகள், இரு காதுகளில் இரு புறமும் ஊசல் ஆடும். அதைப்போல், ஆண்டாளே! நீயும் பொன்னூசல் ஆடுவாய். புதுவை நகர் மன்னர் வதுவைக்கு அமைந்துளாய்! கோதையே! பொன்னூசல் ஆடிஅருள்!

மண்திணி நிலப்பிலம் போழ்ந்துவேர் வீழ்ந்துபுடை
மல்குபொரி அரையஆ கும்
மாகத்தின் வெளிமூடு பூகப்பொ தும்பரொடு
மழைகிழித்து ஓங்குபொங் கர்த்

தண்தளிர்க் காழ்அகில் சோலைவாய் மாலையில்
தவளவெண் நிலவை நுக ரும்
சகோரப் பெரும்புள்ளின் பேழ்வாய் நிறைந்துவழி
தண்அமுதம் மொண்டுபரு கும்

தொண்டைஅம் கனிவாய் மடந்தையரும் மைந்தரும்
சுரரின்நரை திரைமூப் புறாச்
சோதிஆ கம்பெறப் பெருகுதிரு முக்குளத்
துறையினுடன் நறைகமழும் மென்

புண்டரீ கத்தடம் செறிதமிழ்ப் புதுவையாய்!
பொன்னூசல் ஆடியரு ளே!
பொன்னரங் கத்தர்வட மலைவாணர் இன்புறப்
பொன்னூசல் ஆடியரு ளே! (105)

மண் அணுக்கள் செறிந்த நிலத்தின் கீழ் மண்ணைப் பிளந்து வேர் விட்டு வளர்ந்தன பாக்கு மரங்கள். அவை அடிப்புறம் பருத்திருந்தன. பொருக்குக்களையுடையன. ஆதலால் அவற்றின் அடிமரங்கள் பொரியரை எனப் பெயர் பெற்றன. அவை உயரமாக வளர்ந்து வாகன வெளியை மூடியிருந்தன.

அத்தகைய பாக்கு மரங்களின் இளமரச் சோலைகளும், முகிலைக் கிழித்து ஓங்குகின்ற பலவகைச் சோலைகளும், தண்ணிய தளிரும் திண்மையுமுடைய அகில்மரச் சோலைகளும் நிறைந்த இடங்களில் மாலை நேரத்தில் மிக்க வெண் நிலவை மட்டும் உண்கின்ற சகோரம் என்னும் பெருமையுடைய பறவைகளின் பிளந்தவாய் நிறைந்து ஒழுகும் நிலவமுது, கோவைக் கனி போலச் சிவந்த வாயையுடைய மங்கையரும் அவர்களின் காதலரும் மொண்டு பருகியதால், தேவர்கள்போல் நரை, திரை, மூப்பு அடையாமல் ஒளியுடம்பு பெறுவர்.

இத்தகைய அற்புதக் காட்சியும் செயலும் கொண்ட திருமுக்குளத் துறையும், மணம்கமழும் மெல்லிய வேறு பல தாமரைத் தடாகங்களும் செறிந்த தமிழ் வழங்கும் புதுவையாய்! ஆண்டாளே! பொன்னூசல் உந்தி ஆடி அருள்! பொன் அரங்கத்தர் வட மலைவாணர் இன்பமுறும் கோதையே பொன்னூசல் ஆடிடுவாய்!

தன்நிலை தனக்குஉரிய வாய்ஒருவர் முன்னம்
சமைத்திடா முதன்மையது வாய்ச்
சகலகலை களையும்வழு வறஉணர்த் தியதொரு
சயம்புஉருவ ஞானமய மாய்

முன்னிய மறைப்பனுவ லைக்கொண்டு பாதாள
முந்நீருள் புக்குஒளிக் கும்
முதியமது கைடவர் முரண்தொலைத் திட உலகம்
மூன்றும்ஒரு செலுவுள்உறை வான்

மன்னிய புறப்பெரிய மீன்வடிவ் மாய்அமர்
மலைந்துஎளிதி னில்கொண்ட நாள்
மறைமுழுது மீனவடி வினைமாற்றி நான்முகன்
மனத்துற மறித்துஉணர்த் தும்

பொன்னியுள் சேவல்ஓ திமம் உயிர் தளிர்த்திடப்
பொன்னூசல் ஆடியரு ளே!
புதுவைத் துழாய்வனத் துள் பேடை அன்னமே!
பொன்னூசல் ஆடியரு ளே! (106)

தான் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம் தானேயானது திருமறை. முன்னம் ஒருவரால் படைக்கப் படாதது; அது முதன்மையானது. கலைகள் அனைத்தையும் குற்றம் அறும்படி உணர்த்தியது. (சயம்பு - சுவயம்பு உருவானது) அதாவது தானே உதித்தது. மெய்யறிவு மயம் ஆனது. இத்தகையதென்று எல்லோரும் எண்ணிக் கொண்டாடிய மறைநூலைக் கவர்ந்து கீழுலகில் (பாதாளமாய்) ஆழமான கடலுள் புகுந்து ஒளித்தனர். பழமையான மது, கைடவர் என்பார் இருவர். அவர்களின் மாறுபாடு(வலிமை) தொலைத்திடுவதற்காகத் திருமால், உலகம் மூன்றும் ஒரு செதிலுக்குள் உறையும்படி நிலைபெற்ற முதுகையுடைய பெரியமீன் (மச்ச) வடிவமாகி, அவருடன் போர் புரிந்து எளிதாக மேலே கொண்டு வந்த காலத்தே, எடுத்த மீன் உருவத்தை மாற்றி,

அன்னச் சேவல் உருவம் எடுத்து, நான்முகன் மனத்தில் பதியும்படி மீண்டும் உணர்த்தினான்.

காவேரியில் குடிகொண்ட அந்த அன்னச் சேவல் வடிவு கொண்ட அரங்கன் மகிழும்படி ஆண்டாளே! பொன்னூசல் ஆடிடுவாய்! புதுவையில் துழாய்க் காட்டினுள் தோன்றிய பேடை அன்னமே! கோதையே பொன்னூசல் உந்தி ஆடிடுவாய்!

11. காமநோன்புப் பருவம்

சொல்தமிழ்ப் பாமாலை நாட்டியும் பூமாலை
சூட்டியும் தொண்டுபுரி வார்
தொண்டர்தம் தொண்டர்என்று அவர்கள்பின் தொடரும்ஒரு
சோதிஇரு கரையினோ டும்

எற்றுதெண் திரைமண்டு பால்ஆழி யுள்நின்றும்
இடபகிரி சேடகிரி மீது
இருவராய் உனைஎய்த உச்சிமேல் மாதவம்
இயற்றவே பொன்னிநடு வாய்

உற்றுளான் மதிமுகம் தெற்குவைத்து அந்நகருள்
ஒருவர்அலர் இருவர்கா வல்
உம்பர்அமு தும்திருவும் எய்துதற்கு எவர்களே
உலகத்தில் எதிர்கொண்டி டார்?

கற்றவர் புகழ்ந்ததென் புதுவைஅந் தணர்புதல்வி!
காமநோன் பதுதவிர்க வே!
காரிதரு மாறர்திரு மகளாய கோதையே!
காமநோன் பதுதவிர்க வே! (107)

உலக வழக்கு ஒழியாமல் வழங்கிவரும் தமிழால் ஆகிய பாமாலையை நிலை பெறச் செய்தும், கையால் தொடுத்த பூமாலையைச் சூட்டியும் தொண்டு செய்பவர்களே தொண்டர்தம் தொண்டர் என்று கொண்டு, திருமழிசை ஆழ்வார் கணிகண்ணன் ஆகியோரின் பின்னே தொடர்ந்து சென்றவன் ஒப்பற்ற ஒளிவடியாகிய திருமால்,

இரு கரைகளையும் மோதுகின்ற தெள்ளிய அலைகள் செறிந்த பாற்கடலினின்று நீங்கி, சோலைமலை, வேங்கடமலையின் மேல் அழகனாகவும் அப்பனாகவும் இருவடிவம் கொண்டு உன்னை மணந்து கொள்ளும் பொருட்டு, அம் மலைகளின் உச்சிமேல் பெருந்தவம் இயற்றுகின்றான்.

காவேரியின் நடுவிடத்திலே உற்ற திருவரங்கன் தன் மதி போன்ற முகத்தைத் தெற்கு நோக்கி (உன்ஊரை நோக்கி) வைத்து உன்னை அடைவதற்கு அறிதுயில் கொண்டுள்ளான். அவனுக்கு ஒருவர் மட்டும் காவல் அல்லர். மண்மகளும் மலர் மகளும் ஆகிய இருவர், மாயோன்

உன்னைத் தேடிப் புறப்பட்டு விடாதபடி காவல் உள்ளனர். எத்தனை காவல் இருப்பினும் தேவர் அமுதமும் திருவும் அடைவதற்கு யார்தாம் உலகத்தில் எதிர் கொள்ள மாட்டார்கள்?

கற்றவர் புகழும் புதுவை அந்தணர் பெரியாழ்வார் மகளே! ஆண்டாளே! காம நோன்பு அது தவிர்க! காரியார் பெற்ற நம்மாழ்வார் மகள் ஆகிய கோதையே! காம நோன்பு அது தவிர்க!

சொற்றமிழ் :

ஆண்டாள் அரங்கன் முதல் ஐவரை மணந்து கொள்வதற்காகக் காடனையும் அவன் தம்பி சாமனையும் நோக்கி விரதம் இருந்தாள்.

அவள் காம நோன்பு மேற் கொண்ட செய்தி நாச்சியார் திருமொழி முதல் திருமொழியாகிய தையொரு திங்களும் என்ற பதிகமாக அவளே கூறியுள்ளாள்.

அனங்கதேவா! உன்னையும் உம்பியையும் தொழுதேம் என்ற இடத்துக் காமன் தம்பியையும் தன் விருப்பம் நிறை வேறுவதற்காகத் தொழுதாள் என்று உணர்கின்றோம். 'வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே!' என்பது ஆண்டாள் காமனிடம் வேண்டிக் கொண்ட பாசுரப்பகுதி.

இந்தப் பதிகம் கண்ட பிள்ளைத் தமிழ்க்கவிஞர் தம் கற்பனை வளத்தால் காம நோன்புப் பருவம் எனப் புதுவதாக ஒரு பருவம் படைத்துக் கொண்டு, தம் பத்தியையும் புலமையையும் வெளிப்படுத்தி யுள்ளார். இப் பருவம் வேறுயாரும் பாடாதது.

திருமால் இடப கிரி, சேடகிரி, திருவரங்கம் ஆகிய ஊர்களில் அழகன் ஆகவும், அப்பன் ஆகவும், அரங்கன் ஆகவும் தவம் செய்கின்ற போது, நீ அவர்களை அடையத் தவம் செய்வது வீண் ஆகும்!

தானாக வரும் பேற்றுக்காகத் தவம் செய்ய வேண்டுமா? ஆதலால் உன் காம நோன்பை விட்டு விடு! என்பது இப் பருவத்தின் அடிப்பைப் பொருள்.

துடிஇடைப் பிடிநடைக் கயல்விழிக் குயில்மொழித்
துவர்இதழ்த் தவளநகை யாள்
சோதிவா னவர்பிரான் ஏதுவில் சாபம்
தொடர்ந்துகல் படிவமா கப்

படியினில் பாதபங் கேருகத் தூளினால்
பழையதோர் மேனியா கப்
பழமறை பராவுகோ தமனிடத்து ஆக்கிய
பரம்பரன் அஃது அன்றி யும்

கொடிமதில் குடுமிமதி அகடுஉழுத மிதிலையுள்
கொற்றவன் சிலைஇறுத் துக்
கூடினான் நின்னைமுன்பு ஆகலான் இன்னும்நிற்
கூடுமாறு உண்மைஎன் றால்

கடிமலர்த் தெரியலைச் சூடிக் கொடுக்கும்நீ
காமநோன் பதுதவிர்க வே!
காரிதரு மாறர்திரு மகளாய கோதையே!
காமநோன் பதுதவிர்க வே! (108)

துடிபோன்ற இடையும், பிடி நடையும், கயல் மீன் ஒத்த கண்ணும், குயில் இசை போன்ற மொழியும், பவளம் போல் சிவந்த இதழ்களும், முல்லை மலர் நிகர்த்த பற்களும் உடையவள் அகலிகை. ஒளியுடைய இந்திரனின் தீய செயல் காரணமாகக் கல் வடிவம் ஆனாள்.

திருமால் நிலத்தில் பதிந்த தாமரை மலர் போன்ற தன் திருவடிகளின் தூசியால், கல் வடிவம் நீங்கிப் பெண் வடிவம் பெற்றாள். அவளைப் பழைய மறைகள் ஓதுகின்ற கோதம முனிவனிடம் மீண்டும் மனைவியாகச் சேர்த்து வைத்த செம்பொருள் திருமால். கல் உருவான அகலிகையைக் கணவனிடம் சேர்த்தவன், தன்னை விரும்பிய உன்னைச் சேர்த்துக் கொள்ளாமற் போவானோ? வல்லவன் வலிய வந்து அணைத்துக் கொள்வான்.

கொடிகள் கட்டிய மதிளின் உச்சி மதியின் நடுவிடத்தைக் கீறுகின்ற வளமுடைய மிதிலையில் அந்நாட்டு மன்னன் சனகன், திருமணம் கொள்ள வைத்த வில்லை ஒடித்துச் சீதையை மணந்தான். அயோத்தியிலிருந்து நெடுந் தொலைவு நடந்து மிதிலை வந்து வில் ஒடித்து சீதையாகிய உன்னை மணந்தவன், அருகிலேயே உள்ள உன்னை மணந்து கொள்ளாமல் கைவிடுவானோ? அவன் உன்னைக் கூடுவது உண்மை. அவனைக் கூடுவதற்கு நோன்பு நோற்க வேண்டுமா? அவன் அல்லவா உன்னை அடைய நோற்பான்.

ஆதலால் நீ காம நோன்பு நோற்பது உன் இயல்புக்கு ஒவ்வாது. ஆண்டாளே! இந் நோன்பை உடனே கைவிடு! காரியார் பெற்ற மாறருக்கு மகளாகிய கோதையே! ஆண்டாளே! காம நோன்பு தவிர்த்து விடு!

கூற்றமும் விழுந்து எழுந்து ஓடவட வாமுகக்
கோபவெந் தழல்பெருக் கும்
கொடியரா வணன்உனைச் சிறைவைக்க மனதுள்
குறிகொள்கற்பு எனும்நோன்பி னால்

சீற்றமது எழுந்துதெண் திரைமண்டு கடலினைச்
சேதுபந் தனம்முடித் துத்
தென்னிலங் கேசன்உயி ரைக்குடித்து அரியவன்
சிறைமீட்டு உனைத்தழுவி முன்பு

ஊற்றமது உறக்கறங்கு அறல்புகுந்து ஏனமாய்
உனைஒரு மருப்பினிற் கொண்டு
உய்த்துளான் நீபுலம் புறஇருப் பதும்இல்லை
ஒருபகலுள் அணைவன்என் றால்

நோற்றநோன் பினர்பரவும் அபிராமை யே!காம
நோன்பினைத் தவிர்கநீ யே!
நுண்அறி வுடைப்புதுவை அபிராமை யே! காம
நோன்பினைத் தவிர்கநீ யே! (109)

கொடிய இராவணன் தன்னைக் கண்டால் கூற்றுவனும் எழுந்து விழுந்து தடுமாறி ஓடச் செய்பவன். அத்தகைய வடவைத்தீ (வடவாமுக நெருப்பு)ப் போன்ற சினமாகிய வெவ்விய தழலைப் பெருக்குபவன். அவன் முன்னாள் உன்னைச் சிறை வைத்தான். நீ மனத்துட் குறிக் கோளாகக் கொண்டு தவம் செய்தாய்!

நீ சிறையிருப்பது அறிந்து சினம் பொங்கித் தெள்ளிய அலைகள் செறிந்த கடலிலே அணைகட்டி அந்த இராவணன் உயிரைக் குடித்தான் திருமால். அரிய வலிய சிறையிலிருந்து உன்னை மீட்டுத் தழுவினான். அதுமட்டுமா?

முற்காலத்தில் ஆற்றல் மிகும்படி சுழல்கின்ற கடலுட் புகுந்து இரணியாக்கனைக் கொன்று மானமிலாப் பன்றியாய் உன்னை ஒரு கொம்பினால் தூக்கி நிலை நிறுத்தினான். அத்தகையவன், நீ காதலால் வருந்தும்படி பிரிந்திருக்க மாட்டான். ஒரே நாளில் உன்னை வந்து அணைத்துக் கொள்வான். ஆதலால், தவம் செய்தவர் துதிக்கின்ற பேரழகியே! ஆண்டாளே! காம நோன்பினை நீ தவிர்! நுண்ணிய அறிவுடைய புதுவைப் பேரழகியே! கோதையே காம நோன்பு நீ தவிர்க!

பாமநெட் டிலைமுத் தலைக்கவட் டுக்குலிச
பாணிபுத் தேளிருடன் முப்
பத்துமூ வரும்அடி வணங்க வாழ்வு எய்துபொற்
பதியினுள் புக்கநா ளில்

பூமிசை இருந்தநீ புனையவே கற்பகப்
பூமாலை உதவாமை யால்
புல்லென்ற நின்முகப் புண்டரீ கப்போது
பொலிவுறப் புள்ளரச னால்

ஏமமா ளிகைவாயி லிற்பாரி சாதத்தை
இவ்வுலகு தனில்வைத்து ளான்
இங்குநீ தமிவைக வேதரித் துத்தனி
இருப்பவனும் அல்லன்என் றால்

காமர்தென் புதுவைஅந் தணர்பிரான் அருள்புதல்வி!
காமநோன் பதுதவிர்க வே!
காரிதரு மாறர்திரு மகளாய கோதையே!
காமநோன் பதுதவிர்க வே! (110)

ஒளி கொண்ட நீண்ட இலை வடிவமான மூன்று நுனிகளும் பிளவுகளும் கொண்ட வைரப்படை ஏந்திய இந்திரன், தேவர்களுடன் முப்பத்து மூவரும் அடிவணங்க வாழ்வு பெற்ற பொன்னுலகில் திருமால் சென்ற போது, நிலவுலகில், சத்தியபாமையாக இருந்த நீ கூந்தலில் புனை வதற்கு கற்பகப் பூவாலாகிய மாலையைக் கேட்டான். இந்திரன் தரமறுத்து விட்டான்.

அந்த மாலை பெறாமையால், பொலிவு குன்றிய நின் முகமாகிய தாமரைப் பூ பொலிவு பெறுவதற்காகக் கருடனை ஏவி, பூ மட்டும் அல்ல, அந்தப் பாரிசாத மரத்தையே உன் காவலமைந்த மாளிகை வாயிலில் இவ்வுலகில் வைத்த காதலன் திருமால்.

உனக்காகப் பொன்னுலகப் பாரிசாதத்தையே கொணர்ந்தவன் இங்கு நீ தனியாக இருக்கப் பொறுத்து இருப்பானோ? இருக்க மாட்டான். ஆதலால் அழகிய புதுவை அந்தணர் அருளிய புதல்வியே! ஆண்டாளே! காமநோன்பு தவிர்! காரியார் திருமகன் நம்மாழ்வார்க்குத் திருமகளாகிய கோதையே! காமநோன்பு தவிர்!

குளிறுவெண் திரைநள் ளிடைப்புனலை வெளிறுபடு
கொண்டல்மொண்டு உண்டுகரு கிக்
கோதண்ட மதுவளைத்து அண்டகோ ளத்தில்
குழீஇக்கமஞ் சூல்உழந் தே

தளிநறும் பெயல்பெற்ற சாரல்வெள் ளிடையில்
தளிர்த்தவெண் காந்தள்முகு ளத்
தலைநிழல் கோபமல் குபுபடம் காட்டும்ஐந்
தலைமவுலி உரகபதி என்று

ஒளிறுவெண் பிறைஎயிற்று அரவுகள் படங்களி
னுடன்கவித் திடவும்நோக் காது
உண்மைஅன் றெனஎவ்வம் உறவும்அல மரல் நோக்கி
னொடும் அளை புகுந்தொளிப் பக்

களிமயில் கணம்நகும் துடரிகா வலர்புதல்வி!
காமநோன் பதுதவிர்கவே!
காரிதரு மாறர்திரு மகளாய கோதையே!
காமநோன் பதுதவிர்கவே! (111)

ஒலிக்கின்ற வெள்ளிய அலைகளின் நட்ட நடுவிலுள்ள நீரை வெண்மை நிறம் முகில் அள்ளி உண்ணும். உண்டமையால், கருநிற மடையும். பின்னர் வானவில்லை வளைக்கும். புடவிக்(அண்ட) கோளத்திலே கூடி நிறைந்த சூல்கொண்டு வருந்தி, குளிர்ந்த நல்ல மழை பெய்யும். அந்த மழையைப் பெற்ற மலைச் சாரலின் வெள்ளிடையிலே வெண்காந்தள் தளிர்க்கும். அவற்றின் பூ மொட்டுக்களின் உச்சி நிழலில் தம்பலப் (இந்திரகோபப்)பூச்சிகள் நிறைந்திருக்கும். அத்தோற்றம், காந் தல் மலர் ஐந்தலை பொன்முடியுடைய சினம் மல்கி(கோபம்)ப் படம் காட்டுவது போலிருக்கும். அதனை அரவின் அரசன் என்று ஒளிர்கின்ற வெள்ளைப் பிறை போன்ற பற்களையுடைய பாம்புகள் படங்களினுடன் தலைகுனியும். அதனால் அந்தக் காந்தள் மலர் உண்மையான பாம்பு அல்ல என்று எண்ணிப் பாராமல், பிற பாம்புகள் துன்பம் அடையும். அவை துன்புறுவதைக் கண்டும், அவை அலமந்து புற்றினுள் சென்று ஒளிந்து கொள்ளும் அறியாமை கண்டும் மயிற் கூட்டம் ஏளனமாகச் சிரிக்கும்.

இத்தகைய அரிய காட்சி நடைபெறுவது துடரி மலையில். துடரி மலை நம்மாழ்வாருக்கு உரியமலை. அந்த நம்மாழ்வாரின் புதல்வியே! ஆண்டாளே! காம நோன்பு நோற்பதைத் தவிர்! காரி தரு மாறர் திருமகள் ஆகிய கோதையே! காம நோன்பு நோற்பதை விடு!

உண்ணத் தெவிட்டாத உருசியொடு பரிமளம்
உவட்டாமல் உண்டவாய் மற்
றொன்றினை விரும்பாமல் உண்டவர்தம் உடலகத்து
ஓங்குநரை திரைமூப்பு நோய்

எண்ணத் தகாதுஒழித் தருள்செய்பெறு தற்குஅரிய
இனியதென் அமுதம்எளி தாய்
இச்சித்த தோகரரை! இதுநிற்க வாய்வைத்
திடப்புளிக் கும்தயிர்க் கும்

வெண்ணெய்க்கும் நெய்க்கும்ஏக் கற்றுமுன் கட்டுண்டு
விகடம்உற்று அகடுதனில் நாண்
வீக்கிய அசோதைமுன் குண்டலக் குழைதொட்டு
வெண்முத் தெனப்பனிற் றும்

கண்ணைப் பிசைந்தழும் குழகனை நினைந்து செய்
காமநோன் பதுதவிர்க வே!
காரிதரு மாறர்திரு மகளாய கோதையே!
காமநோன் பதுதவிர்க வே! (112)

அப்போதைக்கு அப்போது என் ஆரா அமுதமே என்று வியக்கும் படி உண்ண உண்ணத் தெவிட்டாத சுவையுடையது தேவர் அமுதம் நறுமணம் குறையாதது. உண்டவாய் வேறு ஒன்றினை உண்ண விரும்பாது. உண்டவர்களின் உடலிலே ஒங்குகின்ற நரை, திரை, மூப்பு, நோய் வரும் என்று எண்ணத் தகாதபடி ஒழித்தருள்வது, இத்தகைய பெறுதற்கு அரிய இனிய தெள்ளமுதம் எளிதாகப் பருகுவதற்குத் தேவரை விருப்பங் கொள்ள வைத்தது போலும்! அதனால், திருமால் தான் சிறிதும் உண்டிலன்.

வாய்வைத்தால் புளிக்கின்ற தயிர்க்கும் வெண்ணெய்க்கும் நெய்க்கும் ஏக்கமுற்றுத் திருடி அதனால் தாம்பால் உரலிலே கட்டுண்டான். பிறர் நகைப்புக்கு ஆளானான். வயிற்றிலே கயிறு கட்டிய அசோதைக்கு எதிரிலே, குண்டலம் ஆகிய காதணியைத் தொட்டுக்கொண்டு வெண்முத்துப் போலக் கண்ணீர் சிந்துகின்ற கண்ணைப் பிசைந்தபடி அழுகின்ற இளையோனை மணந்து கொள்ள எண்ணிச் செய்கின்ற ஆண்டாளே! காம நோன்பு தவிர்! காரிதரு மாறர்திரு மகளாகிய கோதையே! காம நோன்பு தவிர்!

அண்ணலார் சுந்தரத் தோள்அழகன் எனும் உலகம்
அஃதுஉண்மை அன்றிமறை தான்
ஆண்அல்லன் பெண்அல்லன் அலிஅல்லன் என்பதுடன்
அரியகுறள் உருவன்என் னும்

வெண்ணெய்தான் முன்புகட்டு உண்டபடிறு அன்றியே
வேறுபல படிறும்உடை யான்
மேய்ப்பதுஆன் நிரைமரபு கோபாலன் விசயன்தன்
மிக்கதேர்ப் பாகன்ஆ னான்

மண்ணில்ஆ சையைவைத்த ஐவர்தம் தூதாய்
மடக்கோலை யைச்சுமந் தான்
மற்றும்எக் குற்றம்என்று எண்ணுவேன் அவனைநீ
வலியவேட் கின்றதுஎன் னோ?

கண்ணகன் புத்தூர் விளங்கவரு கோதையே!
காமநோன் பதுதவிர்க வே!
காரிதரு மாறர்திரு மகளாய செல்வியே!
காமநோன் பதுதவிர்க வே! (113)

தலைமை பொருந்திய மயக்கந்தரும் தோள் மால் அழகன் எனும் மாநிலம் அஃது உண்மையே! அஃதன்றி வேதந்தான் அவனை ஆண் அல்லன்; பெண் அல்லன்; அலி அல்லன் என்பதுடன் அரிய குறள் உருவன் என்று குறும்பாய்க் கூறும். உலகமும் மறைகளும் இவ்வாறு கூறுவது அவன் புகழே ஆனாலும், உலகம் அவனை இழித்தும் பேசும்.

வெண்ணெய் தான் முன்பு திருடி உண்ட வஞ்சனை அல்லாமலே வேறுபல வஞ்சனைச் செயல்களும் உடையவன். அவன் மேய்ப்பது ஆநிரை(பசுக்)கள். அவன் குலமோ அறியாமை விஞ்சிய ஆயர்குலம். அருச்சுனனுக்கு மிக்க தேர்ப்பாகன் என்னும் ஏவல் தொழிலைச் செய்தான்.

நானிலம் ஆள் ஆசை கொண்ட ஐவர்க்குத் தூதனாய் மடக்கிய ஓலையைக் கழுத்தில் கட்டிச் சுமந்து சென்றான். இவன் செய்தவை இன்னும் எத்தனை இழி செயல்கள் என்று அடுக்குவேன்!

உன்னை மணப்பதற்குத் தகுதியற்றவனை நீ வலிந்து காமுறு (விரும்பு)வது ஏனோ? இடம் அகன்ற புத்தூர் விளங்கவரும் கோதையே! காம நோன்பு தவிர்! காரிதரு மாறர் திரு மகளாய செல்வியே! ஆண்டாளே! அவனை அடைவதற்காக நீ மேற் கொண்ட காம நோன்பினைத் தவிர்!

தினகரன் எனக்கதிர் எறித்துஎழு கவுத்துவச்
செய்யகுளிர் மணியைமார் பில்
சிங்கா தனம்பெற அமைத்துநாண் மலர்பெய்
சிறப்புஉனக்கு உதவும் பரன்

அனகன்இங்கு உனைமறந்து ஒருகணப் பொழுதினும்
அகன்று இருப் பவன்என்பது ஆர்
அறிவுற்ற மறைகற்ற நிலைபெற்ற நின்பெருமை
அதனைநீ அறிகின்றி லாய்!

மனமறிந் தனராகி அனவரதம் நினதுமலர்
மாளிகை திறந்துஅடைக் கும்
வாயில்கா வலர்சந்தர சூரியர் நிரந்தரம்
வரம்தருக தருகஎன் றே

கனகநாட் டவரோடு முப்பத்து முக்கோடி
கடவுளரும் அடிவணங் கக்
காமன்வந்து அடிதொழும் புதுவைப் பிராட்டி!நீ
காமநோன் பதுதவிர்க வே! (114)

செங்கதிர் போன்ற ஒளி வீசி எழுகின்ற மதாணி(கவுத்துவம்) ஆகிய செவ்விய குளிர்ந்த மணியை மார்பில் அணிந்தவன் திருமாள். எவ்வகை உலகங்கட்கும் தலைவி என்பதற்கு அடையாளமாக அரியணை பெறுமாறு அமைத்து, அதில் உன்னை அமர்வித்து அன்றலர்ந்த புதுமலர்களைத் தூவும் சிறப்பினை உனக்கு உதவுகின்றவன் உலகளந்த பெருமாள்.

எக்குறையும் அற்ற மாசற்றவன் (அனகன்) ஆகிய அவன், உன்னை மறந்து ஒரு கணப் பொழுதும் பிரிந்திருக்க மாட்டான். பிரிந்திருப்பான் என்று சொன்னவர் யார்? அறிவுமிக்க வேதம்கற்ற நிலைபெற்ற நின் பெருமையை நீ அறியவில்லையே!

மனத்தில் நீயே தலைவி என்பதை அறிந்தவர்கள் ஆகி, நாடோறும் உன் மலர் மாளிகையைத் திறப்பதும் மூடுவதும் செய்கின்ற வாயில் காவலர் கதிரவனும் நிலவோனும் ஆவார்கள். நிலையாக வரம் தருக! தருக! என்றே பொன்னுலகத் தவரோடு முப்பத்துமுக்கோடி கடவுளரும் நின் அடியில் வணங்கக் காமனும் அவருடன் வந்து அடி தொழுகின்ற புதுவைப் பிராட்டியே! ஆண்டாளே! காம நோன்பு தவிர்!

ஒருகரும்பு உருவவில் குமரன்அவன் இருகரும்
புருவவில் குமரியாம் நீ
ஒன்றுகட் காவிஅம் பாணத்தை அளியநாண்
உறநின்று உடக்குமவன், நீ

செருமுகத்து உபயகட் காவிஅம் பாணம்
திருத்தகப் புகுமுகத் தால்
செஞ்செவே அளியநாண் உறநின்று உடக்கிநிறை
திறை கொள்ளும் நோக்கத்தி நீ

இருள்முகக் கங்குல் களிற்று அண்ணல் அவன்நீ
இரைத்து இரைத்து ஈரம்வற் றாது
இழுக்குமான் மதம்உறக் கடபடாத் துடன்நிமிரும்
இணைமுலைக் களியானை யாய்!

கருமுகில் குழகர்அழ கரைவெல்ல உருவிலாக்
காமன்ஏன் வில்லிபுத்தூர்க்
கன்னியே! நினதுதிரு உருஒன்றும் அமையுமே
காமநோன் பதுதவிர்க வே. (115)

காமனோ, ஒரு கரும்பாகிய உருவ வில்லையுடைய இளங்குமரன். நீயோ, இரு கரும்புருவ வில்லையுடைய இளங்குமரி. காமனோ, பொருத்தமானகள் (சுரக்கும்) காவிமலர் அம்பினை வண்டாகிய நாண் உறுமாறு கொண்டு நின்று எய்பவன்.

நீயோ, செருமுகத்தில் இருகட்(ண்)காகி மலராகிய அழகிய அம்பினை அழகுறப் புகும் இடத்திலே (அரங்கன் திருவுள்ளத்திலே) நேராக அளி(கருணை)யாகிய நாண் உறும்படி நின்று செலுத்தி அரங்கனது நிறையாகிய அறிவைக் கப்பமாகக் கொள்கின்ற காதற் பார்வையுடையவள்.

இருளை இடமாகக் கொண்ட இரவை யானையாக உடைய தலைவன் அந்தக் காமன். நீயோ, அரங்கனை அடையக் கால நீட்டிப்பு ஆவதால் நெடு மூச்செறிந்தாலும் அதனால் உலராமல், பூசிய மான்மதம் (கத்தூரி) பொருந்தியதால், உடல் மறைக்கும் கச்சுடன் நிமிரும் இருமுலைகளாகிய களி யானைகளை உடையவள்.

காமனுக்கும் உனக்கும் இத்தகைய பல வேறு பாடுகள் இருக்கையில், கருமுகில் வண்ணராகிய இளமையுடைய அழகரை வெல்வதற்கு உருவில்லாத காமன் எதற்கு? புத்தூர்க் கன்னியே! ஆண்டாளே! உன் அழகிய திருவுருவம் ஒன்றுமட்டும் போதுமே! ஆதலால், காம நோன்பினை விட்டுவிடு!

குவளைஒண் கண்கழீஇப் பவளவாய் நித்திலக்
கோவையை விளக்கிமுன் றாய்க்
கொண்டநதி ஒன்றுதிரு முக்குளத் தைந்நீர்
குடைந்துதாழ் குழல்உலறி யே

தவளவெண் பட்டினைச் சுற்றிவெண் பிறைஎனத்
தழைதிருமண் நுதல்எழுதி யே
தந்திரத் தொடுமந் திரம்பராய் நறுமலர்
தனைச்சொரிந்து உருவிலா தான்

உவளகப் பித்தித் தலத்துஉரு உளானாக
உபசரித்து ஒருபோது நீ
உண்பதேன்? மெய்த்திரு அரங்கேசன் இன்றுவந்து
உன்னைஇங்கு எய்திநா ளைக்

கவளமால் யானைமேல் திருஉலா வந்திடக்
கண்டநின் கனவுஉண்மை யாம்!
காரிதரு மாறர்திரு மகளாய கோதையே!
காமநோன் பதுதவிர்க வே! (116)

குவளை மலர்போல் ஒளிகொண்ட கண்களைக் கழுவி, பவளநிற வாயில் அமைந்த முத்துக் கோவை ஒத்த பற்களை விளக்கி, மூன்று பெயர் கொண்ட (கங்கை, யமுனை, சரசுவதி) ஆறுகள் ஒன்றுபட்டுக் கூடும் திரு முக்குளத்திலே, தை ஒரு திங்கள் என்று பாடி நீ பாராட்டிய தைத் திங்களில் நீராடிக் கூந்தலை உலர்த்துகின்றாய்! மிக்க வெண்பட்டினை உடுத்தினாய்! இளம்பிறை போலத் தழைக்கின்ற திருமண்ணை நெற்றியில் தரிக்கின்றாய்!

தந்திரமும் மந்திரமும் ஓதி, நறியமலர்களைச் சொரிந்து மன் மதனை அகமனை (அந்தப் புரத்து)ச் சுவரிலே உருவுள்ளவனாகக் கற்பனை செய்து எழுதி, ஒரு நாளைக்கு ஒருபோது மட்டும் உணவு உட் கொண்டு நோற்பது ஏன்?

உண்மையான திருவினனான, ஒப்பில்லா அரங்கேசன் இன்றைக்கே வந்து உன்னை இங்கே மணந்து கொள்வான். நாளைக்குக் கவளம் உண்கின்ற பெரிய யானையின்மேல் திருவுலா வருவதாகக் கண்ட ஆண்டாளே! நின் கனவு உண்மையாகும். காரிதரு மாறர்திரு மகளாய கோதையே! காமனை நோக்கி நோற்கும் நோன்பினை நிறுத்திவிடு!

தண்அளிக் கடவுளாய் நீகுறித் தவன்இனித்
தனியிருப் பவனும்அல் லன்
தாமநித் திலமணிப் பந்தர்இந் திரன்அயன்
தமரொடு மகள்பேச வே

வெண்மணல் பரப்புமண் டிலநடுப் பருதியின்
விளைத்தமுத் தழல்சான்ற தாய்
வெள்அணி அணிந்துநல் கற்புஅணி அணிந்துபொரி
மேதக முகந்தட்ட பின்

ஒண்மலர்க் கைப்பிடித்து அதனைவலம் வந்துஅம்மி
ஒருதாளின் ஊன்றிவட மீன்
உபயகண் களின்நோக்கி மணவறையின் வாழ்ந்துமற்
றொருநாளின் மணிவீதி வாய்க்

கண்ணிணை களிப்பஆ னைப்பவனி போதுவாய்!
காமநோன் பதுதவிர்கவே!
காரிதரு மாறர்திரு மகளாய கோதையே!
காமநோன் பதுதவிர்க வே! (117)

குளிர்கருணைக் கடவுள் என்று நீ குறித்து வணங்கிய திரு அரங்கன் இனியும் தனியே இருக்க வல்லவன் அல்லன்.

முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தலின்கீழ், இந்திரன், அயன் முதலிய உறவினருடன் உனக்குத் திருமணம் பேச வருவான்.

வெண்மணல் பரப்பிய வட்டமான தரையின் நடுப்பகுதியில், வட்டமாக வளர்த்த மூவகைத்தீ சான்றாக, உனக்கு வெள்ளணி அணிந்து, நல்ல கற்பாகிய அணியும் அணிந்து, அவன் கைமேல் உன்கையை வைத்து மேன்மையுண்டாக உன் அண்ணன் முறையினர் சிலர் பொரியை அள்ளி அக் கைகளில் வைத்து நெருப்பிலே சொரியச் செய்வர். பின்னர் ஒள்ளிய உன் மலர் போன்ற கையை அவன் பற்றிக் கொண்டு நெருப்பை வலமாக வந்து, அம்மியை ஒரு காலில் மிதித்து வடமீன் ஆகிய அருந்ததியை இரு கண்களாலும் கண்டு மணவறையில் வீற்றிருந்து திருமண வினை முடித்துக் கொள்வாய்.

வேறு ஒரு நாளில் அழகிய வீதியில் கண்டார் கண்களி கூரும்படி, ஆனை மேல் பவனி வருவாய்! ஆதலால் ஆண்டாளே! காம நோன்பு நோற்பது வீண் செயல். அதனை விட்டுவிடு! காரி மகனார் ஆகிய மாறர் திரு மகளாகிய கோதையே! காம நோன்பு விட்டு விடு!

ஆண்டாள் பிள்ளைத்தமிழ் ஆண்டாள் திருமணத்துடன் நிறைவுறுவது மனநிறைவு தருகின்றது.

த.கோவேந்தன் (1932) வட ஆர்க்காடு வேலூரில் பிறந்து - கற்று வளர்ந்து இன்று சென்னையில் தமிழால் வாழ்பவர். வானம் பாடி (1956) கவிதை ஏட்டினையும் கவிஞன் ஏட்டினையும் நடத்தியவர். பாரதிதாசனோடு 19 ஆண்டுகள் பழகியவர். தமிழாராய்ச்சியாளர் பாவலர், மொழி பெயர்ப்பாளர், திறனாய்வாளர், பதிப்பாசிரியர், முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியவர். சோவியத்து நாடு இலக்கியப் பரிசும் பாரதிதாசன் விருதும் பெற்றவர். மணிவிழாக் கண்டவர்.